
# பாவாணர்

# தமிழ்க்களஞ்சியம்–18



## வேர்ச்சொற் கட்டுரைகள்–2

தமிழ்மண் அறக்கட்டளை

# பாவாணர்
# தமிழ்க் களஞ்சியம்

**18**

## வேர்ச்சொற் கட்டுரைகள் – 2

*ஆசிரியர்*

மொழிஞாயிறு **ஞா. தேவநேயப் பாவாணர்**

**தமிழ்மண் அறக்கட்டளை**

*சென்னை - 600 017*

## நூற் குறிப்பு

| | | |
|---|---|---|
| நூற்பெயர் | : | **பாவாணர் தமிழ்க் களஞ்சியம் - 18** |
| ஆசிரியர் | : | மொழி ஞாயிறு ஞா.தேவநேயப்பாவாணர் |
| பதிப்பாளர் | : | கோ. இளவழகன் |
| முதல் பதிப்பு | : | 1944 |
| மறுபதிப்பு | : | 2009 |
| தாள் | : | 16 கி வெள்ளைத்தாள் |
| அளவு | : | 1/8 தெம்மி |
| எழுத்து | : | 11 புள்ளி |
| பக்கம் | : | 8 + 176 = 184 |
| நூல் கட்டமைப்பு | : | இயல்பு (சாதாரணம்) |
| விலை | : | உருபா. **170/-** |
| படிகள் | : | 1000 |
| நூலாக்கம் | : | பாவாணர் கணினி<br>தி.நகர், சென்னை - 17. |
| அட்டை வடிவமைப்பு | : | வ. மலர் |
| அச்சிட்டோர் | : | ஶ்ரீ வெங்கடேசுவரா<br>ஆப்செட் பிரிண்டர்சு<br>இராயப்பேட்டை, சென்னை - 14. |

வெளியீடு

**தமிழ்மண் அறக்கட்டளை**

**“பெரியார் குடில்”**

பி.11 குல்மொகர் குடியிருப்பு,
35 செவாலிய சிவாசி கணேசன் சாலை, தியாகராயர் நகர்,
சென்னை - 600 017. தொ.பே. 2433 9030

மின்னஞ்சல் : tm_pathippagam@yahoo.co.in
இணையதளம் : www.tamilmann.in

# பதிப்புரை

*தமிழுக்கும் தமிழருக்கும் வளமும் வலிமையும் சேர்க்கக் கூடிய பழந்தமிழ் நூல்களையெல்லாம் தேடியெடுத்துத் தமிழ் கூறும் உலகிற்கு வழங்கும் தொலைநோக்குப் பார்வையுடன்* **தமிழ்மண் பதிப்பகம்** *தொடங்கப்பட்டது. அதன் வாயிலாக மொழிஞாயிறு பாவாணரின் நூற்றாண்டு நினைவாக அவர் எழுதிய நூல்கள் அனைத்தையும் சேர்த்து அவருடைய மறைவுக்குப் பிறகு 2000-த்திலும், பல்வேறு இதழ்களிலும், மலர்களிலும் வெளிவந்து, நூல் வடிவம் பெறாத பாவாணரின் அரிய கட்டுரைகளை எல்லாம் தொகுத்து 2001- லும் ஒருசேர வெளியிட்டு உலகெங்கும் உள்ள தமிழர்களுக்கு வழங்கினோம். பாவாணர் வழி நிலை அறிஞர்களான முதுமுனைவர்* **இரா. இளங்குமரனார்** *அவர்களும், மருத்துவர்* **கு.பூங்காவனம்** *அவர்களும் இவ்வரிய கட்டுரைப் புதையல்கள் நூல் வடிவம் பெறுவதற்கு மிகவும் உறுதுணையாக இருந்தனர். இப்பெருமக்களை நன்றியுணர்வுடன் நினைவுகூர்கிறேன்.*

*“சொல்லாராய்ச்சித் துறையில் தேவநேயர் ஒப்பற்ற தனித் திறமையுடைவர் என்று* **மறைமலையடிகளும்,** *நாவலந் தீவுக்கு நந்தமிழே தாயென்று* **பாவேந்தரும்,** *தமிழுக்கும் தமிழ் நாட்டுக்கும் நற்றொண்டு ஆற்றியவர் பாவாணர் என்று* **பேரறிஞர் அண்ணா** *அவர்களும், வெட்ட வெட்டக் கிடைக்கும் தங்கச் சுரங்கம் போன்றவர் என்று தமிழறிஞர்* **இராசமாணிக்கனாரும்,** *தமிழகம் மொழித்துறையிலே பாவாணர் போன்ற ஒரு அறிஞரை இன்னும் பெற்றுத் தரவில்லை என்று* **பன்மொழிப் புலவர் அப்பாத்துரையரும்,** *குறைமதியர் தேக்கிவைத்த கரையிருளை நீக்க வந்த மறைமலையார் வழிவந்த நிறைமலையார் பாவாணர் என்று மேனாள் பேரவைத்தலைவர்* **தமிழ்குடிமகன்** *அவர்களும், தமிழர் யார்? எதிரிகள் யார்? என்று ஆய்ந்து அறிந்து காட்டியவர் பாவாணர் என்று பேராசிரியர்* **இளவரசு** *அவர்களும், ஓராயிரம் ஆண்டுகள் ஓய்ந்து கிடந்தபின் வாராது போல வந்த மாமணி” பாவாணர் என்று முதுமுனைவர்* **இளங்குமரனார்** *அவர்களும் குறிப்பிட்டுள்ள பெருமைகளுக்குரிய பேரறிஞரின் நூல்களை மீள்பதிப்பக வெளியிடுவதில் பெருமை கொள்கிறேன்.*

"பாவாணர் நூல்கள் அத்தனையும் தமிழ்மொழிக்கு ஏற்றம் உரைப்பன. தமிழை ஆரிய இருளினின்று மீட்டுக் காப்பன. வீழ்ந்து பட்ட தமிழனுக்கு விழிப்பூட்ட வல்லன. ஆயிரமாயிரம் ஆண்டுகளாக அடிமைப்பட்டுக்கிடக்கும் தமிழ்மொழியை மீட்கவல்லது" என்று பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின் கூற்றை இக் களஞ்சிய வெளியீட்டில் பதிவு செய்வது எமது கடமையாகும்.

பாவாணரைத் தூக்கிப் பிடித்தால்தான் தமிழினம் உருப் படமுடியும் - உயரமுடியும். பாவாணர் கொள்கைகள் தமிழர் உள்ளமெல்லாம் நிலைத்து நிற்பதற்கும், பாவாணர் நூல்கள் தமிழர் இல்லமெலாம் இடம் பெறுவதற்கும் முன் குறிப்பிட்ட 2000 - 2001 காலக்கட்டத்தில் வெளியிடப்பட்ட பாவாணரின் அறிவுக் கருவூலங்களையெல்லாம் ஒட்டு மொத்தமாக சேர்த்து ஒரே வீச்சில் **பாவாணர் தமிழ்க் களஞ்சியம்** எனும் தலைப்பில் எம் அறக்கட்டளை வெளியிடுகிறது.

மறைக்கப்பெற்ற மாபெரும் வரலாற்றையும், சிதைக்கப் பெற்ற ஒப்புயர்வுயற்ற மொழியையும் கொண்ட தமிழினத்தின் முன்னேற்றம் கருதி இவ்வருந்தமிழ் புதையல்களை தமிழ் கூறும் நல்லுலகிற்கு வழங்க முன் வந்துள்ளோம். தமிழ் மொழியை மூச்சாகவும், பேச்சாகவும், செயலாகவும் கொண்டு ஒருநாளின் முழுப்பொழுதும் தமிழாகவே வாழ்ந்த செம்புலச்செம்மல், தனித்தமிழ்க் கதிரவன் மொழிஞாயிறு பாவாணர் நூல்களை வாங்கிப் பயன் கொள்வீர்.

இளமையிலேயே பொதுத்தொண்டிலும், தனித்தமிழ் இயக்கத் தொண்டிலும் நான் ஈடுபாடு கொள்வதற்குக் காரணமாக இருந்தவர்கள் **பெரும்புலவர் நக்கீரன்** அவர்களும், அவர்தம் இளவல் **புலவர் சித்திரவேலன்** அவர்களும் ஆவர். இவர்களை இவ்வெளியிட்டின் வாயிலாக நன்றியுணர்வோடு நினைவு கூறுகிறேன். தந்தை பெரியாரின் தன்மதிப்பு இயக்கக் கொள்கை களாலும், மொழிஞாயிறு பாவாணரின் தனித்தமிழ் இயக்கக் கொள்கைகளாலும் ஈர்க்கப்பட்டவன். அத்தகு பின்புலத்தோடு பதிப்புப்பணியில் என் காலடிச் சுவடுகளைப் பதித்து வருகிறேன்.

**கோ. இளவழகன்,**
**பதிப்பாளர்.**

# குறுக்க விளக்கம்

அகம். - அகநானூறு
அக. நி. - அகநானூறு நித்திலக் கோவை
அரிசமய. - அரிசமய - அரிசமய தீபம்
அரிச். பு. விவா. - அரிச்சந்திர புராணம், விவாக காண்டம்.
அருட்பா. நடராஜ - அருட்பா நடராஜபதி மாலை
அழகர் கல. - அழகர் கலம்பகம்
அறநெறி. - அறநெறிச்சாரம்
ஆசாரக். - ஆசாரக்கோவை
இரகு. - இரகு வமிசம் ...
இராசவைத். - இராச வைத்திய மகுடம்
இலக். வி. - இலக்கண விளக்கம்
இறை. - இறையனார் அகப்பொருள்
இறை. உரை - இறையனார் களவியலுரை
ஈடு. - ஈடு முப்பத்தாறாயிரப்படி
உபதேசகா. - உபதேசகாண்டம்...
உரி. நி. - உரிச்சொல் நிகண்டு
ஐங். - ஐங்குறுநூறு
ஐந். ஐம். - ஐந்திணை ஐம்பது
ஔவை. குறள். - ஔவைக்குறள்
ஔவை. தனிப்பாடல் - ஔவையார் தனிப்பாடல் திரட்டு
கந்தபு. - கந்தபுராணம்
கலித். - கலித்தொகை
கல்லா. - கல்லாடம்
கம்பரா. - கம்பராமாயணம்
காஞ்சிப்பு. - காஞ்சிப்புராணம்
காரிகை. - யாப்பருங்கலக்காரிகை
குமர. பிர. திருவாரு. - குமரகுருபர சுவாமிகள் பிரபந்தத் திரட்டு, திருவாரூர் நான்மணிமாலை
குருபரம். - குருபரம்பரை
குறள். - திருக்குறள்
குறிஞ்சிப். - குறிஞ்சிப்பாட்டு
குறுந். - குறுந்தொகை
குற்றா. குற. - குற்றாலக் குறவஞ்சி
குற்றா. தல. - குற்றாலத்தல புராணம்
கூர்மபு. தக்கன்வே. - கூர்ம புராணம், தக்கன் வேள்விப் படலம்
கூளப்ப. - கூளப்ப நாயக்கன் காதல்
கொன்றைவே. - கொன்றைவேந்தன்.
கோயிற்பு. - கோயிற்புராணம், பாயிரம்.
சங்கர. உலா. - சங்கர சோழனுலா
சி.சி. பரபக்கம் - சிவஞான சித்தியார் பரபக்கம்
சிபோ. பா. - சிவஞானபோதபாடியம்
சிலப். - சிலப்பதிகாரம்
சிவஞா. - சிவஞானபோதம்
சிவரக. - சிவரகசியம்
சிறுபஞ். - சிறுபஞ்சமூலம்
சிறுபாண். - சிறுபாணாற்றுப்படை
சினேந். - சினேந்திரமாலை
சீவக. - சீவக சிந்தாமணி
சூடா. - சூடாமணி நிகண்டு
சூத. - சூதசங்கிதை
சூளா. - சூளாமணி
சேதுபு. - சேதுபுராணம்
செவ்வந்திப். - செவ்வந்திப் புராணம்
சைவச. - சைவ சமயநெறி
சௌந்தரி. - சௌந்தரியலகரி
ஞானவா. - ஞானவாசிட்டம்
ஞானா. - ஞானமிர்தம்
தஞ்சைவா. - தஞ்சைவாணன் கோவை
தணிகைப்பு. நாட்டு. - தணிகைப் புராணம், நாட்டுப் படலம்
தண்டலை. சத. - தண்டலையார் சதகம்
தண்டி. - தண்டியலங்காரம்
தமிழ் நா. - தமிழ் நாவலர் சரிதை

தனிப்பா. - தனிப்பாடல் திரட்டு
தாயு. - தாயுமானவர் பாடல்
திணைமாலை. - திணைமாலை நூற்றைம்பது
திரிகடு. - திரிகடுகம்
திருக்காளத். - திருக்காளத்திப் புராணம்
திருக்கோ. - திருக்கோவையார்
திருநூற். - திருநூற்றந்தாதி
திருப்பு. - திருப்புகழ்
திருமந். - திருமந்திரம்
திருமுருகு. - திருமுருகாற்றுப் படை.
திருவள்ளுவ. - திருவள்ளுவமாலை
திருவாச. - திருவாசகம்
திருவாத. - திருவாதவூரர் புராணம்
திருவாலவா. - திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம்.
திருவிளை. - திருவிளையாடற்புராணம்
திவா. - திவாகர நிகண்டு
திவ். - திவ்வியபிரபந்தம்
தேவா. - தேவாரம்
தைலவ. தைல. - தைலவருக்கச் சுருக்கம்...
தொல். - தொல்காப்பியம்
தொல். எழுத்து - தொல்காப்பியம், எழுத்ததிகாரம்
தொல். உரி. - தொல்காப்பியம், உவமவியல்
தொல். சொல். சேனா.- தொல்காப்பியம், சொல்லதிகாரம், சேனாவரையர் உரை
தொல். பொரு. - தொல்காப்பியம், பொருளதிகாரம்.
தொல். மர. - தொல்காப்பியம், மரபியல்
தொல். மெய்ப்பாட். - தொல்காப்பியம், மெய்ப்பாட்டியல்
நள. - நளவெண்பா
நற். - நற்றிணை
நன். - நன்னூல்
நாலடி. - நாலடியார்
நான்மணி. - நான்மணிக்கடிகை
நீதிநெறி. - நீதிநெறி விளக்கம்
நீதி வெண். - நீதிவெண்பா
நெடுநல். - நெடுநல்வாடை
நைடத. - நைடதம்
பட்டினப். - பட்டினப்பாலை
பணவிடு. - பணவிடுதூது
பதினொ. திருவிடைமும் - பதினொ ராந் திருமுறை, திருவிடை மருதூர் மும்மணிக்கோவை
பதிற்றுப். - பதிற்றுப்பத்து
பரிபா. - பரிபாடல்
பழ. - பழமொழி நானூறு
பாக. - பாகவதம்
பாரத. - பாரதம்
பிங். - பிங்கல நிகண்டு
பிரபுலிங். - பிரபுலிங்கலீலை
பிரபோத. - பிரபோத சந்திரோதயம்
பு.வெ. - புறப்பொருள் வெண்பா மாலை
புறத். ஆசிரியமாலை - புறத்திரட்டு, ஆசிரியமாலை
புறம். - புறநானூறு
பெரியபு. - பெரியபுராணம்
பெருங். - பெருங்கதை
பெரும்பாண். - பெரும்பாணாற்றுப் படை
பொருந. - பொருநராற்றுப்படை
மணி. - மணிமேகலை
மலை. - மலையகராதி
மலைபடு. - மலைபடுகடாம்
மாறன. - மாறனலங்காரம்
மீனாட்சி. பிள்ளைத் - மீனாட்சி யம்மை பிள்ளைத் தமிழ்
முல்லைப். - முல்லைப்பாட்டு
யாப். காரிகை. - யாப்பருங்கலக்காரிகை
யாப். வி. - யாப்பருங்கல விருத்தி
யாழ். அக. - யாழ்ப்பாணத்து மானிப்பாயகராதி
வள்ள. - வள்ளலார் சாத்திரம்
விநாயகபு. - விநாயக புராணம்
வி.சிந். - விவேக சிந்தாமணி
விறலிவிடு. - விறலிவிடுதூது
வெங்கைக்கோவை. - திருவெங்கைக் கோவை
வெண்பாப். செய். - வெண்பாப் பாட்டியல், செய்யுளியல்
S.I.I. Vol. - South Indian Inscriptions Volume

# மொழிப் பெயர்கள்

**தமிழ்**

இ. - இந்தி
க. - கன்னடம்
ச. - சமற்கிருதம்
து. - துளு, துளுவம்
தெ. - தெலுங்கு
பிரா. - பிராகிருதம்
ம. - மலையாளம்
மராத். - மராத்தி
வ. - வடமொழி

**ஆங்கிலம்**

AF.- Anglo - French
AS.- Anglo - Saxon
Du.- Dutch
E.- English
F.- French
G.- German
Gael.- Gaelic
Gk.- Greek
Goth.- Gothic
Heb.- Hebrew
K.- Kannada
Kur.- Kurukh
L., Lat.- Latin
Lith.- Lithuanian
LL.- Late Latin
M.- Malayalam
MDu.- middle Dutch
ME.- middle English
MLG.- middle Low German
OE.- old English
OF.- old French
OHG.- old High German
ON.- old Norse
OS.- old Saxon
S., Skt.- Sanskrit
Slav.- Slavonic
T., Te., Tel.- Telugu
T.- Tulu

**பல்வகைக் குறிப்புகள்**

இ.வ. - இலக்கிய வழக்கு
உ.வ. - உலக வழக்கு
எ - டு. - எடுத்துக்காட்டு
ஒ. நோ. - ஒப்புநோக்க
செ. குன்றிய வி. - செயப்படு பொருள் குன்றிய வினை
செ. குன்றா. வி. - செயப்படு பொருள் குன்றா வினை
நாஞ்.வ. - நாஞ்சில் நாட்டு வழக்கு
யாழ்ப். - யாழ்ப்பாண வழக்கு
நெ.வ. - நெல்லை வழக்கு
c.f., - confer (=compare)

# உள்ளடக்கம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| | பதிப்புரை | .... | iii |
| | குறுக்க விளக்கம் | .... | v |
| | மொழி பெயர்ப்பு | .... | vii |
| 1. | கல் (கருமைக் கருத்துவேர்) | ... | 3 |
| 2. | குல்[1] (கூடற் கருத்துவேர்) | ... | 15 |
| 3. | குல்[1] (தோன்றற் கருத்துவேர்) | ... | 27 |
| 4. | குல்[2] (வளைதற் கருத்துவேர்) | ... | 37 |
| 5. | குல்[3] (குத்தற் கருத்துவேர்) | ... | 54 |
| 6. | குல்[4] (எரிதற் கருத்துவேர்) | ... | 61 |
| 7. | குல்[5] (துளைத்தற் கருத்துவேர்) | ... | 69 |
| 8. | சுல்[1] (குத்தற் கருத்துவேர்) | ... | 81 |
| 9. | சுல்[2] (சுடுதற் கருத்துவேர்) | ... | 86 |
| 10. | சுல்[3] (சிவத்தற் கருத்துவேர்) | ... | 93 |
| 11. | சுல்[4] (வளைதற் கருத்துவேர்) | ... | 102 |
| 12. | சுல்[5] (துளைத்தற் கருத்துவேர்) | ... | 118 |
| 13. | துல்[1] (பொருந்தற் கருத்துவேர்) | ... | 125 |
| 14. | துல்[2] (வளைதற் கருத்துவேர்) | ... | 141 |
| 15. | துல்[3] (துளைத்தற் கருத்துவேர்) | ... | 146 |
| 16. | துல்[4] (தெளிவுக் கருத்துவேர்) | ... | 160 |

# வேர்ச்சொற் கட்டுரைகள்

## இரண்டாம் பகுதி

## உயிர்மெய்ம் முதல் வேர்ச்சொற்கள்

1

# கல் (கருமைக் கருத்துவேர்)

## அடிக்கருத்து (கருமை)

*குல்– குலவு. குலவுதல் = கூடுதல், கலத்தல். கலத்தற் கருத்தினின்று மயக்கக் கருத்தும், மயக்கக் கருத்தினின்று இருண்மைக் கருத்தும், இருண்மைக் கருத்தினின்று கருமைக் கருத்துந் தோன்றும்.*

*கல் + து = கஃறு– கருமைக் குறிப்புச் சொல்.*

*''கஃ றென்னுங் கல்லத ரத்தம்'' (தொல். எழுத்து. 40, உரை)*

*கல்– கன்– கன்னல் = கரிய வகையான கரும்பு (திவா.)*

*கன்னங்கரிய, கன்னங்கறேல் (கன்னங்கரேர்) என்னும் வழக்குகளை நோக்குக.*

*கல்– கால் = கருநிறம்.*

*''கால்நோய் மேனிக் கண்டகர்'' (கம்பரா. உயுத். வானர. 21)*

*கல்– கள்– கள்வு– கள்வன் = 1. கரிய யானை (பிங்.); 2. கரியவன் (பிங்.). 3. கருநண்டு. ''புள்ளிக் கள்வன்'' (ஐங். 21). 4. நண்டு வடிவான (கடக) ஓரை.*

*கள்வன் – களவன் = கருநண்டு.*

*''புள்ளிக் களவன்'' (கலித். 88 : 10)*

*கள்– கள (நன். 165, மயிலை.)– களா (திவா.)– களவு (**ம.**களவு. **க.**களவெ.)– களவம் = கரிய கனிவகை, அதையுடைய செடி. கள– களம்.*

*''காக்கையிற் கரிது களம்பழம்'' (தொல். சொல். 79, உரை)*

*களவம்– களகம் = கரிய பெருச்சாளி (திவா.), காரோதிமம்* (black swan).

திவ்வியப் பிரபந்தம் பெரிய திருமொழி 6 : 9 : 10 வியாக்கியானத்திற் குறிக்கப்பட்டுள்ள ‘களகம்’ என்னும் ஓதிமப் பெயர், காரோதிமப் பெயராகவே யிருத்தல் வேண்டும்.

கள்– களம் = 1. கருமை (திவா.). 2. முகில்.

‘‘கனைக் களமென’’ (அரிசமய. பரகா. 44).

களம்– களர் = கறுப்பு (சூடா.)

களவு– (களகு)– களங்கு = கருப்பு, கரும்புள்ளி, கறை.

‘‘திங்கள் ......... உடற்களங்கால்’’(பிரபுலிங். கைலாச. 6).

களங்கு – களங்கம் = 1. கறுப்பு (திவா.). 2. கரிய மறு (திவா.). 3. கரும்புள்ளியாகிய வயிரக் குற்றம். ‘‘காக பாதமுங் களங்கமும் விந்துவும்’’ (சிலப். 14 : 180), 4. குற்றம் (பிங்.), 5. துரு (சூடா.). 6. (கரிய) அடையாளம். ‘‘களங்கமொன் றிட்டு மண்ணுறுத்தி’’ (கந்தபு. மார்க்கண். 133). 7. (கருமைக்கு இனமான) நீலம் (சங். அக). களங்கம் – Skt. kalanka.

களங்கம்– களங்கன் = 1. மறுவுள்ள மதி (திவா.), 2. குற்றமுள்ளவன்.

கள் – காள் – காளி = 1. கூளித்தலைவியாகிய கரிய பாலைநிலத் தெய்வம். 2. கரிய மணித்தக்காளி (இராசவைத்.).

காள் – காளம் = 1. கருமை. ‘‘காளமா கிருளை’’ (சீவக. 2245). 2. முகில் (சது.). 3. பெருமழை (உவின்சிலோ அகர முதலி). காளம் – வ. கால.

காள் + ஆம்பி = காளாம்பி (கருங்காளான்).

காள் + ஆன் = காளான் (காளாம்பி, ஆம்பி).

முதலிற் கரிய ஆம்பியையே குறித்த காளாம்பி, காளான் என்னும் இருபெயர்களும், பின்னர் வெள்ளாம்பிக்கும் காராம்பிக்கும் பொதுப் பெயராகிவிட்டன.

‘‘ஆவுதை காளாம்பி போன்ற’’ (களவழி. 36). இதிற் ‘காளாம்பி’ வெள்ளாம்பியைக் குறித்தது. காளான் என்று இருவகை யாம்பியையுங் குறிப்பது இற்றைய யுலகவழக்கு. காராம்பியைப் பேய்க்காளான் என்பர்.

அம் + காளி = அங்காளி.

அம் + காளி + அம்மை = அங்காளியம்மை – அங்காளம்மை – அங்கம்மை.

‘‘அங்காளம்மைத் தெய்வம் அகப்பைக் கூர்வழியாய் வரும்’’

*அங்காளம்மை – **தெ.** அங்காளம்ம.*

*காளம் – காளகம் = கருமை. ''காளக வுடையினள்'' (சீவக. 320). காளகம் – **வ.** காலக்க.*

*காளி – காளிமை = கறுப்பு. ''காளிமைப் பிழம்பு போத'' (கம்பரா. உயுத். நாகபா. 217).*

*காளிமை – **வ.** காலிமா.*

*காளிமை – காளிமம் = கறுப்பு. ''தனது காளிமங் கழிப்ப.'' (கந்தபு. திருநகரப். 72). காளிமம் = **வ.** காலிமன்.*

*காளி – காளிகம் = கரிய மணித்தக்காளி (மலை.).*

*காளிகம் – காளிக்கம் = கருஞ்சாயம் (யாழ். அக.). காளிக்கம் – **வ.** காலிக்க.*

*காள் – காழ் = 1. கருமை. ''கதுப்பு விரித்தன்ன காழக நுணங்கறல்.'' (சிறுபாண். 6). 2. கரிய மரமாகிய இரும்பிலி (மலை.). 3. குற்றம். ''எக்காழு மிகந்துல இன்பமுற'' (காஞ்சிப்பு. கழுவாய். 300).*

*காழ் – காழகம் = கருமை. ''காழக மூட்டப்பட்ட'' (சீவக. 1230).*

*கள் – (கர்) – கர – கரந்தை = நீல நிறமுள்ள பூவகை, அதையுடைய பூடு.*

*(கர்) – கரம் – கரம்பு = கரிசல் நிலம்.*

*கரம்பு – கரம்பை = 1. கரிய பழமுள்ள சிறுகளா (மலை.). 2. வறண்ட களிமண். 3. கரிசல் நிலம். ''இருநிலக் கரம்பைப் படுநீ றாடி'' (பெரும்பாண். 93). 4. பயிரிடாத கரிசல் நிலம். ''விடுநிலக் கரம்பை விடரளை நிறைய.'' (பதிற். 28). 5. வண்டற் களிமண்ணிலம்.*

*கர் – கரி = 1. கரிந்தது. 2. அடுப்புக்கரி. 3. யானை. 4. கண்ணிலிடு மை. ''கரிபோக் கினாரே'' (சீவக. 626). 5. மரவைரம்.*

*கரி – கரியன் = கரிய திருமால்.*

*கரி – **தெ., த., ம., து.** கரி.*

*கரி – கரிது – கரிசு = 1. கருமையானது. 2. குற்றம்.*

*''வினைகரி சறுமே'' (தேவா. 129 : 1). 3. தீவினை (பாவம்).*

*''கரிசினை மாற்றி'' (சைவச. பொது. 568).*

*கரிதல் = 1. கருமையாதல். ''கரிந்த நீள்கயல்'' (திருவிளை. விருத்தகு. 20.). 2. கரியாதல். ''கரிகுதிர் மரத்த கான வாழ்க்கை'' (அகம். 75). 3. தீய்தல். ''காயெரிக் கரியக் கரிய'' (கம்பரா. மிதிலை. 81).*

*கரி– கரிச்சான் = கரிக்குருவி.*

*கர்– கரு. கருத்தல் = கறுப்பாதல். கருமா = 1. யானை (பிங்.). 2. பன்றி. ''கருமாலுங் கருமாவாய்'' (பெரியபு. திருஞான. 1003).*

*கரு – கருகு. கருகுதல் = 1. நிறங்கறுத்தல். 2. இருளுதல், ''கருகு கங்குலிற் போதரும்'' (உபதேசகா. கைலை. 46). 3. பயிர் தீதல்.*

*கருகு – கருக்கு = மருந்துச் சரக்கைக் கருக்கிக் காய்ச்சிய சாறு* (decoction)

*கருகு – கருகல் = 1. தீந்து போகை. 2. கருகின பொருள். 3. இருள் என்னும் பச்சைக் கற்குற்றம் (சிலப். 14 : 184, உரை), 4. மங்கலொளி. 5. பொருட்டெளிவின்மை.*

*கருக்கு – கருக்கம் = கார்முகில்.*

*''கருக்க மெல்லாங் கமழும் பொழில்'' (தேவா. 884 : 8).*

*கருக்கு– கருக்கல் = 1. காரிருள். 2. மங்கிருட்டு, விடியற் கருக்கல். 3. வானத்தில் முகில் படிதல். வானம் கருக்கலிட் டிருக்கின்றது என்பது உலக வழக்கு. கருக்கல் –* ***ம.*** *கருக்கல்.*

*கரு – கருப்பு = கருமை, இருள், இருண்டு தோன்றும் பேய், இருட்காலம் போன்ற பஞ்சம்.*

*கருப்பு –* ***தெ.*** *கருவு.*

*கருப்பு – கருப்பை = 1. காரெலி, எலி. ''அணிலொடு கருப்பை யாடாது'' (பெரும்பாண். 85). 2. கருங்காய்ப் பனை (யா.)*

*கரு – கரும்பு = முதிர்ச்சியால் இருண்ட செங்கரும்பு, நாணற் கரும்பு, வேழக்கரும்பு, வரிக்கரும்பு (இராமக் கரும்பு) என்னும் வழக்குகளில், கரும்பு என்பது பொதுப்பெயர்.*

*கரும்பு –* ***து.*** *கரும்பு,* ***ம.*** *கரிம்பு,* ***க.*** kabbu.

*கரு – கருள் = 1. கறுப்பு. ''கருடரு கண்டத்து..... கைலையார்'' (தேவா. 337 : 4). 2. இருள் (பிங்.), 3. குற்றம். ''கருடீர் வலியால்'' (சேதுபு. முத்தீர்த். 5). கருள்– க்ருஷ் (****வ.****).*

*கர்– கறு. கறுத்தல் = கருநிறமாதல். கறுகறுத்தல் = 1. மிகக் கருத்தல், 2. மிகச் சினத்தல்.*

*கறுகுறு –* ***ம.*** *கறுகறு.*

*கறு – கறுப்பு = 1. கருமை (பிங்.). 2. கறுப்புப் புள்ளி. 3. கறை. 4. தழும்பு. ''கைத்தலத் துணை கறுப்புற'' (உபதேச. சிவபுண்ய. 315). 5. குற்றம். ''உள்ளக் கறுப்பினை யறுத்து'' (சிவதரு. சிவதரும. 25).*

6. பேய். ''கறுப்பென்னி லோபோய்ப் பணிகுவார்'' (அறப். சத. 30). 7. இராகு (சூடா.), 8. கருவைரம். 9. வெகுளி.

''கறுப்புஞ் சிவப்பும் வெகுளிப் பொருள''(தொல். சொல். 372)

சினக்கும் போது, கருநிற மக்கள் முகம் மிகக் கருத்தலும் செந்நிற அல்லது பொன்னிற மக்கள் முகம் மிகச் சிவத்தலும்பற்றி, கறுப்பும் சிவப்பும் வெகுளிப் பொருள் பெற்றன. முகத்தினுங் கண் சிவத்தல் விளங்கித் தோன்றுவதாம்.

கறுப்பு– **ம.** கறுப்பு.

கறுப்பு – கறுப்பன் = 1. கரியவன், 2. மும்மாதத்தில் விளையும் கார்நெல்வகை. கறுப்பன்– **ம.** கறுப்பன்.

கறுப்பி = 1. கரியவள், 2. கறுப்பாய் என்னும் காளி. 3. கருவண்டு. கறுப்பி– **ம.** கறும்பி.

கறுத்தை = 1. கரியவள். 2. கருங்காளை.

கருவல் = 1. கருமை. 2. கரிய– வன்– வள்– து. 3. சினப்பு.

கறுவு = 1. சினம் (திவா.). 2. வயிர்த்த பகை.

கறுவு– கறுமு. கறுமுதல் = சினத்தல்.

கறு – கறை = 1. கருநிறம். ''கறைமிடறு'' (புறம். 1 : 5). 2. இருள். ''கறைபடு பொழில்'' (தேவா. 624 :8). 3. மாசு. ''பற்கறைகள் மாற்றல்'' (காசிக. இல்லொழுக். 27). 4. குற்றம். ''பிறக்கப் பிறக்கக் கறையேறுகை'' (திவ். திருப்பா. 21, வியா.). 5. கருங்காலி வகை.

கறை– **ம.** கற, **தெ.** கர, **க.** கறே.

கறு– கறள் = கறை. **க.** கறள்.

கரு – கார் = 1. கருமை. 2. கரியது. 'களங்கனியைக் காரெனச் செய்தாரு மில்.'' (நாலடி. 103). 3. முகில். ''கார் கலந்த மேனியான்'' (திவ். இயற். பெரிய திருவந். 86). 4. மழை. ''கார்பெற்ற புலமேபோல்'' (கலித். 38). 5. நீர் (பிங்.). 6. கார்ப்பருவம். ''காரு மாலையும் முல்லை'' தொல். பொருள் 6). 7. கார் நெல், காரரிசி. (பதார்த்த. 799). 8. கருங்குரங்கு (பிங்.). 9. வெள்ளாடு என்னுங் காராடு (பிங்.). 10. மயிர் (பிங்.). 11. கருங்குட்டம். ''காரக்குறைந்து'' (கலித். 65). 12. இருள். ''காரடு காலை'' (பரிபா. 12 : 85). 13. அறிவு மயக்கம். ''களவென்னுங் காரறி வாண்மை'' (குறள். 287). 14. பசுமை. ''காரார் குருந்தோடு'' (திணைமாலை. 12). 15. அழகு (பிங்.). 16. கார்க்குவளை காலுங் கனல். (பு.வெ. 12. பெண்பாற். 11). 17. ஆறாச் சினம் (பிங்.).

*கார்–* **ம., து, க.** *கார்,* **தெ.** *காரு.*

*கார்– காரி = 1. கருமை (பிங்.). 2. கருநிறமுடையது (திவா.). 3. காக்கை (திவா.). 4. கரிக்குருவி. ''கட்சியுட் காரி கலுழ்ம்.'' (பு. வெ. 1 : 3). 5. கரிய எருது. ''சுரிநெற்றிக் காரி'' (கலித். 101 : 21). 6. காரீயம் (சங். அக.). 7. வாசுதேவன், ''செங்கட் காரி'' (பரிபா. 3 : 81). 8. வேந்தன் (தேவர்கோன்). 9. கருங்கோள் (சனி). ''காரி வாரத்தில்'' 'குற்றா. தல. மூர்த்தி. 30).*

*கள்– (கண்)– (கண்கு)– கங்கு = கருந்தினை (பிங்.). கங்கு–* **வ.** *கங்கு.*

*கங்கு– கங்குல் = கரிய இரவு.*

*''கங்குலும் பகலுங் கண்டுயி லறியாள்''(திவ். திருவாய். 7 : 12 : 1).*

*கள்– (கய்)– கயம் = கரிக்குருவி.*

*''கோக்கயம்'' (திருவாலவா. 60 : 13)*

*கயம்– கயவு = கருக்குருவி (பிங்.).*

*கயம்– கசம். காரிருளை இருட்டுக்கசம் என்பது நெல்லை வழக்கு.*

*காள்– காய் = காயம் = 1. கரிய வானம்.*

*''விண்ணென வரூஉங் காயப்பெயர்''(தொல். எழுத்து. 305)*

*காயம்– காசம் = வானம்.*

*''காச மாயின வெல்லாங் கரந்து'' (கம்பரா. மருத்து. 40)*

*காசம்– ஆகாச (வ.)*

*2. கரிய மலர்வகை.*

*''காய மலர் நிறவா'' (திவ். பெரியாழ். 1 : 5 : 6)*

*காய்– காயா. காயாம்பூ = காயமலர். ''காயாம்பூ வண்ணனிவை கழறு மன்றே'' (கூர்மபு. இராமனவதா. 1). காயா– காசா = 1. காயாம்பூ. ''காசாகடன்மழை யனையானை'' (கம்பரா. கங்கை. 53). 2. எருமை (பிங்.).*

*காய்– காயல் = 1. கரிய உப்பங்கழி (சூடா.). கழிமுகம் (பிங்.), 2. பொருநை (தாம்பிரபரணி) முகத்திலுள்ள ஓர் ஊர். ''தென்காயற் பதியானே'' (தனிப் பாடல்).*

*காயல்– ம. காயல்.*

# கிளைக் கருத்துகள்

## 1. கன்னலமுது

கன்னல் = கரும்பு (திவா.), சருக்கரை (திவா.), கற்கண்டு (திவா.), மணற்பாகு (பிங்.), கன்னலமுது (பாயசம்). மூவகைக் கரும்புள் கரிய செங்கரும்பே இனிமை மிக்கும் பெருவழக்காகவும இருத்தல் காண்க.

## 2. வயிரம் (வைரம்) அல்லது முதிர்ச்சி

ஒருசார் மரவயிரம் கருநிறத்தது. ''வெள்ளை சூவை (வெளிறு), கறுப்பு வயிரம்'' என்பது ஒரு மரபுச் சொலவு. கரி = மரவைரம். கருங்கரி = முதிர்ந்த இறைச்சி. கருங்காய் = முற்றிய காய்.

காழ்த்தல் = 1. வயிர்த்தல், முற்றுதல். ''காழ்ந்த மரம் (திரிகடு. 75). 2. மனவைரங் கொள்ளுதல். ''காழ்த்த பகைவர் வணக்கமும்'' (திரிகடு. 24). காழ் = 1. மரவைரம் (திவா.). 2. மனவுறுதி. ''காழிலா மம்மர்கொள் மாந்தர்'' (நாலடி. 14). காழ்ப்பு = 1. வைரம் (பிங்.). 2. மனவைரம். ''காழ்ப்பு மருட்கை மதத்தோடு'' (சேதுபு. மங்கல. 15, காய்த்தல் = 1. முற்றுதல், முதிரவிளைதல். ''காய்நெல்லறுத்து'' (புறம். 184). 2. தழும்புண்டாதல். காய்ப்பு = 1. தோலின் தடிப்பு. 2. தழும்பு. கறுப்பு = தழும்பு. கறுத்தல் = முற்றுதல். ''கௌவை கறுப்ப'' (மதுரைக். 271.) கறுவு = வயிர்த்த சினம். ''கறுவொடும் பிரக லாதன் கதழ்சினம்'' (கூர்மபு. அந்தகா. 86).

கறு = மனவைரம். ''அரக்கன் ............ கறுவுடையான்'' (கம்பரா. கும்பக. 357). கறம் = வயிர்த்த பகை.

## 3. நஞ்சு

பாம்பின் நஞ்சுகலந்த அரத்தம் கருநிற மடைந்துவிடுவதாலும், சில நச்சுப் பொருள்கள் கருநிறமா யிருப்பதாலும், கருமைக் கருத்தில் நச்சுக் கருத்துத் தோன்றிற்று.

களம் = நஞ்சு (பிங்.). களம் – கரம் = நஞ்சு. ''கரம்போலக் கள்ளநோய்'' (சிறுபஞ். 62). கரம் – Skt. gara. களங்கம் = ஒருவகை இயற்கை நஞ்சு. கறை = நஞ்சு. ''கறையுறு பகுவா யுரகம்'' (ஞானா. பாயி. 7 : 5). காரி = நஞ்சு. ''காரியுண்டிக் கடவுள தியற்கையும்'' (மலைபடு. 83). காளம் = நஞ்சு (திவா.). கரி = நஞ்சு (மூ. அ.).

### 4. கறை

*ஆடையிற் பற்றுங் கறை பெரும்பாலும் கருநிறமா யிருப்பதால், கறுப்பு, கறை, களங்கம் முதலிய கருமைப் பெயர்கள் மாசும் மறுவுமான புள்ளிகளையும் பொட்டல்களையுங் குறித்தன.*

*களங்கம்– களங்கன் = திங்கள் (திவா.).*

### 5. குற்றம்

*ஒரு கறை அதையுடைய பொருட்குக் குற்றமாதலாலும், கறுப்பு நிறம் பெரும்பாலும் மக்களால் வெறுக்கப்படுவதாலும் கறைக் கருத்திலும் கறுப்புக் கருத்திலும் குற்றக் கருத்துத் தோன்றிற்று.*

*கள்ளம் = குற்றம். களங்கம் – களக்கம் = குற்றம். ‘‘களக்க மில்லாதோன்’’ (திருவாலா. 50 : 8). கரில் = குற்றம். கரில்– அரில் = குற்றம். ‘‘அதங்கோட் டாசாற் கரிறபத் தெரிந்து’’ (தொல். சி.பா., கரிசு. கருள், கறுப்பு, கறை, காழ் முதலிய குற்றங் குறித்த சொற்கள் முன்னரே கூறப்பட்டன.*

### 6. சினம்

*‘‘கறுப்பும் சிவப்பும் வெகுளிப் பொருள’’ என்று தொல் காப்பியம் (855) ‘கறுப்பு’ச் சொல்லைச் ‘சிவப்பு’ச் சொல்லொடு சேர்த்துக் கூறுவதால், கறுப்பு என்பது இதில்நிறம் பற்றிய சொல்லாகவே யிருத்தல் வேண்டும். வெண்களமர், கருங்களமர்; வெள்ளாளர், காராளர்; வெள்ளொக்கல், காரொக்கல் என்று தொன்றுதொட்டு வழங்கிவரும் எதிரிணைச் சொற்கள், பண்டை நாளிலும் இன்று போன்றே தமிழருட் பொன்னருங் கரியரும் இருந்தமையை உணர்த்தும். ஆகவே, அவ் விருசாராரும் சினந்த போது அவர் முகம் சிவந்தும் கறுத்தும் போனமை உய்த்துணரப்படும். கறு, கறுவு, கறுமு முதலிய சொற்கள் இவ்வகையிற் சினங்குறிக்கத் தோன்றியவையாகும்.*

### 7. பஞ்சம்

*உணவின்றியும் ஒரு தொழிலும் நடைபெறாதும் உள்ள பஞ்சக்காலம் இருண்ட இராக்காலம் போன்றிருத்தலால், பஞ்சம் கருப்பெனப்பட்டது.*

### 8. மறைப்பு

*கரிய நிறமும் கரிய இருளும் பொருள்களையும் அவற்றின் வடிவங்களையும் மறைப்பதால், கருமைக் கருத்தில் மறைவு அல்லது மறைப்புக் கருத்துத் தோன்றிற்று.*

கர்– கர. கரத்தல் = 1. மறைதல். ''கரந்துறை கணக்கும்'' (மணிமே. 2 : 26). 2. மறைத்தல். ''தன்னு ளடக்கிக் கரக்கினுங் கரக்கும்'' (புறம். 1 : 8). கரப்பான் = பகலில் மறைந்து திரியும் பூச்சி. கரவு = மறைவு. Gk. kruptos (hidden, secret.)

## 9. கொற்றொழில்

இரும்பு கருநிறமா யிருப்பதால், அக் கனியத்தின் பெயரும், ஐவகைக் கொல்லுள் ஒன்றான இரும்படிப்புத் தொழிலின் பெயரும், அத் தொழிலைச் செய்வோன் பெயரும், கரு என்னுஞ் சொல்லை அடைமொழியாகப் பெற்றன.

கரும்பொன் = இரும்பு. ''கரும்பொ னியல்பன்றி'' (சீவக. 104). கருந்தாது = இரும்பு. ''கருந்தாது கொட்கு மிருஞ்சிலை'' (ஞானா. 57 :29). கருங்கொல் = இரும்பு (சூடா.). கருங்கொல்லன் = இரும் படிப்போன். கருமகன்– கருமான்– கருமன் (பிங்.) = இருப்புக் கொல்லன், ''கருமகக் கம்மியன்'' (கம்பரா. பம்பா. 37). **ம.** கருமான், E. blacksmith.

## 10. கருமம்

வினைசெய்து காய்ப்பேறும்போது, செந்நிறத்தார் அல்லது பொன்னிறத்தார் கை மிகச் சிவந்தும், கருநிறத்தார் கை மிகக் கறுத்தும், தோன்றுவது இயல்பு. ''செய்தகை சேவேறும், செய்யாத கை நோவேறும்'' என்பது பழமொழி. இது செந்நிறத்தார் கையைக் குறித்தது. கருநிறத்தார் கை கருங்கையெனப்படும். ''கருங்கை வினைஞர்'' (பத்துப். 4 : 223).

''கொன்றுவாழ் தொழிலினும் வன்பணித் தொழிலினும்
கன்றிய தொழிற்கை கருங்கை யெனப்படும்'' (திவா.)

கருங்கை என்பதற்கு வலிய கை என்று பொருளுரைப்பர் அடியார்க்குநல்லார்; அப் பொருள் இருவகை நிறத்தார்க்கும் பொதுவாகும். கருநிறத்தாராயின், கருங்கை என்பது கருமையையும் வலிமையையும் ஒருங்கே உணர்த்தும். கருநிறத்தாரின் பெரும் பான்மை பற்றியே, கருங்கை யென்பது செங்கையையும் தழுவிற் றென அறிக.

கருத்தல் = கை கருக்க வினை செய்தல், வினை செய்தல், செய்தல்.

ஒ. நோ : செய்தல் = கை சிவக்க வினை செய்தல், வினை செய்தல், செய்தல்.

*கரு— கரும்— கருமு— கருமம்— கம்மம்— கம்— கம்மாளன். கம்— கம்மியம்— கம்மியன். கருமம்— **வ.** கர்மன்.*

*கரு— கருவி. கரு— கரணம் = செயற்கை, கருவி. கரணம்— **வ.** கரண.*

*கருத்தல் என்னும் வினை வழக்கிறந்தது.*

### *11. இழிவு*

*கருங்குலம் (கருஞ்சாதி) = கீழ்மக்கள். கருங்கூத்து = இழிந்த வகையான நாடகம். கருநிலம் = பண்படாத நிலம். கருமகள் = சண்டாளி.*

### *12. தீமை*

*கருங்கண் = கண்ணேறு* (evil eye.) *கருந்தொழில் = கொலை வினை. கருநாள் = கரிநாள்.*

### *13. சிறப்பு*

*கருந்தனம் = சிறந்த செல்வம். கருஞ்சரக்கு = கூலம், பலசரக்கு.*

### *14. கடை*

*கருந்தலை = தொடக்கம், முடிவு.*

## சிறுகிளைக் கருத்துகள்

### *1. குற்றக் கருத்தின் கிளை*

*களக்கம்— களக்கர் = 1. கீழோர். 2. ஒரு வேட்டுவக் குலத்தார்.*

*கீழ்மக்களும் ஆறலைக்கும் வேட்டுவரும் குற்றவாளிகள் என்னும் வகையில் ஒரு வகுப்பாராவர்.*

### *2. மறைவுக் கருத்தின் கிளைகள்*

### *1. களவு*

*களவென்பது ஒருவன் பொருளை இன்னொருவன் மறைவாகக் கவர்தல். கள்— கள்ளம் = திருட்டு. கள்ளம்— கள்ளன்.*

*கள் + தல் = கட்டல் (திருடுதல்). ‘‘கட்போ ருளரெனின் (சிலப். 5 : 115). கள்வு— கள்வம் = திருட்டுச் செயல். கள்வன் = திருடன். கள்வு— களவு — களவன். களவு— களவாளி— களவாணி. களவு— களவு (பிங்.).*

*கள்ளம் – ம. கள்ளம், தெ. கல்ல.*

*கள்வன் – ம. கள்வன், து. கள்வே, வ. கலம. களவு – ம., க., து. களவு,* Gk. klepto (to steal), L. clam (secretly).

*கரத்தல் = கவர்தல். கரவு = களவு (திவா.). கரவர் = கள்வர் (பிங்.). கரவடம் = களவு (திவா.). கரவடர் = திருடர் (திவா.). கரவட நூல் = களவுநூல். (சிலப். 16 ః 180, அரும்.).*

### 2. வஞ்சனை

*வஞ்சனை யென்பது ஒன்றை உள்ளத்தில் மறைத்து வைத்தல்.*

*கள்ளம் = வஞ்சனை. ''கள்ளம் பிறவோ பசப்பு'' (குறள். 1184). களவு = வஞ்சனை. ''நங்களவ றுத்துநின் றாண்டமை'' (திருவாச. 5 ః 35). கரவு = வஞ்சனை. ''களவறிந்தார் நெஞ்சிற் கரவு'' (குறள். 288). கரவடம் = வஞ்சகம். ''மனத்திலே கரவடமாம் வேடம்'' (தண்டலை. சத. 29).*

### 3. பொய்

*பொய்யாவது சொல்லால் ஒன்றை மறைத்தல். கள்ளம் = பொய். ''கள்ளமே பேசி'' (தேவா. 1115 ః 6). கரவு = பொய். ''கரவெனு முன்ற னூலில்'' (திருவாத. பு. புத்த. 55).*

### 4. ஈயாமை

*ஈயாமையாவது ஒருவன் தன் பொருள் நுகர்ச்சியைப் பிறருக்கு மறைத்தல்.*

*கரத்தல் = கொடாதிருத்தல் (பிங்.). கரு– கரும்– கருமு. கருமுதல் = பிசினித்தனம் பண்ணுதல். கருமி = கஞ்சன்.*

### 5. கரைதல்

*கரைதலாவது ஒரு பொருள் சிறிது சிறிதாய் மறைதல்.*

*கர– கரை. கரைதல் = சிறிது சிறிதாய்க் கரத்தல், உருகுதல்.*

*கர– **ம.** கரக்கு, **தெ.**, **க.**, **து.*** karagu.

### 6. நீக்குதல்

*நீக்குதலென்பது ஒன்றை ஓரிடத்தில் இல்லாவாறு மறைத்தல்.*

*கள் + தல் = கட்டல் (களை பறித்தல்). கள்– களை. களைதல் = நீக்குதல். கள்– ம., க. கள்.*

## *7. கள்*

*கள் என்பது உணர்ச்சியை அல்லது புலனை மறைப்பது.*

*கள் = மது, கள் – ம., க. கள்,* **தெ.** *கல்லு,* **து.** *கலி. களித்தல் = கட்குடித்தல், மதுவுண்டல். களி = கட்குடியன்.*

### *கட்கருத்தின் கிளை*

*கள்– களி. களித்தல் = 1. கட்குடித்து மகிழ்தல். 2. கள்ளுண்டு வெறி கொள்ளுதல். ''களித்தானைக் காரணங் காட்டுதல்'' (குறள். 929). 3. மகிழ்தல்.*

*களி = 1. கள்ளுண்டு மகிழ்கை. 2. கள்ளுண்டு வெறிகொள்கை. ''சான்றோர் முகத்துக் களி'' (குறள். 923). 3. உள்ளச் செருக்கு. 4. மகிழ்ச்சி. 5. மதிமயக்கம் (திவா.). 6. யானை மதம். ''கால வேகங் களிமயக் குற்றென'' (மணிமே. 4 : 44). கள் = 1. கள்ளிற்கினமான தேன். 'தேனுண்ணும் வண்டு. ''கள்ளின மார்த்துண்ணும் வண்கொன்றை யோன்'' (திருக்கோ. 295).*

*களி – களிறு = 1. மதங்கொண்ட ஆண்யானை. ''வேழக் குரித்தே விதந்துகளி றென்றல்'' (தொல். 1533). 2. ஆண் பன்றி. ''கேழற் கண்ணும் கடிவரை யின்றே'' (தொல். 1534).*

## 2

# ‘குல்’ (கூடற் கருத்துவேர்)

**அடிக்கருத்து (கூடல்)**

*குல் – குலம் = 1. கூட்டம். ‘‘பூமனைவாய் வாழ்கின்ற புட் குலங்காள்’’ (நள. 37), ‘‘மாளிகைக் குலந்துகைத்து’’ (தணிகைப்பு. சீபரி. 373). 2. பெற்றோரும் பிள்ளைகளும் கூடிய குடும்பம். 3. மரபுவழிக் குடும்பம். ‘‘குலந்தாங்கு சாதிக ணாலினும்’’ (திவ். திருவாய். 3 : 7 : 9), ‘‘மலையுறை கடவுள் குலமுதல் வழுத்தி’’ (ஐங். 259). 4. உயர்மரபுவழிக் குடும்பம். ‘‘குலத்திற் பிறந்தார்வாய்ச் சொல்’’ (குறள். 959). 5. உறவினர் தொகுதி. ‘‘குலத்தைக் கெடுக்குங் கோடரிக் காம்பு’’. 6. நாடு மொழி தொழில் மதம்பற்றிய வகுப்பு* (community) *அல்லது குடும்பம். 7. ஆரியர் வகுத்த பிறவி வகுப்பு (சாதி). ‘‘குலம் குப்பையிலே, பணம் பந்தியிலே’’. 8. பால் (வருணம்). ‘‘குலம் நான்காகப் பகுத்த வகையால் தெரிந்த அந்தணர் அரசர் வணிகர் வேளாளரெனச் சொல்லப்பட்டா ரிருக்கும் நான்காய் வேறுபட்ட தெருக்களும்’’ (சிலப். 14 : 212, அடியார் உரை). 9. இனம்* (species). *‘‘ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்’’ (திருமந். 2104). 10. கொங்கு வேளாளர் குலப்பிரிவு. தூரன்குலம். 11. குடும்பம் குடியிருக்கும் வீடு (பிங்.). 12. அரசன் வீடாகிய அரண்மனை (திவா.). 13. இறைவன் வீடு போன்ற கோயில். ‘‘தேவ குலமுந் தெற்றியும் பள்ளியும்’’ (மணிமே. 26 : 72). குலம் – குலன்.*

*குலம் – வ. குல,* Gael. clann, E. clan.

*குல் – குலை = 1. காய்த்திரள், வாழைக்குலை. 2. பூங்கொத்து. ‘‘நீடுகுலைக் காந்தள்’’ (பெரும்பாண். 371). 3. ஈரற்குலை, ‘வீரர் குலைக ளற்றிட’’ (அரிச். 4. வேட்டஞ். 48).*

*குலை – ம. குல, தெ. கொல* (gola), *க. கொலெ* (gole).

*குல் – குல – குலவு. குலவுதல் = 1. மகிழ்தல். ‘‘மறையோர் குலாவி யேத்துங் குடவாவில்’’ (தேவா. 763 : 2). 2. கொண்டாடுதல் (பிங்.). 3.*

*நட்பாடுதல். 4. நிலைபெறுதல். ''குலாய கொள்கைத்தே'' (சீவக. 1007). ம. குலாவு.*

*குல்– கல்– கல. கலத்தல் = கூடுதல், கூட்டுறவாதல், பொருந்துதல். கூடிப்பேசுதல், கூடியறிதல்.*

*கல– து. கல, தெ. கலயு, க. கலசு, ம. கலருக. கல– கலப்பு = கூடுகை, கலக்கை, நட்பாகை. தெ., க. கலப்பு.*

*கலப்பு– கலப்படம்– தெ. கலப்படமு.*

*கலங்கா வரிச்சு = கலவாமல் இடைவிட்டுக் கட்டிய வரிச்சுக் கட்டு.*

*கல– கலவை = 1. பல்பொருட் கலப்பு. 2. விரை (மண) நீர் கலந்த சந்தனக் குழம்பு. ''தழுவிய நிலவெனக் கலவை'' (கம்பரா. கடிமணப். 51). 3. கலந்தவுணவு. ''கலவைக ளுண்டு கழிப்பர்'' (நாலடி. 268). 4. மணல் கலந்த சுண்ணாம்பு.*

*கல– கலவு. கலவுதல் = கலத்தல். ''கனியின் றிரளுங் கலவி'' (சூளா. சீய. 230). கலவு – கலவல் = கலக்கை (பிங்.). கலவன் = கலப் பானது. கலவங்கீரை = கலவைக்கீரை. கலவினார் = உற்றாருறவினர். ''கலவினார் பழிகரக்கு மேதை'' (தணிகைப்பு. திருநாட்டு. 142).*

*கலவு – கலாவு. கலாவுதல் = கலத்தல். ''வானத்து வீசுவளி கலாவலின்'' (குறிஞ்சிப். 48).*

*கல– கலம்பு– கதம்பு– கதம்பம் = 1. கூட்டம். 2. கலப்புணவு. 3. மணப்பொடிக் கலவை. 4. பன்மலர் மாலை. ஒ. நோ: சலங்கை– சதங்கை.*

*கலம்பு – கலம்பகம் = 1. பூக்கலவை. ''கலம்பகம் புனைந்த வலங்கலந் தொடையல்'' (திவ். திருப்பள்ளி. 5). 2. பல்வகைச் செய்யுளும் பதினெண் தலைப்புங் கலந்த பனுவல்வகை (இலக். வி. 812).*

*கல் – கலுழ். கலுழ்தல் = பொருந்துதல். ''கண்முத்த மாலை கலுழ்ந்தனவே'' (திருக்கோ. 397).*

*கலுழ் – கலுழன் = வெண்ணிறமுஞ் செந்நிறமுங் கலந்த பறவையினம்.*

*''கலுழன்மேல் வந்து தோன்றினான்'' (கம்பரா. திருவவ. 13 கலுழன்– வ. கருட* (garuda).

*குல் – குள் – கள். கள்ளுதல் = 1. கூடுதல், பொருந்துதல், ஒத்தல். 'கள்ள' ஓர் உவமையுருபு. ''கள்ளக் கடுப்ப'' (தொல். பொருள் உவம. 11).*

*கள்– களம் = 1. கூட்டம். 2. கூடுமிடம். 3. நெற்களம். ''காவ லுழவர் களத்தகத்துப் போரேறி'' (முத்தொள். 65). 4. போர்க்களம். ''ஈரைம் பதின்மரும் பொருதுகளத் தொழிய'' (புறம். 2 : 15). 5. அவை. 6. இடம் (திவா.).*

*களம் – களமர் = 1. மருதநில மாக்கள். ''கருங்கை வினைஞருங் களமருங் கூடி'' (சிலப். 10 : 125). 2. போர் மறவர். ''கள்ளார் களம ரிருஞ்செரு மயக்கமும்'' (மதுரைக். 393). களமன்– வ. கலம.*

*களம்– களமம் = (மருதநிலத்து) நெல். களமம்– வ. கலம.*

*களம்– களன் = அவை. ''களனஞ்சி'' (குறள். 730).*

*களம்– களர் = கூட்டம் (சூடா.).*

*களர்– களரி = 1. அவை. ''அரங்கேற்றுங் களரியிலே''* ***(திருக்கை).*** *2. போர்க்களம். ''பூசற் களரியிலே'' (பு. வெ. 2 : 6. கொளு, உரை). 3. நாடகம் கல்வி மல் முதலியன பயிலும் அரங்கு. 4. வழக்கு மன்றம் (கோயிலொழுகு. 64). 5. தொழிற்சாலை.*

*களம் – களன் – கழனி = 1. மருதநிலம் (பிங்.). 2. வயல். ''கழனி யுழவர்'' (புறம். 13 : 11). 3. சேறு.*

*கள– (களகு) = களகம் = 1. நெற்கதிர். ''வண்களக நிலவெறிக்கும்'' (திவ். பெரியதி. 6 : 9 : 10). 2. சுண்ணாம்புச் சாந்து. ''களகப் புரிசைக் கவினார்....... காழி'' (தேவா. 112 : 3).*

*களகம் – களபம் = 1. கலவை (சூடா.). 2. சுண்ணச்சாந்து. ''நுண்களபத் தெளிபாய'' (திருக்கோ. 15). 3. கலவை மணச்சாந்து. ''புலிவிரா யெறிந்திடக் களபம் போக்குவார்'' (இரகு. இரகுவுற். 26).*

*ஒ. நோ : மண்டகம்– மண்டபம், வாணிகம்– வாணிபம்.*

*களகு – கழகு = கழகம். கழகு – கழகம் = 1. பேரவை. ''கழக மேறேல் நம்பீ'' (திவ். திருவாய். 6 : 2 : 6). 2. புலவரவை (திவா.). 3. கல்வி பயிலும் இடம். ''கந்தனை யனையவர் கலைதெரி கழகம்'' (கம்பரா. நாட்டுப். 48). 4. படைக்கலம் மற்போர் முதலியன பயிலும் இடம் (திவா.). 5. கவறாடும் இடம். ''கழகத்துக் காலை புகின்'' (குறள். 937). ம. கழகம்.*

*கழகம் என்னுஞ் சொல், இயல்பாக ஓர் அவையை அல்லது அவைக்களத்தைக் குறிக்குமேயன்றி, கவறாடும் அரங்கைக் குறிக்காது.*

*''கண்ணு தற்பெருங் கடவுளுங் கழகமோடமர்ந்து'' (திருவிளை. திருநாட். 56), நாட்டாண்மைக் கழகம், சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் முதலிய வழக்குகளை நோக்குக. திருக்குறளிற் சூது என்னும் அதிகாரத்திலேயே, கழகம் என்னும் சொல் சூதாடரங்கைக் குறிக்கலாயிற்று. கல – கள – களகு – கழகு – கழகம்.*

*கள் – கட்சி = 1. போர்க்களம். ''கட்சியுங் கரந்தையும் பாழ்பட'' (சிலப். 12. உரைப். 25). 2. ஒரு கொள்கைபற்றிய கூட்டம். 3. மரமடர்ந்த காடு. ''கலவ மஞ்ஞை கட்சியிற் றளரினும்'' (மலைபடு. 235).*

*கள் – கண். கண்ணுதல் = பொருந்துதல், ''புடைகண்ணிய வொளிராழியின்'' (இரகு. யாக. 17).*

*கண் – கண, கணத்தல் = கூடுதல். கண – கணம் = 1. கூட்டம் ''கணங்கொண்டு சுற்றத்தார் கலலென் றலற'' (நாலடி. 25), ''மான்கணம் மறலா'' (சிலப். 13 : 6). 2. படைப்பகுதி. கணம் – வ. கண (ப்நிற்நி).*

*கணவர் = கூட்டத்தார். ''பூத கணவர்'' (கந்தபு. திருக்கயி. 8). ஆளுங் கணத்தார் = ஊராட்சியமைவார்.*

*கணம் – கணன் = தொகுதி. ''கணனடங்கக் கற்றானு மில்'' (சிறுபஞ். 31).*

*கணம் – கணகம் = 27 தேர்களும், 27 யானைகளும், 81 குதிரை களும் 135 காலாள்களுங் கொண்ட படைப்பிரிவு (பிங்.).*

*கணம் – கணந்துள் = கூட்டமாக வாழும் பறவையினம். ''இருந்தோட் டருஞ்சிறை நெடுங்காற் கணந்துள்'' (குறுந். 350).*

*கள் – கட்டு. கட்டுதல் = சேர்த்தல், பொருத்துதல், புனைதல், பிணித்தல், பூட்டுதல், உடுத்தல், தொடுத்தல், அமைத்தல், திரள்தல், நென்மூட்டை கட்டி அரசிறையாகச் செலுத்துதல். தாலி பூட்டி மணத்தல், செலவொடு வரவு பொருந்துதல், ஒத்தல், பொய்யாகப் புனைதல், மூடுதல், தடுத்தல், அடக்குதல்.*

*ம., தெ., க., து. கட்டு.*

*கட்டு = 1. பிணிப்பு. ''கட்டவிழ்தார் வாட்கலியன்'' (அஷ்டப். நூற்றெட். காப்பு). 2. மலப்பிணிப்பு. ''கட்டறுத் தெனையாண்டு'' (திருவாச. 5 : 49). 3. மூட்டை. 4. கட்டடம் (பிங்.). 5. கட்டுப்பாடு. 6. கட்டளை. ''கட்டுடைக் காவலிற் காமர் கன்னியே'' (சீவக. 98). 7. காவல். ''மதுவனத்தைக் கட்டழித்திட்டது'' (கம்பரா. திருவடி. 18). 8. அரண். ''கட்டவை மூன்று மெரித்த பிரான்'' (தேவா. 386 : 7).*

9. மதிப்பு. ''கட்டோடு போனாற் கனத்தோடு வரலாம்''. 10. நெல்லைக் கட்டிக் கூறுங் குறி. ''கட்டினுங் கழங்கினும்'' (தொல். பொருள் 115). 11. பொய் யுரை ''கருமங் கட்டளை யென்றல் கட்டதோ'' (கம்பரா. கிட். அரசி. 16).

கட்டு – கட்டம் = 1. கவறாட்டத்திற்கு வரையும் அறைகள். (பெருங். மகத. 14 ፡56). 2. காடு (திவா.). 3. மோவாய்க் கட்டை (பிங்.). தெ. கட்டமு (gaddamu).

கட்டு – கட்டகம் = காந்தக்கல். ''நலமலி கட்டகம்'' (ஞானா. 55 ፡ 13).

கட்டு – கட்டடம் = வீடு கட்டுதல். பொத்தகங் கட்டுதல், பொன்னணியிற் கற்பதித்தல். கட்டடம் – **தெ.** கட்டடமு.

கட்டு – கட்டணம் = 1. பாடை. 2. செலுத்தும் பணம். கட்டணம் – **க.** கட்டண.

கட்டு – கட்டளை = 1. செங்கல் முதலியவற்றின் அச்சு. ''கட்டளை கோடித் திரியின்'' (அறநெறி. 56). 2. உருவங்கள் வார்க்குங் கருவி. 3. ஒன்றுபோல் அமைத்த உருவம். ''காட்டி வைத்ததோர் கட்டளை போல'' (பெருங். உஞ்சைக். 33 ፡ 113). 4. உவமை (பிங்.). 5. உரைகல். ''சால்பிற்குக் கட்டளை யாதெனின்'' (குறள். 986). 6. ஒழுங்கு. 7. கட்டுப்பாடு. 8. சமய நெறிமுறைகளை யுணர்த்தும் நூல். 9. கோயிலிற் சிறப்பாக ஓர் அறஞ்செய்தற்குச் செய்யப்படும் ஏற்பாடு. 10. அதிகாரியின் உத்தரவு அல்லது ஏவல். தெ. கட்டட, க. கட்டளே.

கட்டு – கட்டாடி = குறிசொல்வோன்.

கட்டு – கட்டாப்பு = 1. வேலியடைத்த நிலம். 2. தடவை.

கட்டு – கட்டாயம் = தப்பாமற் செய்ய வேண்டிய நிலைமை. தெ. கட்டாயமு (kaddayamu), க. கட்டாய (kaddaya).

குள் – (குய்) – குயில். குயிலுதல் = செறிதல் (திவா.).

குல் – (குர்) – குரல் = 1. சேர்க்கை. ''குரலமை யொருகாழ்'' (கலித். 54 ፡ 7). 2. கொத்து. ''கமழ்குரற் றுழாய்'' (பதிற். 31 ፡ 8). 3. கதிர். ''வரகி னிருங்குரல்'' (மதுரைக். 272). 4. பெண்டிர் கூந்தல். ''நல்லார் குரனாற்றம்'' (கலித். 88). 5. மகளிர் குழல் முடிக்கும் வகைகளுள் ஒன்று. (பு. வெ. 9 ፡ 35, உரை).

குர் – குரு – (கரு) – கருவி = தொகுதி. ''கருவி தொகுதி'' (தொல். சொல். உரி. 56). It. gruppo, F. groupe, E. group.

குள் – குழு = 1. கூட்டம் (திவா., பிங்.). 2. தொகுதி.

''இந்தனக் குழுவை'' (ஞானா. 63 : 11). குழு– குழூஉ. **ம.** குழு.

குழு – குழுவு. குழுவுதல் = கூடுதல். ''மள்ளர் குழீஇய விழவி னானும்'' (குறுந். 31), ''குமரரு மங்கை மாருங் குழுவலால்'' (கம்பரா. வரைக. 28). குழு– குழுவல் = கூட்டம்.

குழு– குழும்பு = திரள். ''களிற்றுக் குழும்பின்'' (மதுரைக். 24).

குழும்பு – குடும்பு = 1. காய்கனிக் குலை (பிங்.). 2. பண்டை ஊரவைத் தேர்தலுக்கு வகுத்த ஊர்ப்பகுதி (ward).

குடும்பு– குடும்பம் = பெற்றோரும் பிள்ளைகளும் சேர்ந்த கூட்டம். ''குடும்பத்தைக் குற்ற மறைப்பா னுடம்பு'' (குறள். 1029). குடும்பம்– வ. குட்டும்ப.

குழுவு– குழுமு. குழுமுதல் = கூடுதல். ''மாத ரெண்ணிலார் குழுமி'' (காஞ்சிப்பு. பன்னிரு. 134). 2. கலத்தல். ''கொன்றையுந் துளவமுங் குழுமத் தொடுத்த'' (சிலப். 12, து.ப. மடை. க0).

குழுமு– குழுமல் = கூட்டம் (பிங்.).

குழுமு – குழுமம் – குழாம் = 1. கூட்டம். ''மயிற்குழாத் தொடும் போகுமனனம்'' (கந்தபு. திருநகரப். 31). 2. அவை. ''சான்றோர் குழா. அத்துப் பேதை புகல்'' (குறள். 840).

குழு– குழம்பு. குழம்புதல் = பலவகைப் பொருள் கூடுதல்.

குழுமு – கழுமு. கழுமுதல் = 1. சேர்தல். ''பெண்டிர்...... செந்தீக் கழுமினார்.'' (பு.வெ. 7 : 28). 2. பொருந்துதல். ''கழுமிய காதல்'' (பு. வெ. 10, முல்லைப். 5, கொளு). 3. திரளுதல். ''மென்புகை கமழு சேக்கை'' (சீவக. 1350). 4. கலத்தல். ''கழுமிய ஞாட்பு'' (தொல். சொல். 351, உரை.)

குழு – கெழு. கெழுதகை = நட்புரிமை. ''கிள்ளி வளவனொடு கெழுதகை வேண்டி'' (மணிமே. 25 : 14).

கெழுதகைமை = நட்புரிமை. ''நட்பிற் குறுப்புக் கெழு தகைமை'' (குறள். 802).

கெழு – கெரு = நட்பு. ''ஒருவன் கெழியின்மை கேட்டா லறிக'' (நான்மணி. 63). க. கெளெ.

கெழு – கெழுவு. கெழுவுதல் = 1. பொருந்துதல். ''மங்கையைக் கெழுவின யோகினர்'' (தேவா. 951 : 5). 2. நிறைதல். ''கெழுவிய காதலை யெனறு'' (தணிகைப்பு. களவு. 530). 3. பற்றுக்கொள்ளுதல் (சூடா.).

*கெழுவு– நட்பு. ''கேளிர் மணலின் கெழூவு மிதுவோ'' (பரிபா. 8 : 63).*

*கெழுவு – கெழுமு. கெழுமுதல் = 1. கிட்டுதல். ''ஒன்னாதார் படைபுகழுமி'' (பு. வெ. 3 : 12, கொளு). 2. பொருந்துதல் ''தேரோடத் துகள்கெழுமி'' (பட்டினப். 47). 3. நிறைதல். ''கெழுமி யெங்கணுமாய்க் கிளரொளிச் சடையனை'' (வள்ள. சத்தியஞான. பதியியல், 9).*

*குள்– கூள். கூளுதல் = திரளுதல். ''கூண்டன கரிகள்'' (இரகு. மீட்சி. 42).*

*கூளம் = பலவகைத் தாளும் வைக்கோலுங் கலந்த மாட்டுணவு.*

*கூளப்படை = பலவகையினர் கலந்த கூட்டுப்படை, (ஈடு. 6 : 6 : 1 அருக.).*

*கூள்– கூளி = 1. கூட்டம் (பிங்.). 2. குடும்பம் (பிங்.).*

*கூளியன் = கூட்டாளி, நண்பன் (சூடா.)*

*கூள் = கூடு. கூடுதல் = ஒன்றுசேர்தல், திரளுதல், பொருந்துதல், நட்புறுதல், மிகுதல்.*

**ம., தெ., க., து.** *கூடு.*

*கூட = உடன்.* **ம., தெ., க., து.** *கூட.*

*கூடு– கூட்டம் = கூடுகை, திரள், அவை, இனத்தார், நட்பினர்.*

**ம.** *கூட்டம்,* **தெ.** *கூட்டமு,* **க., து.** *கூட்ட.*

*கூடு– கூடம் = பலர் கூடுமிடம், நீண்ட பேரறை, பட்ட சாலை.*

*எ - டு : பள்ளிக்கூடம், வீட்டுக்கூடம், தொழிற்கூடம். கூடம் –* **வ.** *கூ(ட்)ட*

*கூட்டம் – குட்டம் = 1. திரள். 'அழற்குட்டம் போல்'' (சீவக. 10 :79). 2. அவை. ''படைக்கலம் பிடித்துக் குட்டத்துக்குச் செல்லப் பெற்றார்''* (T.A.S. Vol. I. 9).

*கூடல் = 1. கூடுதல். 2. பொருந்துகை. 3. ஆறு கடலொடு கூடுமிடம். ''மலியோதத் தொலிகூடல்'' (பட்டினப். 98). கூடலூர்* (Cuddalore). *முக்கூடல் = மூவாறுகள் கூடுமிடம். 4. தலைவனைப் பிரிந்த தலைவி அவன் வருங் குறியறிய மணலில் இழைக்கும் கூடற்சுழி. ''நீடலந் துறையிற் கூட லிழைத்தது'' (திருக்கோ. 186). 5. புலவர் கழகம். 6. கழகமிருந்த மதுரை. ''கூட னெடுங்கொடி யெழவே'' (கலித். 31). 7. தோப்பு. ''செயலைக் கூடலே'' (இரகு. தேனுவந். 70).*

*கூட்டு = திரள், இனம், நட்பு, உறவு, துணை, கலப்பு, கலவை, சேர்ப்பு, ஒப்பு, கூட்டுத்தொழில், கூட்டுக்கறி.* **ம.** *கூட்டு.*

*கூட்டர் = தோழர், இனத்தார், ம.கூட்டர்.*

*கூட்டரவு = கூடிப் பழகுதல். ''போத மிக்கவர் கூட்டரவு'' (ஞானவா. முமுட். 25).*

*கூட்டாளன் = கூட்டாளி.* **ம.** *கூட்டாளன்.*

*கூட்டாளி = நண்பன், பங்காளி, ஒத்தவன்.* **ம.** *கூட்டாளி.*

*கூட்டுறவு = கூடியுறவாடல், கூடித் தொழில் செய்தல். கூட்டுறவுக் கழகம்* (Co-operative Society).

*கூட்டுச் சொல் = ஒருசொற் றன்மைப்பட்ட இணைச்சொல்* (compound word).

*கூட்டெழுத்து = 1. விரைவாகக் கூட்டி யெழுதுங் கையெழுத்து* (running hand). *2. பல மெய் இணைந்த வடவெழுத்து* (conjunct sonsonant).

*குள்– கொள். கொள்ளுதல் = பொருந்துதல். ''கொள்ளாத கொள்ளா துலகு'' (குறள். 470).*

*கொள்– கொள்ளை = 1. கூட்டம். ''கொள்ளை யிற்பலர் கூறலும்'' (கந்தபு. விண்குடி. 14). 2. மிகுதி. ''கொள்ளைமா மதத்த நால்வாய்க் குஞ்சரம்'' (பாகவ. 1 : 15 : 14).*

*கொள்ள = நிரம்ப. உணவு கொள்ளக் கிடைத்தது. கொள்– கோள் = குலை. ''செழுங்கோள் வாழை'' (புறம். 168 : 13). ''கோட்டெங்கிற் குலைவாழை'' (பட்டினப். 16).*

*கோள்– கோட்டி = 1. கூடியிருக்கை. ''தன்றுணைவி கோட்டி யினி னீங்கி'' (சீவக. 1035). 2. கூட்டம் (பிங்.). 3. அவை. ''தோமறு கோட்டியும்'' (மணிமே. 1 : 43).*

*கோள்– கோடு– கோடகம் = பல தெருக் கூடுமிடம் (பிங்.). கோடு – கோடி. கோடித்தல் = கட்டுதல், அமைத்தல். ''கடிமண் டபமுன் கோடிப்ப'' (காஞ்சிப்பு. திருமண. 4).*

## கிளைக் கருத்துக்கள்

### 1. ஒப்புமை

*கள்ள, கடுப்ப என்பவை தொல்காப்பியத்திற் குறிக்கப் பட்டுள்ள உவமையுருபுகள் என்பது முன்னர்க் கூறப்பட்டது. கணத்தல் = கூடுதல்,*

பொருந்துதல், ஒத்தல். குரங்கு கணக்க ஓடுகிறான் என்பது நெல்லை வட்டார உலகவழக்கு. கூட்டு = ஒப்புமை. ''மடங்கல் கூட்டற வெழுந்தெரி வெகுளியான்'' (கம்பரா. அதிகாய. 1). கெழுவ என்பது ஓர் உவமையுருபு (தொல். பொருள். 286, உரை). குழு– கெழு– கேழ் = ஒப்பு. ''கேழே வரையுமில்லோன்'' (திருக்கோ. 269). கொள்ளுதல் = ஒத்தல் ''வண்டினம் யாழ்கொண்ட கொளை'' (பரிபா. 11 : 125), ''இனம் இனத்தோடே, வெள்ளாடு தன்னோடே'' என்னும் முறைமைபற்றிக் கூடுதற் கருத்தில் ஒப்புமைக் கருத்துப் பிறந்தது.

### 2. பன்மை

பன்மை பல்பொருட் கூட்டமாதலால், கூடுதலைக் குறிக்கும் கள்ளுதல் என்னும் வினைச்சொல்லினின்று 'கள' என்னும் பன்மையுருபு அமைக்கப்பட்டது.

எ - டு : மக்கள் (மக + கள்), மரங்கள், விலங்குகள்; யாங்கள், நீங்கள், அவர்கள்.

### 3. நிறைவு

பன்மையால் நிறைவுண்டாகும். கழுமுதல் = நிறைதல். கெழுவுதல் = நிறைதல்.

### 4. மிகுதி

அளவிற்கு மிஞ்சின பன்மையே மிகுதி. கூடுதல் = மிகுதல். கழுமுதல் = மிகுதல்.

ஒ. நோ : நிரம்ப = நிறைய, மிக.

### 5. கோது

ஒரு நீர்ப்பொருட் கலத்தில் கசண்டு அடியில் தங்கிச் செறிவதனாலும், கழிபொருளான குப்பையிற் பலவகைப் பொருள் கலப்பதாலும், செறிதல் அல்லது கலத்தற் கருத்தினின்று கழிபொருட் கருத்துத் தோன்றிற்று. கூளம் = திப்பி, மண்டி (dreg = sediment). ஒ. நோ : மண்டு – மண்டி, மண்டுதல் – செறிதல். கூளன் = பயனற்றவன். ''உழை பேணாக் கூளன்'' (திருப்புகழ். 109). கூளி = குற்றம் (சூடா.). குப்பை கூளம் என்னும் வழக்கை நோக்குக.

### 6. கணக்கு

கூட்டல் கழித்தல் பெருக்கல் வகுத்தல் என்னும் நால்வகைக் கணக்குள், முதலாவது தோன்றியது கூட்டற் கணக்கே.

*கூடு – கூட்டல். கணத்தல் = கூடுதல். கண – கணக்கு = கூட்டு, கூட்டுத்தொகை, மொத்த அளவு, அளவு, வரம்பு, கூட்டறகணக்கு, கணக்கு. கணக்கு– கணக்கன், கணக்கப்பிள்ளை.*

### 7. புணர்ச்சி

*காதலன் காதலியர் மெய்யுறக் கூடல் புணர்ச்சி. ''பெரிதாற்றிப் பெட்பக் கலத்தல்'' (குறள். 1276). ''கலவியான் மகிழ்ந்தாள்போல்'' (சிலப். 7 : 24, கட்டுரை). ''கூடலிற் காணப் படும்'' (குறள். 1327). ''காமக் கூட்டங் காணுங் காலை'' (தொல். பொருள். கள. 1). கணவன் = கூடுவோன். கடுவன் = ஆண்குரங்கு.*

### 8. பொருத்து

*கூளி = பொலிகாளை. உறுப்புகள் அல்லது அவற்றின் பகுதிகள் ஒன்றோடொன்று கூடுவது பொருத்தாகும். கலவு = உடலின் மூட்டுவாய். ''கலவுக்கழி கடுமுடை'' (அகம். 3).*

*கள் – களம் = உடல் முண்டத்தைத் தலையொடு பொருத்தும் உறுப்பாகிய 1. கழுத்து. 2. தொண்டை. ''பாடுகள மகளிரும்'' (சிலப். 6 : 157). கள் – (கண்டு) – கண்டம் = கழுத்து, தொண்டை. ''காராருங் கண்டனை'' (தேவா. 1071 : 1).*

*களம் – வ.* gala. L. collum. *கண்டம் –* ***வ.*** *கண்ட* (kantha.)

*கண் – கணு. கட்டு – கட்டாணி = அணிகளின் கடைப் பூட்டாணி. குயில் – கயில் = பூண்கடைப்புணர்வு (திவா.). கயில் – கயிறு = கட்டுவது.* ***ம.*** *கயறு.*

### 9. நெயவு

*நெடுக்கிழையுடன் ஊடையைப் பொருத்திப் பின்னுவது நெயவு. குயிலுதல் = 1. நெய்தல். ''ஊசியொடு குயின்ற தூசும் பட்டும்'' (தொல். சொல். 74, உரை). 2. பின்னுதல். குயில் – குயினர் = தையற்காரர் (பிங்.). கோடி – கோடிகம் = ஆடை. கோடிகர் = ஆடை நெய்வோர் (பெருங். இலாவாண. 8 :67).*

### 10. போர்

*மாறுபட்ட இருவர் அல்லது இரு கூட்டத்தார் கலந்தே போர் செய்வர். கைகலத்தல் என்னும் வழக்கை நோக்குக. கல – கலகு = கலகம். கலகித்தில் = கலகஞ்செய்தல். கலகம் – கலாம். கலாய்த்தல் = சினத்தல், மாறுபடுதல். கலாவுதல் = சினத்தல். கலாவு – கலாவம் – கலாபம் = கலகம். ஐதர் கலாபம். கலாபித்தல் – கலகஞ்செய்தல். கலாபி – கலாபனை –* ***தெ.*** *கலாபன. கூட்டம் = போர் (திவா.).*

**11. கலங்கல்**

*நீரும் மண்ணுங் கலத்தல் கலங்கல். கல – கலகு – கலங்கு – கலங்கல். கல– கலுழ். கலுழ்தல் = கலங்கல். கலுழ் = நீர்க்கலக்கம். கலுழி = கலங்கனீர். கலுழ்– கலிழி = கலங்கனீர். கலுழி– கலிழி. கலுழ்– கலுழம் – கலுடம்–* **வ.** *கலுடி.*

**12. கலக்கம்**

*ஒரு வழியோடு பிறவழிகள் கலக்கும்போதும், அமைதியான மனத்திற் துயர் கலக்கும்போதும் ஒரு செய்திபற்றிப் பல கருத்துகள் எழும்போதும் மனங் கலங்கும். கலங்கு – கலக்கு – கலக்கம். கலக்கு (பி.வி.)– ம. கலக்கு, க. கலக்கு, தெ. கலத்சு. கலக்கு (பெ.)– க. கலக்கு, தெ. கலக்குவ. கலக்கம் (தொ.பெ.)– ம. கலக்கம், தெ. கலக்க.*

*கலுழ்தல் = மனங்கலங்குதல். கலவரித்தல் = கலங்குதல். கலதை, கலவரம், கலவரை என்பன கலக்கங் குறிப்பன. கலவரம்– தெ. கலவரமு, க. கலவள. கழுமுதல் = மயங்குதல். குழம்புதல் = கலங்குதல். ம. குழம்பு. குழம்பு– குழப்பு– குழப்பம் = தாறுமாறு, அமைதியின்மை. கோழம்பம் = குழப்பம்.*

**13. திரட்சி**

*பல பொருள்கள் ஒன்றாகச் சேரின் திரட்சியுண்டாகுமாதலால், கூடுதற் கருத்தில் திரட்சிக் கருத்துத் தோன்றும். குள் – குளம்பு = விலங்குகளின் திரண்ட காலுகிர். குழு – குழை = திரண்ட காதணி. குழு – கழு– கழுகு = பெரும்பறவை. கழு முரகு = மிகப் பெரிது. குள்– குண்டு– கண்டு = கட்டி, நூற்றிரளை. கண்டு – கண்டம் = பெரிய துண்டு. கணைக்கால் = திரண்ட கெண்டைக்கால். கணை = திரண்ட பிடி. கணையம் = திரண்ட எழு. குறடு = திண்ணை. குண்டை (காளை), குண்டாந்தடி, குண்டடியன் (ஆண்சிவிங்கி), குண்டுக்கழுதை என்பனவும் திரட்சி பற்றியனவே.*

**14. பருமை**

*திரட்சியாற் பருமையுண்டாம்.*

*குரு = பருமை. ''குரூஉக்களிற்றுக் குறும்புடைத்தலின்'' (புறம். 97). கூளி = பெருங்கழுகு. கூளிப்பனை = தாளிப்பனை.*

**15. கனம்**

*திரட்சியாலும் பருமையாலும் கனமுண்டாம். குரு = கனம். ''பசுமட் குரூஉத் திரள்'' (புறம். 32). (குல்)– கல் = கனமுள்ளது.*

**க., ம.,** *கல்.* **தெ., து.** *கல்லு.*

### 16. பெருமை

*பரு– பெரு. பருப்பொருட் கருத்தான பெருமைக் கனத்தி னின்று, நுண்பொருட் கருத்தான பெருமை கனம் தோன்றும். குரு – குருக்கள், குருசில் – குரிசில், குரவன், குருமகன். கனம் பொருந்திய, கனவான் முதலிய சொற்களையும் வழக்குகளையும் நோக்குக. கலந்தை = பெருமை.*

## சிறுகிளைக் கருத்துகள்

*பொருத்தற் கருத்தினின்று கட்டுதல், அமைத்தல், புனைதல், செலுத்துதல், அணிதல், மணத்தல் முதலிய பல கருத்துகள் தோன்றும். அவை யாவும் முற்கூறப்பட்டன. திரட்சிக் கருத்தினின்று திண்மை, உறுதி, திறமை ஆகிய கருத்துகள் தோன்றும்.*

***திண்மை*** *குழம்பு = திண்ணிய சாறு. குட்டி – கட்டி. கூளியர் = படைமறவர்.*

***உறுதி*** *கட்டு = உறுதி. கட்டி – கெட்டி. [கட்டனை = திமிசு]*

***திறமை*** *கெட்டி – கெட்டிக்காரன். கட்டாணி = திறவோன்.*

***தெ.*** *கட்டாணி.*

*குறிப்பு : கும் – கும்மல் – குமியல் – குவியல், கும் – கும்பு – கும்பல், கும்பு – குப்பு – குப்பல், குப்பை, கும்பு – கும்பை முதலிய சொற்கள் குவிதற் கருத்தோடு கூடற் கருத்தையுங் கொண்டன வேனும், அவை உன் என்னும் உயிர்முதல் வேர்ச்சொல்லினின்று திரிந்தனவாதலின், இங்குக் கூறப்பட்டில. உயிர்மெய்ம்முதல் வேர்ச் சொற்கள் முடிந்த பின், 'பின்' முதலிய சில உயிர்முதல் வேர்ச் சொற்கள் விளக்கப் பெறும்.*

3

# குல்[1] (தோன்றற் கருத்துவேர்)

*தோன்றற் கருத்தினின்று இளமை, மென்மை, சிறுமை, குறுமை முதலிய கருத்துகள் கிளைக்கும்.*

*குல் – குன் – குன்னி = சிறுபிள்ளை, சிற்றுயிரி, சிறு பொருள். ‘நன்னியுங் குன்னியும்’ என்பது பாண்டிநாட்டு உலக வழக்கு.*

*குல் – குள் – குளகு = 1. இளந்தழை. ‘‘வாரணமுன் குளகருந்தி’’ (கலித். 42). 2. விலங்குணா. ‘‘மறிகுள் குண்டன்ன மன்னா மகிழ்ச்சி’’ (நாலடி. 17). ‘‘இலைநுகர் விலங்கு ணாவே குளகென வியம்ப லாகும்’’ (சூடா. 6 : 32). 3. தழையுடை. ‘‘குளகரைச் சுற்றிய குறம டந்தையர்’’ (காசிகண். 44 : 16). 4. இலைக்கறி.* (W).

*குளகு – குளகன் = இளைஞன். ‘‘குளகன் வந்துழி’’ (கந்தபு. குமார. 1).*

*குள– குழ = இளமையான. ‘‘மழவுங் குழவும் இளமைப் பொருள’’ (தொல். உரி. 14). குழ – வ. குட* (guda).

*குட என்னும் வடசொல்லினின்று குழ என்னுந் தென்சொல் திரிந்துள்ளதாகச் சென்னைப் ப.க.க.த. அகரமுதலி தலைகீழாகக் காட்டியுள்ளது.*

*குழ – குழவு = இளமை.*

*குழவு – குழவி = 1. இளஞ்சேய், கைக்குழந்தை. ‘‘ஈன்ற குழவி முகங்கண் டிரங்கி’’ (மணிமே. 11 : 114). 2. யானை, ஆவு, எருமை, கடமை, மரை, குரங்கு, முசு, ஊகம் முதலிய விலங்கின் இளமைப் பெயர். (தொல். மரபு, 19 - 23). 3. ஓரறிவுயிரின் இளமைப் பெயர். ‘‘வீழில் தாழைக் குழவி’’ (தொல். மரபு, 24, உரை). 4. ஒரு குறுமைப் பொருள் முன்னொட்டு. ‘‘குழவித் திங்கள்’’ (தொல். மரபு. 24, உரை).*

*ஒ. நோ :* E. cule, F. cule, L. culus, cula, culum – clim. suf. E. cule – cle, cel *etc*.

*குழ– குழந்து– குழந்தை = 1. கைப்பிள்ளை. ‘‘குழந்தையை யுயிர்த்த மலடிக்கு’’ (கம்பரா. உருக்கா. 65). 2. நடை பழகுஞ் சிறுபிள்ளை. 3. இளம்பருவம். ‘‘குழந்தை வெண்மதி’’ (கம்பரா. ஊர்தேடு. 209).*

*ஒ. நோ :* OE. clid, E. child. c = k.

*குழவு – குழகு = 1. குழந்தை. ‘‘குழகென வெடுத்துகந்தவுமை’’ (திருப்பு. 106). 2. இளமைச் செவ்வி. ‘‘கொம்மைக் குழகாடுங் கோலவரை மார்பர்’’ (சீவக. 2790). 3. அழகு. ‘‘கொன்றை சூடிக் குழகாக..... விளையாடும்’’ (தேவா. 468 : 7)*

*குழகு– குழகன் = 1. இளைஞன். ‘‘நின்மணக் குழகன்’’ (திருவிளை. திருமண. 44). 2. அழகன். ‘‘கொட்கப் பெயர்க்குங் குழகன்’’ (திருவாச. 3 : 12). 3. முருகன். (பிங்.). 4. பிறர்க்கிணங்கு பவன். ‘‘குரவை கோத்த குழகனை’’ (திவ். திருவாய். 3 : 6 : 3).*

*குழமகன் = 1. இளம்பருவத் தலைவன். ‘‘குழமகனைக் கலி வெண்பாக் கொண்டு..... விளங்க வுரைத்தாங்கு’’ (இலக். வி. 858). 2. பெண்டிர் குழமகனைப் புகழும் பனுவல் (தொன். 283). 3. மரப்பாவை. ‘‘உத்தரியப் பட்டுங் குழமகன் றனக்கு நல்கி’’ (பாரத. நிரைமீ. 136).*

*குழ – குழை = தளிர். ‘‘பொலங்குழை யுழிஞை’’ (புறம். 50).*

**க.** *கொழச்சி.*

*குழ – குழலை – குதலை = 1. மழலைச் சொல். ‘‘தம்மக்கள் மழலைச்சொற் கேளா தவர்’’ (குறள். 66). 2. இனிய மொழி. ‘‘குதலைச் செவ்வாய்க் குறுந்தொடி மகளிர்’’ (சிலப். 30 : 114). 3. அறிவிலான் (திவா.).*

*ஒ. நோ : மழ – மழலை – மதலை = குழந்தை, மகன், மழலை மொழி.*

*குழ – குழந்து – கொழுந்து = 1. இளந்தளிர். ‘‘ஏற்ப விரீஇய இலையுங் கொழுந்தும்’’ (பெருங். இலாவாண. 2 : 143). 2. இளமையானது. ‘‘பிறைக்கொழுந்து’’ (நைடத. அன். தூது. 12). 3. மென்மை. ‘‘வாழையுற்ற – கோதிலா மடலே போலக் கொழுந்துள செவிய தாகி’’ (சூடா. 12 : 150). 4. மென்மையான மருக்கொழுந்து. ‘‘கொழுந்து செவ்வந்தி’’ (கந்தபு. இந்திரன்கயி. 42). 5. படையின் முன்னணி. ‘‘சேனையின் கொழுந்துபோய்க் கொடிமதின் மிதிலையி னெல்லை கூடிற்றே’’ (கம்பரா. எழுச்சி. 24). 6. கவரிநுனி. ‘‘கொழுந்துடைய சாமரை’’ (கம்பரா. கோலங். 25).*

ம. கொழுந்து.

கொழுந்து– கொழுந்தாடை = கரும்பின் நுனித்தழை.

குழ– குத– கத– கதலி– கசளி = கெண்டைக் குஞ்சு.

குல் – குர் – குரு. குருத்தல் = 1. தோன்றுதல். ''அதினின்று மொருபுருடன் குருத்தான்'' (விநாயகபு. 72 ः 4). 2. வேர்க்குரு உண்டாதல்.

குரு – குருத்து = 1. இளந்தாள், இளந்தோகை, இளவோலை. 2. கரும்புநுனி. ''குருத்திற் கரும்புதின் றற்றே'' (நாலடி. 211). 3. காதுக்குருத்து. 4. இளமை. 5. வெண்மை (பிங்.). 6. யானை மருப்பின் உட்பகுதி. ''ஆளி நன்மான்..... வேழத்து வெண்கோடு வாங்கிக் குருத்தருந்தும்'' (அகம். 381).

ம. குருத்து.

குருத்து– குருந்து (பிங்.) = 1. குழந்தை. 2. வெண்குருத்து.

குருந்து – கருந்து = மரக்கன்று (உ.வ.). குரு – குருகு. 1. பனங்குருத்து. ''குருகு பறியா நீளிரும் பனைமிசை'' (பரிபா. 2 ः 43). 2. இளமை (சூடா.). 3. விலங்கின் குட்டி, ''சிங்கக் குருகு'' (திவ். திருப்பா. 1, வியா.). 4. வெண்மை (திவா.).

வெண்மைக் கருத்து, பனங்குருத்தினின்று தோன்றிற்று.

ம. தெ., து. குரு.

குருகுகிழங்கு = இளங்கிழங்கு.

குரு – குரும்பை = 1. தென்னை பனைகளின் இளங்காய். ''இரும்பனையின் குரும்பை நீரும்'' (புறம். 24 ः 2). 2. இளநீர். ''குன்றுங் குரும்பையும் வெறுத்தநின் னிளமுலை'' (கல்லா. 52 ः 8)

ம. குரும்ப, க. கரும்பெ.

குரு – குருள்– குருளை = 1. குழந்தை. ''அருட்குரவாங் குருளை'' (சி.சி. பரபக். பாயிரம், 4). 2. நாய், பன்றி, புலி, முயல், நரி முதலியவற்றின் குட்டி.

> ''நாயே பன்றி புலிமுயல் நான்கும்
> ஆயுங் காலை குருளை யென்ப''
>
> ''நரியும் அற்றே நாடினர் கொளினே'' (தொல். மரபு. 8, 9).

3. பாம்பின் குட்டி. ''சிறுவெள் ளரவி னவ்வரிக் குருளை'' (குறுந். 119)

*ஒ. நோ : குட்டி = சிறுபெண்,* E. girl, female child.

M.E. gurle, girle, gerle, perh. cogn. with LG. gor. child. – C.O.D.

*குருமன் = ஒருசார் விலங்கின் இளமைப் பெயர்.*

*குருமன்– குருமான். 'குட்டிகுருமான்' என்பது உலக வழக்கு.*

*குரு– கரு = 1. சூல். ''மாணிழை மகளிர் கருச்சிதைத் தோர்க்கும்'' (புறம். 34). 2. முட்டை. 3. முட்டைக்கரு. ''புறவுக்கரு வன்ன புன்புல வரசின்'' (புறம். 34). 4. பிறப்பு. ''கருவைத்துடைப்ப'' (பிரபுலிங். கொக்கி. 15). 5. உடம்பு. ''கருவுள் வீற்றிருந்து'' (திவ். திருவாய். 5 : 10 : 8). 6. குழந்தை. ''சோரர்தங் கருவைத் தங்கள் கருவெனத் தோளி லேந்தி'' (பாரத. நிரை. 116). 7. குட்டி. ''காசறைக் கருவும்'' (சிலப். 25 : 52). 8. வினைமுதற் கரணியம் (நிமித்த காரணம்). ''கருவா யுலகினுக்கு'' (திருவாச. 10 : 14). 9. அச்சுக்கரு. ''திருவுருவினைக் கருவினாற் கண்டு'' (திருவிளை. இரச. 9.). 10. நடு. ''உள்ளூர்க் கருவெலா முடல்'' (கம்பரா. கிங்கரர். 44). 11. உட்பொருள். 12. அடிப்படை. ''கருவோ டிவரடி.... காணாமையின்'' (இரகு. நகரப். 20). 13. நுண்ணணு. ''கருவளர் வானத்து'' (பரிபா. 2 : 5). 14. கருப்பொருள் ''தெய்வ முணாவே.... கருவென மொழிப'' (தொல். அகத். 18).*

***ம., க.** கரு.*

*கரு = நடு. ஒ. நோ :* ME., E. core.

*சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் அகரமுதலி, கரு என்னும் தூய தென்சொல்லைக் கருப்பம்* (garbha) *என்னும் வடசொல் லினின்று திரித்துள்ளது. வடசொல்லே தென்சொல்லினின்று தோன்றியிருத்தல் வேண்டும்.*

*குள்– குட்டு– குட்டம் = குரங்குக்குட்டி.*

*''தங்குட்டங்களை...... மந்திகள் கண்வளர்த்தும்''*
*(திவ். பெரியாழ். 3 : 5 : 7).*

***க.**, மராத். குட்ட* (gudda).

*குட்டம்– குட்டன் = 1. சிறுபிள்ளை. ''என் சிறுக்குட்டன்'' (திவ். பெரியாழ். 1 : 4 : 9). 2. இளமகள். ''குயிலெனப் பேசுமெங் குட்டனெங் குற்றது'' (திருக்கோ. 224). 3. ஆட்டுக்குட்டி (திவா.).*

***ம.** குட்டன், **க.** குட்ட* (gudda).

*குட்டு– குட்டி = 1. நாய், பன்றி, புலி, முயல், நரி ஆகியவற்றின் குட்டி (தொல். மரபு. 10). 2. ஆட்டுக்குட்டி. 3. சிறுமி (உ.வ.). 4. கடைசிப் பிள்ளையின் பொதுப் பெயர். கடைக்குட்டி (உ.வ.).*

ம. குட்டி, க. குட்டி (guddi).

ME. kide, E. kid, kiddy.

5. கரு அல்லது சினை. எ - டு : குட்டிபடுதல் = சினைப்படுதல்.

ஓரறிவுயிர்ப் பெயரின் இளமைப்பொருள் முன்னொட்டு. எ - டு : குடடிப் பிடவம், குட்டிவிளா (பிள்ளை விளாத்தி). 6. சிற்றப்பன் சிற்றன்னையர் பெயர் முன்னொட்டு. எ - டு : குட்டியப்பன், குட்டியாத்தாள்.

குள்– குய்– குய்ஞ்சு– குஞ்சு = 1. பறவையின் இளமைப் பெயர். எ - டு : கோழிக்குஞ்சு, புறாக்குஞ்சு. ''காக்கைக்கும் தன்குஞ்சு பொன்குஞ்சு'' (பழமொழி). 2. மீன், எலி, அணில் முதலியவற்றின் இளமைப் பெயர். 3. குழந்தை அல்லது சிறுவன் ஆண்குறி. 4. சிறியது.

**ம.** குஞ்ஞு, **க.** கூசு (குழந்தை).

குஞ்சு– குஞ்சான் = குழந்தை அல்லது சிறுவன் ஆண்குறி.

குஞ்சு– குஞ்சி = 1. பறவையின் இளமைப் பெயர். ''கரிய குஞ்சியின் றாக மார்பசி'' (சி. சி. பர. மாயாவாதிமறு. 1.). 2. சிற் றப்பன் சிற்றன்னையர் பெயர் முன்னொட்டு. எ - டு : குஞ்சியப்பன், குஞ்சியாத்தை, குஞ்சியாச்சி, குஞ்சியாய் (யாழ்ப்.). 3. குழந்தை அல்லது சிறுவன் ஆண்குறி. 4. சிறியது.

குஞ்சு– குச்சு– கொச்சு = சிறியது.

கொச்சுப் பையன் = சிறுவன். ம. கொச்சு.

கொச்சு– கொச்சன் = சிறுவன்.

குய்– குயம் = இளமை (திவா.).

குயம்– கயம் = 1. இளமை (திவா.). 2. மென்மை (பிங்.).

''கயவென் கிளவி மென்மையுஞ் செய்யும்'' (தொல். உரி. 24).

கயந்தலை = 1. குழந்தையின் மெல்லிய தலை. ''முக்காழ் கயந்தலை தாழ'' (கலித். 86 : 2). 2. யானைக்கன்று.

''துடியடிக் கயந்தலை கலக்கிய சின்னீரைப்
பிடியூட்டிப் பின்னுண்ணுங் களிறெனவு முரைத்தனரே''
(கலித். 11)

சிறுபிள்ளைகளைக் கன்றுகயந்தலை யென்பது பாண்டிநாட்டு வழக்கு.

**சிறுமைக் கருத்தும் குறுமைக் கருத்தும்**

*குஞ்சுக் கடகம் = சிறிய ஓலைப்பெட்டி.*

*குஞ்சுச்சிப்பி = சிறிய முத்துச்சிப்பி. குஞ்சுப் பெட்டி = சிறிய பெட்டி (யாழ்ப்.).*

*குஞ்சம் = 1. குறள். (திவா.). 2. குறளை (திவா.). 'குப்ஜ' என்னும் வடசொல்லை இதற்கு மூலமாகச் சென்னைப் ப. க. க. த. அகரமுதலியிற் குறித்திருப்பது தவறு. வளைந்தது என்பதே வடசொற் பொருள். 3. குன்றிமணி (திவா.).*

*குஞ்சன் = குறளன் (பிங்.).*

*குஞ்சி = குன்றிமணி. குஞ்சிப்பெட்டி = சிறுபெட்டி. குஞ்சிக்கூடை = சிறுகூடை* (W.). *குஞ்சு – கொஞ்சு – கொஞ்சம் = சிறிது. ''கொஞ்சந்தங் கின்பந் தந்து'' (திருப்பு. 609).*

*ம. கொஞ்சம், தெ. கொஞ்செமு, க. கொஞ்ச, து. கொந்த்ர.*

*கொஞ்சன் = புல்லன் (அற்பன்). ''வஞ்சன் கொஞ்சன்'' (திருப்பு. 609).*

*கொச்சு = சிறிது, சிறிய.*

*கொசு = மிகச் சிறிய ஈவகை. கொசு – கொசுகு. ''கொசுகீ.... எய்திடம்'' (காசிகண். 40 : 17).*

*கொசுகு – கொதுகு. ''கொதுகறாக் கண்ணி னோன்பிகள்'' (தேவா. 381 : 9).*

*ம. கொதுகு.*

*குள் – குண் – குணில் = 1. குறுந்தடி. ''கரும்பு குணிலா மாங்கனி யுதிர்க்கும்'' (ஐங். 87). 2. பறையடிக்குங் குச்சு. ''குணில்பாய் முரசி னிரங்கு மருவி'' (புறம். 143).*

*குதலி – கதலி = சிறுகாய் வாழை. மொந்தன் வாழைக்கு எதிரானது. ''நெட்டிலைப் பைங்கதலி'' (திருக்காளத். பு. தாருகா. 15).*

*குருவி = 1. சிறு பறவைவகை. ''குருவி சேர்வரை'' (சீவக. 2237). 2. குன்றிமணி (மலை.).*

*குருவிக்கண் = 1. சிறுகண். 2. சிறுதுளை. குருவித்தலை = சிறுதலை. குருவித் தேங்காய் = சிறு தேங்காய்.*

*குள் – குள்ளம் = 1. குட்டை. 2. குறள்.*

*குள்ளல் = குள்ளம். குள்ளை = குள்ளம்.*

*குள்ளன் = 1. குட்டையன். 2. குறளன்.*

*ம. குள்ளன். குள்ள– வ. குல்ல* (kh) *– குல்லக, குல்ல– க்ஷுல்ல– க்ஷுல்லக.*

*குள்ளை– கூழை = 1. குட்டை, குட்டையானது. ''நாய் கூழைவாலாற் குழைக்கின்றது போல'' (திவ். திருவாய். 9:4:3). 2. மதிக்குறைவு. ''கூழை மாந்தர்தஞ் செல்கதி'' (தேவா. 462:9). 3. கூழைத் தொடை. ''ஈறிலி கூழை'' (யா.கா. உறுப். 19). 4. குள்ளப் பாம்பு.*

**தெ.** *கூள,* **க.** *கூழெ,* **மராத்.** *கூள* (kh).

*குள் – குள்கு – குட்கு – குக்கு. குக்குதல் = உடம்பைக் குறுக்கி வைத்தல். ஒ. நோ: வெள்கு– வெட்கு, சுள்– சுள்கு– சுட்கு– சுக்கு. குக்கு – குக்கல் = சிறு நாய்வகை. ''குக்கலைப் பிடித்து நாவிக் கூண்டினி லடைத்து வைத்து'' (வி. சிந்.).*

*தெ. குக்க, வ. குக்குர.*

*குக்கல்– குக்கன் = சிறு நாய்வகை (திவா.).*

*குக்கர் = நாய்போ லிழிந்தோர். ''குடிமையிற் கடைமைப் பட்ட குக்கரில்'' (திவ். திருமாலை. 39).*

*குட்டம் = 1. குறுமை. 2. செய்யுளடிக் குறுமை. ''குட்டமும் நேரடிக் கொத்தன வென்ப'' (தொல். செய். 114).*

*குட்டான் = 1. சிறு படப்பு. 2. சிறிய ஓலைப்பெட்டி. குட்டான் கட்டுதல் = பறவை கொத்தாதபடியும் அணில் கடியாத படியும் காய்களின்மீது மூடி கட்டுதல்.*

*குட்டான் – கொட்டான் = சிறு நார்ப்பெட்டி அல்லது ஓலைப்பெட்டி.*

*கொட்டான் + காய் + சில் = கொட்டாங்காய்ச்சி– கொட்டாங்கச்சி = கொட்டான் பெட்டி போன்ற தேங்காயோட்டுத் துண்டு.*

*குட்டி = சிறியது. குட்டிக்கலகம், குட்டிக்கிழங்கு, குட்டிச் சாத்தன், குட்டிச்சுவர், குட்டித் திருவாசகம், குட்டித் தொல்காப்பியம், குட்டிப்புல், குட்டிமணியம், குட்டியாண்டவன், குட்டிவிரல், குட்டித் தெய்வம் (சாமி) என்பன சிறுமை குறித்தன.*

*குட்டு– குட்டை = 1. குறுகிய உருவம். 2. குட்டேறு (சிறிய காளை). ''குட்டேற்றைக் கோவர்த்தனனைக் கண்டீரே'' (திவ். நாய்ச். 14:2). 3. சிறு துணி. எ - டு : தலைக்குட்டை, கைக்குட்டை. தெ. குட்ட* (gudda). *4.*

*சிறுகுளம். 5. குட்டை மரம் (தொழுமரம்). 6. குறுணி. (தொல். சொல். 400, உரை).*

*குட்டை – கட்டை = 1. உயரக் குறைவு. எ - டு : ஆள் கட்டை, கட்டைமண். 2. அகலக் குறைவு. எ - டு : அகலக் கட்டை. 3. நீளக் குறைவு. எ - டு : கட்டைவிரல், கட்டைத் துடைப்பம், துடைப்பக் கட்டை. 4. மதிப்புக் குறைவு. எ - டு : விலைக்கட்டை, கட்டைப் பொன், மாற்றுக் கட்டை. 5. ஓசைக் குறைவு. எ - டு : கட்டைக் குரல் (சாரீரம்). 6. ஒருவகை இசைக் குற்றம்.*

*''தனிபடு கட்டை யெட்டின் றகுதியிற் றிகழும் பொல்லா*
*வினிமையில் சுரத்தைக் கண்டாங் கிருந்தவர் வியந்தா ரில்லை''*
*(திருவால. 57 : 26)*

*7. திறக்குறைவு. எ - டு : கட்டைமதி (புத்தி).*

*இதன் மூலத்தை அறியாது மரக்கட்டை, விறகுக் கட்டை, செப்புக்கட்டை முதலியவற்றின் தடிப்பத்தைக் குறிக்கும் கட்டை யென்னும் சொல்லோடு இணைத்துள்ளது, சென்னைப் ப. க. க. த. அகரமுதலி.*

*குரு – குறு = 1. சிறு. 2. குறுகிய. ம. குறு.*

*குறு – குற்றி = சிறு குச்சு. குற்றி – குச்சி – குச்சு.*

*குறு + இல் = குற்றில் – குச்சில். ஒ. நோ : முறம் + இல் = முற்றில் – முச்சில்.*

*குச்சில் – குச்சு. குச்சுவீடு = சிறு கூரைவீடு.*

*குறு – குற்று – குற்றம் = குறைவு, தவறு.*

*குறு – குறை – குறைவு = குறைச்சல்.*

*குறுமகன் – குறுமான் = சிறுவன். குறுஞ்சிரிப்பு – குஞ்சிரிப்பு.*

*குறு – குறள். 1. குறுமை. ''குண்டைக் குறட் பூதம்'' (தேவா. 944 : 1). 2. குறட்பூதம் (பிங்.). 3. ஈரடி உயரமுள்ள குள்ளன். ''தேரை நடப்பனபோற் குறள்'' (சீவக. 631). 4. சிறுமை. ''வரகின் குறளவிழ்ச் சொன்றி'' (பெரும்பாண். 193). 5. இருசீர் கொண்ட குறளடி. 6. ஈரடி கொண்ட குறள்வெண்பா. 7. குறள் வெண்பாவாலான திருக்குறள். ''உலகங் கொள்ள மொழிந்தார் குறள்'' (திருவள்ளுவ. 33). ம. குறள்.*

*குறள் – குறளி = 1. குறியவள். ''ஒரு தொழில் செய்யுங் குறளி வந்து'' (சீவக. 1653, உரை). 2. சிறிய குறளிப் பேய். ''வாயி லிடிக்குது குறளியம்மே'' (குற்றா. குற. 71). 3. குறளி வேடிக்கை. 4. கற் பழிந்தவள் (சூடா.).*

குறள் – குறளை = 1. குள்ளம். (W). 2. சிறுசொல், கோட்சொல். ''பொய்யே குறளை கடுஞ்சொல் பயனில் சொல்லென'' 'மணிமே. 30 : 68). 3. வறுமை. ''குறளையுள் நட்பளவு தோன்றும்'' (திரிகடு. 37). 4. பழிச்சொல்.

ம. குறள.

குறு – குறில் = குற்றுயிரெழுத்து.

குறுணி = பதக்கினும் குறைந்த முகத்தலளவு.

குறும்பு = 1. சிறு துணுக்கு. எ - டு : புகையிலைக் குறும்பு. 2. சிறுமலை. 3. சிறுமலை யரண். ''குறும்பல் குறும்பிற் றதும்ப வைகி'' (புறம். 177). 4. மலையரணிலுள்ள குறுநில மன்னர். ''குறும்படைந்த வரண்'' (புறம். 97). 5. வேந்தருக்குப் பகைவரான குறும்பரசர். ''வேந்தலைக்கும் கொல்குறும்பும் இல்லது நாடு'' (குறள். 735). 6. குறும்பரசரின் வலிமை. ''அரவுக் குறும்பெறிந்த சிறுகட்டீர்வை''. 7. குறும்பரசர் போர். 8. குறும்பரசரின் குறும்புத்தனம், தீய விளையாட்டு. 9. குறும்பரசர் ஆண்ட பாலைநிலத்தூர். 10. பாலைநில மாந்தர். 11. குறும்பர் என்னும் வகுப்பார். எ - டு : காட்டுக் குறும்பு, நாட்டுக் குறும்பு.

குறும்பாடு = குறும்பர் மேய்க்கும் ஆடு.

குறும்பன் = குறும்புத்தன முள்ளவன்.

குறு – குறுகு. குறுகுதல் – குட்டையாதல்.

**ம.** குறுகு, **தெ.** குருச்ச.

குறுகு – குறுக்கு = 1. குறுமை. ''நீண்ட நெடுமையும் அகலக் குறுக்குங் காட்டா'' (தாயு. சிதம்பர. 13). 2. நீளத்திற்கு எதிரான அகலம். 3. குறுக்களவு. ''நெடுமையுங் குறுக்கு நூற்றெட் டங்குலம்'' (காசிகண். சிவ. அக. 17). 4. முதுகின் குறுக்கு. குறுக்குப் பிடித்துக் கொண்டது; நிமிர முடியவில்லை (உ. வ.). 5. ஊடு, இடை. நான் பேசும்போது குறுக்கே ஒன்றும் சொல்லாதே (உ. வ.). 6. மாறு, எதிர்ப்பு. அவன் எதற்குங் குறுக்காகப் பேசுவான் (உ.வ.).

குறுக்கு – குறுக்கம் = 1. குறுமை. ''ஐ ஔக் குறுக்கம்'' (நன். 99). 2. 3/4 முதல் 7 செய் (ஏக்கர்) வரை வெவ்வேறிடத்தில் வெவ்வேறு வகையாக வழங்கும் நில அளவு.

குறுவை – குறுகிய காலத்தில் விளையும் நெல்.

குறுமல் = பொடி (பிங்.).

குல் – குன் – குன்று.

*குன்றுதல் = 1. குறைதல். 2. சுருங்குதல். 3. தளர்தல். 4. நிலை கெடுதல். ''குன்றி னனையாருங் குன்றுவர்'' (குறள். 965).*

*குன்று = சிறுமலை. குன்று– குன்றம் = பெருங்குன்று. ம. குன்னு– குன்னம். தெ., க. கொண்ட. குன்றி = சிறிய குன்றிமணி. ''குன்றுவ குன்றி யனைய செயின்'' (குறள். 965). ம.குன்னி.*

*குன்– குன்னு. குன்னுதல் = குக்குதல், உடம்பு சுருங்குதல்.*

*குன் – குன்னா. குன்னாத்தல் = உடம்பு குளிரால் ஒடுங்குதல். ''குன்னாக்க வென்பாரு முளர்'' (நெடுநல். 9, உரை).*

*குன்– குன்னி = சிறியது, நுண்ணியது.*

## 4

# குல்[2] (வளைதற் கருத்து வேர்)

**அடிக்கருத்து (வளைதல்)**

*வளைதற் கருத்து, இயன்முறையில் வளைவு, சுருட்சி, வட்டம், வளையம், உருண்டை, உருளை முதலிய பண்புக் கருத்துகளையும்; செயன்முறையில் வளைதல், சுருள்தல், திரிதல், சூழ்தல், சுற்றுதல், சுழலுதல், உருளுதல் முதலிய வினைக்கருத்து களையும் தழுவும்.*

*வளைவு என்னும் பண்பின் பெயரும், வளைதல் என்னும் வினையின் பெயரும், அப் பண்பையும் வினையையுங் கொண்ட பொருள்களை ஆகுபெயராகக் குறிக்கும்.*

*கோணல், சாய்தல் என்பன வளைதலின் முந்திய நிலைக ளாதலின், அவையும் அதனுள் அடங்கும்.*

*குல் – குலவு. குலவுதல் = 1. வளைதல். ‘‘குலவுச்சினைப் பூக்கொய்து’’ (புறம். 11 : 4). 2. உலாவுதல். ‘‘எமதன்னையை நினைத்தே குலவினனோ’’ (சிவரக. விசயை. 14).*

L. curvus, E. curve.

*குலாவுதல் = வளைதல். ‘‘குலாவணங்கு வில்’’ (யாப். வி. 22).*

*குல் – குலுத்தம் = வளைந்த காயுள்ள கொள். வ. குலுத்த* (guluttha).

*குலுக்கை = உருண்டு நீண்ட குதிர். குலுக்கை – குலுப்பை.*

*குல் – குள் – குளம் = 1. வளைந்த நெற்றி. ‘‘திருக்குள முளைத்த கட் டாமரை’’ (கல்லா. 31 : 9). 2. வெல்லவுருண்டை (சூடா.).*

***வ.*** *குல* (gula). *குளம் – குளகம் = வெல்லவுருண்டை.*

*குளியம் = 1. உருண்டை (அக. நி.). 2. (மாத்திரை) மருந்து (பிங்.).*

*குளிகை = மாத்திரை யுருண்டை.* **வ.** *குளிகா* (gulika).

*குளியம் – குழியம் = 1. வளைதடி. 2. மணவுருண்டை. (சிலப். 14 : 171. அரும்.). திரட்சி (திவா.).* L. globus, glomus E.globe.

*குழலுதல் = சுருளுதல். ''கடைகுழன்ற கருங்குழல்கள்'' (சீவக. 164). குழல் = மயிர்க்குழற்சி. ''குழலுடைச் சிகழிகை'' (சீவக. 1092).*

***ம.** குழல்.*

*குள் – (குய்) – குயம் = வளைந்த அரிவாள். ''கொடுவாய்க் குயத்து'' (சிலப். 10 : 30).*

*குல் – (குர்) – குரங்கு. குரங்குதல் = வளைதல். ''இலைப் பொழில் குரங்கின'' (சீவக. 657). குரங்கு = வளைவு. ''குரங்கமை யுடுத்த மரம்பயி லடுக்கத்து'' (சிலப். 10 : 157). 2. கொக்கி.* OE. cranc, crinc, E. crank.

*குரவை = வட்டமாக நின்று பாடியாடுங் கூத்து.*

Gk. koros (orig. a dance in a ring). L. chorus, E. chorus, choir, quirs.

*குருளுதல் = சுருளுதல். ''குருண்ட வார்குழல்'' (திருவிசை. திருவாலி. 1 : 3). குருள் = 1. மயிர்ச்சுருள். 2. பெண்டிர் தலைமயிர் (பிங்.). வ. குருல.* LG., Du., O. Fris. krul, G. krol, OE. crol, crul, E. curi.

*குருகு = 1. வளையல். ''கைகுவி பிடித்துக் குருகணி செறித்த'' (கல்லா. 44 : 22). 2. வளைந்த கழுத்துள்ள நீர்ப்பறவைப் பொது. 3. நாரை. ''வான்பறைக் குருகின் நெடுவரி பொறப'' (பதிற். 83 : 2). 4. ஓதிமம் (அன்னம்). ''நீரொழியப் பாலுண் குருகிற் றெரிந்து'' (நாலடி. 135).*

*குரகம் = நீர்வாழ் பறவைப் பொது.*

AF., OF. grue (crane), OHG., OS. krano, OE. cran, E. crane.

*குரங்கு – குறங்கு = கொக்கி. குறங்கு – கறங்கு. கறங்கல் = 1. வளைதடி (அக. நி.). 2. சுழற்சி (பிங்.). கறங்குதல் = 1. சூழ்தல். ''கறங்கிருள் மாலைக்கும்'' (திருவள். 34). 2. சுழலுதல். ''பம்பரத்து.... கறங்கிய படிய'' (கந்தபு. திருநகரப். 28). ம. கறங்ஙு.*

*கறங்கு = காற்றாடி. ''காண்முக மேற்ற ........ கறங்கும்'' (கல்லா. கணபதி). கறங்கோலை = ஓலைக்காற்றாடி.*

*''கறங்கோலை கொள்ளிவட்டம்'' (திருமந். 2313).*

ON. hringr, OHG., OS., OE. hring, E. ring.

*குர் – குறு – குறள் – குறண்டு. குறண்டுதல் = 1. வளைதல். 2. சுருண்டுகொள்ளுதல். குறண்டல் = கூனல்.*

*குறடு = வளைந்த பற்றுக் கருவி, குறடுபோற் பற்றும் நண்டு.*

*தெ. கொரடு.*

*குறழ்தல் = குனிதல். ''அவனாங்கே பாராக் குறழா'' (கலித். 65 : 10).*

*குறு – கிறு – கிறுக்கு = தலச்சுற்று, கோட்டி (பைத்தியம்). கிறுக்கன் = பித்தன்.* ***தெ.*** *கிறுக்கு.*

*கிறுகிறுத்தல் = சுற்றுதல், தலைச்சுற்றால் மயக்கமாதல். தெ. கிரகிர* (giragira). *கிறுகிறுவாணம் = காற்றாடிபோற் சுற்றும் பொறிவாணம்.*

Gk. guros, E.gyrate.

*குல் – குன் – குனி. குனிதல் = 1. வளைதல். ''குனிவளர் சிலை'' (சீவக. 486). 2. உடம்பு வளைதல். 3. வணங்குதல் (சூடா.).*

*குனித்தல் = வளைத்தல். ''குனித்த புருவமும்'' (தேவா. 11 : 4).*

***ம.*** *குனி,* ***க.*** *குனி.*

*குனுகுதல் = சிரிக்கும்போது முதுகு வளைதல். தெ. குங்கு.*

*குள் – குண்டு = உருண்டை, உருண்டையான மணி, உருண்டையான வெடிகருவி* (shot. bullet).

***தெ.*** *குண்ட,* ***க., மரா.*** *குண்ட* (gunda).

*குண்டூசி. குண்டுச்சம்பா, குண்டுமல்லிகை என்பவற்றில் குண்டு என்னுஞ் சொல் உருட்சி பற்றியது. உருட்சிக் கருத்தும் திரட்சிக் கருத்தைத் தோற்றுவிக்குமாதலால், குண்டு, குண்டன், குண்டை, குண்டாந்தடி, குண்டடியன், குண்டுக்கழுதை என்பவற்றை வளைவுக் கருத்து வேரடிப் பிறந்தனவாகவும் கொள்ள இடமுண்டு.*

*குண்டான் = உருண்ட வடிவான கலம். குண்டான் சட்டி என்பது வழக்கு. குண்டான் – குண்டா.* ***மரா.*** *குண்டா* (g).

*ஒருவன் சுருண்டு கிடக்கும் நிலை குண்டக்க மண்டக்கம் என்றும், ஒருவனைத் தலையுங்காலுஞ் சேர்த்துச் சுருட்டிக் கட்டும்வகை குண்டு ருட்டுக் கட்டு என்றும் சொல்லப்படும்.*

*குண்டு – குண்டலம் = 1. வட்டம். 2. சுன்னம். 3. வட்டமான காயம் (ஆகாயம்). 4. வளைந்த காதணி. வ. குண்டல.*

குண்டலி = 1. மூல நிலைக்கள (ஆதார) வட்டம். (ஔவை. குறள் நினைப்புறு. 2). 2. தூயவுலகைத் தோற்றுவிக்கும் மூல மாயை (சி. போ. பா. 2 : 2, ப. 133). இதன் விளக்கத்தை என் 'தமிழர் மதம்' என்னும் நூலுட் காண்க.

குண்டலி (தூயமாயை) – **வ.** குண்டலினி.

குண்டி = 1. உருண்டு திரண்ட புட்டம். 2. குண்டி போன்ற அடிப்பக்கம். ம. குண்டி, க. குண்டெ, தெ. குட்டெ.

குண்டு – கண்டு = நூற்பந்து. கண்டு – கண்டகம் = வட்டமான மரக்கால்.

கண்டு – கண்டி = வட்டமான ஒரு கலம், ஒரு முகத்தலளவு, ஒரு நிறை. **ம.** கண்டி, **தெ., து.** கண்டி (kh), **மரா.** கண்டில் (kh).

கண்டி – கண்டிகை = 1. தோட்கடகம் (சூடா.). 2. ஒருவகைப் பறை (பிங்.).

கண்டிகை – கடிகை – 1. நாழிகை வட்டில். 2. நாழிகை (24 நிமைய நேரம்) (திவா.). 3. நேரம். 4. சடங்குகட்கு மங்கல நேரங் குறிப்பவன். ''கண்ண னாரொடு கடிகையும் வருகென'' (சீவக. 2362). 5. தோட்கடகம். ''கடிகை வாளார் மின்ன'' (சீவக. 2808). கடிகை– வ. கட்டிகா (ghattika).

இவ் வடசொற்கு நாழிகைப் பொருளேயன்றிக் கடகப் பொருளில்லை.

கடிகை + ஆரம் = கடிகையாரம் – கடிகாரம்.

ஒ. நோ : வட்டு – வட்டாரம், கொட்டு – கொட்டாரம்.

குளம் – குணம் – குணகு. குணகுதல் = வளைதல். குணக்கு = வளைவு. 'நாய்வாலைக் குணக்கெடுக்கலாமா?' என்பது உலக வழக்கு. குணக்குதல் = வளைத்தல்.

குணலை = நாணத்தால் உடல் வளைகை. ''கூச்சமுமாய்ச் சற்றே குணலையுமாய்'' (பணவிடு 310).

குணகு – குணங்கு. குணங்குதல் = வளைதல்.

குணகு– குணுகு. குணுகுதல் = வளைதல். குணுக்குதல் = வளைத்தல். குணுக்கு = இளமகளிர் காதிலணியும் கனத்த ஈய அல்லது பித்தளை வளையம்.

குணம் – குடம் = 1. உருண்ட வடிவான நீர்க்கலம் (பிங்.). 2. குடக்கூத்து. ''நீணில மளந்தோ னாடிய குடமும்'' (சிலப். 6 : 55). 3. குடஞ்சுட்டு என்னும் ஆவு (சூடா.). 4. கும்பவோரை (பன்னிருபா. 163).

*5. உருண்டு திரண்ட வண்டிக்குடம்* (hule). *6. குடதாடி என்னும் தூணுறுப்பு. 7. திரட்சி.*

*ம. குடம், தெ. குடமு, க. குட, வ. குட்ட.*

*குணங்கு– குடங்கு. குடங்குதல் = வளைதல்.*

*குடங்கு– குடங்கர் = 1. குடம். ''குடங்கர் கொணர்ந்திடா'' (கந்தபு. தேவகிரி. 24). 2. குடிசை. ''குடங்கருட் பாம்போ டுடனுறைந் தற்று'' (குறள். 890). 3. கும்பவோரை (சூடா.).*

*குடிசை என்னும் பொருளில், குடங்கர் என்னுஞ் சொல்லைக் குட்டங்கக* (kutangaka) *என்று திரிப்பர் வடமொழியாளர். ஆட்டுக்குடில் போன்ற அரையுருண்டை வடிவான குடிசைகளில் குழூவரும் பன்றியாடிகளும் போன்ற அநாகரிக மாந்தர் இன்றும் வதிந்து வருதல் காண்க.*

*குடம்– குட = வளைந்த (திருமுருகு. 229, உரை).*

*குட– குடவு = வளைவு. குடவுதல் = வளைவாதல்.*

*குடவியிடுதல் = வளைத்து அகப்படுத்துதல். ''குடவியிடு மரிவையர்கள்'' (திருப்பு. 514).*

*குணக்கு – குடக்கு – குடக்கம் = வளைவு. குடக்கு – குடக்கி = வளைவானது.*

*குணகு – குடகு – குடகம் – கடகம் = 1. வட்டம் (பிங்.). 2. வட்டமான கேடகம் (திவா.). 3. தோள்வளை. ''கடகஞ் செறித்த கையை'' (மணிமே. 6 : 114). 4. பெருவிரலும் சுட்டுவிரலும் வளைந்து வளையம் போல் ஒன்றோடொன்று உகிர்கவ்வ, மற்ற மூன்று விரல்களும் நிமிர்ந்து நிற்கும் இணையா வினைக்கை. (சிலப். 3 : 18, உரை). 5. பனையகணியால் முடையப்பட்ட வட்டமான பெரும் பெட்டி (புறம். 33, உரை). இச் சொல் இன்றும் நெல்லை வட்டாரத்திற் பெருவழக்காக வுள்ளது. 6. ஒரு நகரைச் சூழ்ந்திருக்கும் மதில் (பிங்.). 7. மதில் சூழ்ந்திருந்த ஒரிசாத் தலைநகரம்* (Cuttack).

*கடகம் (தோள்வளை)–* **வ.** *கட்டக.*

*குடம்– குடந்தம் = 1. குடம் (பிங்.). 2. மெய்வளைத்துச் செய்யும் வழிபாடு. ''குடந்தம் பட்டுக் கொழுமலர் சிதறி'' (திருமுருகு. 229). 3. நால்விரல் முடக்கிப் பெருவிரல் நிறுத்தி நெஞ்சிடை வைக்கை. (திருமுருகு. ப. 47, அடிக்குறிப்பு).*

*''நால்விரன் முடக்கிப் பெருவிர னிறுத்தி*
*நெஞ்சிடை வைப்பது குடந்த மாகும்.''*

*குடந்தம்படுதல் = வணங்கி வழிபடுதல். ''குடந்தம் பட்டெதிர் நின்றிடும்'' (காஞ்சிப்பு. கழுவாய். 96).*

*குடந்தை = வளைவு. ''குடந்தையஞ் செவிய கோட்டெலி'' (புறம். 321).*

*குடம்பை = 1. முட்டை (பிங்.). ''குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே'' (குறள். 338). 2. புழுக்கூடு. ''வரியுடல் சூழக் குடம்பை நூல் தெற்றி'' (கல்லா. கணபதி துதி, 26). 3. பறவைக் கூடு. ''குடம்பை முட்டையுங் கூடுமாகும்'' (பிங். 10 : 352).*

*குடம்பை – குதம்பை = 1. காதுச் சோணைத் துளையை விரிவாக்குவதற்கு இடும் ஓலைச்சுருள் அல்லது சிலைச்சுருள். ''சீலைக் குதம்பை யொருகாது'' (திவ். பெரியாழ். 3 : 3 : 1). 2. ஓலைச்சுருள் போன்ற பொற்காதணி. ''திருக்குதம்பை யொன்று பொன் இருகழஞ்சே எட்டு மஞ்சாடி''*(S.I.I.II, 143).

*குடம்பை– குரம்பை = 1. பறவைக் கூடு. 2. சிறுகுடில். ''இலைவேய் குரம்பை'' (மதுரைக். 110). 3. நெற்கூடு* (Larn). *''நெற்குவை குரம்பையி னிரப்பு வித்தனர்'' (கந்தபு. நாட்டுப். 26). 4. கூடு போன்ற உடம்பு. ''பொருந்திய குரம்பை தன்னைப் பொருளெனக் கருத வேண்டா'' (தேவா. 488 : 1). ம. குரம்பு.*

*குடலை = உருண்டு நீண்ட பூக்கூடை.*

*குட – குடா = 1. வளைவு. ''எண்கின் குடாவடிக் குருளை'' (மலைபடு. 501). ''குடாவடி யுளியமும்'' (சிலப். 25 : 50). 2. வளைகுடா அல்லது விரிகுடா என்னும் வளைகடல். 3. மூலை.*

*குடா– குடாப்பு = கோழி, ஆட்டுக்குட்டி, பன்றி முதலிய வற்றை அடைக்கும் அரையுருண்டை வடிவான கூடு.*

*குடா– குடாரி = வளைந்த யானைத் தோட்டி (பிங்.).*

*குட – குடி = 1. வளைந்த புருவம் (பிங்.). 2. குடம்பை போன்ற குடிசை அல்லது வட்டமான வீடு. 'சிறுகுடி கலக்கி'' (கந்தபு. ஆற்று. 12). குடிக்கூலி = வீட்டு வாடகை; முதற் காலத்தில் எல்லா நாட்டு வீடுகளும் வட்டவடிவாகவே இருந்தன. 3. ஒரு குலத்தார் தெரு அல்லது வீட்டுத்தொகுதி. எ - டு : செக்காரக்குடி அல்லது வாணியக்குடி. 4. ஊர். எ - டு : காரைக்குடி. குடிகாவல் = ஊர்காவல். 5. வீட்டிலுள்ள மனைவி. எ - டு : அவனுக்கு இருகுடி. 6. குடும்பம் (வீட்டிலுள்ள கணவன் மனைவி மக்கள்). ''ஒருகுடிப் பிறந்த பல்லோருள்ளும்'' (புறம். 183). 7. சரவடி. எ - டு : சேக்கிழார் குடி. 8. குலம் (பிங்.). 9. குடிகள். ''கோனோக்கி வாழுங் குடி'' (குறள். 542).*

*10. குடியிருப்போர். 11. வதிதல் அல்லது தங்குதல். ''என் சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே'' (தாயுமா. தேசோமயானந்தம்). குடியானவன் = நிலையாக ஓரிடத்தில் வதியும் உழவன் அல்லது வேளாளன். குடியிருத்தல் = வீட்டிலிருத்தல், நிலையாக வதிதல், குடிபுகுதல், குடிவருதல், குடிபோதல், குடியேறுதல், குடி கொள்ளுதல் முதலிய தூய தமிழ் வழக்குகளை நோக்குக.*

*குடி (குடிசை, வீடு)–* ***ம.*** *குடி,* ***வ.*** *குட்டி* (kuti).

OE. cot, MDu., MLG., ON, kot, E. cot.

OE. cote, MLG. kote; R. cote.

*குடிகை (குடி + கை) = 1. சிறுவீடு (குடிசை). ''உண்டுகண் படுக்கு முறையுட் குடிகையும்'' (மணிமே. 6 : 63). 2. சிறு கோயில். ''குச்சரக் குடிகைக் குமரியை மரீஇ'' (மணிமே. 18 : 152). கை என்பது ஒரு சிறுமைப்பொருட் பின்னொட்டு* (Dimunitive suffix).

*ஒ. நோ : கன்னி– கன்னிகை. குடிகை– வ. குட்டிகா.*

*குடிகை– குடிசை = குடில். தெ. குடிசெ*(g).

*குடிசை – குடிஞை = குடில். ''தூசக் குடிஞையும்'' (பெருங். இலாவாண. 12 : 43).*

*குடில் (குடி + இல்) = 1. ஆட்டுக்குட்டிகளை அடைக்குங் கூடு. 2. குடிசை. ''என்ன மாதவஞ் செய்ததிச் சிறுகுடில்''. (பாரத. உத்தி. கிருட். 80). இல் என்பதும் ஒரு சிறுமைப்பொருட் பின்னொட்டாம்.*

*ஒ. நோ : தொட்டி – தொட்டில், புட்டி – புட்டில்.*

*குடில்– குழலம்–* ***வ.*** *குட்டீர.*

*குடி – குடில் = வட்டவடிவாகத் தோன்றும் காயம் (ஆகாயம்) – (திவா.)*

*குடில் – குடிலம் = 1. வளைவு. ''கூசும் நுதலும் புருவமுமே குடிலமாகி யிருப்பாரை'' (யாப். வி. மேற்கோள்). 2. காயம் – ஆகாயம்) (சூடா.).*

*குடில் – குடிலை = 1. மூல மந்திரமாகிய ஓங்காரம். ''குடிலையம் பொருட்கு'' (கந்தபு. கடவுள்வா. 14). 2. தூயமாயை. (சி. போ. பா. 2 : 2).*

*குண்டலி, குடிலை என்னும் மெய்ப்பொருளியற் சொற்கட்கு வடமொழியில் வேறு மூலமில்லை.*

*''ஓங்காரத் துள்ளே யுதித்தவைம் பூதங்கள்*
*ஓங்காரத் துள்ளே யுதித்த சராசரம்*
*ஓங்காரா தீதத் துயிர்மூன்று முற்றன*
*ஓங்கார சீவ பரசிவ ரூபமே''*

*என்னும் திருமந்திரத்தை (2677) ஆழ்ந்தெண்ணி, பேருலகத் தோற்றுவாய்க்குக் குடிலை என்னும் பெயர்த் தோற்றக் கரணியத்தை உய்த்துணர்ந்து கொள்க. குடிலை– வ. குட்டிலா* (kutila).

*குன்– கூன் = 1. வளைவு. ''கூனிரும்பினிற் குறைத்து'' (நைடத. நாட்டுப். 10). 2. முதுகுகூனல் (திவா.). 3. கூனன் அல்லது கூனி. ''கூனுங் குறளு மூமுஞ் செவிடும்'' (புறம். 28). 4. பக்கக் கூனலுள்ள பெருங்கலம். ''குருதி சாறெனப் பாய்வது குரைகடற் கூனில்'' (கம்பரா. கிங்கர. 40). 5. கூன்போற் செய்யுளில் அளவிற்கு மிஞ்சி வரும் அசை அல்லது சீர். ''சீர் கூனாதல் நேரடிக் குரித்தே.'' (தொல். பொருள். செய். 48).*

*கூன் – கூனல் = 1. வளைவு. கூனலங்காய் = புளியங்காய். ''கூனலங்காய் தினையவரை'' (திருவிளை. நாட்டு. 42). 3. முதுகு வளைவு. ''கூனற் கிழவன் கொடுக்கும் பணயமதில்'' (விறலிவிடு.).*

*கூன்– கூனி = 1. வளைந்த சிறிய இறால்வகை. ''கூனி கொத்தி.... கொக்கிருக்கும்'' (குற்றா. குற. 94) 2. வானவில்.*

*கூன்– கூனை = 1. நான்மூலையிலும் கூனுள்ள தோல் நீர்ச்சால். ''விழுந்த பேரைக் கூனைக்கொண் டமிழ்த்துவார்போல்'' (குற்றா. குற. 28). 2. நீர்ச்சால் போன்ற பெருமிடா. ''கரும்பேந்திரத் தொழுது சாறகன் கூனையின்'' (கம்பரா. ஆறுசெல். 49).*

*குள்– கூள். (கூளுதல் = வளைதல்) கூளி = வளைந்த பச்சைவாழைப் பழவகை. கூழாங்கல் = தேய்ந்துருண்ட சிறு கல்.*

*கூள்– கூண்டு = 1. வளைந்த வண்டி முகடு. எ - டு ஃ கூண்டு வண்டி. 2. வட்டமான பறவைக் கூண்டு. எ - டு ஃ கிளிக்கூண்டு. 3. விலங்குகளை அடைத்து வைக்கும் கூண்டு போன்ற அமைப்பு. எ - டு ஃ புலிக்கூண்டு. 4. நீண்டு உருண்டிருக்கும் எலிக்கூண்டு. 5. உருண்டையான புகைக் கூண்டு.*

*கூண்டு– கூடு. ஒ.நோ ஃ பூண்டு– பூடு.*

*கூடு = 1. வட்டமான நெற்கூடு. ' 'கூடுவிளங்கு வியனகர்'' (புறம். 148). 2. வட்டமான அல்லது உருண்ட அல்லது உருண்டு நீண்ட பறவைக் கூடு. 3. விலங்குக் கூடு. ''கூடார் புலியும்'' (சீவக. 2328). 4. ஆளை அடைத்து வைக்கும் சிறைக்கூண்டு அல்லது அறை. 'படிக்காச னென்னுமோர் பைங்கிளியைக் கூட்டிலடைத்து வைத்தாய்''*

(படிக்காசுப் புலவர் தனிப்பாடல்). 5. சான்றியக்கூடு (witness box). 6. முகக்கூடு – முக்காடு. 7. மைப்புட்டி, மைக்கூடு (நெல்லை வழக்கு). 8. படைக்கல வுறை. 9. கருவிக்கூடு. எ - டு : கண்ணாடிக் கூடு. 10. உயிருக்குக் கூடுபோன்ற உடம்பு. ''கூட்டைவிட் டுயிர்போவதன் முன்னமே'' (தேவா. 376 : 2). 11. உள்ளீடற்ற பதர். 12. பூச்சிக் கூடு. 13. சதைப்பற்றின்றி நோய்ந்த வுடம்பு. 14. எலும்புக் கூடு.

ம. கூடு, தெ., க., து. கூடு (gudu).

கூடல் – கூடலி. கூடலித்தல் = வளைதல், கிளர்ந்து வளைதல். ''குறுவெயர்ப் புருவங் கூடலிப்ப'' (திவ். பெரியாழ். 3 : 6 : 8).

கூடு – கூடாரம் = வண்டிக் கூண்டு. கூடாரவண்டி = கூண்டு வண்டி. கூடாரப்பண்டி (சிலப். 6 : 120. அரும்.).

கூடு – கூடை = வட்டமான மூங்கில் முடைவு.

கூள் – கூர். கூர்தல் = வளைதல். ''மெய்கூர்ந்த பணியொடு'' (கலித். 31 : 6).

குள் – கொள் = வளைந்த காயுள்ள பயற்றுவகை.

''காயுங் கோணக்காய் சொல்லடா மைத்துனா
கதையும் விடுவித்தேன் கொள்ளடா மைத்துனா''

என்பது சிறார் சொல்லும் விடுகதைப் பாட்டு.

குல் – கொல் – கோல். கோலுதல் = 1. வளைத்தல். ''நெடுங் காழ்க் கண்டங் கோலி'' (முல்லைப். 44). 2. திரட்டி வைத்தல். ''கோலாப் பிரச மன்னாட்கு.'' (திருக்கோ. 110).

கோல் = 1. உருட்சி. 2. திரட்சி. ''கோனிற வளையினார்க்கு'' (சீவக. 209). 3. உருண்டு திரண்ட குடைக்காம்பு. ''அருள்குடையாக வறங்கோலாக'' (பரிபா. 3 : 74). 4. துலாக்கோல் (பிங்.). 5. செங்கோல். 6. அளவுகோல் ''கோலிடை யுலக மளத்தலின்'' (கம்பரா. நகரப். 11). 7. ஊன்றுகோல். 8. கம்பு. ''அலைக்கொரு கோறா'' (கலித். 82). 9. மரக்கொம்பு (சூடா.). 10. பிரம்பு. 11. யாழ்நரம்பு. ''கோல்பொரச் சிவந்த'' (சீவக. 459).

ம. கோல், தெ. கோல, க. கோல், து. கோலு.

கோல் – கோலி = உருண்ட விளையாட்டுக் கருவி.

ம., தெ. கோலி (g), து. கோளி (g), மரா. கோலீ (g).

கோல் – கோலை = மிளகு. (தைலவ. தைல. 135).

*கொட்பு = 1. வளைவு. 2. சுழற்சி. ''கொட்புறு கலினப் பாய்மா'' (கம்பரா. மிதிலை. 13). 3. மனச்சுழற்சி (சீவக. 540, உரை). 4. சுற்றித் (திவா). 5. நிலையின்மை. ''கொட்பின்றி யொல்லும்வா யூன்று நிலை'' (குறள். 789).*

*கொள்– கொட்டு = 1. வட்டமான நெற்கூடு. 2. பிரப்பங் கூடை. ஒ.நோ : வள்– வட்டு.*

*கொட்டு – கொட்டம் = 1. வட்டமான மாட்டுத் தொழுவம். 2. நூற்குங் கொட்டை (சிறுபாண். 106, உரை). ஒ.நோ : வட்டு– வட்டம். கொட்டம் (தொழுவம்)– வ. கோஷ்ட* (g, th), *தெ. கொட்டமு. கொட்டம் – கொட்டாரம் = வட்டமான களஞ்சியம். ஒ. நோ : வட்டம்– வட்டாரம்.*

***ம.*** *கொட்டாரம்,* ***தெ.*** *கொட்டாரமு,* ***க., து.*** *கொட்டார,* ***மரா.*** *கோட்டார* (th), ***வ.*** *கோஷ்டாகார* (th, g).

*கொட்டம் – கொட்டகை = சாய்ப்புப் பந்தல். ''கொட்டகைத் தூண்போற் காலிலங்க'' (குற்றா. குற. 84 : 4).*

*ஒ. நோ : வட்டம்– வட்டகை. க. கொட்டகெ* (g), *து. கொட்ய.*

*வ. கோஷ்டக* (g). *ஒ. நோ :* ME.; E. cottage.

*கொட்டுதல் = கலத்தைச் சாய்த்துக் கவிழ்த்து உள்ளடக்கத்தைச் சிந்துதல் அல்லது சொரிதல்.*

*கொட்டு– கொட்டில் = 1. மாட்டுத் தொழு. ''ஏறு கட்டிய கொட்டி லரங்கமே'' (தனிப்பாடல்). 2. கொட்டகை, ''கொட்டில் விளங்குதேர் புக்கதன்றே'' (சீவக. 471). 3. விற்பயிற்றும் இடம். ''கல்லூரி நற்கொட்டிலா'' (சீவக. 995). 4. குடிசை. ''பன்னூறாயிரம் பாடிக் கொட்டிலும்'' (பெருங். உஞ்சைக். 43. 199). ம. கொட்டில்.*

*கொட்டு – கொட்டை = 1. உருண்ட வடிவம். 2. பஞ்சுச் சுருள். ''கொட்டைத் தலைப்பால் கொடுத்து'' (திவ். பெரியாழ். 3 : 5 : 1). 3. உருண்ட தலையணை. ''நெட்டணை யருகாக் கொட்டைகள் பரப்பி''. 4. உருண்டு திரண்ட விதை. 5. அது போன்ற உறுப்பு* (testicle). *6. தாமரைக் கொட்டை. ''தாமரை வள்ளிதழ் பொதிந்த கொட்டை போல'' (பெருங். உஞ்சைக். 38 : 258). 7. ஆமணக்கு. 8. பூசணிப் பிஞ்சு. 9. பாதக் குறட்டின் குமிழ். ' 'பவழக் கொட்டைப் பொற்செருப் பேற்றி'' (பெருங். மகத. 22 : 202). 10. ஆடைத்தும்பு முடிச்சு. 11. ''கொட்டைக் கரைய பட்டுடை நல்கி'' (பொருந. 155). 12. காது வளர்க்குந் திரி. 13. நூற்குங் கதிர் அடி.*

*ம. கொட்ட, தெ., க., து. கொட்டெ.*

*கொள் – கொள்கு – கொட்கு. கொட்குதல் = 1. சுழலுதல். ‘‘வளிவலங் கொட்கு மாதிரம்’’ (மணிமே. 12 : 91). 2. சூழவருதல். ‘‘காலுண வாகச் சுடரொடு கொட்கும்’’ (புறம். 43 :3). 3. திரிதல். ‘‘கொடும்புலி கொட்கும் வழி’’ (சிறுபஞ். 80). ஒ. நோ : வெள்– வெள்கு– வெட்கு.*

*கொட்கு – கொக்கு = வளைந்த கழுத்துள்ள நீர்ப்பறவை வகை. ‘‘பைங்காற் கொக்கின்’’ (புறம். 342). ஒ. நோ : சுள்– சுள்கு– சுட்கு– சுக்கு.*

*ம. கொக்கு, தெ. கொக்கெர, க. கொக்கரெ, து. கொர்ங்கு, பிரா. கொக்கை.*

*கொக்கு– கொக்கி = 1. வளைந்த கொளுவி. 2. இருப்புத் துறட்டி. ம. கொக்க, தெ. கொக்கி, க., து. கொக்கெ,* Du. hock, MLG. hok, OE. hoc, E.hook.

*கொக்கி– கொக்கில் = அணிகலக் கொக்கிவாய். கொக்கு– கொக்கை = கொக்கி (யாழ்ப்.).*

*கொக்கு – கொக்கரை = 1. வளைவு. 2. வைக்கோல் வாருங் கருவி* (rake). *3. வில் (அக. நி.). 4. வலம்புரிச் சங்கு (திவா.). 5. வட்ட மான தாளக் கருவி. 6. வளைந்து சூழும் வலை. 7. வளைந்து வளைந்து செல்லும் பாம்பு.*

*ம. கொக்கர, தெ. கொக்கெர, க. கொக்கெ.*

*கொக்கு– கொக்கட்டி = குறுகி வளைந்த பனங்கிழங்கு (யாழ்ப்.).*

*கொள்– கொண்டி = கொக்கி, கொளுவி.*

*கொள்– (கொண்)– கொடு– கொடுமை = 1. வளைவு (சிலப். 11 : 20)). 2. மனக்கோட்டம். ‘‘கொடுமையுஞ் செம்மையும்’’ (பரிபா. 4 : 50). 3. தீமை. ‘‘கூனுஞ் சிறிய கோத்தாயுங் கொடுமை யிழைப்ப’’ (கம்பரா. மந்திரப். 1). 4. முறைகேடு. ‘‘கொடியோர் கொடுமை’’ (தொல். பொருள். 147). 5. தீவினை. 5. கொடும்பாடு. ‘‘கொடுமைபல செய்தன’’ (தேவா. 945 : 1).* **ம.** *கொடும.*

*கொடுவாள் = வளைந்த வெட்டறுவாள். கொடுமரம் = வில். கொடுங்கை = 1. மடித்த கை. 2. கட்டடத்தின் வெளிப்புறம் நீண்டு வளைந்துள்ள உறுப்பு. ‘‘மரகதக் கொடுங்கை சுற்றமைய வைத்தனன்’’ (தணிகைப்பு. வள். 12).*

*கொடுக்காய்ப்புளி = பன்மடி வளைந்த காயுள்ள மரவகை.*

*கொடுவரி = வளைந்த வரியுள்ள வேங்கை. கொடுவாயிரும்பு = தூண்டில் முள். ''கொடுவா யிரும்பின் கோளிரை துற்றி'' (அகம். 36 : 2).*

*கொடு – கொடுக்கு = 1. தேள், நட்டுவாய்க்காலி முதலிய வற்றின் வளைந்த கொட்டும் உறுப்பு. 2. ஆடையின் அழகு தொங்கல். ''கச்சை புனைந்ததிலே விட்டான் பெருங்கொடுக்கு'' (திருவாலவா. 30 : 9). 3. கிழிந்த ஆடைத் தொங்கல். கோலுங் கொடுக்கும் என்பது உலகவழக்கு.* ON. *krokr,* F. *croc*, ME. *croc*, E. *crook, ம. கொடுக்கு.*

*கொடுக்கு– கொடுக்கன் = தேள்வகை. கொடுக்கன்– கொடுக்கான்.*

*கொடுக்கு – கொடுக்கி = 1. கதவையடைத்து இடும் இருப்புக் கொக்கிப்பட்டை. 2. கொடுக்குப் போன்ற முள்ளுள்ள தேட் கொடுக்கிச் செடி.*

*கொடு – கொடுப்பு = குறடுபோன்ற அலகு.*

*கொடு– கொடி = 1. வளைந்து படரும் நிலைத்திணை வகை. ஒ.நோ : வல் – வல்லி = கொடி. வள் – வள்ளி = கொடி. 2. கொடிபோன்ற மகளிர் கழுத்தணி. 3. ஆடவர் அரைஞாண். 4. கொடிபோலுங் கயிறு. 5. நீளம். ''பழன வெதிரின் கொடிப்பிணை யலளே'' (ஐங். 91). 6. ஒழுங்கு. ''கருங்கொடிப் புருவம்'' (சீவக. 658). 7. வாய்க்கால், கிளை வாய்க்கால். 8. வழிமரபு, கொடிவழி. 9. கிளையடுப்பு, கொடியடுப்பு. 10. துணிக்கொடி. 11. மூதேவியின் காக்கைக் கொடி, காக்கை. ''சேட்டைக் குலக்கொடியே'' (திருக்கோ. 235). 12. கொடிமின்னல். 13. பாம்பு. பாம்பு கடித்தலைக் கொடித்தட்டல் என்பது நெல்லைநாட்டு மங்கல வழக்கு. 14. நீண்டு செல்லும் ஒடுங்கிய பாதை. கொடித்தடம் = ஒற்றையடிப்பாதை.*

*கொடி – கொடிச்சி = குறிஞ்சிநிலத்துப் பெண், குறிஞ்சிநிலத் தலைவி. ''கொடிச்சி காக்கும் பெருங்குர லேனல்'' (ஐங். 296). கொடிபோல் விரைந்து வளர்வதால் பெண்ணைப் பெண்கொடி யென்னும் வழக்கையும், முருகன் தேவியின் பெயராகிய வள்ளி யென்னுஞ் சொல் கொடியென்று பொருள்படுவதையும், நோக்குக.*

***ம., தெ., து.*** *கொடி.*

*கொடி – கொடிறு = 1. வளைந்த குறடு. ''கொடிறும் பேதையும் கொண்டது விடாது'' (திருவாச. 4 : 63). 2. குறடு போன்ற அலகு. ''கொடிறுடைக்குங் கூன்கையர்'' (குறள். 1077).*

*கொள்– கொண்– (கொண்பு)– கொம்பு = 1. வளைந்த விலங்கின் தலையுறுப்பு. 2. ஊதுகொம்பு. ''குறிக்குங் கொம்பினன்'' (கம்பரா.*

அயோத்தி. குகப். 9). 3. கொம்பு போன்ற யானை மருப்பு. ''யானையின் கொம்பினைப் பறித்து'' (திவ். பெரியதி. 4 : 2 : 4). 4. கொம்பு போன்ற அல்லது கொம்பினாற் செய்த நீர்வீசு கருவி. ''சிவிறியுங் கொம்புஞ் சிதறு விரை நீரும்'' (மணிமே. 28 : 10). 5. எழுத்தின் கொம்பு போன்ற வரிவடிவப் பகுதி. ''வரைந்திடுந் திறனடைந்த கொம்பு போல'' (திருவேங். கலம். 27). 6. கொம்பு போன்ற மரக்கிளை. ''வளியெறி கொம்பின் வருந்தி'' (மணிமே. 24 : 86). 7. கிளை போன்ற கோல். 8. தலையுச்சிக் கொம்பு போன்றிருக்கும் ஏரிக்கரைக் கோடி.

**ம.** கொம்பு, **தெ.** கொம்மு, **க., து.** கொம்பு.

கொம்பு – கொம்பர் = மரக்கிளை. ''நாறுமலர்க் கொம்பர்'' (சீவக. 2019).

கொம்பு – கம்பு = கோல் (பாண்டிநாட்டு வழக்கு).

கொம்பு– கொம்பன் = 1. கொம்புள்ள விலங்கு. ஒற்றைக் கொம்பன் = பிள்ளையார். 2. சமர்த்தன். உனக்கென்ன கொம்பு முளைத்திருக்கிறதா என்று வினவுவது உலக வழக்கு. இது தலை வேட்டமாடும் நாகர் வழக்கத்தினின்று தோன்றியதா யிருக்கலாம். பண்டை மூவேந்தர் முடியும் கொம்பு வடிவிற் குவிந்திருந்தது கவனிக்கத்தக்கது. 3. மகன், ஆண்பிள்ளை. உனக்கொரு கொம்பன் பிறப்பான் என்பது குடுகுடுப்பாண்டி குறிக்கூற்று. கணவனும் மனைவியும், வன்மை மென்மையாலும் வாழ்க்கைச் சார்பினாலும், கொழு கொம்பும் அதைப் பற்றியேறும் இவர்கொடியும் போலிருத்தலை நோக்குக. கொள்கொம்பு – கொழுகொம்பு. 4. அம்மை அல்லது கழிச்சல் நோய்வகை. நீர்க்கொம்பன் = கக்கற் கழிச்சல் (வாந்திபேதி).

கொம்பு – கொப்பு = 1. மரக்கிளை. 2. மகளிர் காதணிவகை. ''கொப்பிட்ட வுமைபாகர்'' (தண்டலை. சத. 12).

கொள் – கோள் = 1. சுற்றிவரும் விண்மீன். ''கோணிலை திரிந்து கோடை நீடினும்'' (மணிமே. பதி. 24). 2. ஊர்கோள் வட்டம். ''மதியங் கோள்வாய் விசும்பிடை'' (சீவக. 1098).

கோள் – கோளம் = 1. உருண்டை. குடவரைக் கோளம் (Western hemi-sphere). குணவரைக் கோளம் (Eastern hemi-sphere). 2. உடம்பில் நீர் சுரக்கும் சுரப்பி (gland), கோளக் கட்டி.

கோளம் – கோளகம் = 1. மண்டல விரியன் (பிங்.). வ. கோலக (g). 2. மிளகு. வ. கோலக.

*கோளம் – கோளகை = 1. வட்டவடிவம். ''அண்ட கோளகைப் புறத்ததாய்'' (கம்பரா. அகலிகைப். 60). 2. மண்டலிப் பாம்பு (சூடா.). 3. கிம்புரி என்னும் யானைமருப்புப் பூண் (பிங்.).*

*கோள் – கோளா = 1. உருண்டைக்கறி. 2. கஞ்சாவுருண்டை. கோளாங்கல் = கூழாங்கல் (யாழ்ப்.).*

*கோள்– கோண் = 1. வளைவு. ''கோணார் பிறை'' (திருவாச. 16 : 5). 2. கோணம். ''முக்கோ ணிவர்தரு வட்டம்'' (குற்றால. தல. பராசத். 3). 3. மாறுபாடு. 4. கொடுங்கோன்மை.*

*கோணுதல் = 1. வளைதல். 2. கோணலாயிருத்தல். 3. நெறி பிறழ்தல். 4. முகங்கோணுதல், மாறுபடுதல். 5. மனங்கோணுதல், வெறுத்தல். ''கோணாதே குலவி நுழைந்தனையே'' (அருட்பா, 6, திருவடிப் புகழ்ச். 1 : 7).*

*கோண் – கோணல் = 1. வளைதல் (பிங்.). 2. கூன் (திவா.). 3. மாறுபாடு (சூடா.). ம. கோணல்.*

*கோண் – கோணம் = 1. வளைவு. (பிங்.). 2. கூன்வாள் (பிங்.). 3. யானைத் துறட்டி. ''கோணந் தின்ற வடுவாழ் முகத்த'' (மதுரைக். 592). 4. மூலை. ''கோணமொத் திலங்கோர் முழத்தினின்'' (திருவாலவா. 15 : 2). 5. கோணத்திசை. ''வடக்கொடு கோணந் தலைசெய்யார்'' (ஆசாரக். 31). 6. ஒதுக்குப்புறமான இடம்.*

**வ.** *கோண.* Gk. gonia (angle).

*கோணம்– காணம் = 1. வளைந்த காயிலுள்ள கொட்பயறு (திவா.). கொள்ளைக் காணமென்பதே பாண்டிநாட்டு வழக்கு. 2. காணப்பயறள வுள்ள நிறை. 3. காணமொத்த வடிவிலுள்ள பொற்காசு. ''ஒன்பதுகாப் பொன்னும் நூறாயிரங் காணமுங் கொடுத்து'' (பதிற். 60, பதி.). 4. பொன் (திவா.). 5. பொருள். ''மேற்காண மின்மையால்'' (நாலடி. 372). 6. வரி. ''குசக்காணம்''. ம. காணம்.*

*காணம்[2] = 1. வட்டமான செக்கு. 2. ஒரு செக்களவு கொண்ட முகத்தலளவை. க. காண* (g).

*ஓ – ஆ. ஒ.நோ : ஓட்டம் – ஆட்டம் (உவம வுருபு). குரங்காட்டம் ஓடுகிறான் என்பது நெல்லைவழக்கு. ஓடுதல் = ஒத்தல். நோடு– நோட்டம் – நாட்டம் = பார்வை, கண், தேட்டம், விருப்பம், ஆராய்வு. நோடு– நாடு. நாடுதல் = பார்த்தல், கவனித்தல், ஆய்தல், தேடுதல், விரும்புதல். நோடுதல் என்னும் வினைச்சொல் ஆய்ந்து பார்த்தல் என்னும் சிறப்புப் பொருளிழந்து, பார்த்தல் என்னும் பொதுப் பொருளில் இன்று கன்னடத்தில் வழங்குகின்றது.*

கோண் – கோணை = 1. வளைவு. 2. கோணல். கோணையன் = இயற்கைக்கு மாறான குணமுடையவன்.

கோண்– கோடு. ஒ.நோ : பாண்– பாடு.

கோடுதல் = 1. வளைதல். ''கொடும்புருவங் கோடா மறைப்பின்'' (குறள். 1086), ''கோல் கோடி'' (குறள். 554). 2. நெறி தவறுதல். ''கோடாருங் கோடி'' (நாலடி. 124). 3. நடுநிலை தவறுதல். ''கோடாமை சான்றோர்க் கணி'' (குறள். 118).

கோடு = 1. வளைவு 2. விலங்குக் கொம்பு. ''கோட்டுமண் கொண்டிடந்து'' (திவ். பெரியாழ். 3 : 3 : 9). 3. யானை மருப்பு. ''களிறு.....நுதிமழுங்கிய வெண்கோட்டால்'' (புறம். 4 : 11). 4. யாழ்த் தண்டு. ''யாழ்கோடு செவ்விது'' (குறள். 279). 5. பிறைமதி. ''கோடு மிலைந்தான்'' (திருக்கோ. 149). 6. சங்கு. ''கோடுமுழங் கிமிழிசை யெடுப்பும்'' (பதிற். 50 : 25). 7. குளக்கரை. ''குளவளாக் கோடின்றி நீர்நிறைந் தற்று'' (குறள். 523). 8. எழுத்தின் வரிவடிவுக் கொம்பு. ''கோடு பெற்றும் புள்ளி பெற்றும்'' (தொல். எழுத்து. 17, நச். உரை). 9. நடுநிலையின்மை. ''கோடிறிக் கூற்றம்'' (நாலடி. 5). 10. கால வட்டம். ''கலியுகக் கோட்டு நாள்''(T. A. S. H. O. P. S). தெ., க. கோடு.

கோடு – கோட்டம் = 1. வளைவு. ''மரத்தின் கனக்கோட்டம் தீர்க்குநூல்'' (நன். 25). 2. கோணல் ''உட்கோட்ட மின்மை பெறின்'' (குறள். 119). 3. வட்டமான ஆன்கொட்டில். ''ஆனிரைக டுன்னுங் கோட்டம்'' (வாயுசங். பஞ்சாக். 58). 4. மதில் சூழ்ந்த கோயில். ''கோழிச் சேவற் கொடியோன் கோட்டமும்'' (சிலப். 14 : 10). 5. மதில் சூழ்ந்த சிறைச்சாலை. ''ஒறுக்குந் தண்டத் துறுசிறைக் கோட்டம்'' (மணிமே. 19 : 43). 6. குளக்கரை. ''உயர்கோட்டத்து.... வான் பொய்கை'' (பட்டினப். 36). 7. மண்டலம், வட்டம், நாடு (பிங்.). 8. வணக்கம். ''முன்னோன் கழற்கே கோட்டந் தருநங் குருமுடி வெற்பன்'' (திருக்கோ. 156). 9. நடுவுநிலையின்மை. ''கோவினுக் கருங்கலங் கோட்ட மில்லது'' (தேவா. 1182 : 2).

கோட்டம் – கோட்டகம் = குளக்கரை. ''நெடுங்குளக் கோட்டகம்'' (சிலப். 11 : 71).

கோடு – கோடி = 1. வளைவு. ''முளைத்திங்கட் கோடியென'' (திருவாரூ. 134). 2. முடிமாலை (பிங்.).

கோடு – கோடல் = 1. வளைவு. 2. முறிக்கை. 3. வெண்காந்தள். ''கோடல் முகையோடு'' (பு. வெ. 8 : 16).

கோடலம் = பிறைபோல் வளைந்த மாலைவகை. கோடு– கோடை = வளைந்த இதழுள்ள காந்தள்.

*கோட்டம்– கோட்டை. ஒ.நோ : ஆட்டம்– ஆட்டை.*

*கோட்டை = 1. வட்டமான நெற்கூடு. ''உலவாக் கோட்டை'' (திருவாலவா. 50 : 13). 2. நெற்கூடு கொள்ளும் 21 மரக்கால் கொண்ட முகத்தல் அளவு. 3. ஒரு நில அளவு. 4. வட்டமான மதிலரண். 5. ஊர்கோள். நிலாக் கோட்டை கட்டியிருக்கிறது (போட்டிருக்கிறது) என்பது இன்றும் உலக வழக்கு.*

***ம., தெ., க., து.**, கோட்ட. **வ.** கோட்ட.*

*கோடு– கோட்டு (பி.வி.). கோட்டுதல் = 1. வளைத்தல். ''நகைமுகங் கோட்டி நின்றாள்'' (சீவக. 1568). 2. வளைத்து முறித்தல் (திவா.). 3. வளைத்து எழுதுதல். ''தன்னாம மேருவினுங் கோட்டி னானே'' (பாரத. சிறப்புப். 19). 4. வளைத்துக் கட்டுதல். ''ஒரு மண்டபங் கோட்டினேன்'' (பாரத. வாரணா. 123).*

*கோடு – கோடகம் – கேடகம் = வட்டமான பரிசை. ''கேடகம் ஒளிவீச'' (கம்பரா. கடிமணப். 33). கேடகம் – வ. கேட்டக்க* (khetaka). *ஒ.நோ : புரி– பரி– பரிசை = வட்டமான கேடகம். புரிதல் = வளைதல்.*

*கேடகம் – கிடுகு = 1. கேடகம். ''வார்மயிர்க் கிடுகொடு'' (சீவக. 2218). 2. தேர்மரச்சுற்று (ஞானா. 7 : 16). 3. வட்டவடிவான பறைவகை. ''கிடுகு கொட்டின'' (பாரத. அணி. 15). வ. கிடுக* (g-g).

*கோடு– கோடரம் = 1. மரக்கிளை (பிங்.). 1. குரங்கு. ''கொய்தளிர் கோதும் வாழ்க்கைக் கோடரத் துருவு கொண்டு'' (கம்பரா. அட்சகுமா. 4). ''கோடுவாழ் குரங்கும்'' என்று தொல்காப்பியங் கூறுதல் காண்க. (தொல். மரபு. 13). க. கோடக* (g).

*கோடம்– கோரம் = வட்டில். ''அமுதுடைக் கோர நீக்கி'' (கம்பரா. அயோத்தி. மந்திரப். 25).*

*கோடு – கோசு. கோசுவிழுதல் = துணிவெட்டும்போது கோணிப் போதல்.*

## கிளைக் கருத்துகள்

*1. **திரட்சி**. கோல் = திரண்ட கம்பு. கோல் – கால் = மரத்தூண், கற்றூண். நாற்காற் பந்தல் என்பதில் மரத்தூணும், நூற்றுக்கால் மண்டபம் என்பதிற் கற்றூணும் குறிக்கப்படுதல் காண்க. உருட்சிக் கருத்தினின்றும் திரட்சிக் கருத்துத் தோன்றிற்று. பின்வருபவை வளைவு அல்லது திரிபு என்பதை அடிமணையாகக் கொண்டவை.*

*2. **தீமை**. எ - டு : கொடுவினை = தீவினை.*

*3. **நெறிதிறம்பல்**. எ - டு : கொடுங்கோல், கொடுந்தமிழ்.*

*4. **கடுமை**. எ - டு : கொடும்பனி – கடும்பனி. கொடு – கடு – கடுமை.*

*5. **நெரடு**. கொடுமலையாளம், கடுநடை.*

*6. **கொடுமை**. கொடும்பாடு, கொடும்பாவி. கோடு = கொடுமை. கோடணை = கொடுமை.*

*7. **மனக்கவலை**. கோட்டரவு.*

*8. **மூளைக்கேடு**. கிறுக்கு – கிறுக்கன். கோடு (த.வி.) – கோட்டு (பி.வி.)– கோட்டி = கிறுக்கு, கிறுக்கன் (அறிவு திரிந்தவன்).*

*கிறுக்கு என்பது சுற்றற் கருத்தையும், கோட்டி என்பது திரிதற் கருத்தையும் அடியாகக் கொண்டன.*

## சிறுகிளைக் கருத்துகள்

*1. கோல் = அரசு, ஆட்சி. செங்கோல் = நேர்மையாட்சி. கொடுங்கோல் = கொடிய ஆட்சி.*

*2. கால் = 1. தூண்போல் உடம்பைத் தாங்கும் உறுப்பு. 2. உடம்பிற் கால்போல் நாலிலொரு பகுதி. 3. கால்போல் ஒடுங்கி நீண்டு செல்லும் ஓடுநீர்நிலை (வாய்க்கால், கால்வாய்). 4. நீண்டு இயங்கும் காற்று. கால் – காற்று. 5. என்றும் நீண்டு இயங்கிக் கொண்டே யிருக்கும் காலம். கால் – காலை, காலம். 6. கால்போன்ற உறுப்பு. (முக்காலி, நாற்காலி). 7. பிரிவு. 8. அடிநிலம் (கொடிக்கால், நாற்றங்கால்). 9. நீண்டு தொடரும் குடிமரபு. இவையும் இவை போன்ற பிறவும் உவமையடிப்படையில் தோன்றியனவாகும்.*

*3. கொடி என்னும் சொற்கு மேற்குறித்த பதினாற் பொருளும், குறிக்கப்பெறாத பிறவும், சிறு கிளைக்கருத்துச் சொற்களே.*

## 5

# குல்[3] (குத்தற் கருத்துவேர்)

### குல்

*குல்– குள். குள்ளுதல் = கிள்ளுதல் (நெல்லைநாட்டு வழக்கு).*

*குள்– குளவி = கொட்டுந் தேனீ.*

*ம. குளவி, க. கொளவி.*

*குள்– கள் = முள். கள்– கள்ளி = முட்செடி. ஒ.நோ : முள்– முள்ளி. ''கள்ளியங் கடத்திடை'' (ஐங். 323).*

*ம., க. கள்ளி. கள் + மணி = கண்மணி = முட்போற் கூர் முனையுள்ள உருத்திராக்கம்.*

*முட்போன்ற முனையுண்மையால் உருத்திராக்கம் முண்மணி யென்றும் பெயர் பெறும்.*

*''முண்மணிகள் காய்க்குமரம் முப்பதுட னெட்டே'' என்று விருத்தாசலப் புராணம் (உருத்திராக். 4) கூறுதல் காண்க. பலாக் காயின்மேற் காணப்படும் முனைகளும் முள்ளென்று பெயர் பெற்றிருத்தலை நோக்குக. ஆரியர் தென்னாடு வருமுன்னரே சிவநெறி குமரிநாட்டில் தோன்றிய தென்மதமாதலால், அதை ஆரியப்படுத்திய வடவர் கண்மணியென்னுங் கூட்டுச்சொல்லின் பொருளைப் பிறழவுணர்ந்து, அதற்கேற்ப, முள்ளுள்ளதென்றே பொருள்படும் அக்கம் (அக்கு – முள், முள்ளுள்ள உருத்திராக்கம். அக்கு – அக்கம்) என்னும் தென்சொல்லை அகடி என்று திரித்து, உருத்திரன் கண்ணீரில் தோன்றியதென்று முப்புரளரிப்புக் கதை யொன்றுங் கட்டி விட்டனர். இதுவும் இதுபோன்ற திரிப்புகளும் தித்திருக்குகளும் என் 'தமிழர்மதம்' என்னும் நூலில் வெள்ளிடை மலையாய் விளக்கப்பெற்றுள்ளன.*

*கள்– கடு = 1. முள் (திவா.). 2. முள்ளி (மலை.).*

*ம. கடு. கடு – கடி = கூர்மை. ''கடியென் கிளவி காப்பே கூர்மை'' (நன். 457).*

*கள்– கண்டு = முள்ளுள்ள கண்டங்கத்தரி.*

*கண்டு – கண்டி = 1. முள்ளுள்ள உருத்திராக்கம், 2. உருத்திராக்க மாலை.*

*''கண்டியிற் பட்ட கழுத்துடையீர்'' (தேவா. 586 : 6)*

*கண்டி – கண்டிகை = உருத்திராக்கமாலை (பிங்.) கண்டிகை – கண்டிகா (வ.).*

*கண்டு – கண்டம் = 1. கள்ளி (மலை.). 2. எழுத்தாணி (பிங்.). 3. கண்டங்கத்தரி, உருத்திராக்கமணி. கண்டங்கத்தரி – கண்டகாரி (வ.). கண்டம் (முள்)– காண்டா (இந்தி).*

*கண்டு – கண்டல் = 1. முள்ளி (சூடா.). 2. நீர்முள்ளி (மலை.). 3. முள்ளுள்ள தாழை. ''கண்டல் திரையலைக்குங் கானல்'' (நாலடி. 194).*

*கண்டல்– கண்டலம் = 1. முள்ளி. 2. நீர்முள்ளி (மூ.அ.).*

*கண்டு – கண்டகம் = 1. முள். ''இளங்கண்டகம் விடநாகத்தின் நாவொக்கும்'' (இறை. 41 : 172). 2. நீர்முள்ளி. ''கண்டகங்காள் முண்டகங்காள்'' (தேவா. 268 : 2). 3. உடைவாள். (திவா.). 4. வாள் (சூடா.).*

*கண்டக சங்கம் = முட்சங்கு. கண்டகம்– கண்டக (வ.).*

*கண்டகம் – கண்டகி = 1. தாழை. ''வெம்மினது கண்டவியன் கண்டகி யெனவும்'' (கந்தபு. தேவர்புல. 20). 2. இலந்தை. (இலக். அக.). 3. ஒருவகை மூங்கில் (இலக். அக.) 4. முதுகெலும்பு.*

*குள்– கிள், கிள்ளுதல் = முள்ளுதல். கிள்– கிள்ளி– கிளி = கூரிய அலகினாற் கொத்தும் அல்லது கடிக்கும் பறவைவகை.*

*கிள்– கிள்ளை = கிளி.*

*கிள்– ம. கிள்ளு, தெ. கில்லு* (g). *கிளி– ம. கிளி, தெ. சிலுக்க.*

*குள்– கெள்– கெளிறு– கெடிறு– கெளிற்றி– கொளுத்தி.*

*குள்– கொள்– கொய். கொய்தல் = உகிராற் கிள்ளியெடுத்தல். ள்– ய். ஒ.நோ: தொள்– தொய், பொள்– பொய்.*

*குள்– குட்டு. ஒ.நோ : வள்– வட்டு. குட்டுதல்– கைமுட்டியால் தலையிற் குத்துதல். ம., தெ., க., து. குட்டு.*

*குட்டு– குத்து. ஒ.நோ : முட்டு– முத்து.*

*குத்துதல் = 1. முட்டியாற் குத்துதல். ''குத்துமோதை'' (கம்பரா. கிட்கிந்தா. வாலிவதைப். 43). 2. கொம்பினால் முட்டுதல். 3. ஊசி, ஆணி முதலியவற்றால் துளையிடுதல். ''உனைக் காது குத்த'' (திவ். பெரியாழ். 2 : 3 : 1). 4. கத்தியாற் குத்துதல். 5. புள்ளி குத்துதல். 6. முத்திரையடித்தல். 7. உலக்கையால் இடித்தல். 8. குத்தித் தைத்தல். ''பூம்புனல் நுழையும் புரையக் குத்தி'' (பெருங். வத்தவ. 12 : 48). 9. குத்திப் பறித்தல். 10. குத்திக் களைதல். 11. பறவை கொத்துதல். 12. கொத்தித் தின்னுதல். ''கானக் கோழி கதிர்குத்த'' (பொருந. 222). 13. ஊன்றுதல் ''பூந்தலைக் குந்தங் குத்தி'' (முல்லைப். 41). 14. செங்கலைச் செங்குத்தாக வைத்தல். ''கல்லைக் குத்திக் கட்டு'' (உ.வ.) 15. வெள்ளம் அல்லது பேரலை கரையில் மோதுதல். ''வையை கொதித்தகன் கரைகுத்தி'' (திருவிளை. விடை. 10). 16. உடம்பு அல்லது உறுப்பு நோவெடுத்தல். ''தலைக்குத்துத் தீர்வுசாத் தற்கு'' (திருவள். வெ. மா.) 'குத்தலுங் குடைச்சலும்' (உ.வ.) 17. மனம் புண்படச் சொல்லுதல். 18. காய்ச்சிய பாலில் உறை மோர் ஊற்றுதல். 'பிறை குத்த வேண்டும்' (உ. வ.) 19. நிலத்திற் படிந்திருத்தல். 20. முட்டுத் தாங்குதல். 21. செங்குத்தாதல். 22. நேராதல்.*

*ம., க., து. குத்து, தெ. குத்து* (guddu).

*குத்த வைத்தல் = புட்டம் நிலத்திற் படியுமாறு உட்கார்தல் (நெல்லை வழக்கு).*

*குண்டிகுத்துதல் = குத்தவைத்தல் (நாகூர் மரைக்காயர் வழக்கு).*

*குத்துக்கல் = செங்குத்தாக நிற்குங் கல்.*

*குத்துவிளக்கு = நிலத்திற் படிந்து நிற்குமாறு பாதம் வைத்த தண்டு விளக்கு.*

*குத்து = 1. கைப்பிடி (குத்தும் முட்டிக்கை) யளவு. 'ஒரு குத்துச் சோறு' (உ. வ.). 2. கைப்பிடியளவான தொகுதி ''குத்துக்குத்தாய் நட்டால் கோட்டை கோட்டையாய் விளையுமா?'' (பழமொழி).*

*குத்துச்செடி = அடர்ந்த சிறுசெடி.*

*குத்து – குத்தி – குதி = நிலத்திற் குத்தும் குதிங்கால்.*

*''குதிபந்தி னிரம்பு பேரெழில் வாய்ந்திடில்'' (காசிகண். மகளிர். 10).* ***தெ., க.*** *குதி* (gudi).

*குதித்தல் = 1. மேலெழும்பிக் குதிங்கால் அல்லது பாதம் நிலத்திற் குத்துமாறு ஊன்றி நிற்றல். 2. நீர்ப்பொருள் எழும்பி விழுதல். ''மலர்தேன் குதிக்க'' (தஞ்சைவா. 67). 3. கூத்தாடுதல். 4. செருக்குக் கொள்ளுதல். 5. பரபரப்படைதல். 6. குதித்துத் தாண்டு தல்,*

*தாண்டிக் கடத்தல், 7. கடந்து வெல்லுதல். ''கூற்றங் குதித்தலும் கைகூடும்'' (குறள். 269). குதியாளம் = குதித்து விளையாடுதல்.*

*ம. குதி,* **க.** *குதி* (gudi).

*குதி – கூத்து. இனி, குத்து (குதி) – கூத்து என்றுமாம்.*

**ம., க.** *கூத்து.*

*குதி– கொதி. கொதித்தல் = 1. நீர் நெய் முதலியன பொங்கி யெழுதல் ''குண்டிகை யிருந்த நீருங்... கொதித்த தன்றே'' (கம்பரா. வருணனை. 61). 2. மிகச் சுடுதல். 3. சினம் பொங்குதல்.*

*குதி – குதிரை = குதித்துத் தாண்டும் விலங்கினம்.*

**ம.** *குதிர,* **தெ.** *குதிர,* **க., து.** *குதுரெ.*

*குதி – குதிர். குதிர்தல் = படிதல், குடியமர்தல், ஒழுங்காதல்.*

**தெ., க.** *குதுரு.*

*குதிர்– கதிர் = 1. நேராகச் செல்லும் ஒளியிழை. ''விரிகதிர் ஞாயிறுந் திங்களும் விளங்கி'' (சிலப். 11 : 43). 2. கதிர்வீசும் இரு விண்சுடர். ''கதிர் விலகிச் சூழும்'' (சேதுபு. முத்தீர். 5). 3. குறட்டி னின்று (குடத்தினின்று) கதிர்போற் செல்லும் ஆரக்கால். 4, ஒளிக் கதிரும் ஆரக்காலும்போல் நெடுகக் கிளைக்கும் பயிர்க்கதிர். 5. நேராக நூல்நூற்குங் கருவி. ''கதிரே மதியாக'' (நன். 24)* **ம., க.** *கதிர்,* **தெ.** *கதுரு (நூற்கதிர்). கதிர்த்தல் = 1. விளங்குதல், ஒளிவீசுதல். ''கதிர்த்த நகை மன்னும்'' (திருக்கோ. 396). 2. வெளிப்படுதல். ''வாய்மை கதிர்ப்பச் சென்ற'' (கம்பரந். 1). 3. மிகுதல். ''கதிர்த்த கற்பினார்''.*

*குதி – குதை = கதிங்கால் போன்ற வில்லின் அடி. ''குதைவரிச் சிலைநுதல்'' (கம்பரா. பால. நகர. 49).* **ம.** *குத.*

*குதைத்தல் = விற்குதையில் நாண் பூணுதல். ''குதைக்கின்றன நிமிர் வெஞ்சிலை'' (கம்பரா. உயுத். இராவணன் வ. 46).*

*குத்து – குத்தி – கத்தி = குத்தி வெட்டும் அல்லது அறுக்குங் கருவி. குத்து – கத்து = குத்திவெட்டு (இறந்துபட்ட வழக்கு). தத்து – கத்தி.*

**ம., தெ., க., து.** *கத்தி.*

*ஒ. நோ :* ME. cutte, kitte, kette, Sw. kata (kuta), E. cut, *இந்தி, காட் (வெட்டு).*

*குத்துக்கோடரி = குத்திவெட்டுங் கோடரி.*

*கத்தி + அரி = கத்தரி. கத்தரித்தல் = 1. சிறிது சிறிதாய் (கொஞ்சங் கொஞ்சமாய்) வெட்டியறுத்தல் (திவா.). 2. அறுத்தல். ''தலைபத்துங்*

*கத்தரிக்க வெய்தான்'' (கந்தரலங். 22). 3. வெட்டி விலக்குதல், நட்புப் பிரித்தல். 4. பிரிந்து கவராதல்.*

*கத்தரி = கத்தரிக்கோல். கத்தரி– கத்திரிகை = கத்தரிக்கோல். ''மயிரரி தற்கொரு கத்தரிகை தருகென'' (பெருங். வத்தவ. 14 : 7). கத்தரி– கர்த்தரீ (வ.).*

*குத்து – குத்தி – கத்தி – கதி. கதித்தல் = நேராதல். கதிக்க = நேராக. ''கிழக்கே கதிக்கப் போ'' (நெல்லை வழக்கு). செங்குத்து அல்லது நட்டுக்குத்துக் கருத்தினின்று நேராதற் கருத்துத் தோன்றிற்று.*

*குத்து – குந்து. குந்துதல் = 1. புட்டம் நிலத்திற்குத்த உட்கார்தல். 2. குத்துதல். 3. படிதல்.*

*ம., க. குந்து. ஒ.நோ :* ME., E. squat, OF. quatir.

*குந்து – குந்தம் = 1. குத்துக்கோல். ''பூந்தலைக் குந்தங் குத்தி'' (முல்லைப். 41). 2. வேல். ''குந்த மலியும் புரவியான்'' (பு. வெ. 4 : 7). 3. எறிகோல். ''வைவா ளிருஞ்சிலை குந்தம்'' (சீவக. 1678). 4. குதிக்குங் குதிரை. ''வெற்றிசேர் குந்தம்'' (திருவிளை. நரிபரி. 106). 5. திரண்ட வைக்கோற் படப்பு. செங்குந்தர் = குந்தங்கொண்டு பொருத படைமறவர் வழியினர். குந்து – குந்தாலம் = குந்தித் தோண்டுங் கருவி. குந்தாலம் – கூந்தாலம். குந்தாலம் – வ. குத்தால* (dd).

*குந்தாலம் – குந்தாலி = 1. குத்தித் தோண்டுங் கருவி. ''குந்தாலிக்கும் பாரை வலிது'' (திருமந். 2909). 2. கணிச்சி (பு. வெ. 9 : 38, உரை). குந்தாலி – கூந்தாலி. ம. குந்தாலி.*

*குந்தி நடத்தல் = முன்னம் பாதத்தை மட்டும் ஊன்றி நடத்தல்.*

*குந்தாடுதல் = நொண்டி விளையாடுதல் (கோவை வழக்கு).*

*குந்தாங் குச்சி = நொண்டி விளையாட்டு (கோ. வ.).*

*குந்தாளித்தல் = களித்துக் கூத்தாடுதல்.*

*குந்து– குந்தனம் = மணி பதிக்கும் இடம். ''குந்தனத்தி லழுத்தின... ரத்தினங்கள்'' (திவ். திருநெடுந். 21, வியா. ப. 175). தெ. குந்தனமு.*

*குந்து + அணை = குந்தணை = எண்ணெய் காய்ச்சுங் கலம் சிதையுமாயின் எண்ணெய் வீணாகாவாறு அடியில் வைக்கப்படும் இருப்பானைக் குவளை. (தைலவ. பாயி. 19).*

*குந்து – குந்தா = குண்டுக் குழாயின் (துப்பாக்கியின்) அடி. உ. குந்தா.*

குந்து – கிந்து. கிந்துதல் = ஒற்றைக்காலால் நடத்தல். ‘‘கிந்தி நின்றாடும் அரிவையர்’’ (திருவிசை. கருவூ. திருக்கீழ்க். 11). **ம.** கித்து.

குந்து – கொந்து = நொண்டி விளையாட்டு வகை. கொந்துதல் = ஒற்றைக் காலாற் குதித்தல்.

குந்து – குந்தளம் = குழற்கொத்து (பிங்.), பெண்டிர் தலைமயிர். ‘‘சந்தமலி குந்தளநன் மாதினொடு’’ (தேவா. 107 : 1). குந்தளம்– **வ.** குந்தல.

குந்தளம்– கூந்தளம் = ஒருவகைப் பூ. ‘‘காந்தமணி கூந்தளம் பாவை நீண்டு’’ (சீவக. 1671).

கூந்தளம்– கூந்தலம்– கூந்தல் = 1. கொத்தான பெண்டிர்தலைமயிர் (பிங்.). 2. மயில்தோகை. ‘‘கூந்தன் மென்மயில்’’ (கம்பரா. சித்திரகூட. 31). 3. மயிர்க்கற்றை, வாலுள்ள குதிரை. ‘‘கூந்த லென்னும் பெயரொடு’’ (பரிபா. 3 : 31). 4. கூந்தற்பனை. 5. கூந்தற் கமுகு. 6. குதிரைவாற் சாமை. (தைலவ. தைல. 17). ம. கூந்தல், க.கூதல்.

குந்தளம்– கொந்தளம் = பெண்டிர் தலைமயிர் (பிங்.).

குத்து – கொத்து. கொத்துதல் = 1. மண்வெட்டியாற் குத்துதல். 2. அலகாற் குத்தியெடுத்தல். ‘‘கழுகு கொத்திடக் கலத்திடைக் கவிழ்ந்தனர்’’ (காசிகண். தக்கன் வேள்வியை. 48). 3. வெட்டுதல். 4. சீவுதல். 5. செதுக்குதல்.

‘‘கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்
குத்தொக்க சீர்த்த விடத்து’’

என்னுங் குறளில், குத்து என்னுஞ் சொல் கொத்து என்னும் பொருளில் ஆளப்பட்டிருத்தலை நோக்குக.

**ம., க.** கொத்து, **வ.** குட்.

கொத்து – கொத்தன் = கொத்துக் கரண்டியால் வேலை செய்யும் அல்லது செங்கலைக் கொத்தும் கட்டட வேலைக்காரன். கொத்துக் கணக்கு = கொத்தன் சம்பளக் கணக்கு.

கொத்து– கொட்டு. கொத்து மண்வெட்டி– கொட்டு மண் வெட்டி. களைக்கொத்து– களைக்கொட்டு.

கொத்து – கொந்து. கொந்துதல் = 1. குத்துதல். ‘‘கொந்தியயி லலகம்பால்’’ (பெரிய பு. கண்ணப். 145). 2. கொத்துதல். 3. மகளிர் கழற்காயாட்டத்தில், மேலெறிந்த காய் விழுவதற்கு முன் நிலத்திலுள்ள காய்களைக் கொத்துவது போற் பொறுக்கியெடுத்தல். 4. வெட்டுதல். கொந்தறுவாள் = முட்செடிகளை வெட்டியழிக்க உதவும் அறுவாள் வகை.

*குத்து (கைப்பிடியளவு, திரட்சி)– கொத்து = 1. கைப்பிடியளவு. ''ஒரு கொத்துச் சோறு கொடு'' (உ. வ.). 2. பிடிசோறு, சோறு. ''அரும்புக்கும் கொத்துக்கும் வந்தார்.'' (தனிப்பா. காளமே). 3. சோற்றிற் கீடாகத் தவசமாகக் கொடுக்குங் கூலி. 4. திரட்சி. 5. பூ காய் முதலியவற்றின் குலை. ''கொத்துறு போது மிலைந்து'' (திருவாச. 6 : 30). 6. குடும்பம். ''கொத்தடிமை'' (உ.வ.) 7. மக்கள் திரள். ''அனைத்துக் கொத்துப் பரிஜனங்களும் (குருபரம்).*

*கொத்து – கொந்து = 1. திரள். ''கொந்தினாற் பொலியும் வீதி'' (இரகு. இரகுவ. 53). 2. பூங்கொத்து. ''கொந்தா ரிளவேனல்'' (சிலப். 8, வெண்பா. 1). 3. கொத்துமாலை. ''கொந்தார்தடந்தோள்'' (திருக்கோ. 391).*

*குட்டு – கொட்டு. கொட்டுதல் = 1. குளவி தேள் முதலியன கொட்டுதல். ''கருங்குளவி கொட்டும்'' (அரிச். பு. நகர்நீங். 41). 2. கம்மியர் சம்மட்டியால் அடித்தல். ''கொட்டுவினைக் கொட்டிலும்'' (பெருங். மகத. 4 : 16). 3. நெற்குத்துதல். ''கொட்டி வீழுமி குத்தல்போல்'' (பிரபுலிங். சித்தரா. 9). 4. தோள் புடைத்தல். ''கொட்டி னான்றோள்'' (கம்பரா. சம்புமா. 18). 5. அடித்தல். 6. மேளம் அடித்தல். ''மத்தளங் கொட்ட'' (திவ். நாய்ச். 6 : 6).*

*கொட்டு = பறைப்பொது. கொட்டாட்டுப் பாட்டு – கொட்டும் ஆட்டும் பாட்டும்.*

*குத்து– குற்று. குற்றுதல் = நெல் முதலியன குத்துதல். ''வெதிர்நெற் குறுவாம்'' (கலித். 42).*

*குள் – குறு. குறுதல் = 1. கிள்ளிப் பறித்தல். ''பூக்குற் றெய்திய புனலணி யூரன்'' (ஐங். 23) 2. ஒழித்தல். ''இச்சைமற் றாச்சிரயங் குற்றோன்'' (ஞான. 61 : 19).*

*ஒ.நோ : வெள்– வெறு. வெள்ளிலை– வெற்றிலை.*

*குறுகுறுத்தல் = மனஞ்சான்று குத்துதல். ''குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும்'' (பழமொழி.)*

*குறு (குறள்)– குறண்டு. குறண்டுதல் = 1. முட்போற் குத்துதல். 2. குத்தி வறண்டுதல்.*

*குறண்டு– குறண்டி = 1. முட்செடி வகை. 2. தூண்டில் முள்.*

*குறண்டு– கறண்டு. கறண்டுதல் = வறண்டுதல். (பாதாள)க் கறண்டி = (பாதாள) வறண்டி.*

# 6

# குல்[4] (எரிதற் கருத்துவேர்)

*எரிதற் கருத்தினின்று சுடுதல், ஒளிர்தல், சிவத்தல், காந்தல், உறைத்தல், நோதல், சினத்தல், விரைதல் முதலிய கருத்துகள் பிறக்கும்.*

*குமரிநாட்டு உலகவழக்கும் இலக்கிய வழக்கும் பெரும் பாலும் இறந்துபட்டதனால், பல இணைப்புச் சொற்களை இங்குக் காட்ட முடியவில்லை. எனினும், நடுநிலையொடு நோக்கும் நுண்மதியர்க்கு, இங்குக் காட்டப்பெறும் சொற்களே போதியனவாம்.*

*குல் – குலா – குலவு. குலவுதல் = விளங்குதல். ''குலவு கோலத்த கொடிநெடு மாடங்கள்'' (தேவா. 794 : 7).*

*குலவு – குலாவு. குலாவுதல் = விளங்குதல்.*

*குலப்பம் = செம்புமணல் –* (W.).

*குல் – குர் – குரு. குருத்தல் = சினத்தல்.* (W.). *குரு – வ. க்ருத்* (dh).

*குரு = 1. ஒளி. ''குருமணித் தாலி'' (தொல். சொல். 303, உரை). 2. சிந்துரம்* (W.). *வ. க்ரு* (ghr).

*குருவெறும்பு = செவ்வெறும்பு, முசிடு.* (W.).

*குரு – குருதி = 1. சிவப்பு. ''குருதித் துகிலின் னுறையை'' (சீவக. 926). 2. அரத்தம் (திவா.). 3. செவ்வாய் (திவா.).*

*ம. குருதி.*

*குருதிக் காந்தள் = செங்காந்தள் (சீவக. 1651, உரை).*

*குருதிக்கிழமை (வாரம்) = செவ்வாய்க்கிழமை.*

*''குருதி வாரந் தனக்குக் கொஞ்ச நாளிற் கிழியும்'' (அறப். சத. 61).*

*குரு – குருந்து = மாணிக்க வகையுள் ஒன்று* (W.).

*குருத்து– குருந்தம் = மாணிக்க வகை* (W.).

*குருந்தம் – குருவிந்தம் = 1. தாழ்ந்த மாணிக்க வகை. (சிலப். 14 : 186, உரை). 2. குன்றிமணி. 3. சாதிலிங்கம்.*

*குருவிந்தக்கல் = காவிக்கல். ''இரத்தின மறியாதா னொருவன் குருவிந்தக் கல்லோடொக்கும் இதுவென்றால்'' (ஈடு. 3 : 1 : 2).*

*குருவிந்தம் – வ. குருவிந்த.*

*குல் – குது. ஒ.நோ : மெல் – மெது – மெத்து, பல் – பது – பத்து – பംஹ்து.*

*குது – குதம் = வெங்காயம் (மலை.).*

*குதம் – குதம்பு. குதம்புதல் = 1. கொதித்தல். 2. சினத்தல்.*

*குதம் – கதம் = 1. சினம். ''கானுறை வாழ்க்கைக் கதநாய் வேட்டுவன்'' (புறம். 33). 2. பஞ்சம். கதம் பிறந்தது (உ. வ.)* – W.

*கதகதப்பு = 1. வெம்மை. ''கதகதென் றெரியுதே காமாக்கினி'' (இராமநா. ஆரணி. 8). 2. இளவெம்மை. மழைக்காலத்தில் கூரைவீடு கதகதப்பாயிருக்கும் (உ. வ.).*

*கதம் – கதவு. கதவுதல் = சினத்தல். ''கதவிக் கதஞ்சிறந்த கஞ்சன்'' (திவ். இயற். 2 : 89).*

*கதவு = சினம். ''அவன் யானை மருப்பினுங் கதவவால்'' (கலித். 57 : 19).*

*கத – கதழ் – கதழ்வு. கதழ்தல் = 1. சினத்தல் (திவா.). 2. விரைதல். ''கதழெரி சூழ்ந்தாங்கு'' (கலித். 25 : 4). 3. மிகுதல். ''கதழொளி'' (சீவக. 1749).*

*கதழ்வு = 1. கடுமை. 2. விரைவு (திவா.). 3. மிகுதி (திவா.).*

> *''கதழ்வும் துனைவும் விரைவின் பொருள''(தொல். உரி. 17).*

*குல் – குன் – கன் – கனல் = நெருப்பு.*

> *''உழிதரு காலுங் கனலும்'' (திருவாச. 5 : 8).*

*கனலுதல் = 1. எரிதல். ''வேமிருந்தை யெனக்கனலும்'' (கம்பரா. சூர்ப்ப. 118). 2. சுடுதல். ''வயிற்றகங் கனலுஞ் சூலை'' (பெரியபு. திருநா. 62). 3. கொதித்தல். ''தீப்போற் கனலுமே'' (நாலடி. 291). 4. சிவத்தல். ''கண்கனன்று... நோக்குதலும்'' (பு. வெ. 6 : 23). 5. சினத்தல். ''மாமுனி கனல மேனாள்'' (கம்பரா. நீர்விளை. 2).*

*கனல்வு = சினம். ''இங்குநின் வர வென்னவெனக் கனல் வெய்த'' (கம்பரா. சூளா. 78).*

***க.*** *கனல்,* ***தெ.*** *கனலு.*

*கனல் – கனலி = 1. நெருப்பு (திவா.). 2. கதிரவன். ''வெங்கதிர்க் கனலி'' (புறம். 41 : 6).*

*கனல் – கனலோன் – கதிரவன். ''காடுகனலக் கனலோன் சினஞ்சொரிய'' (பு. வெ. பொதுவியற். 10).*

*கனல்– கனற்று. கனற்றுதல் = 1. எரிவித்தல். ''கலந்தவர் காமத்தைக் கனற்றலோ செய்தாய்'' (கலித். 148). 2. சுடுவித்தல். வெயில் பிள்ளையுடம்பைக் கனற்றிவிட்டது (உ. வ.). 3. வெதுப்பு தல். ''கனற்றக் கொண்ட நறவென்னாம்'' (புறம். 384).*

*மிக விளங்குதல். ''காதல் கனற்ற நின்றானும்'' (தேவா. 696 : 7).*

*கனனிறக்கல் = மாணிக்கம்.* (W.).

*குல்– குள்– கள்– காள்– காளம் = சுடுகை.*

*காளவாய் (காளவாசல்) = சுண்ணாம்புக்கல்.*

*சுடும் சுள்ளை. ம. காளவாய்.*

*காளவனம் = சுடுகாடு (சூடா.).*

L. calor = heat, E. caloric.

L. calx, G. kalk, E. calc, OS. calc, E. chalk.

LL. calcina = lime, E. calcine = to reduce to quicklime.

*காள் – காழ் = 1. ஒளி (திவா.). 2. பளிங்கு (பிங்.). 3. முத்து. ''பரூஉக்கா ழாரம்'' (சிலப். 4 : 41). 4. மணி. ''பருக்காழுஞ் செம்பொன்னும்'' (பு. வெ. 9 : 14). 5. மணிவடம். ''முப்பத் திருகாழ்'' (சிலப். 6 : 87). 6. பூமாலை. ''ஒருகாழ் விரன்முறை சுற்றி'' (கலித். 54 : 7). 7. நூற்சரடு. ''திருக்கோவை காழ்கொள'' (பரிபா. 6 : 15).*

*காழ்த்தல் = உறைத்தல் (திவா.). காழ்ப்பு = உறைப்பு (திவா.).*

*காழ் – காசு = 1. மணி. ''நாண்வழிக் காசுபோலவும்'' (இறை. 2, உரை). 2. மணிமேகலை. ''பட்டுடை சூழ்ந்த காசு'' (சீவக. 468). 3. பொன். (ஆ. நி.). 4. அச்சுத்தாலி. ''காசும் பிறப்புங் கலகலப்ப'' (திவ். திருப்பா. 7). 5. ஒரு பழைய பொற்காசு. 6. சிறு செப்புக்காசு. ''நெஞ்சே யுனையோர் காசா மதியேன்'' (தாயு. உடல் பொய். 72). 7. பணம். ''எப்பேர்ப்பட்ட பல காசாயங்களும்''* (S.I.I. Vol.I, 89).

***ம.*** *காசு,* ***வ.*** *காச்,* E. cash.

*காசு– காசம் = 1. பளிங்கு. 2. பொன்.*

*காள்– கார். கார்த்தல் = உறைத்தல் (பிங்.).*

*கார்– கார்ப்பு = உறைப்பு (சூடா.).*

*காள்– காய். காய்தல் = செ. குன்றியவி.) : 1. வெயில் நிலா எறித்தல். நிலாக் காய்கிறது. (உ. வ.). 2. நீர் சூடாதல். வெந்நீர் காய்கிறது. (உ. வ.). 3. உடம்பு சுடுதல். உடம்பு காய்கிறது. (உ. வ.). 4. உணத்தல். புழுங்கல் காய்கிறது. (உ. வ.). 5. ஈரம் புலர்தல். வேட்டி காய்கிறது. (உ. வ.). 6. பயிர் வெயிலால் வாடுதல். 7. வயிறு பசியால் எரிதல். 8. புண் ஆறி வருதல். 9. வறுமையால் வருந்துதல். 10. இளைத்தல். ''காய்தலு முண்டக் கள்வெய் யோனே'' (புறம். 258).*

*(செ. குன்றாவி.) : 1. எரித்தல். ''மதவேள்தன் னுடலங் காய்ந்தார்'' (தேவா. 15 : 6.) 2. அழித்தல். ''கஞ்சனைக் காய்ந்தானை'' (திவ். பெரியதி. 7 : 6 : 5). 3. விலக்குதல். ''கோப முதலிய குற்றங் காய்ந்தார்'' (பெரியபு. அப்பூதி. 2). 4. வெறுத்தல். ''காய்த லுவத்த லகற்றி யொருபொருட்க ணாய்தல்'' (அறநெறி. 22). 5. கடிந்து கூறுதல். ''கறுத்தெழுந்து காய்வா ரோடு'' (நாலடி. 315). 6. வருத்துதல். ''காய்கின்ற பழவினை போம்'' (குற்றா. தல. நூற்பய. 15).*

*ம. காய், க. காய், தெ. காயு, து. காயி.*

*காய் – காய்ச்சல் = 1. வெம்மை. 2. சுரநோய். 3. உலர்ச்சி. அரிசி நல்ல காய்ச்சல். (உ. வ.). 4. வறட்சி. 5. வறுமை.*

*காய்ச்சுதல் = 1. குழம்பு சமைத்தல். 2. இரும்பை நெருப்பிற் பழுக்க வைத்தல். 3. ஈயத்தை உருக்குதல். காய்த்து– காய்ச்சு.*

*காய் – காயம் = 1. வெந்த கறித்துண்டு. ''நெய்கனி குறும்பூழ் காயமாக'' (குறுந். 389). 2. உறைப்பு (பிங்.). 3. மிளகு. ''காயத்தின் குழம்பு தீற்றி'' (சீவக. 788). 4. கறிக் கூட்டுச்சரக்கு. ''காயங்களான் இனிய சுவைத்தாக்கி'' (குறள். 253, உரை). 5. ஈருள்ளி. ''காயமுங் கரும்பும்'' (சிலப். 25 : 45). 6. பெருங்காயம்.*

*ம. காயம், தெ. காயமு.*

*ஐங்காயம் = கடுகு, வெங்காயம், பெருங்காயம், ஓமம், வெந்தயம்.*

*காய்– காய்ந்து– காந்து. காந்துதல் = 1. (செ. குன்றியவி.) வெம்மை கொள்ளுதல். 2. ஒளிவிடுதல். ''பரம்பிற் காந்து மினமணி'' (கம்பரா. நாட்டுப். 7). 3. எரிவெடுத்தல். கண்காந்துகிறது. (உ. வ.). 4. சமையு முணவு கருகுதல் சோறு காந்திப் போயிற்று. (உ. வ.). 5. மனங் கொதித்தல். ''புத்தி போய்க் காந்துகின்றது'' (கம்பரா. சடாயுகா. 37). 6. பொறாமை கொள்ளுதல். அவனைக் கண்டு காந்துகிறான் (உ. வ.).*

*(செ. குன்றாவி.) = 1. சுடுதல். 2. வெகுள்தல். ''காந்தி மலைக் குத்து மால்யானை'' (திருவள். 11).*

***ம.*** *காந்து.*

*காந்து– காந்தல் = 1. எரிகை. 2. எரிந்த கருகல். 3. காய்ந்த பயிர்.* (W.). *4. சினம்* (W.).

*காந்தல்– காந்தள் = 1. செங்கோடல். ''கடிசுனைக் கவினிய காந்தள்'' (கலித். 45). 2. காந்தள் மலரணிந்து வேலன் வெறியாடு வதைக் கூறும் புறத்துறை (தொல். பொருள். 60). 2. முருகனுக்குரிய காந்தள் மலரைச் சிறப்பித்துக் கூறும் புறத்துறை (பு. வெ. 6 : 9).*

***ம.*** *காந்தள்.*

*சிறப்புப்பொருள் மறைந்தபின் செங்காந்தள் எனப்பட்டது.*

*ஒ.நோ : தாமரை (செம்முண்டகம், முண்டகம்). செந்தாமரை.*

*காந்து– காந்தி = 1. வெம்மை (மூ. அ.). 2. கதிர்*(W.). *3. ஒளி (சூடா.). 4. அழகு (பிங்.). 5. காவிக்கல்* (W.).

*காந்தி – வ. காந்தி* (kanti).

*காந்து – காந்தாளம் = சினம்* (W.).

*காந்தாளம் – காந்தாளிகம் = சின்னி (மலை.).*

*காந்து – காந்துகம் = காந்தள்.*

L. *cand*, shine, be white. L. *candela*, cylinder of Spernaceti enclosing with, for giving light. OE. *candel*, E. *candle*.

L. *candescere* – E. *candescent* = glowing with white heat.

L. *candidus*, white – E. *candide* – E. candid = frank.

L. *candor*. – E. *candour* = open - mindedness.

L. *candidatus* – E. *candidate* = Roman aspirant who was white - robbed when canvassing votes.

Skt. *chand*, shine, *chandra* – noon that which shines.

*காய் – காய்ங்கு – காங்கு – காங்கை = வெப்பம்.*

***க.*** *காங்கெ,* ***தெ.*** *காக்க* (kaka).

*காங்கு – கங்கு = கழல் துண்டு.*

*குள் – குண் – குண்பு – கும்பு. ஒ.நோ : சண்பு – சம்பு, கொண்பு – கொம்பு.*

*கும்புதல் = சமைக்கும் உணவு தீய்ந்து போதல்.*

*கும்பல் = கும்பல் நாற்றம். கும்பி வீசுகிறது என்னும் வழக்கை நோக்குக.*

*கும்பு– கும்பி = 1. தழல். 2. சுடுசாம்பல். தெ. 7 எரிநரகம். ''கும்பி கும்மு நரகர்கள்'' (திவ். திருவாய். 3 : 7 : 8).*

*வடமொழியிலுள்ள கும்பீ என்னுஞ் சொல், கும்பத்தையன்றி நரகத்தைக் குறிக்காது. ஆதலால், கலத்திற் சமைத்தல் அல்லது கலத்தைச் சுடுதல் என்று பொருள்படும் 'கும்பீபாக' என்னும் தொடர்ச்சொல்லை, கும்பி (நரகம்) என்னும் தென்சொற்கு மூலமாகச் சென்னைப் ப. க. க. த. அகரமுதலி காட்டியிருப்பது, எத்துணைக் கயமையான தமிழ்ப் பகைமை என்பதை நோக்குக. தீயோர்க்குத் தீயுழி (நரகம்) கலஞ்சுடு சுள்ளையும் அடுகலமும் போன்றிருக்கின்ற தாம்!*

*கும்பியிடுசட்டி – கும்பிடுசட்டி = 1. கணப்புச் சட்டி. 2. தட்டார் நெருப்புச் சட்டி.*

*தெ. கும்பட்டி, க. கும்பட்டெ.*

*கும்பிநாற்றம் = கும்பல் நாற்றம்.*

*குண்– கண்– கண– கணம் = கணைநோய் (பிங்.).*

*கணகணத்தல் = 1. எரிதல். 2. சுடுதல்.*

*கணகணவென்று எரிகிறது என்பது உலக வழக்கு.*

*கண – கணப்பு = குளிர் காயும் தீ. கணப்புச்சட்டி = குளிர் காயும் நெருப்புச் சட்டி.*

*கண – கணை = உடம்புக் காங்கைநோய். கணைச்சூடு என்பது வழக்கு.*

*கண் – கடு. கடுத்தல் = 1. உறைத்தல். 2. நோவெடுத்தல். 3. விரைதல். ''காலெனக் கடுக்குங் கவின்பெறு தேரும்'' (மதுரைக். 388). 4. மிகுதல். ''நெஞ்சசங் கடுத்தது'' (குறள். 706). 5. சினத்தல். ''மங்கையைக் கடுத்து'' (அரிச். பு. நகர்நீ. 110). 6. வெறுத்தல். பொன்பெய ருடையோன் தன்பெயர் கடுப்ப'' (கல்லா. 5).*

***ம.*** *கடு.*

*கடு – கடுப்பு = 1. தேட்கொட்டுப் போன்ற கூர் நோவு. ''கடுப்புடைப் பறவைச் சாதி யன்ன'' (பெரும்பாண். 229). 2. வெகுளி. ''கடுநவை யணங்குங் கடுப்பும்'' (பரிபா. 4 : 49). 3. வேகம். ''மண்டு கடுப்பினிற் படரும் வாம்பரி'' (சேதுபு. கத்துரு. 15). 3. கடும்புளிப்பு.*

''தேட்கடுப் பன்ன நாட்படு தேறல்'' (புறம். 392). 4. உறைப்பு– காந்தல். கடுப்புக் கழிச்சல் = வயிற்றுளைச்சல் (சீதபேதி).

கடு– கடுகு = காரமுள்ளது. **ம.** கடுகு.

கடுகுதல் = 1. மிகுதல். ''பசி கடுகுதலும்''. 2. விரைதல். ''கால்விசை கடுகக் கடல்கலக் குறுதலின்'' (மணிமே. 14 : 80).

கடுகு– கடுகம் = 1. கார்ப்பு (திவா.). 2. சுக்கு மிளகு திப்பிலி என்னும் முக்கடுகங்களுள் ஒன்று. கடுகம்– வ. கடுக (katuka). கடு– காடு = மிகுதி. எங்குப் பார்த்தாலும் வெள்ளக் காடு. (உ. வ.).

கடு– கட்டம் = 1. கடுமை. 2. மெய்வருத்தம். கட்டம்– வ. கஷ்ட. ஒ.நோ : நடு– நட்டம்.

கஷ்ட என்னும் வடசொற்குக் 'கஷ்' என்னும் வினை முதனிலையை ஐயுறவு மூலமாகக் குறித்துள்ளார் **மானியர் வில்லியம்சு.** 'கஷ்' என்னும் வினைச்சொற்குத் தேய் என்பதே பொருள்.

கட்டம்– காட்டம் = 1. எரிநோவு. 2. உறைப்பு. 3. குணவேகம். சாறாயம் மிகக் காட்டமாயிருக்கிறது. (உ. வ.).

தெ. காட்டு (g).

கடு– கடி = 1. விளக்கம். ''அருங்கடிப் பெருங்காலை'' (புறம். 166). 2. சிறப்பு. ''அருங்கடி மாமலை தழீஇ'' (மதுரைக். 301). 3. மிகுதி. ''கடிமுரசியம்பக் கொட்டி'' (சீவக. 440). 4. விரைவு. ''எம்மம்பு கடிவிடுதும்'' (புறம். 9). 5. உறைப்பு. ''கடிமிளகு தின்ற கல்லா மந்தி'' (தொல். சொல். 384, உரை). 6. அச்சம். ''அருங்கடி வேலன்'' (மதுரைக். 611). 7. பேய். ''கடிவழங் காரிடை'' (மணிமே. 9 : 49).

கடி – கரி. கரித்தல் = 1. மிகுதல். மிளகுநீர் உப்புக் கரிக்கிறது. (உ. வ.) 2. உறுத்துதல். எண்ணெய் பட்டுக் கண் கரிக்கிறது. 3. வெறுத்தல். ''கரித்து நின்றான் கருதாதவர் சிந்தை'' (திருமந். 2431). 4. பழித்தல்.

கரி– கரிப்பு = 1. காரம். ''ஐயமுங் கரிப்பு மாகலு முரித்தே'' (தொல். சொல். 384). 2. உறுத்தம். 3. சுவைமிகை. 4. அச்சம் (திவா.). 5. வெறுப்பு.

கரி– காரம் = உறைப்பு, மிகுதி.

பலகாரம் = பல சுவைமிக்க சிற்றுண்டி.

காரம் = 1. உறைப்பு. 2. காரவுப்பு (W.), 3. சாம்பலுப்பு. 4. வண்ணான் காரம். 5. சாயக்காரம். 6. சீனிக்காரம். 7. வெண்காரம்.

*8. அக்கரகாரம் (தைலவ. தைல, 112). 9. கோளக நஞ்சு (சங். அக.). 10. திருநீறு. ''காரமென் றுரைப்பர்'' (திருக்காளத். பு. 26 : 4). 11. சினம். அவன் என்மீது காரமாயிருக்கிறான் (உ. வ.).*

*ம. காரம், தெ. காரமு, க., து. கார.*

*காரச்சீலை, காரச்சேவு, காரத்துளி (பூந்தி), காரப்பசை, காரப்பொடி, காரமருந்து முதலியன வேகத்தையும் உறைப்பையு முடைய பொருட்பெயர்கள்.*

*காரம் = மிகுதி, கடுமை, வலிமை, உரிமை, பொறுப்புரிமை, வினையுரிமை, உறவுரிமை, உடைமை.*

*காரம் – காரன் = வலியன், உரியன், உடையான். காரி (பெ.பா.). வீட்டுக்காரன் என்பது உரிமையும், பணக்காரன் என்பது உடைமை யும், காவற்காரன் என்பது வினையுடைமையும் (குலப்பெயராயின் வினையுரிமையும்), அண்ணன்காரன் என்பது உறவுரிமையும் உணர்த்தும் பெயர்களாம். தோட்டக்காரன், வண்டிக்காரன், மாட்டுக் காரன் என்பன, உரியவனைக் குறிக்காவிடத்துப் பொறுப்புரிமைக் காரனைக் குறிக்கும். உரியவன்– சொந்தக்காரன்.*

*காரன் காரியீற்றுப் பெயர்கள் நூற்றுக்கணக்கின.*

*காரன்– வ. கார.*

*வடமொழியாளர் இவ் வீற்றை வடசொல்லாக்குவதற்கு, 'க்ரு' (செய்) என்னும் முதனிலையினின்று திரித்துச் செய்பவன் என்று பொருள் கூறுவர். ஆட்டுக்காரன், கோழிக்காரன், சொந்தக்காரன், தண்ணீர்க்காரன், நாழிமணிக்காரன், புள்ளிக்காரன், முட்டைக்காரன், வெள்ளைக்காரன் முதலிய பெயர்கட்குச் செய்பவன் என்னும் பொருள் பொருந்தாமை காண்க. வேலைக்காரன், கூலிக்காரன் என்பனவும், வினையுடைமையே குறிக்கும்.*

*செய்வானைக் குறிக்கும் வடமொழி யீறுகள், கார, காரு, காரி, காரின் (செய்பவன்), காரிணீ (செய்பவள்) எனப் பல வடிவில் நிற்கும்.*

*அதிகரித்தல் = மிகுதல். அதிகரி – அதிகாரம் = மிகுதி. வலிமை, உரிமை, நூற்பெரும் பிரிவு. அதிகாரம் – அதிகாரி, அதிகாரன். அதிகரி என்னும் வினைச்சொல் வடமொழியில் இல்லை. அதித்தல் = மிகுதல். அதி – அதனம் = மிகுதி. இச் சொல்லும் வடமொழியில் இல்லை. அதிகரி என்பது ஒரு மீமிசைச் சொல்.*

# 7

## குல்[5] (துளைத்தற் கருத்துவேர்)

*அடிக்கருத்துகளும் கிளைக் கருத்துகளும்*

*குல் – குலை. குலைத்தல் = 1. கிளறிக் கலைத்தல். 2. கட்டுக் கோப்பைப் பிரித்தல். 3. பிரித்தல் அல்லது ஒற்றுமையைக் கெடுத்தல். 4. தாறுமாறாக்குதல். 5. அழித்தல்.*

*குலை – கலை. கலைதல் = பிரிதல். கலைத்தல் = 1. கட்டுக் கோப்பைப் பிரித்தல். 2. கூட்டத்தைப் பிரித்தல். 3. பகைவரைச் சிதைத்தல். ''பற்றலரைக் கலை........ வேந்தர்'' (அஷ்டப். திருவரங் கத்தந். 25). 4. எண்ணத்தை அல்லது திட்டத்தைக் கெடுத்தல். ''இராவணனைக் கலைக்கின்றானே'' (இராமநா. உயுத். 31). 5. பலகை யில் எழுதியதை அழித்தல். ம. கல.*

*குல் – குர் – குரல். ஒ.நோ : உல் – உர் – உரல்.*

*குரல் = 1. தொண்டைக் குழி (குரல்வளை). 2. தொண்டை (மிடறு). ''மணிக்குர லறுத்து'' (குறுந். 263). 3. தொண்டையில் எழும் ஒலி. 4. சொல். ''யாவருந் தண்குரல் கேட்ப'' (கலித். 142 : 9). 5. பாடும் இசை. ''காமன் காமுறப் படுங்குர றருமிது'' (சீவக. 1218). 6. ஏழிசை யுள் முதலாவது. ''குரல் குரலாகத் தற்கிழமை திரிந்தபின்'' (சிலப். 3 : 85). 7. அஃறிணைப் பேச்சொலி. ''சேவல் மயிற்பெடைக்குப் பேசுஞ் சிறுகுரல் கேட்டு'' (நளவெண். சுயம். 41). 8. பறையோசை. ''தாழ்குரற் றண்ணுமை'' (சிலப். 3 : 27).*

***ம.** குரல், **க.** கொரல், **தெ.** குர்ரு.*

*குல் – கல் – கலம் தோண்டப்பட்ட அல்லது குழிந்த ஏனம்.*

*கல் – கன் = 1. குழிந்த துலைத்தட்டு. 2. கலம். 3. கலத்தொழில். ''மின்னும் பின்னும் பன்னும் கன்னும்'' (தொல். 345).*

*கன் – கன்னான் = செப்புக்கலஞ் செய்பவன், செம்பு கொட்டி (திவா.). ம. கன்னான். ல் – ன். ஒ.நோ : ஒல் – ஒன். துல் – துன். கன்னுதல்*

= துளைத்தல், தோண்டுதல். கன்– வ. khan, கன்– கன்னம் = 1. திருடன் சுவரைத் துளைக்குந் துளை. 2. அங்ஙனந் துளைக்குங் கருவி (பிங்.). 3. அங்ஙனத் துளைத்துச் செய்யும் திருட்டு. ''கன்னமே கொடுபோயின கண்டகர்'' (இரகு. யாகப். 42). 4. துலைத்தட்டு (திவா.). 5. கன்னான் செய்த படிமை. ''கன்னந் தூக்கி'' (ஐங். 245). 6. துளையுள்ள காது. (திவா.). 7. காதையடுத்துள்ள அல்லது நடுவிற் குழிவிழும் கதுப்பு (cheek). ஒ.நோ ஃ செவி– செவிடு = கன்னம்.

கன்னம் (திருடர் செய்த சுவர்த்துளை)– **ம.** கன்னம், **தெ.** கன்னமு, **க.** கன்ன, **வ.** கனன (kh).

கன்னக்கோல்– **ம.** கன்னக்கோல், **தெ.** கன்னகோல.

கன்னக்காரன்– **ம.** கன்னக்காரன், **க.** கன்னகார (g), **தெ.** கன்னகாடு (g).

கன்னப்பூ (காதணிவகை)– **ம.** கன்னப்பூவு.

கன்னம் (காது)– **ம.** கன்னம், **க.** கன்ன, **வ.** கர்ண. வடமொழியில் கர்ண என்னுஞ் சொற்கு மூலமில்லை. மூலமாகக் காட்டப்படும் க்ருத், க்ரு என்பவை மூலமாகா.

க்ருத் = செய்கை. க்ரு = 1. கொட்டு, எறி, கலை. 2. சிதை, சேதப்படுத்து. 3. அறி, அறிவி.

கன் – கன்னல் = 1. நீர்க்கலம். ''தொகுவாய்க் கன்னற் றண்ணீ ருண்ணார்'' (நெடுநல். 65). 2. நாழிகை வட்டில். ''கன்னலின் யாமங் கொள்பவர்'' (மணிமே. 7 ஃ 65). 3. நாழிகை. ''காவத மோரொரு கன்னலினாக'' (கந்தபு. மார்க். 142).

கன் – கனி = பொன், இரும்பு முதலிய மாழை (**வ.** உலோகம்) தோண்டியெடுக்கஞ் சுரங்கம்.

கனி– **வ.** கனி (kh).

குல்– குள்– குளம் = நீரைத் துளைப்பது போல் முழுகிக் குளிக்கும் நீர்நிலை.

**ம.** குளம், **க.** கொள, **தெ.** கொலனு, **வ.** கூல.

குள் – குளி. குளித்தல் = 1. நீருள் முழுகுதல். 2. கடலுள் மூழ்கி முத்தெடுத்தல். ''பணிலம் பலகுளிக்கோ'' (திருக்கோ. 63). நீராடுதல். ''களிப்பர் குளிப்பர்'' (பரிபா. 6 ஃ 103). 4. முழுகுவதுபோல் உடம்பில், ஆழத் தைத்தல். ''கூர்ங்கணை குளிப்ப'' (பு. வெ. 10, சிறப்பிற். 10, கொளு). 5. அழுந்திப் பதிதல். ''மென்கொங்கை யென்னங்கத் திடைக் குளிப்ப'' (திருக்கோ. 351). 6. கூட்டத்திற்குட் புகுதல். ''கடற்படை குளிப்ப மண்டி''

(புறம். 6:12). 7. முழுகினாற்போல் மறைதல். ''யானறித லஞ்சிக் குளித்து'' (கலித். 98). 8. தோல்வியுற்று மறைதல், தோல்வியுறுதல். ''மீன்குளிக்குங் கற்பின்'' (சீவக. 2141).

**ம.** குளி.

குளி– குழி = 1. பள்ளம் (திவா.). 2. பாத்தி. ''இன்சொற் குழியின்'' (நான்மணி. 16). 3. நீர்நிலை (பிங்.). 4. கிணறு (திவா.). 5. வயிறு (அக. நி.). 6. கனவடி. 7. ஒரு நிலவளவு.

குழி– ம. குழி, க. குழி, தெ. கொய்யி (g), மராத். குடி (kh). குழிதல் = உட்குழிவாதல். ''குழிந்தாழ்ந்த கண்ணவாய்'' (நாலடி. 49). குழித்தல் = 1. குழியாக்குதல். ''குழித்துழி நிற்பது நீர்'' (நான்மணி. 30). 2. செதுக்குதல். குழித்த மோதிரம் (கலித். 84, உரை). 3. குழித் தெழுதுதல். க. குழி.

'கும்பக் குழிய' என்பது உலக வழக்கிணை மொழி. குழி– குழியல் = குழிந்த மாழைக்கலம்.

குழிதாழி = குழிந்த பெருந்தொட்டி. ம. குழித்தாழி. குழிசி = பெரும்பானை. ''சோறடு குழிசி'' (பெரும்பாண். 366). குழிமி = மதகு.

குழிவு – குழிவல் – கூவல் = கிணறு. ''கூவ லன்ன விடரகம்'' (மலைபடு. 366). கூவல்– வ. கூப.

குழிப்பு – குழிப்பம் – கொப்பம் = யானை பிடிக்க வெட்டும் பெருங்குழி. ''கைம்மலைசெல் கொப்பத்து வீழ'' (குமர. பிர. மீனாட். பிள்ளை. 11).

குழி – குழிம்பு – குழும்பு = குழி. ''ஆழ்ந்த குழும்பிற் றிருமணி கிளர'' (மதுரைக். 273). ம. கொப்பம்.

குழல் = 1. உட்டுளை. ''குழற்கா லரவிந்தங் கூம்ப'' (தமிழ்நா. 63). 2. உட்டுளைப் பொருள் (திவா.). 3. இசைக்குழல் (சூடா.).

ம. குழல், க. கொழல்.

குழல்– குடல் = குழல்போன்ற உட்டுளையுள்ள உறுப்பு.

**ம.** குடல். குடல்– குடர். **ம.** குடர். ''குடருங் கொழுவும்'' (நாலடி. 46). ஒ.நோ: புழல்– புடல்.

குழி– குழை = 1. துளை. ''கோடிநுண் டுகிலுங் குழையும்'' (சீவக. 1369). 2. குழல் (பிங்.). 3. காது. ''மணித்தோடுங் குழையி லாட'' (அஷ்டப். சீரங்க நாயகி ஊச. 3).

*குழை– குகை = 1. மலைக்குகை (பிங்.). 2. மாழைகளை உருக்குங் கலம். ''கருமருவு குகையனைய காயத்தி னடுவுள்'' (தாயு. 32). ஒ.நோ : முழை– முகை = குகை.*

*குகை–* ***வ.*** *குஹா* (g).

*குகை – குவை = பொன்னுருக்குங் கலம். ''இருந்தைக் குவை யொத்தன'' (தணிகைப்பு. திருநாட்டுப். 63).*

*குவை–* ***ம.*** *குவ,* ***வ.*** *குஹா* (g) E. cabe, L. caba.

*குழை– குழாய் = 1. துளை. 2. துளையுடைப்பொருள் (பிங்).*

*ஒ.நோ : கழை– கழாய்.*

*குழை– குடை. குடைதல் = 1. கிண்டுதல். ''குடைந்து வண் டுண்ணுந் துழாய் முடியானை'' (திவ். திருவாய். 1 : 7 : 11). 2. கடைதல். ''நெய்குடை தயிரின்'' (பரிபா. 16 : 3). 3. துளைத்தல். 4. நீரில் மூழ்குதல். ''குடைந்து நீராடு மாதர்'' (கம்பரா. பால. நீர்வி. 12). 5. துருவுதல். 6. நாடு துருவுதல். ''குடைந்துல கனைத்தையும் நாடும்'' (கம்பரா. சுந்தர. உருக். 23). 7. கடுமையாய் வினவி வருத்துதல். 8. குடைந்தாற்போல் நோவெடுத்தல். ஒ.நோ : புழை – புடை. கடை – கடலை = வறுத்துக் கடைந்த பயறு.*

*குளி– குடி. குடித்தல் = நீரை உட்புகுத்துதல். ஒ.நோ : முழுகு – முழுங்கு– விழுங்கு. ள– ட. ஒ.நோ : களிறு– கடிறு, கெளிறு– கெடிறு.*

*குள்– குண்டு = 1. பள்ளம். 2. கிடங்கு. 3. நீர்க்கிடங்கு. 4. சிறு நன்செய். 5. ஆழம் ''வண்டுண மலர்ந்த குண்டுநீ ரிலஞ்சி'' (மணிமே. 8 : 8).* ***ம.*** *குண்டு. குண்டுங்குழியும் என்னும் வழக்கை நோக்குக. குண்டு – குண்டில் = சிறுசெய் (திவா.).*

*குண்டு – குண்டம் = 1. பள்ளம். 2. குழி. 3. பானை (பிங்.). 4. சிறுகுளம் (திவா.). 5. வேள்விப் பள்ளம் (ஓமகுண்டம்). ''மறையவன் குண்ட முறைமுறை வாய்ப்ப'' (கல்லா. 94 : 12).*

***ம.*** *குண்டம்,* ***வ.*** *குண்ட.*

*குள்– குண்– குணம் = கடலாற் பள்ளமான கிழக்கு. குணம் – குணக்கு = கிழக்கு.*

*குண்டு – குட்டு – குட்டம் = 1. மடு. ''நெடுநீர்க் குட்டத்துத் துடுமெனப் பாய்ந்து'' (புறம். 243 : 9). 2. ஆழம். ''இருமுந்நீர்க் குட்டமும்'' (புறம். 20 : 1). 3. ஏரி. 4. குட்டநாடு. ''தென்பாண்டி குட்டம்'' (நன். 272, மயிலை.). குட்டநாடு = சேரநாட்டைச் சேர்ந்ததும், கோட்டையும்*

கொல்லம் என்னும் நகரங்களைக் கொண்டதும் ஏரிகள் மிகுதியாகவுள்ளதுமான பழைய கொடுந்தமிழ் நாடு. ''குட்டநாட்டுத் திருப்புலியூர்'' (திவ். திருவாய். 8 : 9 : 1).

குட்டு– குட்டை = சிறுகுளம்.

குல்– கில். கில்லுதல் = தோண்டுதல். கில்– கீல். கீலுதல் = கிழித்தல் (சூடா.). க. கீல், தெ. சீலு (c). கீன்றல் = கீறுகை (திவா.).

கில் – கெல். கெல்லுதல் = தோண்டுதல். ''கிணறு கெல்ல'' (தனிப்பா. 11, 140, 356).

கில் – கிள் – கிளறு. கிளறுதல் = 1. கிண்டுதல் ''ஏனமோ டன்னமாய்க் கிளறியும் பறந்தும்'' (தேவா. 101 : 9). 2. துழாவுதல். 3. துருவியாராய்தல். 4. பழையதை நினைப்பூட்டுதல்.

**க.** கெளர், **தெ.** கெலகு.

கிள்– கிளை. கிளைத்தல் = 1. கிளறுதல். ''கேழ லுழுத விருஞ்சேறு கிளைப்பின்'' (புறம். 176 : 2). 2. அடிமரம் கிளறப் பட்டதுபோற் கப்பு விடுதல். **ம.** கிளு.

கிளை = கவை, பிரிவு, சுற்றம், இனம். கிளைஞர் = உறவினர். கிள்– கிண்– கிணம் = கிணறு.

கிண் – கிண்ணம் = 1. சிறுவட்டில். ''மழக்கை யிலங்குபொற் கிண்ண மென்றலால்'' (திருவாசக. 5 : 92). 2. நாழிகை வட்டில் (பிங்.).

கிண்– கிண்ணி = கிண்ணம்.

கிண் – கிணறு. ''உவரில் கிணற்றின்கட் சென்றுண்பர்'' (நாலடி. 263). **ம.** கிணறு.

கிண்– (கெண்)– கேணி = 1. கிணறு (திவா.). 2. சிறு குளம். (தொல். சொல். 400, உரை). 3. அகழி (திவா.). **ம.**, **க.** கேணி, **து.** கணி (அகழி).

கிள்– கிண்டு. கிண்டுதல் = 1. கிளறுதல் (பிங்.). 2. தோண்டுதல். 3. ஆராய்தல். ம. கிண்டு. கிண்டு – கிண்டல் = 1. கிளறல். 2. தோண்டல். 3. தூண்டல். 4. பகடிபண்ணல்.

கிண்டு – கெண்டு. கெண்டுதல் = 1. கிண்டுதல். ''வண்டு கெண்டி மருவும் பொழில்'' (தேவா. 626 : 10), 2. தோண்டுதல். ''கவலை கெண்டிய கல்வாய்'' (குறுந். 233). 3. அறுத்துத் தின்னுதல். ''மன்றத்து மதவிடை கெண்டி'' (பெரும்பாண். 143). தெ. செண்டு (c).

கிள் – கிழி. கிழித்தல் = 1. கீறுதல். 2. பீறுதல். ''தரியினங்கடம் மெயிற்றினாற் சிதையக் கிழித்த பேரிறால்'' (கந்தபு. ஆற்று. 23).

*3. பிளத்தல். ''நெடுங்கிரி கிழித்து'' (கம்பரா. நிகும். 88). 4. முறித்தல். 5. கண்டித்தல். 'சிலவசனங்கள் சொல்லிக் கிழிப்பதும்'' (கவிகுஞ். 2). 6. திறத்தல். ''வாயுழுவை கிழித்தது'' (திருக்கோ. 72). 7. தோற் கடித்தல். 8. கோடு கீறுதல். 9. அழித்தல். ம. கிழி.* E. cleare, OE. cleof, OS., OHG. kliop, ON. kljuf.

*கிழி = 1. கிழித்த துணி (திவா.) 2. துணியில் எழுதிய படம். ''கிழி பிடித்து'' (திருக்கோ. 74). 3. துணியில் முடிந்த பணமுடிப்பு (திவா.).*

*கிழி– கிழியல்– கிழிசல் = கிழிந்தது. கிழி– கிழிதம் = பணமுடிப்பு. (திருக்கோ. 183, உரை).*

*கிழிப்பு = 1. கிழிக்கை. 2. பிளப்பு. 3. குகை. ''வரைக் கிழிப் பன்ன'' (நற். 154).*

*கிள் – கீள். கீளுதல் = 1. கிழித்தல். ''கீண்டிலென் வாயது கேட்டு நின்றயான்'' (கம்பரா. அயோத். பள்ளி. 71). 2. உடைதல். ''தெண்ணீர்ச் சிறுகுளங் கீழ்வது மாதோ'' (புறம். 118 : 3). தெ. சீழ்* (c).

*கீள் = 1. கூறு. ''கீளிரண்டாகக் குத்தி'' (சீவக. 2248). 2. துணியா லான அரைநாண். ''வெளுத்தமைந்த கீளொடு கோவணமுந் தற்று'' (தேவா. 811 : 2).*

*கீளுடை (இலங்கோடு). ''கீளுடையான்'' (காளத். உலா, 500). கீள் – கீழ். கீழுதல் = 1. கிழித்தல். ''பழம் விழுந்து... பஃறாமரை கீழும்'' (திருக்கோ. 249). 2. பிளத்தல், ''உறுகால் வரை கீழ்ந்தென'' (சீவக. 1157). 3. தோண்டுதல். ''வேரொடுங் கீழ்ந்து வெளவி'' (சீவக. 2727). 4. சிதைத்தல். ''கிழமையைக் கீழ்ந்திடா நட்பு'' (குறள். 801). 5. கோடு கிழித்தல். 6. பறியுண்ணுதல். ''மரங்கள் வேரொடுங் கீழ்ந்தென'' (சூளா. சீய. 144).*

*கீழ் – கீழ்க்கு – கிழக்கு = 1. பள்ளம் (திவா.). 2. கீழ், ''காணிற் கிழக்காந் தலை'' (குறள். 488). 3. கீழிடம். ''கிளைஇய குரலே கிழக்குவீழ்ந் தனவே'' (குறுந். 337). 4. பள்ளமான கீழ்த்திசை (திவா.). 5. இழிவு, ''கிழக்கிடு பொருளொடு'' (தொல். பொருள். 280). ம. கிழக்கு.*

*கிழக்கு – கிழங்கு = நிலத்தின்கீழ் விளைவது. ''கொழுங்கொடி வள்ளிக் கிழங்குவீழ்க் கும்மே'' (புறம். 109; 6). ம. கிழங்ங.*

*கிழங்கு – கிடங்கு = 1. பள்ளம். 2. குழி. 3. குளம் (சூடா.). 4. அகழி. ''பூங்கிடங்கி னீள்கோவல்'' (திங். இயற். முதற். 77).*

கிடங்கு – கிடங்கர் = 1. அகழி. 2. கடல். ''திரைக் கிடங்கர்சூழ் குவலயப் பரப்பில்'' (உபதேசகா. விபூதி. 35).

கீள் – கீறு. கீறுதல் = 1. கிழித்தல் (திவா.). 2. பறண்டுதல். 3. அறுத்தல், ''புண்கீறிய குருதிப்புனல்'' (கம்பரா. பால. பரசுராமப். 9). 4. வகிர்தல். 5. கோடுகிழித்தல். 6. கீறியெழுதுதல் (பிங்.).

கீறு – கீறல் = 1. கிழிகை. 2. தற்குறி.

கீறு – கீற்று = 1. சில், துண்டு. 2. கூரைவேயுங் கிடுகு.

கிள் – கிறு – கிறாம்பு. கிறாம்புதல் – மெல்லச் செதுக்குதல். கீறு – **ம.** கீறு, கீறு (கோடுகிழி) – **க.** கீறு (g), **தெ.** கீயு (g). கீறு (கிழி) – **க.** கீறு, **தெ.** கீறு (g).

குள் – கொள் – கொழுது. கொழுதுதல் = குடைதல். ''நறுந்தாது கொழுதும் பொழுதும்'' (குறுந். 192 : 5).

கொழுது – கோது. கோதுதல் = 1. இறகு பூந்தாது முதலிய வற்றைக் குடைதல். ''மயில்கோது கயிலாயம்'' (தேவா. 1157 : 6). 2. மயிர்ச்சிக் கெடுத்தல். ''கோதிச் சிக்கின்றி முடிக்கின்ற... குழலி'' (பெருந்தொ. 1323). 3. சிதறுதல். ''கோதிக் குழம்பலைக் குங்கும்பத்தை'' (நாலடி. 47). 4. ஓலைவாருதல்.

குள் – குய் – குயில். குயிலுதல் = 1. துளைத்தல். ''குன்று குயின்றன்ன வோங்குநிலை வாயில்'' (நெடுநல். 88). 2. மணி பதித்தல். ''சுடர்மணியின் பத்தி குயின்றிட்ட பழுப்பேணியில்'' (கந்தபு. வள்ளி. 50). குயில் = துளை (பிங்.).

குள் – (குர்) – குரு – கோர். கோர்த்தல் = நூலை அல்லது நாணைத் துளைவழி துருவச் செய்தல். **ம.** கோர்.

கோர் – கோர்வை = கோர்க்கை, மாலை, தொடர். ம. கோர்வ. கோர் – கோ – கோவை.

கோத்தல் = 1. மணியூடு நூலைத் துருவச் செய்தல். ''கோத்தணிந்த வெற்புமணி'' (பெரியபு. மானக்கஞ். 22). 2. ஒழுங்காக அமைத்தல். ''பார்த்தவிட மெங்கணுங் கோத்தநிலை குலையாது'' (தாயு. கருணாகர. 4). 3. முறைப்படச் சொல்லுதல். ''பூமியாண் முறையுங் கோத்தார்'' (பாரத. சம்பவ. 113). 4. திரட்டிச் சொல்லுதல். ''கோமின் துழாய்முடி யாதி யஞ்சோதி குணங்களே'' (திவ். திருவாய். 4 : 1 : 7). 5. கதைபுனைதல். 6. கைபிணைத்தல். ''குரவை யாய்ச்சிய ரோடு கோத்ததும்'' (திவ். திருவாய். 6 : 4 : 1). 7. ஒன்றுசேர்த்தல். ''அன்பரைக் கோத்தற விழுங்கிக் கொண்டு'' (தாயு பொருள்வ. 3).

*8. மூக்குள் நீர் கொள்ளுதல். நீர் கோத்தல், நீர்க்கோவை (மூக்குச்சளி) என்பன உலக வழக்கு.* ***ம., க.*** *கோ.*

*கோவை = 1. கோக்கை. ''கோவையார் வடக்கொழுங் கவடு'' (கம்பரா. அயோத். வரைக். 1). 2. கோத்த மணிமாலை (பிங்.). 3. வினையேற்பாடு. ''கோத்த கோவை நன்றாயினும்'' (பாரத. சூது. 64). 4. அகப்பொருட் கோவை. ''சீரணங் காகிய சிற்றம்பலக் கோவை செப்பிடினே'' (தனிப்பாடல்).*

***ம., தெ.*** *கோவ.*

*குழி – குறி. குறித்தல் = 1. கோடு கீறுதல். ''புழுக் குறித்தது எழுத்தானாற் போல'' (ஈடு, 2 : 4 : 3). 2. வரையறுத்தல் (பிங்.). 3. குழித்தெழுதுதல். 4. ஒன்றை யெழுதி வைத்தல். 5. எழுதி வைத்தாற்போல் மனத்திற்கொள்ளுதல். 6. எழுதிய குறியால் ஒன்றைத் தெரிவித்தல் அல்லது சுட்டுதல். 7. ஒன்றைச் சொல்லுதல். 8. எழுதிய குறியை எய்தற்கு இலக்காகக் கொள்ளுதல். 9. எதையேனும் அடைதலை அல்லது பெறுதலை இலக்காகக் கொள்ளுதல்.*

## கிளைக் கருத்துகள் (கொள் என்னும் வினை)

*கொள்–* ***ம., க.*** *கொள்,* ***தெ.*** *கொனு.*

### முகத்தல்

*கொள்ளுதல் = முகத்தல். ''குணகடல் கொண்டு குடகடன் முற்றி'' (மதுரைக். 238).*

*கொள்– கோள் = முகில். ''கோளொடு குளிர்மதி வந்து வீழ்ந்தென'' (சீவக. 320).*

*கோள்– கோய் = 1. கள் முகக்குங் கலம். ''ஓரிற் கோயிற் றேருமால்'' (புறம். 300), 2. சாந்துச் செப்பு, ''சாந்துக்கோய் புகிய செல்வ'' (சீவக. 764). குல்– கொல்– கோல். கோலுதல் = முகத்தல்.*

### தன்னுட் கொள்ளுதல்

*கொள்கலம் = பண்டம் இடுங்கலம். ''இடும்பைக்கே கொள் கலங் கொல்லோ'' (குறள். 1029).*

*''சிதரரிக் கண் கொண்ட நீர்'' (நாலடி. 394)*

### இடுதல்

*உட்கொள்ளுதல் = உண்ணல்.*

**உண்ணுதல்**

*கொண்டி = உணவு. ''கட்கொண்டிக் குடிப்பாக்கத்து'' (மதுரைக். 137).*

**பிடித்தல்**

*''கொண்ட வாளொடும்'' (சீவக. 430)*

**பற்றுதல்**

*கொள்கொம்பு – கொழுகொம்பு = பற்றுக்கோடு. கொள்ளுதல் = தீப்பற்றுதல். கொள்ளி = தீ. ''கைக்கொள் கொள்ளியர்'' (நெடுநல். 8). கொள்– கொளுந்து, கொளுந்துதல் – தீப்பற்றுதல். ''தீக்கொளுந் தினவுந் தெரிகின்றிலர்'' (கம்பரா. சுந்தர. இலங்கையெரி. 5). கொளுத்துதல் = எரித்தல்.*

**கைப்பற்றுதல்**

*''களங்கொளக் கழல் பறைந்தன'' (புறம். 4 ௗ3). கோலுதல் = கைப்பற்றுதல். ''இருநில முழுவதும் தனதெனக் கோலி'' (நன். சிறப்புப் பா.).*

**பொருந்துதல்**

*கொள்– கொளுவு. கொளுவுதல் = பொருந்துதல், மாட்டுதல் கொள் – கொளுத்து = பொருத்து. கொள்– கொண்டி = கொளுவி. கொள்ளுதல் = பொருந்துதல். ''கொள்ளாத கொள்ளா துலகு'' (குறள். 470).*

**ஒத்தல்**

*''வண்டினம் யாழ் கொண்ட கொளை'' (பரிபா. 11 ௗ 125)*

**ஏற்றல்**

*''உய்ஞ்சன னிருத்தலு முலகங் கொள்ளுமோ''*
*(கம்பரா. சுந்தர. உருக்கா. 17).*

**மணத்தல்**

*''தாங்கொண்ட மனையாளை'' (நாலடி. 3). கொண்டான் = கணவன். கொண்கன் = கணவன். கொள்நன்– கொழுநன் = கணவன். கொள்வனை = பெண் கொள்ளுதல்.*

**விலைக்கு வாங்கல்**

*''கோதையினுங் கொள்வார்'' (நைடத. நகரம். 18). கொள்முதல். கொள்விலை. கொள்ளை = விலை. ''சில்பத வுணவின் கொள்ளை சாற்றி'' (பெரும்பாண். 64).*

**கடன் வாங்கல்**

*கொள்வினை.*

**பெறுதல்**

*''நல்லா றெனினுங் கொளல் தீது'' (குறள். 222). கொள் – கோள் – கோளி = பெறுவோன்.*

**கவர்தல்**

*''மனையாளை மாற்றார் கொளல்'' (நாலடி. 3). ''நெஞ்சு நடுக்குறூஉக் கொண்டி மகளிர்'' (மதுரைக். 583).*

**கொள்ளையடித்தல்**

*''வேற்றுமைப் புலத்தைக் ........... கொள்ளை கொண்ட தொழிலை'' 'பு.வெ. 3 : 15, கொளு, உரை). கொண்டி = கொள்ளை. ''கொண்டியும் பெரிதென'' (புறம். 78) ம. கொண்டி, ம. கொள்ள, க. கொள்ளெ, தெ.கொல்ல.*

**மிகுதல்**

*கொள்ளக் கிடைத்தது = நிரம்பக் கிடைத்தது. கொள்ளை = மிகுதி. ''கொள்ளை மாமதத்த நால்வாய்க் குஞ்சரம்'' (பாகவ. 1 : 5 : 14). கொண்டி = மிகுதி. ''கொண்டி யுண்டித் தொண்டையோர்'' (பெரும்பாண். 454). கொள்ளை நோய் = பெருவாரி நோய்.*

**திறைபெறுதல்**

*கொண்டி = திறை. ''கொண்டி வேண்டுவ னாயின்'' (புறம். 51 : 6).*

**கொல்லுதல்**

*கொள்– கோள் = கொலை. ''கோள்நினைக் குறித்து வந்தான்'' (சீவக. 264). கோளரி = கொல்லும் அரிமா. கொல் – கொலை. கோண்மா = கொள்ளும் விலங்கு (கம்பரா. இரணிய. 125).*

**கொல்லத்தொழில் செய்தல்**

*கொல் – கொல்லன் = 1. மரத்தைக் கொல்வதுபோல் வெட்டும் மரத்தச்சன், ''மரங்கொஃ றச்சர்'' (சிலப். 5 : 29). 2. மரக்கொல்லனுக்கு இனமான இருப்புக் கொல்லன்.*

**கருதுதல்**

*''யார்க்குங் கொடுத்தியெனக் கொள்கின்றிலம்'' (இலக். வி. 650, உரை). உட்கொள்ளுதல் = உட்கருதுதல். ''முத்தியென் றுட்கொள்வார் சிலர்'' (கந்தபு. பாயி. 28).*

**மதித்தல்**

*''கொளப்பட் டேமென்றெண்ணி'' (குறள். 699).*

**கொண்டாடுதல்**

*''தண்பதங் கொள்ளுந் தலைநாட் போல'' (சிலப். 6 : 160).*

**மேற்கொள்ளுதல்**

*''குடிப்பிறந்தார் குன்றா வொழுக்கமாக் கொண்டார்'' (நாலடி. 143).*

**மதமாக நம்புதல்**

*''குலனருள் தெய்வங் கொள்கை'' (நன். பாயி. 26).*

**கற்றல்**

*''கொள்ளுநர் கொள்ள'' (கல்லா. 11 :21). கொள்ளுநர் = மாணவர். கோளாளன் = மாணவன். கொள்– கோள்– கோளாளன்.*

## துணைவினைகள்

**தற்பொருட்டுத் துணைவினை**

*எ - டு : முகம் வழித்துக்கொண்டான், சண்டையிட்டுக் கொண்டனர்.*

**எதிர்மறை யேவலொருமைத் துணைவினை**

*எ - டு : அஞ்சாதே கொள்.*

*அஞ்சாதே கொண்மின் என்று பன்மைக்கும் பயன்படுத்த இலக்கணம் இடந்தரும்.*

**இணைமொழித் துணைவினை**

*'செய' வாய்பாட்டு வினையெச்சம் :*

*எ - டு : வரக்கொள்ள, பேசக்கொள்ள நிகழ்கால வினையெச்சம் (உலக வழக்கு) :*

*எ - டு : வந்துகொண்டு, பாடிக்கொண்டு*

8

# சுல்[1] (குத்தற் கருத்துவேர்)

*சுல்– சூல் = 1. குத்தும் கூரிய படைக்கலம், 2. முக்கவர் வேல்.*

*''குலிசங் கதைசூல்'' (சேதுபு. தேவிபுர. 27).*

*சூல்– சூலம் = 1. முக்கவர் வேல். ''ஊனக மாமழுச் சூலம் பாடி'' (திருவாச. 9 : 17). 2. இடிதாங்கி. ''ஒள்ளிலைச் சூல..... மாடம்'' (சீவக. 2527). 3. சூலவேல் வடிவில் மாட்டிற்கு இடும் சூட்டுக்குறி. 4. கிழமைச்சூலை, 5. தோணி (இரேவதி) நாள் (பிங்.). 6. குத்தலுங் குடைச்சலுமுள்ள பல்வகைச் சூலைநோய். 7. கூரிய முனையுள்ள கழு* (W.) *சூலம்– சூல* (**வ.**).

*சூலம் வேல்வகைகளுள் ஒன்றென்பது ''உருகெழு சூலவேல் திரித்து'' (சங். அக.) என்னும் தொடரால் அறியப்படும். ''சூல வேலைப்போல மூன்று வழி'' (சிலப். 11 : 73, உரை).*

*வேல் முருகனது சிறப்புப் படைக்கலமாகக் கொள்ளப்பட்டது போல், சூலவேல் சிவனது சிறப்புப் படைக்கலமாகக் கொள்ளப் பட்டதனால், சிவன் கோயிலுக்கு விடப்பட்ட நிலங்களின் எல்லையில் நடப்படும் சூலக்குறியுள்ள கல் சூலக்கல் என்றும், சூலக்குறி பொறிக்கப்பெற்ற சிவன்கோயில் அளவை மரக்கால் சூலக்கால் என்றும், சூலக்குறி யிடப்பெற்ற சக்கரமுள்ள சிவன் கோவில் வண்டி சூலக்கால் வண்டியென்றும், சிவன் கோவிற்காகச் சூலவடிவிற் சூடிட்டு விடப்பெற்ற காளை சூலக்காளை யென்றும், பெயர்பெறும்.*

*சிவநெறி தமிழர் சமயமேயென்பதும், ஆரியர்க்குச் சிறுதெய்வ வேள்வியன்றி வேறு மதமில்லையென்பதும், என் 'தமிழர் மதம்' என்னும் நூலில் விரிவாகக் காணலாம்.*

*சிவபிரானது சூலம் குறுக்கே நிற்பதால், இன்னின்ன திசை இன்னின்ன கிழமையில் வழிப்போக்கிற்கு ஆகாதென்று விலக்கப் பட்ட கிழமைக்குற்றம், கிழமைச்சூலம் எனப்படும். அஃது இன்று 'வாரசூலை'*

*என இலக்கியத்தில் வழங்குகின்றது. சூலம் என்பதே உலகவழக்கு. ''திங்கட்கிழமை தெற்கே சூலம்'' என்றே மக்கள் கூறுதல் காண்க.*

*சூல் – சூலை = 1. ஒருசார் நோய். ''அன்னவனை யினிச்சூலை மடுத்தாள்வன்'' (பெரியபு. திருநாவுக். 48). 2. கிழமைச் சூலம் (வாரசூலை). சூலை– சூலா (வ.).*

*சூலைநோயால் உண்டாகும் திருகுவலி சூலைக்குடைச்சல் எனப்படும்.*

> ''அடைவிலமண் புரிதரும சேனர்வயிற் றடையுமது
> வடவனலும் கொடுவிடமும் வச்சிரமும் பிறவுமாம்
> கொடியவெலாம் ஒன்றாகும் எனக்குடரின் அகங்குடையப்
> படருழந்து நடுங்கியமண் பாழியறை யிடைவிழுந்தார்''

*என்னும் பெரியபுராணச் செய்யுளால் (திருநாவுக். 50); சூலை நோயின் குடைச்சல்வலியை ஒருவாறுணரலாம்.*

*சூல் (சூலம்) – சூலி = 1. சூலப்படை தாங்கிய சிவன். ''சூலிதன் னருட்டுறையின் முற்றினான்.'' (கம்பரா. கிட்கிந்தா. நட்புக். 37). 2. சூலப்படை கொண்ட காளி. ''சூலிநீலி மாலவற் கிளங்கிளை'' (சிலப். 12 : 68). சூலி (சிவன்.* – ***வ.*** *சூலின். சூலி (காளி)* – ***வ.*** *சூலினீ.*

*சுல் – சுள். சுள்சுள்ளென்று குத்துகிறது என்பது உலகவழக்கு. சுள்ளாணி = முட்போன்ற சிறிய ஆணி.*

*சுள்ளெறும்பு = சுள்ளென்று கடிக்கும் செவ்வெறும்பு.*

*சுள் – சுளி – சுளிக்கு = கூர்மையான முனையுள்ள கைக்கோல்.* ***க.*** *சுளிக்கெ.*

*சுள் – சுளு – சுளுகு = 1. நுண்ணறிவு. 2. சதுரப்பாட்டுப் பேச்சு. 3. வலக்காரச்சொல். ''சுளுகுகள் விவரமொ டுரையிடுவார்'' (திருச்செந். பு. செயந்திபுர. 55).*

*சுளுகன் = சதுரப்பாட்டுப் பேச்சாளன் (யாழ். அக.)*

*சுள்– சுண்– சுணை = 1. இலை காய் முதலியவற்றிலுள்ள சிறுமுள். 2. முட்குத்துப் போன்ற உணர்ச்சியுள்ள அம்மைக் கொப்புளம். 3. கூர்மை. 'சுணையில்லாக் கத்தி' (உ. வ.). 4. கூருகிறாற் சொறிவுவேண்டும் தினவு. 5. நெஞ்சகத்திற் குத்தும் மானவுணர்ச்சி. ''துகிலு மிழிந்து சுணையு மழிந்து'' (பட்டினத். உடற்கூற்றுவண்ணம், 249). 6. கூரிய அறிவு.*

*சுணை (முள்)– ம. சுண, தெ. சொன.*

சுணை (கூர்மை) – ம. சுண.

சுணைகெட்டவன் = மானவுணர்ச்சியில்லாதவன். ம. சுண கெட்டவன்.

சுணைப்பு = மானவுணர்ச்சி. ''ஒருதரஞ் சொன்னால் தெரியாதா? உனக்குச் சுணைப்பில்லையா?'' என்பது நாஞ்சில்நாட்டு வழக்கு. ''உனக்குச் சுணையில்லையா?'' என்பது தமிழ்நாட்டு வழக்கு.

சுணைத்தல் = தினவெடுத்தல். **மரா.** – சுணச்சுண.

சுள் – சுர் – சுர. சுரசுர – சுரசுரப்பு = முள்முள்ளாய் அல்லது கரடுமுரடாய் இருத்தல்.

சுரசுர – சரசர – சருச்சரை = சுரசுரப்பு. ''களிற்றினது சருச்சரையாற் பொலிந்த கழுத்தகத்தே'' (பு. வெ. 12, பெண்பாற். 2, உரை). இனி, சுர்– சுரு – சரு – சருச்சரு – சருச்சரை என்றுமாம்.

சுர்– சுரி. சுரித்தல் = குத்துதல். சுரி– சுரிகை = 1. உடைவாள். ''சுரிகை நுழைந்த சுற்றுவீங்கு செறிவுடை'' (பெரும்பாண். 73). 2. கத்தி. ''கற்கம் வழித்தற்கு..... கைச்சுரிகை'' (தைலவ. தைல.)

சுரிகை – வ. சுரிகா (c).

சுரி– சூரி = 1. சூரிக்கத்தி. 2. ஓலையில் துளையிட உதவுங் கருவி. 3. நத்தைச்சூரி. 4. சுணையுள்ள புளிச்சை.

சூரி (கத்தி) – ம., க., து. சூரி., தெ. த்சூரி.

சூரிக்கத்தி – க. சூரிக்கத்தி, தெ. த்சூரக்கத்தி. சூரி என்ற வடிவம் வடமொழியில் இல்லை.

சுர்– சூர்– சூரை = ஒருவகை முட்செடி.

கரி + அணை = சுரணை = குத்தும் மானவுணர்ச்சி. சுரணைகெட்டவன் என்பது உலகவழக்கு. 2. தன் உணர்ச்சி. ''அதிக நித்திரை கொடுக்கச் சுரணைகெட்டு'' (இராமநா. உயுத். 33).

சென்னைப் பல்கலைக்கழக அகரமுதலி (Lexicon), நச்சுக் குறும்புத்தனமாக, நினைவு அல்லது தன்னுணர்ச்சி என்று மட்டும் பொருள்படும் ஸ்மரண என்னும் வடசொல்லை, சுரணை என்னும் சொற்குமட்டுமன்றிச் சுணையென்னும் சொற்கும் மூலமாகக் காட்டியுள்ளது. சுணை, சுரணை என்னும் தென்சொற்கள் குத்தற் கருத்தை அடிப்படையாக்க கொண்ட சுள் என்னும் வேரினின்றும், ஸ்மரண என்னும் வடசொல் நினை என்று பொருள்படும் ஸ்ம்ரு என்னும் வினை முதனிலையினின்றும், பிறந்துள்ளன என வேறுபாடறிக. இங்ஙனம் மொட்டைத்தலைக்கும் முழங்காற்கும்

முடிபோட்டுக் காட்டுவதற்குத் தமிழரின் பேதைமையும் பேடிமையுமே முழுக்கரணியமாகும்.

சுரணை மரணை என்னும் இணைமொழியிலுள்ள இரண்டாம் சொல்லே வடசொல்லாகும். அஃது ஒலியொப்புமையும் இற்றைத் தமிழரின் மொழியுணர்ச்சி யின்மையும்பற்றி இணைந்ததென அறிக.

சுர் – சுரு – சுறு – சுறுக்கு. சுறுக்கெனல் = 1. குத்துதற் குறிப்பு. சுறுக்குச் சுறுக்கென்று குத்துகிறது என்பது உலக வழக்கு. 2. பாம்பு கடித்தல். ''பாந்தள் சீறிச் சுறுக்கெனவே கடிக்க'' (சிவரக. அபுத்திபூ. 13). 3. தேட்கொட்டுதல்.

5. சுருக்கென. சுறுசுறெனல் = பன்முறை முட்குத்துதல்.

க. சுறுசுறெனெ. சுறு– சுறீர், சுறீரெனல். ''எறும்பு சுறீரென்று கடித்து விட்டது'' (உ. வ.) **க.** சுரீரெனெ.

சுறு – சுறுக்கு = 1. கூர்மை. 2. விரைவு. ''சுறுக்காய் வா'' (உ. வ.). 3. சுறுசுறுப்பு. 4. கடுமை. 5. காரம். 6. விலையேற்றம், 7. கேட்பு (Demand) மிகுதி. **ம.**, **க.** சுறுக்கு, **தெ.**, **து.** சுறுக்கு. சுறு – சுறுசுறு – சுறுசுறுப்பு = 1. விரைவு. 2. ஊக்கம். **ம.** சுறுசுறுப்பு. **தெ.** த்சுரத்சுர.

சுறு – சுறுதி = விரைவு.

சுறு – சுறா = கத்திபோல் வெட்டும் செதிலுள்ள கடல்மீன். சுறவ ஓரை (Capricorn of the Zodiac).

ம. சுறா, க. சொற, தெ. த்சொர.

சுறா – சுற (shark). ''சுறவழங்கும் இரும்பௌவத்து'' (பொருந. 203).

சுற = சுறவு (shark). ''சுறவினத் தன்ன வாளோர் மொய்ப்ப'' (புறம். 13 : 7).

சுறவுவாய் = ஒரு மகளிர் தலையணி. ''சுறவுவா யமைத்த'' (பெரும்பாண். 385).

சுறவு– சுறவம் (shark) ''எயிற்றிறப் பாய்ந்தது சுறவம்'' (திருவிளை. வலைவீசி. 37).

சுறாளம் = 1. விரைவு. 2. சினம். சுறவை = கடுமை. சுறு – சுறண்டு. சுறண்டுதல் = 1. உகிராற் பறண்டுதல். 2. கூரிய கருவியாற் களைபறித்தல். களைசுறண்டி = களை வறண்டி. 3. உடம்பைச் சுறண்டி ஒன்றைக் குறிப்பிடுதல். 4. சமையற் கலங்களிலுள்ள பற்று வழித்தல். 5. பிறன்பொருளைக் கவர்தல். ''என் சொத்தையெல்லாம் சுறண்டி விட்டான்'' (உ. வ.). 6. கற்பழிக்க ஒரு பெண்ணைத் தொடுதல்.

**ம.** சுறண்டு, **க.** கெரண்டு.

சுறு – (சுறி) – சொறி = 1. முட்போன்ற சிரங்குப் புண். எ - டு : சொறிபிடித்தவன், சொறிநாய். 2. உயிரிகளின் கரடுமுரடான புறத்தோல். எ - டு : சொறித்தவளை.

சொறி– சொறியன் = 1. சொறிபிடித்தவன். சொறித்தவளை.

சுறு – (சுற்று) – சுத்து – சுத்தி = குத்துவதுபோல் தட்டும் சிறு சம்மட்டி. சுத்தி– சுத்தியல் = சிறு சம்மட்டி.

ஒ. நோ : மொத்து... மொத்திகை– மத்திகை = குதிரைச் சமட்டி.

சுத்து – சொத்து – சொட்டு. சொத்துதல் வினை இன்று வழக்கற்றுப்போய் ஒலிக்குறிப்பாக மட்டும் வழங்குகின்றது. எ - டு : பழம் சொத்துச் சொத்தென விழுகின்றது.

சொட்டுதல் = தட்டுதல், தட்டுதல்போல் துளி ஒன்றில் விழுதல். சொட்டு – சொட்டை = தட்டுவதால் உண்டாகும் தட்டை, மொட்டை, வழுக்கை, வழுக்கைக் குற்றம். ஒ.நோ : தட்டு– தட்டை, பட்டு– பட்டை. சொட்டு = சொட்டும் துளி, சொட்டுவதால் உண்டான தட்டை அல்லது வழுக்கை, சொட்டை அல்லது வழுக்கை என்னுங் குற்றம்.

ஒ.நோ : குறு– குற்று– குத்து– குட்டு. குத்து– கொத்து– கொட்டு. கொற்று – கொத்து. தகரம் மென்மையையும் டகரம் வன்மையையும் றகரம் இடைமையையும் பொதுவாக உணர்த்தும்.

# 9

# சுல்² (சுடுதற் கருத்து வேர்)

*சுல்– சுல்லி = 1. அடுப்பு (திவா.). ''சுல்லியுர லுலக்கை'' (சைவச. பொது. 266). 2. மடைப்பள்ளி (இலக். அக.). சுல்லி–* **வ.** *சுல்லீ* (c).

*சுல் – சுள். சுள்ளெனல் = கடுமையாகச் சுடுதல், காய்தல். 'சுள்ளென்று வெயிலடிக்கிறது' என்பது உலக வழக்கு. சுள் = வெயிலிற் காய்ந்த கருவாடு என்னும் மீன்வற்றல். ''சுள்ளினைக் கறித்தனர்'' (கந்தபு. அசமுகிநகர். 18). சுள்– வ. சுஷ்.*

*சுள்ளாப்பு = கடுவெயில்.*

*சுள்ளி = வெயிலிற் காய்ந்த சிறு கொம்பு (மரக்கிளை).*

*சுள்– சுள்ளை = 1. மட்கலஞ்சுடும் சூளை (தொல். சொல். 449, உரை). 2. செங்கல் சுடும் காளவாய்.*

*சுள்ளை– சூளை = 1. செங்கல் சுடும் காளவாய். ''அகலிரு விசும்பி னூன்றுஞ் சூளை'' (புறம். 228 : 3). 2. ஈமவிறகு. சூளை– ம. சூள.*

*சுள்– சுளுந்து = 1. சுள்ளியாலான தீப்பந்தம், தீப்பந்தம்.*

*சுள்– சுடு. சுடுதல் = 1. பொசுக்குதல் : ''வெம்பிச் சுடினும் புறஞ் சுடும்'' (நாலடி. 89). 2. காய்ச்சுதல். ''சுடச்சுடரும் பொன்போல்'' (குறள். 267). 3. எரித்தல். 4. பலகாரஞ் சுடுதல். ''பிட்டுச் சுட்டுக் கொடுத்தனள்'' (திருவாலவா. 30 : 20). 5. சுள்ளியில் வேகவைத்தல். 6. நீற்றுதல். 7. சூடிடுதல். 8. வெடிசுடுதல். 9. நெருப்பில் வாட்டுதல். ''சங்கு சுட்டாலும் வெண்மை தரும்'' (மூதுரை, 4). 10. வருத்துதல். ''துன்பஞ் சுடச்சுட நோற்கிற் பவர்க்கு'' (குறள். 267). 11. கெடுத்தல். ''குலஞ்சுடுங் கொள்கை பிழைப்பின்'' (குறள். 1019). ''நின்குலத்தைச் சுட்டதடா என்வாயிற் சொல்'' (தனிப்பாடல்).*

*ம., க., து. சுடு.*

சுடு – சுடல் = 1. விளக்கிலிருந்து விழும் எண்ணெய்த் துளி. 2. எரிந்து கரிந்த திரிமுனை. 'விளக்கெரியும்படி சுடலைத் தட்டிவிடு' என்பது உலக வழக்கு. சுடல்– க. சொடல்.

சுடல் – சுடலை = சுடுகாடு. ''இவ்வழல்வாய்ச் சுடலை தின்னக் கண்டும்'' (மணிமே. 6 ፡ 101).

ம. சுடல, து. சுடலெ.

சுடு – சுடர் = 1. ஒளி. ''தெறுசுட ரொண்கதிர் ஞாயிறு'' (புறம். 6 ፡ 27). 2. கதிரவன். ''சுடர்சுட்ட சுரத்தேறி'' (புறம். 136 ፡ 18). 3. வெயில். ''வல்லிருள் புதைப்பச் செல்சுடர் சுருக்கி'' (பெருங். உஞ்சைக். 33 ፡ 155). 4. திங்கள். ''சுடரொடு சூழ்வரு தாரகை'' (பரிபா. 19 ፡ 19). 5. விளக்கு. ''இரவின் மாட்டிய விலங்கு சுடர்'' (பெரும்பாண். 349). 6. தீ நாவு. ''விளக்கினு ளொண்சுடரே போன்று'' (நாலடி. 189). 7. நெருப்பு. ''சுரும்பு மூசாச் சுடர்ப்பூங் காந்தள்'' (திருமுருகு. 43).

சுடரவன் = கதிரவன் (திவா.).

சுடரோன் = கதிரவன் (பிங்.). ''கதிராயிரம் விரிக்குஞ் சுடரோன்'' (திருக்கருவை. கலித். 11).

சுடரார் = கடவுள். ''என்னகத் திருந்த சுடரார்'' (திருநூற். 26). சுடு = சுடுகை. ''சுடுவிற் றேனுடைந்த வண்ணமே'' (சீவக. 416). சுடு– சுடுவல் = வெப்பமான அரத்தம் (திவா.). சுடுவல்– சுடுவன் (பிங்.). சுடு– சூடு = 1. வெப்பம். 2. சுடப்பட்டது. ''கடலிறவின் சூடு தின்றும்'' (பட்டினப். 63). 3. சுடுபுண். 4. ஒத்தடம். 5. சூட்டுக்கறி. ''கருநரைமேற் சூடேபோல்'' (நாலடி. 186). 6. வடு. ''பாடகஞ் சுமந்த சூடுறு சேவடி'' (பெருங். மகத. 8 ፡ 14). 7. சினம். 8. சினமூட்டுவது. 9. மானவுணர்ச்சி. 10. விலையேற்றம்.

**ம.** சூடு, **து.** சூடு, **தெ.** த்சூடு (வெப்பம்), சூடு (சூட்டுக் குறி), **க.** தூடு (சூட்டுக்குறி).

சூடு– சூடம். சூடன் (கர்ப்பூரம்)

சூட்டுக்கோல்– சுட்டுக்கோல். ம. சூட்டுக்கோல்.

சூட்டு = 1. சூட்டிறைச்சி. 2. நாணல் தீப்பந்தம் (க. சூட்டெ).

சுள் – சுண்டு. சுண்டுதல் = 1. உலைநீர் வற்றுதல். 2. முகஞ் சுருங்குதல். 3. பயறு வேகவைத்தல்.

சுண்டு – சுண்டல் = நீர் முற்றும் வற்ற வேகவைத்த பயறு. சுண்டவைத்தல் = குழம்புகறி மறுநாளுங் கெடாதிருக்குமாறு நெருப்பெரித்து நீர் வற்றவைத்தல்.

*சுண்டு – சுண்டான் = சிறுபிள்ளைகள் தீக்கொளுத்தி விளையாடுங் குச்சு (சுண்டாங்கொள்ளி).*

*சுள்– சுண்– சுண்ணம் = 1. நீறு. 2. சுண்ணாம்பு. 3. நறுமணப் பொடி. ''பலர்தொகு பிடித்த தாதுகு சுண்ணத்தர்'' (மதுரைக். 399). 3. பொடி. ''செம்பொற் சுண்ணம்'' (பெருங். உஞ்சைக் 33 : 120). 4. பூந்தாது. ''தாழைக் கொழுமட லவிழ்ந்த ......... சுண்ணம்'' (மணிமே. 4. : 8).*

*சுண்ணம் –* **பிரா.** *சுண்ண,* **வ.** *சூர்ண.*

*சுண்ணம் – சுண்ணம்பு – சுண்ணாம்பு = 1. சுட்ட சுண்ணாம்புக் கல். 2. நீற்றின சுண்ணாம்பு. 'விரைப்பாகு வெள்ளிலை சுண்ணாம்பி னொடு'' (வாயுசங். கிரியா. 23). 3. அரைத்த சுண்ணாம்பு. ம. சுண்ணாம்பு. சுண்ணாம்புக்காரன் = சுண்ணாம்பு விற்குங் குலத்தான். சுண்ணம் – சுண்ணகம் = நறுமணப்பொடி.*

*சுண்ணகம் – வ. சூர்ணக* (C).

*சுண்ணம் – சுணம் = 1. சுண்ணப்பொடி. ''புரிந்த பூவொடு பொற்சுணங் கழும'' (பெருங். உஞ்சைக். 39 : 46). 2. அழகுதேமல். ''சுணநன்றணி முலையுண்ண'' (திவ். பெரியாழ், 2 : 3 : 4).*

*சுண்ணித்தல் = நீற்றுதல் (சங். அக.).*

*சுண்– சுணங்கு = 1. பூந்தாது. ''பசுமலர்ச் சுணங்கின்'' (ஐங். 76) 2. பூந்தாது படர்ந்தாற் போன்ற பசலை. 3. அழகுதேமல். ''மின்னுறழ் சாயற் பொன்னுறழ் சுணங்கின்'' (பெருங். மகத. 16 : 5).*

*சுள் – சுள்கு – சுட்கு – சுக்கு = காய்ந்த இஞ்சி. ஒ.நோ : வெள் – வெள்கு– வெட்கு.*

**ம.** *சுக்கு,* **வ.** *சுஷ்க.*

*சுக்குதல் = காய்தல், உணத்தல் (நாஞ்சில் வழக்கு). சுட்குதல் = வறளுதல்.*

*சுட்கு – சுட்கம் = 1. வறட்சி. 2. வறண்டது. 3. வறுமை. 4. கஞ்சத் தனம். 5. ஒருவகை நோய்.*

*ஒ.நோ : வெட்கு– வெட்கம்.*

*சுக்கு – சுக்கான் = 1. சுண்ணாம்புக்கல். ''சுக்கான் கல்லாகிய பகையாலே'' (பொருந. 44, உரை). 2. உருக்குச் செங்கல். சுக்கான் சுண்ணாம்பு, சுக்கான்பாறை என்பன வழக்குச் சொற்கள்.*

சுள்– சுட்பு– சுப்பு. சுப்பெனல் = விரைந்து நீர் வற்றுதல். சுப்பு– சுப்பல் = சுள்ளி. சுப்பு– சுப்பி = சுள்ளி. சுள்ளி சுப்பல் (சுப்பி) என்பது உலக வழக்கிணைமொழி.

சுப்பு– சும்பு– சம்பு– சாம்பு.

சாம்புதல் = 1. எரிதல். 2. வாடுதல். ''நெய்தற்பூச் சாம்பும் புலத்தாங்கண்'' (பட்டினப். 12). 3. கெடுதல். ''செறிற் சாம்புமிவள்'' (கலித். 78). 4. குவிதல் (திவா. ). 5. ஒடுங்குதல் (பிங்.). 6. உணர் வழிதல். ''சாதல் காப்பவரு மென்றவத்திற் சாம்பினார்'' (கம்பரா. சுந்தர. உருக்காட். 21). 7. ஒளி மழுங்குதல். ''மன்னரெல்லாந் தளர்ந்துகண் சாம்பினாரே'' (சீவக. 811).

சாம்பு – சாம்பல் = 1. எரிந்த சாணம். ''சுடுகாடான சாம்ப லரங்கத்திலே நிருத்தமாடி'' (பு. வெ. 9 : 43, உரை). 2. வாடற்பூ. ''ஆம்பற் பூவின் சாம்ப லன்ன'' (குறுந். 46). 3. முதுமை (பிங்.). 4. பருத்தி புகையிலை முதலிய பயிர்களைக் கெடுக்கும் பூச்சி. 5. சாம்பல் நிறம். எ - டு : சாம்பல்வாழை. ம. சாம்பல்.

சாம்பல்– சாம்பர். 1. திருநீறு. ''சாம்ப ரகலத் தணிந்தாய் போற்றி'' (தேவா. 967 :4). 2. எரிந்த தூள். ''முடிசார்ந்த மன்னரு மற்றுமுள் ளோரு முடிவிலொரு பிடிசாம்பராய் வெந்து மண்ணாவதுங் கண்டு'' (பட்டினத். திருத்தில்லை, 7).

சுள்– சுர்– சுர்– சுரசுரா = சிறு பிள்ளைகள் கொளுத்தி விளையாடும் வாணவகை.

சுர் – சுரம் = 1. தீப்போற் சுடும் பாலைநிலம். ''சுரமென மொழியினும்'' (தொல். பொருள். 216). ''வெங்க லழற்சுரந் தாம்படர்ந்தார்'' (பு. வெ. 2 : 3). 2. அருநெறி (திவா.).

சுரம்– **வ.** ஜ்வர (காய்ச்சல்).

சுள்– சள்– சண்டு = காய்ந்த புற்றாள், கூளம்.

சுர்– சர்– சருகு = 1. காய்ந்த இலை. ''ஒலியா லசையச் சருகெழ'' (வெங்கைக்கோ. 173). ''உதிர்சருகு கந்தமூ லங்களேனும்'' (தாயு. சச்சி.).

சண்டுசருகு என்பது உலகவழக் கிணைமொழி.

சர்– சரகு– சரக்கு = 1. காய்ந்த பண்டம். 'காயவைத்ததெல்லாம் சரக்காகி விட்டதா?' (உ. வ.). 2. காய்ந்த வணிகப் பண்டம். 3. வணிகப் பண்டம். 4. மருந்துப்பண்டம். எ - டு : பலசரக்கு. 5. கல்வியறிவு. 'அவரிடத்தில் நிரம்பச் சரக்கிருக்கிறது' (உ. வ.).

*சரக்குப் பண்ணுதல் = வெயிலிற் காயவைத்தல்.*

*சரக்குப் பிடித்தல் = வணிகத்திற்குப் பண்டங்களை மொத்தமாக வாங்குதல்.*

*சரக்குக் கட்டுதல் = விற்பனைக்குப் பண்டம் அனுப்புதல்.*

*சரக்குப் பறித்தல் = கப்பலினின்று பண்டங்களை இறக்குதல்.*

*சரக்கேற்றுதல் = வண்டியிலும் கப்பலிலும் வணிகப்பண்டம் ஏற்றுதல்.*

*சரக்கு மாறுதல் = பண்டமாறுதல்.*

## கிளைக் கருத்துகள்

### 1. சினம்

*சுள் – சுள்ளம் = சினம். சுள்ளம் – சுள்ளக்கம் = சினம். சுள்ளக்கம் – வ. க்ஷுள்ளக்க. சுள்ளாப்பு = பழிச்சொல். ''சுள்ளப்பெல்லாம் பொல்லாப்பு'' (பழமொழி). சுள் – சுளி. சுளிதல் = சினத்தல். ''கழை காண்டலுஞ் சுளியுங் சுளியானை'' (திருக்கோ. 111).*

*சுளித்தல் = 1. சினத்தல். ''சுளிமுகக் களிறனான்'' (சீவக. 298). 2. வெறுத்தல் (சைவச. மாணாக். 33).*

*சுண்டுசொல் = சுடுசொல்.*

*சுடுசுடு வென்றிருத்தல் = சினவியல்பா யிருத்தல்.*

*சுடுமூஞ்சி, சுடுநோக்கு, சுடுசொல் என்பன சினக்கருத்தை யுணர்த்துதல் காண்க. சினம் நெருப்பை யொத்த குணமாதலின், நெருப்பைக் குறிக்குஞ் சொல் சினத்தையுங் குறித்தது. எரிதல் என்னுஞ் சொல் சினத்தலையுங் குறித்தலையும், ''சினமென்னுஞ் சேர்ந்தாரைக் கொல்லி'' என்று திருவள்ளுவர் கூறியிருத்தலையும் நோக்குக.*

### 2. உறைப்பு

*சுவைகளுள் நெருப்புப் போன்றது உறைப்பு.*

*சுள் = உறைப்பு.* **க.** *சுள்.*

*சுள்ளிடுதல் (சுள்ளெனல்) = உறைத்தல். சுள்ளென்று உள்ளே போகும் என்பது உலகவழக்கு.*

*சுள்ளக்காய் = மிளகாய். சுள்ளிடுவான் = மிளகு.*

*சுண்டு – சுண்டி = சுக்கு. சுண்டி – **வ.** சுண்ட்டி.*

### 3. வெறிவேகம்

*சுடு – சுடிகை = கள். சுண்டு – சுண்டம் = கள் (மூ. அ.). சுண்டை = கள். **வ.** சுண்டா.*

*சுண்டியுண்டை = சதுரக்கள்ளி, சித்திரகம், கொஞ்சி ஆகிய வற்றின் வேர்ப்பட்டையாலும் சீரகத்தாலும் செய்து, சோற்றைப் புளிக்க வைப்பதற்குப் பயன்படுத்துங் குளிகை. சுண்டுசோறு = வெறிப்புளிப் பேற்றிய சேறு.*

### 4. சுருங்கல்

*வெயிலாலும் நெருப்பாலும் நீர் வற்றுவதாலும், காய்ந்த பொருள் வடிவிற் சுருங்குவதாலும் சூட்டுக் கருத்தில் சுருங்கற் கருத்துத் தோன்றிற்று.*

*சுண்டி = தொட்டால் வாடி (தொட்டாற்சுருங்கி, தொட்டாற் சிணுங்கி). சுண்டி – சுண்டில் = தொட்டால் வாடி (மலை.).*

*சுட்கு – சுட்கம் = கஞ்சத்தனம். (ஈகை அல்லது செலவுச் சுருக்கம்). சுக்குச் செட்டு = கஞ்சத்தனம். கஞ்சனைச் சுக்குச் செட்டி, சுக்கஞ்செட்டி, சுக்காஞ்செட்டி என்று சொல்வது உலக வழக்கு.*

*சும்பு – சம்பு. சம்புதல் = விலை குறைதல். சம்பு – சம்பல் = 1. விலையிறக்கம். 2. மலிவு.*

*சுணங்கு = மெலிவு.*

### 5. சோம்பல்

*சுணங்குதல் = 1. வினையிற் சோர்தல். 2. காலந்தாழ்த்தல்.*

*சுணக்கம் = 1. மனத்தளர்ச்சி. 2. காலத்தாழ்ப்பு.*

*சும்பு – சூம்பு. சூம்படைதல் = சோம்பற்படுதல் (நெல்லை வழக்கு).*

*சூம்பு – சோம்பு. சோம்புதல் = 1. வினைமடிந் திருத்தல். ''சோம்பி யிருந்ததக் குரங்கு மென்றார்'' (கம்பரா. சுந்தர. பஞ்சசே. 67). 2. மதிமந்தமாதல். 3. திடாரிக்கங் குறைதல். ''சூல மன்னதோர் வாளியாற் சோம்பினன் சாம்பன்'' (கம்பரா. யுத். முதற்போர். 199). 4. வாடுதல். 5. கெடுதல். ''அரிவையர் கற்புச் சோம்பி'' (கலிங். 247). 6. பின்வாங்குதல். ஒரு காசுக்குச் சோம்புவான் என்பது உலக வழக்கு.*

*சோம்பு– சோம்பல். சோம்பு– சோம்பன் = சோம்பேறி. சோம்பு– சோம்பி = சோம்பேறி. சோம்பேறு– க. சோமாரி. ''காணிக்குச் சோம்பல் கோடிக்குக் கேடு'' (பழமொழி).*

*சோம்பு = 1. மடிமை (தொல். பொருள். 260, உரை). 2. மந்தம். ''சோம்பு தவிர்ப்பிக்கும்'' (திருமந். 566). 3. தூக்க மயக்கம். 4. மயக்கம்.*

*ஒ. நோ :* Gk. somnus (sleep).

*சும்பு – சும் = மடிமை. சும்மா (சும்மாக) = மடிமையாக, ஒரு வினையுஞ் செய்யாமல், ஒன்றுஞ் செய்யாமல், ஒன்றுஞ் சொல்லாமல், ஒன்றுங் கொடாமல், ஒன்றும் பெறாமல், ஒரு பயனுமின்றி, ஒரு கருத்துமின்றி, ஒரு நோவுமின்றி, ஒருவகை அச்சமுமின்றி, இக் கருத்துகளையெல்லாம் 'சும்மாயிருத்தல்' என்னும் மரபுச்சொல் உணர்த்துதல் காண்க.*

*கொண்முடிபு (சித்தாந்த) நூலாரும் மெய்ப்பொருள் (தத்துவ) நூலாரும், இச் சொல்லை இருவகைப் பற்று மறுத்து முற்றத் துறந்த முழு முனிவரான ஒகியர் இருவினையுஞ் செய்யாது இறைவன்மேல் எண்ணத்தை நிலையாக நிறுத்தி அமைதியாயிருக்கும் இணையற்ற இன்ப நிலைமையைக் குறிக்கப் பயன்படுத்தியுள்ளனர்.*

*மௌன குருவடிகள் தாயுமான அடிகட்குச் 'சும்மாயிரு' என்று செவியறிவுறுத்தியதையும், அதை நினைந்து தாயுமான அடிகள்,*

> *''.....................................*
> *வெந்தழலி னிரதம்வைத் தைந்துலோ கத்தையும்*
> *வேதித்து விற்றுண்ணலாம்*
> *வேறொருவர் காணாம லுலகத்து லாவலாம்*
> *விண்ணவரை யேவல்கொளலாம்*
> *சந்ததமு மிளமையோ டிருக்கலா மற்றொரு*
> *சரீரத்தினும் புகுதலாம்*
> *சலமே னடக்கலாங் கனன்மே லிருக்கலாம்*
> *தன்னிகரில் சித்திபெறலாம்*
> *சிந்தையை யடக்கியே* ***சும்மா விருக்கின்ற***
> *திறமரிது சத்தாகியென்*
> *சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே*
> *தேசோ மயானந்தமே''*

*என்று பாடியிருத்தலையும், நோக்குக.*

*வெப்பத்தினால் மந்தமும் மடிமையும் உண்டாகுமாதலால், வெப்பக் கருத்தில் சோம்பற் கருத்துத் தோன்றிற்று. வெப்பக் காலத்திலும் வெப்ப நாட்டிலும் வினைமுயற்சி குன்றுவதையும், குளிர்காலத்திலும் குளிர்நாட்டிலும் அது மிகுவதையும், உலகியலை நோக்கிக் காண்க.*

10

## சுல்[3] (சிவத்தற் கருத்துவேர்)

*சுல் – சுல்லி = 1. அடுப்பு. 2. மடைப்பள்ளி, சுல் – சுள். சுள்ளல் = சுடுதல், காய்தல்.*

*சுல் – சுல்லம் = செம்பு (மலை.). சுல்லம் – வ. சுல்ல.*

*சுல் – சுல்வு – சுல்வம் = செம்பு. ''சுல்வத்தா லமைத்த நெடுங் களத்தின்'' (சேதுபு. தனுக்கோ. 9). சுல்வம் – வ. சுல்வ.*

*நெருப்பின் நிறம் சிவப்பாதலால், நெருப்புக் கருத்தினின்று சிவத்தற் கருத்துத் தோன்றிற்று.*

*ஒ. நோ : எரி = நெருப்பு, சிவப்பு. எரிமலர் = 1. சிவந்த முருக்கமலர். 2. செந்தாமரை.*

*செம்பு செந்நிற மாழை (உலோகம்). அதனால் அப் பெயர் பெற்றது.*

*சுல் – செல் – சேல் = செந்நிறக் கெண்டைமீன்.*

*சேல்விழி = சேல்மீன் போலும் செவ்வரி பரந்த பெண்ணின் கண். ''சேலுண்ட வொண்க ணாரிற் றிரிகின்ற செங்காலன்னம்'' (கம்பரா. நாட்டுப். 13).*

*செல் – செள் – செட்டு – செட்டி = 1. சிவந்த அடியையுடைய வெட்சிச் செடி. ''செங்கால் வெட்சி'' (திருமுருகு. 21). 2. சேயோன் (செந்நிற முருகன்).*

*செட்டு – செச்சு – செச்சை = 1. சிவப்பு. ''செச்சைவாய் திறந்து'' (திருவிளை. வலை. 24). 2. வெட்சி. ''செச்சைக் கண்ணியன்'' (திருமுருகு. 208). 3. செந்துளசி (மலை.).*

*செச்சு – செஞ்சு = செம்மை, செவ்வை, நிறைவு. ''செஞ்சுறு செஞ்சுடர்'' (திருமந். 1713).*

செஞ்சு– செஞ்சம் = 1. நேர்மை. 2. நிறைவு, முழுமை. ''செஞ்சமுற வேறல் செயமென்று'' (குற்றா. தல. திருமால். 114). இயல்பாக எல்லாரையுஞ் சுடவேண்டிய நெருப்பானது வாய்மை, குற்றமின்மை, கற்பு, தெய்வநம்பிக்கை முதலிய பண்புகளை மெய்ப்பிக்கும் தெய்வச் சான்றாக நின்று சுடாதிருப்பதால், தீயின் நிறப்பண்பாகிய செம்மைக் கருத்தினின்று, தூய்மை அல்லது நேர்மைக் கருத்தும், நேர்மைக் கருத்தினின்று நிறைவுக் கருத்தும், கிளைத்தன.

செள்– செய்– செய்ம்மை = செம்மை (சிவப்பு).

செய்ய = 1. சிவந்த. ''செய்ய தாமரைக ளெல்லாம்'' (கம்பரா. நீர்விளை. 3). 2. செப்பமான, நேர்மையான, ''செய்ய சிந்தைப் பேரரு ளாளர்'' (கம்பரா. விபீடண. 128).

செய்யவள் = சிவந்த திருமகள். ''செய்யவள் தவ்வையைக் காட்டி விடும்'' (குறள். 167).

செய்யவன் = 1. சிவந்தவன். 2. சிவன். ''செய்யவனே சிவனே'' (திருவாச. 6 : 7). 3. செவ்வாய்க்கோள் (விதான. குணாகுண. 12). 4. கதிரவன் (W.).

செய்யான் = செம்பாம்பு (சித்தர். சிந்து).

செய்யாள் = 1. செங்கோலத் திருமகள். ''செய்யாட் கிழைத்த திலகம் போல்'' (பரிபா. 22. : 4). 2. மூதேவியின் தங்கைபோன்ற தாயின் தங்கை (சிறிய தாய்)– தஞ்சை வழக்கு.

செய்யான் = 1. சிவன். ''செய்யானை வெண்ணீ றணிந்தானை'' (திருவாச. 8 : 13). 2. செம்பூரான்.

செய்யோள் = 1. செந்நிறமுள்ளவன். ''எய்யா விளஞ்சூற் செய்யோள்'' (பொருந. 6). 2. திருமகள். ''செய்யோள் சேர்ந்தநின் மாசி லகலம்'' (பரிபா. 2 : 31).

செய்யோன் = 1. செந்நிறமுள்ளவன். ''செய்யோ னகளங்கன்'' (பெருந். தொ. 817) 2. செவ்வாய். ''மீனத்து மந்தன் செய்யோன் மதியெழ'' (விதான. கர்ப்பா. 10).

செய்– செயல்– செயலை = சிவந்த அடியையுடைய அசோக மரம். ''செயலைத் தண்டளிர்'' (திருமுருகு. 207) என்னுந் தொடருக்கு, ''சிவந்த அரையினையுடைய அசோகிற் குளிர்ந்த தளிர்'' என்று நச்சினார்க்கினியர் பொருள் வரைந்திருத்தல் காண்க. ''சேந்த செயலை'' (மலைபடு. 160) = சிவந்த அசோகமரம்.

*செய்தல் = 1, சிவத்தல், 2. கை சிவக்குமாறு வேலை செய்தல். 3. ஏதேனுமொரு வினை செய்தல். 4. செய்யுள் இயற்றுதல். ''வல்லோர் அணிபெறச் செய்வன செய்யுள்'' (நன். 268). 6. நூலியற்றுதல். 'பொருள் செய்வித்தோன் தன்மைமுதல் நிமித்தினும்'' (நன். 49). 7. உண்டாக்குதல். ''செறிந்தேர் முறுவலாள் செய்தவிக் காமம்'' (கலித். 140). 8. ஈட்டுதல். ''செய்க பொருளை'' (குறள். 759). 9. ஒத்தல். ''வேனிரை செய்த கன்னி'' (சீவக. 2490). தமிழருள் தொன்றுதொட்டு வெள்ளாளர், காராளர் என இரு வண்ணத்தார் இருந்துவந்திருக்கின்றனர். வெள்ளாளர் என்றது பொன்னிறத்தாரை. காராளர் என்றது குரால் (கபில) நிறத்தாரையும் கரியரையும். கரியரும் புதுநிறத்தார் முதல் கன்னங்கரியர் வரை பல திறத்தர். பொன்னரைச் சிவப்பர் என்பதுமுண்டு. மெய்வருந்தி யுழைப்பின், வெள்ளாளர் அகங்கை சிவந்தும் காராளர் அகங்கை கருத்தும் போகும். அதனால், வினைசெய்தலைக் குறிக்கச் செய்தல் கருத்தல் என்னும் இரு சொற்கள் தோன்றின. கருத்தல் வினை வழக்கிறந்து போயிற்று. இன்று அது கருவி, கருமம், கரணம் என்னும் பெயர்ச் சொற்களில் முதனிலையாக மட்டும் நிற்கின்றது. கரு என்னும் தென்சொல்லே வடமொழியிற் 'க்ரு' என்று திரியும்.*

*செய்ம்மை – செம்மை – செம்.*

*ஒ. நோ ஃ வெள் – வெய் – வெய்ம்மை – வெம்மை – வெம்.*

*செம்மை = 1. சிவப்பு (திவா.). 2. செவ்வை (திவா.). 3. நேர்மை. ''செம்மையி னிகந்தொரீஇ'' (கலித். 14). 4. மனக்கோட்டமின்மை. ''செம்மையுஞ் செப்பும்'' (தொல். பொருள். 15). 5. கேது (சூடா.). 6. துப்புரவு. 7. அழகு. 8. பெருமை. ''செம்மை சான்ற காவிதி மாக்களும்'' (மதுரைக். 499).*

*செம் = 1. சிவந்த. எ - டு ஃ செந்நீர். 2. நேர்மையான. எ - டு ஃ செங்கோலாட்சி. 3. நடுநிலையான. ''செம்மனத்தான்'' (நள. 46). 4. இலக்கணம் பிறழாத. எ - டு ஃ செந்தமிழ். 5. முதிர்ந்த. எ - டு ஃ செங்காய். 6. சொல்லழகில்லாத. எ - டு ஃ செந்தொடை, 7. இயல்பான. ''செம்மகள்'' (கல்லா. 5 ஃ 31). 8. தகுந்த, ஏற்ற. எ - டு ஃ செந்துறை. 9. சமமான. எ - டு ஃ செம்பாகம். 10. ஒரேயொழுங்கான. எ - டு ஃ செந்தூக்கு. 11. கோட்டமில்லாத. எ - டு ஃ செங்குத்து. 12. எண்ணிடைச் சொல் பெறாத. எ - டு ஃ செவ்வெண்.*

*பருவியற் கருததினின்று நுண்ணியற் கருத்துத் தோன்றுவது போன்றே, நுண்ணியற் கருத்தினின்று பருவியற் கருத்துந் தோன்றும். குணத்தின் அல்லது நடத்தையின் நேர்மை நுண்ணியல்; கோலின் அல்லது உடம்பின் நேர்மை பருவியல்.*

*செம் + படு = செம்படு – செப்படு. செப்பட = செவ்விதாக. ''செப்பட முன்கை யாப்ப'' (சீவக. 2665).*

*செம் + ஆ = செம்மா. செம்மாதல் = செம்மையாதல். ''என் கண்ணன் கள்வ மெனக்குச் செம்மாய் நிற்கும்'' (திவ். திருவாய். 9 : 6 : 6).*

*செம்மன் = காவிநிறமுள்ள திருக்கை மீன்வகை.*

*செம்மல் = 1. வாடிச் சிவந்த பழம்பூ. ''உதிர்ந்த ..... செம்மல் மணங்கமழ'' (சிலப். 7: பாடல், 39). 2. பெருமை, தலைமை. ''அருந்தொழில் முடித்த செம்மற் காலை'' (தொல். கற். 5). 3. வலிமை (பிங்.). 4. தருக்கு. ''செயிர்ப்பவர் செம்மல் சிதைக்கலா தார்'' (குறள். 880). 5. பெருமையிற் சிறந்தோன் தலைவன் (திவா.). 6. பெருமை யுள்ள மகன். ''பருதிச் செல்வன் செம்மலுக்கு'' (கம்பரா. அனும. 18). 7. இறைவன் (திவா.). 8. சிவன் (சூடா.). ம. செம்மு.*

*தலைவன் அல்லது அரசன் செம்மல் எனப்பட்டது, நேர்மை யான ஆட்சியால்; சிவன் செம்மல் எனப்பட்டது செந்திறத்தால்.*

*செம்மாத்தல் = 1. வீறுபெறுதல். ''அண்ணல் செம்மாந் திருந்தானே'' (சீவக. 2358). 2. இறுமாத்தல். ''மிகப்பட்டுச் செம்மாக்குங் கீழ்'' (குறள். 1074).*

*செம் – செம்பு = 1. தாம்பரம். ''செம்பிற் செய்நவும்'' (சிலப். 14 : 174). 2. செம்பினாற் செய்த குடிநீர்க்கலம். 3. ஒரு முகத்தலளவு.*

*ம. செம்பு, க. செம்பு, கெம்பு.*

*செம்பு – செம்பை = ஒருவகைப் பூச்செடி.*

*செம்பு– செப்பு = 1. செம்பு. 2. செம்பினாற் செய்த நீர்க்கலம். ''சேமச் செப்பிற் பெறீஇயரோ'' (குறுந். 277). 3. சிமிழ். ''செப்பின் புணர்ச்சிபோற் கூடினும்'' (குறள். 887). ம. செப்பு.*

*செப்பு – செப்பம் = 1. செம்மை. ''செப்பமும் நாணு மொருங்கு'' (குறள். 951). 2. நடுநிலை. ''செப்பம் உடையவ னாக்கம்'' (குறள். 112). 3. ஒக்கிடுகை. குடையைச் செப்பஞ்செய்ய வேண்டும் (உ. வ.). 4. செவ்வையான பாதை. ''சேந்த செயலைச் செப்பம் போகி'' (மலைபடு. 160). 5. செவ்வையான தெரு (பிங்.).*

*செப்பு – செப்பல் = செந்நிறம். ''பொழுது செப்பலோடிவரும் பொழுது'' (யாழ்ப்.). 2. அருணன் எழும் நேரம்.*

*செப்பம் – செப்பன். செப்பனிடுதல் = செவ்வை செய்தல், ஒக்கிடுதல், பழுதுபார்த்தல், புதுப்பித்தல்.*

செப்பல் = செப்பலி = செந்நிறமுள்ள கடல்மீன் வகை.

செம் – செவ். செஞ்செவ்வே – செஞ்செவே = 1. நேராக. ''செஞ்செவே கமலக் கையாற் றீண்டலும்'' (கம்பரா. பூக்கொய். 7). 2. எளிதாக. ''செஞ்செவே படர்வரென் படைஞர்'' (கம்பரா. வருணனை. 13). 3. முழுதும். ''செஞ்செவே யாண்டாய் சிவபுரத் தரசே'' (திருவாச. 28 : 6).

**ம.** செஞ்செம்மே.

செஞ்செவே– செஞ்ச = 1. நேராக. ''செஞ்ச நிற்போரைத் தெரிசிக்க'' (திருமந். 2079). 2. முழுதும்.

செவ் – செவ்வல் = 1. செந்நிறம் ''செவ்வலங் குன்றம்'' (களவழி. 10). 2. செம்மண் நிலம்.

செவ்வன் – செவ்வையாக. ''செவ்வ னிறைகாக்கு மிவ் வுலகில்'' (பு. வெ. 10, முல்லைப். 9).

செவ்வன் – செவ்வனம் = செவ்வையாக. ''செவ்வனஞ் செல்லுஞ் செம்மை தானிலள்'' (மணிமே. 3 : 81).

செவ் – செவ்வி = 1. தகுந்த சமயம். ''கதங்காத்துக் கற்றடங்க லாற்றுவான் செவ்வி'' (குறள். 130). 2. காட்சி. ''செவ்வியுங் கொடாஅன் இவ்வியல் புரிந்தனன்'' (பெருங். 2 : 9 : 198). 3. பேரரும்பு (பிங்.). 4. விளைச்சற் பருவம். ''முதிர்ந்த செவ்வித் தினையினை'' (கந்தபு. வள்ளி. 158). 5. புதுமை. ''காயா மலருஞ் செவ்விப்பூப் போல'' (பு. வெ. 9 : 4, உரை). 6. அழகு. ''வண்டுறை கமலச் செவ்வி வாண்முகம் பொலிய'' (கம்பரா. சூர்ப்ப. 2). 7. சுவை. ''பாற்சோற்றின் செவ்வி கொளறேற்றா'' (நாலடி. 322). 8. மணம். ''நாவிய செவ்வி நாற'' (கம்பரா. கார்கால. 35). 9. தன்மை. 10. செம்மை. ''செவ்வியிற் றொடர்ந்த வல்ல செப்பலை'' (கம்பரா. இரா. வதை. 210).

செவ்வு = 1. செம்மை. 2. நேர்மை. ''ஆருயிர் செவ்விராது'' (கம்பரா. காட்சி. 29). 3. நேர் (திசை). இந்தச் செவ்வுக்குப் போனாற் கல்லூரியைக் காணலாம். (நாஞ்.).

**க., ம.** செவ்வு.

செவ்வே = 1. நன்றாக. ''செவ்வே நெஞ்சால் நினைப்பரிதால்'' (திருவிருத். 98). 2. நேரே. ''செவ்வே பாரிற் செல்கின்ற'' (கம்பரா. முதற் போர். 216). ம. செவ்வே.

செவ்– செவ்வை = 1. செப்பம். அது செவ்வையான பாதை. (உ. வ.). 2. நேர்மை : ''தேமொழி யுரைத்தது செவ்வை நன்மொழி''. 3. ஒழுங்கு. எல்லாம் செவ்வையாயிருக்கின்றன. (உ. வ.).

*செவல் = 1. செம்மண் நிலம்.*

*செவேர் எனல் = செந்நிறமாயிருத்தல்.*

*செவ்– சிவ். சிவ்வெனல் = சிவந்திருத்தல்.*

*சிவ் – சிவ. சிவத்தல் = 1. செந்நிறமாதல். ''காமர் நெடுங்கண் கைம்மீச்சிவப்ப'' (பெருங். இலாவாண. 14 : 63). 2. சினத்தல். ''சிவந்தனை காண்பாய்நீ தீதின்மை'' (கலித். 91).*

*சிவத்தை = 1. சிவப்பு. 2. பொன்னிறப் பெண். 3. செந்நிறக் காளை.*

*சிவப்பு = 1. செந்நிறம். 2. சிவப்புக்கல். 3. சினம். ''கறுப்புஞ் சிவப்பும் வெகுளிப் பொருள'' (தொல். உரி. 74).*

**ம.** *சுவப்பு.*

*சிவப்பன் = பொன்னிறத்தான். ''பேர்கறுப்பன் நிறஞ் சிவப்பன்'' (தனிப்பாடல்). சிவப்பு– சிகப்பு.*

*சிவப்பி = 1. பொன்னிறத்தாள். 2. செந்தெங்கு.*

*சிவ– சிவம் = 1. செம்பொருள் (சிவன்). 2. சிவன் தன்மை. ''சித்தமல மறுவித்துச் சிவமாக்கி'' (திருவாச. 51 : 1). 3. வீடு, பேரின்பம்.*

*சிவம்– சிவன் = சிவநெறியாராற் செந்நிறத்தான் எனக் கருதப்படும் இறைவன் அல்லது கடவுள்.*

*சிவன்– சிவை = சிவன் தேவியாக உருவகிக்கப்பட்ட திருவருள்.*

*சிவ – சிவல் = செம்மண் நிலம். 2. பெரும்பாலும் சிவற்காடான முல்லைநிலத்துக் கதுவாலி என்னும் பறவை.*

*சிவல் – சிவலை = செந்நிறக்காளை. ''நெற்றிச் சிவலை'' (கலித். 104).*

*சிவீர் எனல் = சிவந்திருத்தல்.*

*சிவீர்– சிவேர். சிவேர் எனல் = சிவந்திருத்தல்.*

*செவ்– செவு– செகு– செக்கு– செக்கம்.*

*செக்கம் = 1. சிவப்பு. 2. சினம். ''செக்கஞ் செகவென் றவள்பா லுயிர்செக வுண்ட பெருமான்'' (திவ். திருவாய். 1 : 9 : 5).*

*செக்கச் செவேர் எனல் = மிகச் சிவந்திருத்தல்.*

செக்கச் சிவத்தல் = மிகச் சிவத்தல். ''விழியிணை செக்கச் சிவந்து'' (திருப்பு. 126).

செக்கம்– செக்கல் = 1. செவ்வந்தி. 2. அந்திமாலை.

செக்கல் – செக்கர் = 1. சிவப்பு. ''சுடுதீ விளக்கஞ் செல்சுடர் ஞாயிற்றுச் செக்கரிற் றோன்ற'' (புறம். 16). 2. செவ்வானம். ''செக்கர்கொள் பொழுதினான்'' (கலித். 126).

செகு – செகில் = சிவப்பு. ''செகிலேற்றின் சுடருக் குளைந்து'' (திருவிருத். 69).

செகில்– செகிள் = மீனின் சிவந்த மூச்சுறுப்பு (gills).

செகிள்– செகிடு = அலகடி, கன்னம். செகிட்டைக் கட்டி யறைந்தான். (உ. வ.).

செகிள்– செவிள்– செவிடு = செவியொட்டிய கன்னம்.

செய்– சேய் = 1. சிவப்பு. ''சேயுற்ற கார்நீர் வரவு'' (பரிபா. 11 : 114). 2. செவ்வாய் (பிங்.). 3. செந்நிற முருகன்.

''பவழத் தன்ன மேனித் திகழொளிக்
குன்றி யேய்க்கு முடுக்கை.....
........................
சேவலங் கொடியோன்'' (குறுந். கட. வாழ்.)

என்றது காண்க.

4. முருகனை யொத்த மறவன். ''பாரதப்போர் செற்றானுங் கண்டாயிச் சேய்'' (நள. 137).

சேய் – சேயன் = செந்நிறத்தான். ''வண்ணமு மாய னவனிவன் சேயன்'' (தொல். உவ. 32, உரை).

சேயன்– சேயான் = செந்நிறத்தான்.

சேயவன் = 1. செவ்வாய் (திவா.). 2. செந்நிற முருகன். ''ஆறு மாமுகச் சேயவன்'' (கந்தபு. தெய்வயா. 58).

சேயோன் = 1. முருகன். ''சேயோன் மேய மைவரை யுலகமும்'' (தொல். அகத். 5). 2. சிவன்.

சேயது– சேய்து– சேது = 1. சிவப்பு (சூடா.). 2. சிவந்தது. சேது– கேது = சிவந்த சாயைக்கோள், the descending node (திவா.).

ஒ. நோ : செம்பு– கெம்பு (க.). சீர்த்தி– கீர்த்தி (வ.).

சேது– சேத்து = சிவப்பு (திவா.). ''சேத்தகில் புழுகு சந்தம்'' (பாரத. பதினான். 219).

*சேது + ஆ = சேதா = செந்நிற ஆன். ''சிலம்பின் மேய்ந்த சிறுகோட்டுச் சேதா'' (நற். 359).*

*சேது + ஆம்பல் = சேதாம்பல் = செவ்வாம்பல்.*

*'சேதாம்பற் போதனைய செங்கனிவாய்'' (கம்பரா. நகர் நீங். 101).*

*சேய்– சே. சேத்தல் = சிவப்பாதல். ''அவன் வேலிற் சேந்து'' (கலித். 57). 2. சினத்தல். ''நித்தில மேந்திச் சேந்தபோல்'' (சீவக. 329).*

*சே = 1. சிவப்பு. ''சேக்கொள் கண்ணை'' (கல்லா. 85 : 9). 2. சேங்கொட்டை (மலை.).*

*சே– சேப்பு = 1. சிவப்பு. ''ஊடலிற் செங்கண் சேப்பூர'' (பரிபா. 7 : 10). 2. சிவப்புக்கல்.*

*சேத்து – சேந்து = 1. சிவப்பு (பிங்.) 2. தீ. (யாழ். அக.). ''சேந்தி னடைந்தவெலாஞ் சீரணிக்க'' (அருட்பா, 1. நெஞ்சறிவுறுத்தல்,689). 3. அசோகு (மலை.).*

*சேந்து– சேந்தன் = முருகன். ''சூர்தடிந் திட்ட சேந்தன்'' (தேவா. 942 : 6).*

*சேந்தன்– சேந்து. ஒ. நோ : வேந்தன்– வேந்து.*

*சேந்து + இல் = சேந்தில்– செந்தில்.*

*சேந்து + ஊர் = சேந்தூர்– செந்தூர் (திருச்செந்தூர்).*

*சே – சேவு = செவ்வயிரம், வயிரம். ''செய்தகை சேவேறும், செய்யாத கை நோவேறும்'' (பழமொழி).*

*சேவு– சேகு. சேகுவயிரம் = செவ்வயிரம்.*

*சேகு– சேகை = சிவப்பு. ''அண்டத் துயிர்களெலாம் வந் திறைஞ்சச் சேகையாய் மல்குந் திருத்தாள்'' (கந்தபு. இரணியன்பு, 14).*

*குறிப்பு : சிவம் என்னும் சொல்லிற்கு, நன்மை என்று சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் அகரமுதலி ஒரு பொருள் கூறியிருப்பது. வடநூல் வழக்கைத் தழுவியதாகும். சிவன் தென்னவர் தெய்வமாதலால், அப் பொருள் பொருந்தாது. நல்ல அல்லது மங்கல என்னும் பொருளில், உருத்திரனுக்கும் இந்திரனுக்கும் அக்கினிக்கும் பொதுவாக வழங்கிய, 'சிவ' என்னும் அடைமொழியாகிய வடசொல் வேறு; நெருப்பின் கூறாகக் கொள்ளப்பட்டு அழல் வண்ணன் எனப்பட்ட இறைவன் பெயராகிய சிவன் என்னும் தென்சொல் வேறு.*

*சிவனியம், மாலியம் ஆகிய இரு தமிழ் மதங்களையும் ஆரியப்படுத்தற் பொருட்டு, ஆரியர் வகுத்த முத்திருமேனிக் கூட்டில், முத்தொழில் தலைவனாகிய சிவனுக்கு அமங்கலமான அழிப்புத் தொழிலே ஒதுக்கப்பட்டதுபற்றி, சிவனியத் தமிழர்க்குள்ள மனத் தாங்கலைத் தீர்த்தற்கே, சிவன் என்னும் சொற்கு நன்மை செய்பவன் என்று பொருள்கூறி, சிவனுக்குச் சங்கரன் (சம் + கர = சங்கர = நன்மை செய்பவன்) என்றொரு பெயரையும் அமைத்தனர் என அறிக.*

## 11

# சுல்[4] (வளைதற் கருத்துவேர்)

*வளைதல் என்பது, சாய்வு, வளைவு, கோணல், வட்டம், உருண்டை, முட்டை, உருளை முதலிய பல கருத்தைத் தழுவும்.*

*சுல் – சுலவு. சுலவுதல் = 1. சுற்றுதல். ''அரவூறு சுலாய்மலை தேய்க்கும்'' (திவ். திருவாய். 7 : 4 : 2). 2. சுழலுதல். ''சுலவுற் றெதிர்போகிய தூவியனம்'' (நைடத. அன்னத். 45).*

*சுலவு – சுலாவு. சுலாவுதல் = சூழ்தல்.*

*''விரைகமழ் சோலை சுலாவி யெங்கும்'' (தேவா. 418 : 1).*

*சுலாவு = (வளைந்து வீசும்) காற்று. ''சுலாவாகி (தேவா. 1227 : 3).*

*சுல்– சில் = 1. வட்மானதுண்டு. 2. கடற்சில் (வட்டமான கடற்செடி விதை). 3. உருளை, தேர்க்கால்.*

*சில்– சிலை = 1. வளைந்த வில். ''கொடுஞ்சிலைக்கைக் கூற்றினை'' (பு. வெ. 1 : 10). 2. வானவில். ''சிலைத்தா ரகலம்'' (புறம். 61 : 14). 3. சிலையோரை (தனுராசி) (விதான யாத். 13). 4. சிலை (மார்கழி) மாதம். ''சிலையில்வெங் கதிரைத் திங்க ளொன்றிய'' (பாரத. முகூர்த். 4).*

*சில் – சிலந்தி = 1. வட்டமான நூல்வலை யமைக்கும் பூச்சி. 2. சிலந்திப் பூச்சிபோன்ற கொப்புளக்கட்டி. ம. சிலன்னி, சிலந்தி – சிலம்பி. ''சிலம்பி வானூல் வலந்த மருங்கில்'' (பெரும்பாண். 236).*

*சுல்– சுன்– சுன்னம் = சுழி. சுன்னம்–* ***பிரா.*** *சுன்ன,* **வ.** *சூன்ய. சுன் – சூன் = வளைவு. 'சூன் நிலம்' (உ. வ.).*

*சுன்– சின்– சினை = 1. முட்டை (பிங்.) ''சினைவளர் வாளையின்'' (பரிபா. 7 : 38). 2. மக்கள் விலங்கு பயிர் முதலிய உயிரிகளின் கரு.*

**தெ.** *ஜென.*

*சுல் – சூல் = 1. முட்டை. ''ஞமலி தந்த மனவுச் சூலுடும்பின்'' (பெரும்பாண். 132). 2. கரு. ''இளம்பிடி யொருசூல் பத்தீ னும்மோ'' (புறம். 130 ; 2). 3. முகில் நீர் நிரம்பியிருக்கை. ''சூன்முதிர் முகில்'' (பரிபா. 20 ; 3).*

*சூல் – சூலி = கருவுற்றவள். ''சூலி முதுகிற் சுடச்சுட'' (திருக்கை வழக்கம். கண்ணி, 12).*

*ம. சூல், க. சூல், தெ. த்சூலு.*

*சுல் – சுள் – சுளகு = வளைத்துப் பின்னும் புடைப்புத் தட்டு.*

*சுள் – சுளி. சுளிதல் = திரிதல். சுளித்தல் = வெறுப்பால் முகத்தைத் திரித்தல்.*

*சுள் – சுளு – சுளுக்கு = நரம்புப் புரட்சி.*

*ம., க. சுளுக்கு, து. உளுக்கு, தெ. இலுக்கு.*

*சுளுக்குதல் = நரம்பு பிசகுதல்.*

*சுளி – சளி. சளிதல் = ஒரு பக்கம் சரிதல், சுற்றிவரச் சரிந்து சப்பளிதல். ம. சளி(க்க).*

*சளி – சழி. சழிதல் = உடற்சதை சரிந்து தளர்தல்.*

*சழிவு நெளிவு = கோணல் மாணல்.*

*சுள் – சுழகு – சுழங்கு. சுழங்குறுதல் = சுழலுதல். ''நெஞ்சகஞ் சுழங்குற'' (காஞ்சிப்பு. பன்னிரு. 276).*

*சுழலுதல் = 1. வட்டமாகச் சுற்றிவருதல். ''சுழன்றிலங்கு வெங்கதிரோன்'' (திவ். பெரியதி. 9 ; 4 ; 6). 2. உருண்டோடுதல், உருளுதல். ''தேர்க்கா லாழியிற் சுழன்றவை'' (பெருங். வத்தவ. 12 ; 205). 3. பம்பரம்போற் சுற்றியாடுதல். 4. பித்தன்போல் உடம்பைச் சுற்றியாட்டுதல். ''சுழலலுஞ் சுழலும்'' (மணிமே. 3 ; 111). 5. சுற்றித் திரிதல். ''குழலின்படி சுழலும்'' (கம்பரா. கங்கைப். 3). 6. காற்றிற் கப்பல்போல் அலைவுபடுதல். 7. மனம் அலசடிப்படுதல். ''சுழலுஞ் சுராசுரர்க ளஞ்ச'' (திவ். இயற். 1 ; 48) 8. பொறி மயங்குதல். ''கண்ணுஞ் சுழன்று பீளையோடு'' (திவ். பெரியதி. 7 ; 4 ; 1). ம. சுழலு (க). தெ. சுடியு.*

*சுழலமாடுதல் = 1. விடாமுயற்சி செய்தல். 2. ஒருவரை அடிக்கடி கண்டு தொழுதல்.*

*சுழலி = மாந்த வலிப்புவகை.*

*சுழலை = வஞ்சம். ''சுழலை பெரிதுடைத் துச்சோதனனை'' (திவ். பெரியாழ். 1 : 8 : 5).*

*சுழல் = 1. சுழள். ''சுழலிடு கூந்தலும்'' (கம்பரா. மிதிலை. 43). 2. பீலிக்குடை (பிங்.). 3. காற்றாடி (சூடா.). 4. சுழற்சி. ''சுழற்கண் வேதாள மானான்'' (சேதுபு. வேதாள. 72). 5. வளைவு. சுழல்படை = வளைதடி (சூடா.). 6. சுழிநீர். 7. சுழல்காற்று. 8. அலசடி (சஞ்சலம்). ''சுழலார்துயர்'' (தேவா. 294 : 19). 9. ஏமாற்று, வஞ்சகம். ம.சுழல்.*

*சுழன்மரம் = மரத்திரிகை. ''சுழன்மரஞ் சொரித்த'' (அகம். 393). சுழல்– சுழற்று– சுழற்றி = 1. இறாட்டைக்கைப் பிடி. 2. துளையிடு கருவி, துறப்பணம். சுழற்றல் = கிறுகிறுப்பு.*

***ம.** காற்று.*

*சுளி – சுழி. சுழிதல் = 1. வளைதல், சுருளுதல். ''சுழியுங் குஞ்சி மிசை'' (கம்பரா. எழுச்சி. 34). 2. சினத்தாலும் வெறுப்பாலும் முகந்திரிதல். ''தழலுமிழ்ந்தும் மதம்பொழிந்தும் முகஞ்சுழிய'' (தேவா. 1148 : 7). 3. வட்டமாதல். 4. நீர்ச்சுழிபோற் சுற்றுதல். 5. மனங் கலங்குதல். ''வரிவிழி கொண்டு சுழிய வெறிந்து'' (பட்டினத். பா. உடற். 3). 6. இறத்தல் (இடத்து வழக்கு). க. சுளி.*

*சுழி = 1. சுன்னம். 2. எழுத்துச் சுழி. எ - டு. அ, ள, ன, ண. 3. மயிர்ச்சுழி. 4. ஆகூழையோ போகூழையோ குறிக்கும் உடம்புச்சுழி. ''சுழிகொள் வாம்பரி'' (கம்பரா. எழுச். 32). 5. சுழிமதி. ''சுழியுடைத் தாயுடைக் கொடிய சூழ்ச்சியால்'' (கம்பரா. பள்ளி. 74). 6. கடல். ''கொண்ட சுழியுங் குலவரை யுச்சியும்'' (திருமந். 2966). 7. நீர்ச்சுழி. ''கங்கையின் சுழியிற்பட்ட'' (சீவக. 1096). 8. சுழிக்காற்று. 9. சுழற்சி. 10. சுருள். **ம.** சுழி. **க.** சுளி, **தெ.** சுடி.*

*சுழியன் = 1. குறும்பன். 2. சுழல்காற்று. ''சித்திரைச் சுழியின்'' (உ.வ.).*

*சுழியம் = 1. ஒருவகை இனிப்புருண்டைப் பலகாரம். 2. மகளிர் தலையணி வகைகளுள் ஒன்று ''சுழியஞ் சூடி'' (கம்பரா. கடிமணப். 52). சுழியம் – சுசியம் = ஒருவகை இனிப்புருண்டைப் பலகாரம் (நெல்லை வழக்கு).*

*சுழியம் – சுழியன் – சுகியன் = ஒருவகை இனிப்புருண்டைப் பலகாரம். ''அவல்பொரி சுகியன்'' (திருப்பு. 926). சுள்– சூள்– சூளிகை = நீர்க்கரை. ''நன்னீர்ச் சூளிகை தோறும்'' (அரிச். பு. விவாக. 46).*

*சூள்– சூழ். சூழ்தல் = 1. சுற்றியிருத்தல். ''அறைகடல்சூழ் வையம்'' (நாலடி. 230). 2. சுற்றி வருதல். சூழ்கதிர்வான் விளக்கும்'' (பு.வெ.9 : 16). 3. ஆராய்தல். ''நின்னொடு சூழ்வல் தோழி'' (கலித். 54). 4. கருதுதல். ''புலைசூழ் வேள்வியில்'' (மணிமே. 13 : 28). 5. கெடுதலை யெண்ணுதல். ''கொடியவன் கடிய சூழ்ந்தான்'' (சீவக. 261). 6. தெரிந்தெடுத்தல். ''சூழ்புரவித் தேர்''. 7. பண்ணுதல். ''பாவை சூழ்ந்தும்'' (பட்டினப். 102). 8. வரைதல். ''தொய்யில் சூழிளமுலை'' (கலித். 125).*

*சூழ் = 1. சுற்று. ''சூழா மெட்டே யாயிர வேதி'' (கந்தபு. அசுரர்யா. 61). 2. ஆராய்ச்சி. ''கற்றார்சூழ் சொல்லுமாங் கண்டு'' (சி.போ. 8 : 1 : 1). 3. தலையணிமாலை. ''மென்பூச் சூழு மெழூதி'' (திருக்கோ. 79).*

*சூழ் – சூழ்ச்சி = 1. தேர்ந்தெண்ணல். ''போற்றார்ப் பொறுத்தலுஞ் சூழ்ச்சிய தகலமும்'' (புறம். 2 : 7). 2. நுண்ணறிவு. ''கருமக் கிடக்கையுங் கலங்காச் சூழ்ச்சியும்'' (பெருங். உஞ்சைக். 46 : 117). 3. ஆம்புடை (உபாயம்). ''சொல்லாயா னுன்னைச் சார்வதோர் சூழ்ச்சியே'' (திவ். திருவாய். 3 : 2 : 3). சூழ்ச்சி – சூழ்ச்சியம் = மதித்திறமை* (ingeniousness).

*சூழ் – சூழல் = 1. சூழ்ச்சி. 2. கூட்டம். ''வானவர் சூழலோடு'' (கந்தபு. மேருப். 48). 3. இடம். (பிங்.).*

*சூழி = 1. வட்டமான நீர்நிலை. ''அலங்குகதிர் சுமந்த கலங்கற் சூழி'' (புறம். 375). 2. கடல்.*

*சூழியல் = வீட்டிறப்பு. வீட்டிறப்புத் தாங்குங் கம்பு.*

*சூழியற்படை = வீட்டுச் சுவரின் எடுத்துக்கட்டி.*

*சுள் – சுட்டி = 1. குழந்தைகளும் மகளிரும் அணிந்துகொள்ளும் வட்டமான நெற்றியணி. ''சுட்டி சிதையக் குட்டத்துக் குளித்து'' (பெருங். உஞ்சைக். 40 : 102). 2. மாட்டின் நெற்றியிலுள்ள வெண்சுழி. ''சுட்டியை நெற்றியிலேயுடைய கரிய எருது'' (கலித். 101 : 21, உரை). 3. பாம்பு முதலிய உயிரிகளின் உச்சி வெள்ளை. 4. நெற்றிப் பட்டம் (அக. நி.). 5. தலைச்சுழி. 6. குறும்பு. 7. குறும்பன். ம., க., து. சுட்டி.*

*சுட்டி சுட்டியாக = வட்டம் வட்டமாக. அவன் உடம்பில் சுட்டி சுட்டியாக வெள்ளை விழுகிறது. (உ. வ.).*

*சுட்டித் தலையன் = 1. தலையிற் சுழியுள்ள குறும்பன். 2. உச்சி வெள்ளையுடைய விலங்கு.*

*சுட்டித்தனம் = குறும்புத்தனம்.*

*சுட்டிப்பயல் = குறும்பு செய்யும் பையன்.*

*சுட்டி – சுட்டிகை = மகளிர் நெற்றியணி. ‘‘சூளிகையுஞ் சுட்டிகையும்’’ (பதினோ. ஆதியுலா. 68).*

*சுட்டிகை– சுடிகை = 1. நெற்றிச்சுட்டி (திவா.). 2 நெற்றிப் பொட்டு (திவா.). 3. தலையுச்சி (திவா.). 4. மயிர்முடி (திவா.). 5. சூட்டு. ‘‘பஃறலைச் சுடிகை மாசுணம்’’ (கந்தபு. திருநாட்டுப். 19). 6. மகுடம் (திவா.). சுடிகை– வ. ஜுட்டிக்கா.*

*சூள்– சூடு. சூடுதல் = வளைதல், வளைந்திருத்தல். ‘‘வண்டிச் சக்கரம் சூடியிருக்கிறது.’’ (நாஞ்சில்நாட்டு வழக்கு).*

*சூடு = வட்டமாக அடைந்த கதிர்ச்சாணை.*

*சூடு – சூடகம் = வளையல். ‘‘பாடகத் தரவமுஞ் சூடகத் தோசையும்’’ (பெருங். வத்தவ. 12 : 210).*

***க.*** *சூடக* (g), ***து.*** *சூடக* (c) (g), ***தெ.*** *சூடிகமு* (g).

*சூடு – சூட்டு = 1. வண்டிச் சக்கரத்தின் விளிம்பைச் சூழத் தைக்கப்பட்ட வளைவுச் சட்டம். ‘‘கொழுஞ்சூட் டருந்திய திருந்து நிலை யாரத்து’’ (பொரும்பாண். 46). 2. பூமாலை. ‘‘மல்லிகை நறுஞ்சூட்டு வெள்ளிதின் விளங்க’’ (பெருங். உஞ்சைக். 46 : 233). 3. நெற்றிப் பட்டம். ‘‘செம்பொற் சூட்டொடு கண்ணி’’ (சீவக. 2569). 4. மகளிர் நுதலணி (பிங்.). 5. பறவைகளின் உச்சிக்கொண்டை. ‘‘காட்டுக்கோழிச் சூட்டுத்தலைச் சேவல்’’ (பெருங். உஞ்சைக். 52 : 62). 6. பாம்பின் படம். ‘‘செங்க ணாயிரஞ்சூட் டராவி னறிதுயி லமர்ந்து’’ (கூர்மபு. வருணாச். 3). 7. அம்பு விடும் அறை. ‘‘இடுசூட் டிஞ்சியின்’’ (பு.வெ. 6 : 18, கொளு).*

*சுடிகை– சூடிகை = 1. மணிமுடி (பிங்.). 2. கோபுரக் கும்பம். ‘‘சூட ணீத்தன சூடிகை சூளிகை’’ (கம்பரா. பள்ளி. 24). சூடிகை– வ. சூடிகா* (c, k).

*சூள்– சாள்– சாளை = வட்டமான குடிசை (கோவை வழக்கு).*

*சாளை– சாளையம் = வளைவு.*

*சாளையக்கை = பெருவிரல் சுட்டுவிரல் நடுவிரல் ஆகிய மூன்றையும் நீட்டி, மோதிரவிரல் சுண்டுவிரல்களின் நுனி உள்ளங்கையிற் படும்படி வளைத்து, விரல்கட்குள் இடைவெளி தோன்றச் செய்து மணிக்கட்டை வளைத்துக் காட்டும் நளி நயக்கை (பரத. பாவ. 24).*

*சாளை – சாணை = 1. வட்டமான கதிர்ச்சூட்டு (நெ. வ.). 2. சருக்கரை முதலியவற்றால் வட்டமாய்ச் சுட்ட பணியார வகை*

(வி. அ.). 3. வட்டமாய்த் தட்டிய புளிமொத்தை. 4. வட்டமான சாணைக் கல். ‘‘வாடீட்டிய கிடந்த சாணை’’ (நைடத. அன்னத்தைத். 14).

சாணை– வ. சாண, சான.

சாணைக்கல்– ம. சாணக்கல்லு, க. சாணெக்கல்லு.

சாள்– சாடு. சாடுதல் = 1. சாய்தல்.

‘பட்டம் வாலுக்குச் சாடுகிறது’ (உ. வ.). 2. சாய்ந்து ஒன்றன்மேல் விழுதல். 3. மோதுதல். 4. தாக்குதல். 5. கண்டித்தல். சாடு – சாட்டம் = சாய்வு. ‘அங்கணம் வாட்டஞ் சாட்டமாய் (வாட்ட சாட்டமாய்) இருக்க வேண்டும்’ (உ. வ.).

சாடு– சாடி = ஒருவனைத் தாக்கிச் சொல்லும் கோட்சொல் (பிங்.).

சாடு– சாடை = 1. சாயல். ‘அண்ணனுந் தம்பியும் ஒரே சாடை’ (உ. வ.). 2. சிறிது ஒப்பு ‘பார்வையும் பேச்சும் இராமசாமிக் கவுண்டர் சாடையாயிருக்கிறது’ (உ. வ.). 3. குறிப்பு. ‘‘சாடை பேசிய வகையாலே’’ (திருப்பு. 572). ‘சாடையாய்த் திட்டினான்’ (உ. வ.). 4. சைகை. ‘வரும்படி கைச்சாடை காட்டினான்’ (உ. வ.). 5. தெரியாதது போலிருத்தல். ‘அவன் குற்றத்தை யறிந்தும் சாடையாக விட்டுவிட்டார்’ (உ. வ.).

‘சாடை சாடையாய்ப் பேசுதல்’, ‘சாடைமாடையா யிருத்தல்’ (விட்டு விடுதல்)’ என்பன மரபுத் தொடர்மொழிகள்.

சாள் – சாய். சாய்தல் = 1. வளைதல். ‘‘சாய்செவிக் குருளை’’ (சிறுபாண். 130). 2. கவிழ்தல் ‘‘நாணடச் சாய்ந்த நலங்கிள ரெருத்தின்’’ (பொருந. 31). 3. கதிரவன் வானிற் சாய்ந்திறங்குதல். 4. சார்தல். ‘தூணின்மேற் சாய்ந்தான்’ (உ. வ.). 5. படுத்தல். ‘‘திருக்கையிலே சாயுமித்தனை’’ (ஈடு, 2 : 7 : 5).

6. நடுநிலை திறம்புதல், ஒருபக்கம் சேர்தல்.

7. தோற்றோடுதல். ‘‘வந்தவர் சாய்ந்த வாறும்’’ (பாரத. நிரைமீட்சி. 137).

8. நடந்தேறுதல். ‘அந்தக் கருமம் (காரியம்) சாய்ந்தது’ (உ. வ.).

9. திரண்டு செல்லுதல், அல்லது வருதல். ‘திருவிழாவிற்கு மக்கள் திரள் சாய்கிறது’ (உ. வ.).

10. தளர்தல் ‘‘கள்ளொற்றிக் கண்சாய் பவர்’’ (குறள். 927). 11. வருந்துதல். ‘‘சாய்குவ ளல்லளோ’’ (கலித். 79 : 10). 12. மெலிதல்.

*''சாயினள் வருந்தியா ளிடும்பை'' (கலித். 121). 13. வற்றுதல். ''கான்யாற்றுக் கடும்புனல் சாஅய்'' (அகம். 25).*

*14. விழுதல். 15. இறத்தல். 16. அழிதல். ''மறஞ்சாய'' (பு. வெ. 2 : 1, கொளு).*

***ம.** சாய், **வ.** சய்* (C), ***சீ.** க்ஷய்.*

*சாய்கடை – சாக்கடை = வாட்டமாகவுள்ள அங்கணம் (சலதாரை). **உ.** சாக்கித்.*

*ஒ.நோ : சூல்– சால்– சாலகம் = அங்கணம். சாலுதல் = சாய்தல்.*

*சாய் = 1. சாயல், அழகு. ''சங்கஞ் சரிந்தன சாயிழந்தேன்'' (திவ். திருவாய். 8 : 2 : 1). 2. சாயம், நிறம். ''சாயாற் கரியானை'' (திவ். இயற். பெரிய திருவந். 14). 3. சாயை, நிழல். 4. ஒளி. ''சாய்கொண்ட விம்மையும்'' (திவ். திருவாய். 3 : 9 : 9). 5. புகழ். ''இந்திரன்தன் சாயாப் பெருஞ்சாய் கெட'' (கம்பரா. நாகபா. 21).*

*சாய்கால் அல்லது சாய்காலம் = சொற் செல்லும் (செல்வாக் குள்ள) காலம்.*

*சாயுங்காலம் (சாயுந்தரம்) = கதிரவன் சாயும் எற்பாடு. 'பொழுது சாய்தல்' என்னும் வழக்கை நோக்குக. சாயுங்காலம் – சாயங்காலம் – சாய்ங்காலம். வடமொழியாளர் சாயங்காலம் என்னும் வழுநிலைச் சொல்லை மாரிக்காலம் என்பது போன்ற காலப் பெயராக மயங்கி, சாயம் என்னும் நிலைமொழி வடிவை எற்பாட்டைக் குறிக்கும் வடசொல்லாக அமைத்துக் கொண்டனர்.*

*'சாயம்'– வ. ஸாயம்.*

*சாய்தல் = படுத்தல். தலை சாய்த்தல் = படுத்தல், சிறிது நேரம் உறங்குதல். 'தலைசாய்க்க நேரமில்லை' (உ.வ.) சாயல் = படுக்கை, துயிலிடம் (பிங்.).*

*சாய்– (சாயனம்)– வ. சயனம் = படுக்கை.*

*சாய்கை = படுக்குமிடம், இளைப்பாறுமிடம், தங்குமிடம்.*

*ஒ.நோ : **இ.** ஜகா, **உ.** ஜாகா.*

*சாய்– சாயை– 1. நிழல். ''தன்னது சாயை தனக்குத வாது'' (திருமந். 170). 'நிழல் சாய்கிறது' (உ. வ.). 2. படி வடிவம் (பிரதிபிம்பம்). 3. நிழற்கோள் (இராகு கேதுக்கள்). 4. ஒப்பு. 'இக் குழந்தைக்குத் தகப்பன் சாயை உள்ளது' (உ. வ.). 5. புகழ். ''நின்சாயை யழிவுகண்டாய்'' (திவ். பெரியாழ். 5 : 3 : 3). 6. நிலப்பகுதி, கொந்து. ''ஒரு சாயையிலே மேகம் வர்ஷியா நின்றால்'' (ஈடு, 4 : 5 : 2).*

*சாயை – வ. சாயா* (c).

*சாய் – சாயல் = 1. சார்பு. ''அன்பர்கள் சாயலு ளடைய லுற்றிருந்தேன்'' (தேவா. 154 : 7). 2. நிழல். 3. ஒப்பு. ''பாலனைநின் சாயல் கண்டு.......... மெல்லியலா ளெடுத்தாள்'' (தனிப்பாடல்). 4. மேனி. ''தளர்ந்த சாயற் றகைமென் கூந்தல்'' (சிலப். 8 : 100). 5. நிறம் (பிங்.). 6. அழகு. ''கண்ணாருஞ் சாயல்'' (பரிபா. 11 : 54). 7. மென்மை. ''நீரிலுஞ் சாயலுடையன்'' (கலித். 42).*

*சாயல்மாயலாய் = சாடைமாடையாய் (இ. வ.).*

*சாய் – சாயம் = 1. நிறம். 2. நூலிற்கும் ஆடைக்கும் ஊட்டும் வண்ணம். 3. உண்மைத் தன்மை. 'சாயம் துலங்கிவிட்டது' (உ. வ.). 4. பொய்த்தன்மை. 'சாயம் வெளுத்துவிட்டது' (உ. வ.).*

*சாய்தல் = விழுதல், இறத்தல். ஒ. நோ: படுதல் = விழுதல், இறத்தல். தலைசாய்தல் = இறத்தல் (உ. வ.).*

*சாய்– சா. சாதல் = இறத்தல். சா– சாவு, சாக்காடு. சா– செ– செத்தல் = 1. சாகை. 2. தேங்காய் நெற்று. 3. உலர்ந்து சுருங்கிய காய்கனி தண்டுகள். 4. ஒல்லி. 5. மெலிவு. ''செத்தற் பிள்ளை' (யாழ். அக.).*

*செத்தல்– செத்தலி = எலும்புந் தோலுமான பெண் (யாழ்ப்.).*

*சாள் – சார். சார்தல் = 1. சாய்தல். 2. சென்றடைதல். ''சாரா வேதங்கள்'' (திவ். திருவாய். 10:5:8). 3. புகலடைதல். 4. அடுத்தல். ''கடல் சார்ந்து மின்னீர் பிறக்கும்'' (நாலடி. 245). 5. பொருந்தி யிருத்தல். ''நலமாட்சி நல்லாரைச் சார்ந்து'' (நாலடி. 175). 6. கலத்தல். ''நல்லெழில் மார்பனைச் சார்ந்து'' (கலித். 142). 7. உறவுகொள்ளுதல். 8. ஒத்தல்.*

**ம.** *சாரு,* **க.** *சார்.*

*சார் – சார்பு = 1. சாய்ப்பு. 2. குட்டுகை. 3. கூட்டு, கூட்டுறவு. 4. பற்று. ''சார்புகெட வொழுகின்'' (குறள். 359). 5. ஒருதலைப் பற்று. 'அவனுக்குச் சார்பாகப் பேசுகிறான்' (உ. வ.). 6. புகலிடம். ''ஓர் சார்பி லாமையால்'' (திருவிளை. வளையல். 28). 7. துணை. ''மதலையாஞ் சார்பிலார்க்கு'' (குறள். 449). 8. ஆட்பக்கம் அல்லது கட்சிப் பக்கம். 'நடுவர் எதிர் வழக்காடி பக்கம் தீர்ப்புக் கூறினார்' (உ. வ.). 9. இடம். ''படைஞர் சார்புதொ றேகி'' (கந்தபு. முதனாட். 30). 10. சேர்ப்பு. 11. ஒருபுடை யொப்பு.*

*சார்– சார்ப்பு = 1. சாய்ப்புக் கூரை. 2. மலைச்சரிவு.*

*சார் – சார்ச்சி = 1. சாய்வு. 2. அடுக்கை. ''சகுனி கௌசிகன் சார்ச்சியை'' (பெருங். மகத. 26 : 47). 3. சேர்கை. 4. தொடர்பு. ''கருமச்*

*சார்ச்சி யல்லாத'' (தொல். சொல். 84, உரை). 5. சார்விடம் (பிங்.). 6. சார்த்திக் கூறல்.*

*எ - டு : சார்ச்சி வழக்கு (உபசார வழக்கு).*

*சார் – சார்ந்து. சார்த்துதல் = 1. சாரச் செய்தல். 2. சேர்த்தல், இணைத்தல். ம. சார்த்து.*

*சார்த்து – சாட்டு. ஒ. நோ : துவர்த்து – துவட்டு.*

*சாட்டுதல் = 1. பொறுப்பை அல்லது கடமையைப் பிறனிடஞ் சார்த்துதல். 2. ஒருவர்மீது குற்றஞ் சுமத்துதல். 3. தலைக்கீடாக (வியாஜமாக)க் கொள்ளுதல். 'கோவிலைச் சாட்டி வயிறு வளர்க் கிறான்' (உ. வ.). 'பிள்ளையைச் சாட்டி வேலையைக் கழப்புகிறாள்' (உ. வ.).*

*சார் – சாரி = 1. வட்டமா யோடுகை. ''திரிந்தார் நெடுஞ்சாரி'' (கம்பரா. வாலிவ. 37). 2. உலாவுகை. 3. செல்லுகை, நடை. 4. சேர்க்கை, கூட்டம். 'எறும்பு சாரி சாரியாய்ப் போகிறது' (உ. வ.). 5. பக்கம். 'அவன் வீடு வடசாரியில் இருக்கிறது' (உ.வ.).*

*சாரி கொள்ளுதல் = இடம் வலமாகச் சுற்றி நடஞ் செய்தல். ''பதசாரி சாரிகொள்ள'' (விறலிவிடு. 419).*

*சார் = 1. சாய்ந்த தாழ்வாரம். 2. கூடுகை (சூடா.) 3. வகுப்பு, கூட்டம். 'ஒரு சாரார்', 'ஒருசா ராசிரியர்' (உ. வ.). 4. அழகு (பிங்.). 5. பக்கம். ''பழுமரத்தின் புறத்தொரு சார்'' (திருவிளை. பழியஞ்சு. 12). 6. இடம் (பிங்.). 7. இடப்பொருள் வேற்றுமை யுருபு. ''காட்டுச்சார்க் கொய்த சிறு முல்லை'' (கலித். 117 : 11).*

*சார் – சாரல் = 1. மலைச்சரிவு, மலைப்பக்கம். ''வழையமை நறுஞ்சாரல்'' (கலித். 53). 2. மலை (பிங்.). 3. பக்கம். ''மாளிகையின் சாரல்'' (கம்பரா. சுந்தர. ஊர்தேடு. 100). 4. சாய்ந்து பெய்யும் தூறல். ''சாரல் மழை பெய்கிறது. சம்பாக் கோழி கூவுகிறது.'' (சிறுவர் பாட்டு). 5. சாய்ந்து இறைக்குந் தூவானம். 6. சேர்கை, கிட்டுகை. ''தாஞ்சாரற் கரிய தனுவளைத் தான்'' (பாரத. திரௌபதி. 57). 7. மருதயாழ்த் திறங்களுள் ஒன்று.*

*ம. சாரல் (மழை).*

*சார் – சாரம் = சுவரைச் சாரக்கட்டும் மரம்.*

*சார் – சாரி – சாரிகை = பக்கம்.*

*சாரல் நாடன் = மலைச்சரிவிலுள்ள நாட்டரசன். ''சாரல் நாட வாரலோ வெனவே'' (குறுந். 141).*

*சாரல் – சேரல் – சேரலன் = சேரன்.*

*"சேரலர் சுள்ளியம் பேரியாற்று" (அகம். 149).*

*குடமலைநாடு சேரனுக்கே சிறப்பாக வுரியதாயிருந்தமை யையும், அதனால் மலையன், மலையமான், பொறையன், வானவன், வானவரம்பன் என்னும் பெயர்கள் அவனுக்கு வழங்கியமையையும், நோக்குக.*

*சேரலன் – சேரன். "சேரன் பொறையன் மலையன் றிறம்பாடி" (சிலப். வஞ்சி. ஊசல்வரி, 2).*

*சேரலன்– சேரல். "குடக்கோச் சேரல் இளங்கோ வடிகட்கு" (சிலப். பதி. 2).*

*சேரலன் என்ற பெயர் ஈறுகெட்டுச் சேரல் என நின்றது. ஒ.நோ : பாண் (பாட்டு) – பாணன் (பாடல் தொழிலான்) – பாண் = பாணர் குலம்.*

*சேரலன்– சேரலம் – ம. கேரளம் – வ. கேரல. சேரலன்– கேரளன் = 1. சேரன் (திவா.). 2. சேரநாட்டான். "வெற்றிக்கொடிக் கேரளர்" (பாரத. வெளிப்பா. 21).*

*சார் – சேர். சேர்தல் = சென்றடைதல், கூடுதல், பொருந்துதல், திரளுதல்.*

**ம.** *சேருக,* **க., து.** *சேரு,* **தெ.** *சேரு* (c).

*சுல்– சுர்– சுரி. சுரிதல் = 1. சுழிதல், "வெள்ளைச் சுரிசங்கொ டாழி யேந்தி" (திவ். திருவாய். 7 : 3 : 1). 2. கடைகுழலுதல். "சுரியிரும் பித்தை" (பொருந. 160). 3. மடிப்பு விழுதல்.*

*சுரித்தல் = 1. சுழிதல். 2. சுருளுதல். 3. வளைந்து கிடத்தல். "சுரிக்கு மண்டலந் தூங்குநீர்" (கம்பரா. தேரேறு. 30). 4. திரைதல். 5. மனஞ் சுழலுதல். "சுரிச்சிராது நெஞ்சே யொன்று சொல்லக் கேள்" (தேவா. 369 : 3).*

*சுரி = 1. சுழி. "சுரியேறு சங்கினாய்" (திவ். இயற். 3 : 49). 2. எருதின் நெற்றி வெள்ளைச் சுழி. "சுரிநெற்றிக் காரி" (கலித். 101). 3. சுழற்சி. 4. அணியுறுப்பு வகை. "உருத்திராக்ஷத் தாழ்வடம் ஒன்றிற் பொன்னின் சுரி"* (S. I. I. Vol. II, 156 : 39)

*சுரித்த மூஞ்சி = 1. வெறுப்பை அல்லது சினத்தைக் காட்டும் முகம். 2. மூப்பினால் திரைந்த முகம்.*

*சுரிகுழல் = (சுருண்ட கூந்தலையுடைய) பெண் (பிங்.). சுரிமுகம் = 1. (சுழிந்த முகமுள்ள) சங்கு (திவா.). ''முரசுடன்சுரிமுகந்தழங்க'' (பாரத. அருச்சுனன்றீ. 77). 2. நத்தை (திவா.).*

*சுரியல் = 1. வளைவு. ''சுரியற் றாடி'' (மணிமே. 3 : 116). 2. குழன்ற மயிர். ''தென்றல்......... சுரியற் றூற்றும்'' (அகம். 21). 3. நீர்ச்சுழி (திவா.).*

*சுரிந்து = நீர்ச்சுழி. ''நீர்..........சுரிந்தொடு மதனைச் சுரிந்தென்றும் சுழியென்றும் வழங்குவதுபோல்'' (யாப். வி. ப. 282).*

*சுரிதகம் = ஒருவகைத் தலையணி. ''சுரிதக வுருவினதாகி'' (நற். 86).*

*சுரி – சரி. சரிதல் = 1. சாய்தல். 2. சரிவாயிருத்தல். 3. கூட்டமாகச் சென்று குவிதல். 4. நழுவுதல். ''சரிந்த துகில்'' (திருவிசை. கரு. 5 : 10). 5. கீழே விழுதல். ''சரிந்த பூவுள'' (கம்பரா. அயோத். மந்திரப். 56). 6. பின்னிடுதல். ''நேர்சரிந்தான் கொடிக்கோழி கொண்டான்'' (திவ். திருவாய். 7 : 4 : 8). 7. குலைதல். ''சாடிய வேள்வி சரிந்திட'' (திருவாச. 14 : 5). 8. சாதல்.*

*சரி = 1. மலைச்சாரல். ''சிங்கம் வேட்டந் திரிசரிவாய்'' (திருக்கோ. 156). 2. மலைவழி. ''பெருமலைக ளிடைச்சரியிற் பெரும்பன்றி புனமேய்ந்து'' (பெரியபு. கண்ணப்ப. 142). 3. கூட்டம் (பிங்.). 4. வளையல் வகை. ''சரியின் முன்கை நன்மாதர்'' (தேவா. 118 : 3). தெ. த்சரி.*

*சுர் – சுருள். சுருளுதல் = 1. வட்டமாக வளைதல். ''நீண்டு குழன்று ...... கடைசுருண்டு'' (கம்பரா. உருக்காட்டு. 57). 2. சுருங்குதல். 3. சோர்தல்.* ***ம., க.*** *சுருள்.*

*சுருள் = 1. சுருண்ட பொருள். ''தாமரை மென்சுருள்'' (சூளா. நாட்டுப். 18). 2. வெற்றிலைச் சுருள். ''சுருளைச் சேடியர் செப்பொடு மேந்த'' (சீவக. 197, உரை). 3. ஓலைச்சுருள் மடிப்பு. ''சுருள்பெறு மடியை நீக்கி'' (பெரியபு. தடுத்தாட். 58),4. மகளிர் காதணிவகை. ''செம்பொன் செய்சுருளுந் தெய்வக் குழைகளும்'' (கம்பரா. பூக்கொய். 5). 6. திருமணத்தில் மணமக்களுக்குத் தாம்பூலத்துடன் கொடுக்கும் பரிசு.*

*சுருள்– சுருளி = 1. ஒருவகை மரம். 2. ஒருவகைச் செடி. 3. ஒரு மலை.* ***ம.*** *சுருள்,* ***க.*** *சுருளி,* ***து.*** *சுருள்.*

*சுருள் – சுருளை = 1. சுருள். 2. சுருண்ட குருத்து. ''வாழையுள் ளெழுசுருளை வாங்கி'' (சூளா. சுயம். 87). 3. காதணிவகை. ''செம்பொன் செய் சுருளை மின்ன'' (சூளா. சுயம். 79).* ***க.*** *சுருளெ.*

சுருளை – சுருணை = 1. இலைச்சுருள். 2. கணக்கெழுதிய ஓலைச்சுருள். (திவ். பெரியாழ். 5 : 2 : 2. வியா). 3. வீணைக் கம்பிச் சுருள். 4. சாணித் துணிச்சுருள். 5. தீப்பந்தத் துணிச்சுருள். ''நெருப்பானது சுருணையை வேவப் பண்ணி'' (ஈடு. 5 : 4 : 6). 6. பூண். ''கனையிருஞ் சுருணைக் கனிகாழ் நெடுவேல்'' (அகம். 113). 7. கட்டட வளைவுவகை. (W.). **ம.** சுருண. **க.** சுருளெ.

சுருள் – சுருட்டு = 1. சுருட்டுகை. 2. சுருட்டிய பொருள். 3. புகையிலைச் சுருட்டு. 4. சுருட்டுப் பட்டு (உயர்ந்த பட்டுவகை). 5. விரகு (தந்திரம்) – யாழ்ப்.

ம. சுருட்டு, தெ. த்சுட்ட, க. சுட்டி.

சுருட்டு – சுருட்டி = 1. பெரியோர்முன் சுருட்டி வீசப்படும் பாவாடை. 2. எடுபிடிவகை. ''சந்த்ரோதயம்போற் றயங்குஞ் சுருட்டிவர'' (கூளப்ப. 69). 3. ஒரு பண். 4. ஒரு பூண்டு (மலை.). தெ., க. சுரட்டி.

சுருட்டு – சுருட்டை = 1. சுருள்மயிர். 2. விரியன் பாம்புவகை. 3. மிளகாய்ச் செடியிற் காணும் நோய்வகை.

ம. சுருட்ட.

சுர்– (சுரு)– சரு– சருவு. சருவுதல் = சாய்தல், சரிதல். சருவு– சருவல் = 1. சாய்வு. 2. சரிவான நிலம். சருவுசட்டி = மேல்நோக்கிச் சரிவான சட்டி. சருவு – சருவம் = மேல்நோக்கிச் சரிவாகவுள்ள கலம்.

சருவம் – வ. சராவ.

சருவப் பானை, சருவச்சட்டி என்னுங் கலங்கள் மேனோக்கிச் சரிவாயிருத்தலைக் காண்க. ''வாயகன்ற பாத்திரவகை'' என்று சென்னைப் ப. க. க. தமிழ் அகரமுதலி (Lexicon) இயல் வரையறுத்ததோ டமையாது, சராவ என்னும் வடசொல்லின் திரிவாகவுங் காட்டியிருப்பது, அதைத் தொகுத்த பிராமணப் பண்டிதரின் நெஞ்சழுத்தமான குறும்புத் தனத்தையே காட்டுவதாகும்.

சருவு < சரிவு. Declivity, steep side of a rock; சரிவு (W.).

சருவு– சருகு. சருகுதல் = சரிதல்.

சருகு– சருக்கு. சருக்குதல் = சாய்தல், சரிதல், வளைதல், வழுவுதல், வழுக்குதல், சறுக்குதல்.

ம. சர்க்கு. தெ., க. ஜருகு.

சருக்கு – சறுக்கு. சறுக்குதல் = 1. வழுக்குதல். ''ஆனைக்கும் அடி சறுக்கும்'' (பழமொழி). 2. வழுவுதல். 3. கருமம் தவறுதல்.

**க.** *ஜரகு,* **தெ.** *த்ஜாரு.*

*சருக்கு – சருக்கம் = வட்டம்* (L. circum), *நூற்பிரிவு. ஒ.நோ: மண்டலம் = வட்டம், நூற்பிரிவு.*

*சருக்கம் –* **வ.** *ஸர்க* (g). *வடமொழியாளர் இச் சொல்லை ஸ்ருஜ் என்னும் சொல்லொடு பொருத்திக் காட்டுவர். அதற்கு விடு, எறி, வீசு, வெளிவிடு என்ற பொருள்களே உண்டு.*

*சருக்கு – சருக்கரம் – சக்கரம். சக்கரம் = 1. வட்டம் (பிங்.). 2. உருளி (சூடா.). 3. குயவன் சக்கரம் ''சக்கரந்தான் சுழற்றத்தகுங் குயத்தி'' (சிவப். பிரபந். பிக்ஷாடன. 6). 4. சக்கரப் படைக்கலம். ''சக்கரக்கை மன்னுயிர் முதல்வன்'' (மணிமே. 13 : 57). 5. ஆட்சிச் சக்கரம். ''வழுக்கில் சக்கரம் வலவயி னுய்க்கும்'' (பெருங். வத்தவ. 5 : 106). 6. சக்கரக் கட்டு (சக்கர பந்தம். தண்டி. 94). 7. சக்கர மாற்று. ''சக்கரஞ் சீர்த்தமிழ் விரகன்'' (தேவா. 146 : 12). 8. சக்கர அணிவகுப்பு (சீவக. 757, உரை). 9. பழைய வெள்ளிக் காசுவகை. ''சால்பு திருவையாற்றுச் சக்கரமென்றும்'' (பணவிடு. 14). 10. சக்கரவடிவம் பொறித்த காசு. 11. ஒரு நெசவுக்கருவி. 12. கொலைத் தண்டனைச் சக்கரம். 13. சகோரப்புள் (சூடா.). 14. திரிகை. 15. செக்கு. ''தயில வினைத்தொழின் மரபிற் சக்கரப் பாடித் தெருவு'' (பெரியபு. கலியனா. 5). 16. சக்கரவாளம். 17. ஞாலம் (பிங்.). 18. கடல் (சூடா.). 19. பிறவித் தொடர்ச்சி (சூடா.). 20. அறுபதாண்டுக் காலம்.*

*செக்கு வட்டமாயிருத்தலாலும் வட்டமாய் எள்ளாடுதலாலும் சக்கரம் எனப்பட்டது. செக்காரக் குடியைச் ''சக்கரப்பாடித் தெருவு'' என்று பெரியபுராணம் கூறுதல் காண்க.*

*சக்கரம் (ஆழி) –* Gk. kuklos, E.cycle. *வ. சக்ர*(c). *சருக்கரம் – சருக்கரை – சர்க்கரை – சக்கரை = வட்டமாக வார்க்கப்பட்ட வெல்லக்கட்டி.*

*ஒ.நோ : வட்டு = வட்டமான கருப்புக்கட்டி.*

*சருக்கரம் – சருக்காரம் – சக்காரம் (மூ. அ.) = சருக்கரைபோல் இனிக்கும் தேமா. இன்றும் சர்க்கரைக்குட்டி என்று ஒரு மாங்கனிப் பெயர் வழங்குதல் காண்க.*

*சக்காரம் – அக்காரம் = சருக்கரை. ''அக்கார மன்னார்'' (நாலடி. 374).*

*அக்காரடலை (அக்காரவடலை), அக்காரவடிசில் என்பன சருக்கரைப் பொங்கல் வகைகள்.*

*பதநீரை (தெளிவை) அக்காரநீர் என்பது நாஞ்சில்நாட்டு வழக்கு.*

*அக்காரம் என்று மாங்கனிக்கும் பெயர். அக்காரக்கனி நச்சுமனார் என்னும் புலவர் பெயர் அக் கனியைப் பாடியதனால் வந்தது போலும்!*

*சக்கரம்– (சக்கு)– செக்கு = எண்ணெயாட்டும் வட்டமான பேருரல். செக்கு– செக்கான் = எண்ணெய் வாணியன்.*

*ச – செ. ஒ.நோ: சத்தான் – செத்தான். சற்றே பொறு – செத்த (கொச்சை) பொறு. சருமன் (வ.)– செம்மான்.*

*சக்கு – சக்கடம் – சக்கடா = கட்டைவண்டி.* **தெ.** *செக்கடாபண்டி. சக்கரத்தின் பெயர் அதை யுறுப்பாகக் கொண்ட ஊர்திக்கு ஆகிவந்தது சினையாகுபெயர். ஒ.நோ : வண்டி = சக்கரம், சக்கரத்தையுடைய ஊர்தி. இன்றும், கமலை வண்டி, வண்டி யுருட்டுதல் என்னும் வழக்குகளை நோக்குக.*

*சக்கடம்– சகடம் = 1. சக்கரம். 2. வண்டி. ''பல்கதிர் முத்தார் சகடம்'' (சீவக. 363). 3. தேர். ''சகட சக்கரத் தாமரை நாயகன்'' (கந்தபு. காப்பு. 1). 4. தேர்வடிவ அணிவகுப்பு. ''சகடமாம் வெய்ய யூகமும்'' (பாரத. எட்டாம். 3). 5. ஒரு நாண்மீன் (பிங்.). 6. முரசு (பிங்.). 7. வட்டில் (பிங்.).*

*சகடம்– சகடு– சகடி = வண்டி. சகடி– சகடிகை = கைவண்டி. சகடம் –* **வ.** *சகட்ட. சகடி –* **வ.** *சகட்டீ,* **பிரா.** *சாட்டீ. சகடிகை –* **வ.** *சகட்டிகா.*

*சகடு – 1. வண்டி ''பெருஞ்சகடு தேர்காட்ட'' (பெரியபு. திருநா. 6.). 2. தேரைக் குறிக்கும் சூதரங்குக்காய். 3. ஒரு நாண்மீன். ''வானூர் மதியஞ் சகடணைய'' (சிலப். 1 : 50). ம. சகடு. சகடு என்னும் வடிவம் வடமொழியில் இல்லை.*

*சகடு – சாகாடு = வண்டி. ''பீலிபெய் சாகாடும்'' (குறள். 476).*

*சகடு – சாடு = வண்டி. ''குறுஞ்சாட் டுருளை'' (பெரும்பாண். 188).*

*ம. சாடு. சாடு – சாடுகம் = வண்டி.*

*சகடு – சகடை = 1. வண்டி (புறம். 60 : 8, உரை). 2. பெருமுரசு. ''சகடையோ டார்த்த வன்றே'' (கம்பரா. பிரமாத்திர. 5). 3. அமங்கலச் சிறுபறை.*

*சகடை – சகண்டை = பெருமுரசு (பிங்.).*

*சகடம் – சகோடம் = 16 நரம்பு கொண்ட யாழ் (சிலப். 3 : 26, உரை).*

*சகோடம் – சகோரம் = சக்கரப்புள் (திவா.). சகோரம் –* **வ.** *சக்ர.*

*சக்கு – சங்கு = 1. உள் வளைந்துள்ள நந்துக்கூடு. ''சங்குதங்கு தடங்கடல்'' (திவ். பெரியதி. 1 : 8 : 1). 2. சங்கு வடிவான ஐம்படைத்தாலி யுரு (சூடா.). 3. சங்கு வடிவான வரை (திவா.). 4. சங்கினாற் செய்த கைவளை. ''சங்கமரு முன்கை மடமாதை'' (தேவா. 89 : 1). 5. சங்கு போன்ற ஊட்டி என்னும் மிடற்றுறுப்பு. 6. மிடற்றில் இயல்பாக எழும் குரல் என்னும் இசை (திவா.). 7. சங்கு வளைவுகளால் அல்லது முட்களால் ஏற்பட்ட பேரெண். ''சங்குதரு நீணிதியம்'' (சீவக. 493). 8. பேரெண் கொண்ட போர்ப் படை (சூடா.). 9. பெருவிரல் நிமிர மற்ற நால்விரல்களும் வளைந்து நிற்கும் இணையாவினைக்கை வகை (சிலப். 3 : 18, உரை). சங்கு வடிவான தலையுடைய கோழி (அக. நி.).* **ம.** *சங்கு.*

*சங்கு உள்வளைந்திருப்பதால் – கோடு, சுரிமுகம், புரி, வளை, வாரணம் என்னும் அதன் பெயர்களெல்லாம் வளைவுக் கருத்தையே வேர்ப்பொருளாகக் கொண்டிருப்பது கவனிக்கத்தக்கது. வலம்புரி = வலமாக வளைந்தது. இடம்புரி = இடமாக வளைந்தது.*

*சங்கு – சங்கம் = 1. பெரிய சங்கு. ''அடுதிரைச் சங்க மார்ப்ப'' (சீவக. 701). 2. சங்குக் கைவளை. ''சங்கங் கழல'' (இறை. 39, உரை). 3. ஊட்டி (குரல்வளை). 4. இலக்கங்கோடி என்னும் எண். ''நெய்தலுங் குவளையு மாம்பலுஞ் சங்கமும்'' (பரிபா. 2 : 13). 5. 2187 தேரும் 2187 யானையும் 6571 குதிரையும் 10,935 காலாள்களுங் கொண்ட போர்ப்படை (பிங்.). 6. பேரெண் கொண்ட பொக்கசம். சங்கம் –* **வ.** *சங்க* (kh).

*'சக்கரம்' முதல் 'சங்கு' வரை குறிக்கப்பட்ட சொற்களெல்லாம் வளைவுக் கருத்தடிப்படையில் ஒரே தொடர்புடையனவாயிருத்தல் காண்க.*

*சக்ர என்னும் வடசொல் வடிவிற்கு வடமொழியாளராற் குறிக்கப்பட்டுள்ள மூலம் க்ரு (செய்) என்பதே. மானியர் வில்லியம்சு சமற்கிருத – ஆங்கில அகரமுதலி சர்* (car) *என்னும் சொல்லை வினாக்குறிப்புடன் குறித்துள்ளது. இவ் விரண்டுள், முன்னதன் பொருந்தாமையையும் பின்னதன் வன்புணர்ப்புத் தன்மையையும், அறிஞர் கண்டு கொள்க. மா. வி. அ.* ''Of doubtful derivation'' *என்று குறித்திருத்தலையும் நோக்குக.*

'அம்' பெருமைப்பொருட் பின்னொட்டாதலால், இலக்கண நெறிப்படி, சங்கம் என்பது பெருஞ் சங்கையே குறிக்கும். சங்கு என்னும் இயல்பான வடிவு வடமொழியிலின்மை, அது வடசொல் லன்மையை யுணர்த்தும்.

சுர்– சூர். சூர்த்தல் = சுழலுதல். ''சூர்த்த நோக்கு''.

சூர் = சூர்ப்பு = 1. சுழற்சி. 2. கைக்கடகம். ''சுடர்விடு பசும்பூட் சூர்ப்பமை முன்கை'' (புறம். 153 ஃ 3).

சூர்ப்பு – சூர்ப்பம் = வளைந்த முறம் (பிங்.). **வ.** சூர்ப்ப.

சூர்– சூரல் = சுழித்தடிக்கை. ''சூரலங் கடுவளி யெடுப்ப'' (அகம். 1).

சுர் – சுறு – சுற்று. சுற்றுதல் = 1. வளையக் கட்டுதல். ''சுற்றுஞ் சடைக்கற்றைச் சிற்றம்பலவர்'' (திருக்கோ. 134). 2. உடுத்துதல். ''கூறையைச் சுற்றி வாழினும்'' (நாலடி. 281). 3. வளையச் சூடுதல். ''குடர்நெடு மாலை சுற்றி'' (திருவாச. 6 ஃ 30). 4. சுருட்டுதல். பாயைச்சுற்று (உ. வ.). 5. சுழற்றுதல். சிலம்பஞ் சுற்றுகிறான். (உ. வ.). 6. சூழ்ந்திருத்தல். ''தோகை மாதர்கள் மைந்தரிற் றோன்றினர் சுற்ற'' (கம்பரா. பிணிவீட். 45). 7. வளைந்து பற்றுதல். ''காலிற் சுற்றிய நாகமென்ன'' (கம்பரா. நீர்விளை. 11). 8. சுற்றியியங்குதல். கடிகாரத்தில் நிமைய முள் ஒரு மணிக்கு ஒரு முறை சுற்றிவரும். (உ. வ.). 9. சுற்று வழியிற் செல்லுதல். 10. அங்குமிங்கும் அலைதல். 11. சுழன்று செல்லுதல். ஞாலம் ஒரு நாளைக்கு ஒரு முறை சுற்றும். (உ. வ.). 12. கிறுகிறுத்தல். பித்தத்தினால் தலை சுற்றுகிறது. (உ. வ.).

**ம.** சுற்று, **க.**, **து.** சுத்து, **தெ.**த்சுட்டு.

சுற்று – சுற்றம் = 1. சூழவிருக்கும் உறவினர். 2. தலைவியின் தோழிமார் கூட்டம். ''தொடிமாண் சுற்றமு மெம்மு முள்ளாள்'' (அகம். 17). 3. அரசனின் உறுதிச் சுற்றம் அல்லது பரிவாரம்.

**ம.** சுற்றம், **தெ.** த்சுட்டமு.

திருச்சுற்று = கோவிலின் சுற்றுத்தெரு.

சுறு – சூறு. சூறுதல் = சூழ்தல். ''சூறிய விமையோர்'' (பாரத. காண்டவ. 31).

சூறு – சூறை = 1. சுழல்காற்று. ''சூறை மாருதத்து'' (திருவாச. 3 ஃ 10). 2. சுழல்காற்றுப் போல் வாரிக்கொண்டு போம் கொள்ளை.

சூறை (கொள்ளை) – க. சூறெ, து.சூரெ, தெ. சூர (c). சூறாவளி = சூறைக்காற்று.

# 12

## சுல்[5] (துளைத்தற் கருத்துவேர்)

சுல் ஃ சுல்– சூல். சூலுதல் = 1. தோண்டுதல்.

''நுங்குசூன் றிட்டன்ன கண்ணீர்மை'' (நாலடி. 44).

2. அறுத்தல் (யாழ்ப்.)

அறுத்தலும் ஒருவகைத் துளைத்தலே. கத்தியால் நீட்டுப் போக்காகப் பன்முறை முன்னும் பின்னும் இழுத்துத் துளைத்தல் அறுத்தலும், செங்குத்தாக ஒரே அறையில் துளைத்துத் துணித்தல் அல்லது சிறிது துளைத்தல் வெட்டுதலும் ஆகும்.

சுல்– (சுன்)– சுனை = 1. உட்டுளையினின்று நீர் வருவது போன்ற நீரூற்று. 2. நீரூற்றுள்ள மலைக்குண்டு.

''வான்க ணற்றவன் மலையே வானத்து
மீன்க ணற்றதன் சுனையே'' (புறம். 109)

3. நீரூற்றுள்ள பொய்கை (பிங்.).

சுனை– தெ. சொன, க. தொன. சுன்– சூன் = இரு வீட்டுச்சுவர்களின் இடைச்சந்து.

சுனை – (சொனை) – சோனை = 1. வானத்தினின்று நீரூற்றுச் சொரிவது போன்ற விடாப் பெரும் பெயல். ''மேகஞ் சோனைபட'' (கம்பரா. அயோத்தி. குகப். 20) . 2. (சோனையாகப் பொழியும்) கார்முகில். ''சோனைவார் குழலினார்'' (கம்பரா. பால. நீர்விளை. 14). 3. மலையடிவார விடா மழைச்சாரல்.

தெ. சோன, க. சோனெ.

சோனைமாரி– சோனாமாரி– சோனாவாரி = விடாப் பெருமழை. ''சோனாமாரியாய்ச் சொரிகிறதே' என்பது உலக வழக்கு. ''சோனை மாரியிற் சொரிந்தனன்'' (கம்பரா. யுத்த. பிரமாத். 59).

சோனை – சோனம் = முகில். ''சோனந்தரு குழலார்'' (பதினொ. ஆளு. மும். 12). தெ. சோன, க.சோனெ.

சோனை மேகம் = பெரு மழைமுகில். ''சொரிந்தது சோனை மேகம்'' (பாரத. சம்பவ. 79).

சோனைமேகம் – சோனாமேகம். ''சோனா மேகம் பொழிவதுபோல்'' (பாரத. பதினேழாம். 135).

சுல் – (சுர்) – சுர. சுரத்தல் = 1. உட்டுளையினின்று ஊறுதல் போற் பால் சுரத்தல். 2. பால் சுரத்தல்போல் மழை பொழிதல்.

''மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்
நாமநீர் வேலி யுலகிற் கவனளிபோல்
மேனின்று தான்சுரத்த லான்'' (சிலப். 1 : 9)

3. மழை பொழிதல்போல் இறைவன் அருள்பொழிதல். ''ஆழியா னவனை நோக்கி யருள்சுரந்து'' (கம்பரா. யுத்த. விபீடண. 142).

4. மிகக் கொடுத்தல். ''நெடுந்தேர் களிறொடு சுரக்கும்'' (அகம். 249). 5. (மிகக் கொடுத்தலால்) நிறைதல். ''விருப்பஞ் சுரந்த சிலந்தி முடிசூட்டும் பெருமான்'' (திருவானை. உலா. 60). 6. உடம்பில் நோய்நீர் பெருகி வீங்குதல்.

சுர – ம. சுரத்து, க. ஒசர்.

சுர – சுரப்பு = 1. ஊறுகை. ''சுரப்புறு சிறைப்புனல்'' (அரிச். பு. விவாக. 107). 2. ஊற்று. 3. கறக்குமாறு ஆவின் மடியிற் பாலூறுகை, 'ஒரு சுரப்பு ஆகிவிட்டது' (உ. வ.). 4. கெட்ட நீரால் ஏற்பட்ட வீக்கம். 'காலிற் சுரப்பு உண்டாயிருக்கிறது' (உ. வ.).

சுரப்பு – சுரப்பி = நன்றாக அல்லது நிரம்பப் பால் சுரக்கும் ஆ (வு).

ஒ.நோ : கறவை = கறப்பு, கறக்கும் ஆவு. சுரை = சுரப்பு, சுரக்கும் ஆவு.

சுரப்பி – வ. சுரபி (surabhi). வடமொழியில் சுரபி என்னுஞ் சொற்கு மூலமில்லை. சு – ரப். su-rabh = pleasantly affecting என்று மானியர் வில்லியம்சு சமற்கிருத – ஆங்கில அகரமுதலி உன்னிப்பாகக் கூறும்.

சுர – சுரம் = உட்டுளை.

சுர – சுரங்கு – சுரங்கம் = 1. நிலவறை. 2. கீழறுக்கும் அறை. 3. திருடர் கன்னமிடச் சுவரில் துளைக்கும் துளை. 4. பாறைகளை உடைக்க வெடிமருந்து வைக்கும் குழி.

*சுரங்கம் — சுரங்கா (வ.).*

*சுர்— சுரி. சுரித்தல் = துளையிடுதல்.*

*சுரி = 1. துளை (திவா.). 2. ஏட்டுத்துளை. ம. சுரி. 3. ஏட்டில் துளையிடுங் கருவி.*

*சுரியூசி = ஏட்டில் துளையிடுங் கருவி.*

*இச் சொல் முந்தின குத்தற்பொருட் கட்டுரையிலும் குறிக்கப் பட்டது. குத்தலும் துளைத்தலும், கலத்தை நீர்மேல் வைத்தலும் அதற்குள் முழுக்குதலும் போன்ற, நெருங்கிய அல்லது அடுத்து நிகழும் வினைகள் என்றறிதல் வேண்டும். அதனால், ஒரே சொல் இரண்டையுங் குறிக்கும். ஆயினும், கருவி வேறுபாட்டால் வினை வேறுபடும். கையினால் முதுகிற் குத்துவது தொடுதலின் பாற்பட்டது; கத்தியினால் அதில் அல்லது வேறுறுப்பிற் குத்துவது துளைத்தலின் பாற்பட்டது. ஆதலால், துளைக்குங் குத்தல் வினைச்சொற்க ளெல்லாம் இக்கட்டுரைக்கே யுரியவையெனப் பிரித்துணர்க. குடைச்சற் கருத்தைக் கொண்ட சூலைநோய்ப் பெயரும், அணி வகைத் துளைத்தலைக் குறித்தலால் இக் கட்டுரைக்கே யுரியதாகும்.*

*சுர்— சுரு— சுருங்கு = சாய்கடை* (gutter) *(பிங்.).*

*சுருங்கு —* **வ.** *சுருங்கா.*

*சுருங்கு — சுருங்கை = 1. நுழைவாயில் (பிங்.) 2. மாளிகையின் சாளரம். ''மாடமேற் சுருங்கையிலிருந்து...... மாநகரணி பார்த்திடும்'' (சீகாளத் பு. நக்கீர. 30). 3. புதைசாலகம். ''பெருங்குள மருங்கிற் சுருங்கைச் சிறுவழி'' (மணிமே. 12 : 79). 4. கோட்டையில் மறைவான கீழ்நில வழி. (சூடா.). ''போக வமைத்த பொய்ந்நிலச் சுருங்கையுள்'' (பெருங். 2 : 17 : 94).*

*சுருங்கை —* **வ.** *சுருங்கா.*

*ஒ.நோ :* Gk. surigx, surigg *= குழாய்.* L., E. sgrinx = *நாணற்குழல்.* L. siringa, E. syringe = *உறிஞ்சி (உறிஞ்சுகுழாய்).*

*சுரு — சுருவம் = 1. அகப்பை வகை (அக.நி.). 2. நெய்த்துடுப்பு. ''சீரைச் சுருக்குச் சுருவமெலாம்'' (உத்தரரா. அனுமப். 41).*

*சுருவம் —* **வ.** *ஸ்ருவ.*

*சுரு — சுருவை = நெய்த்துடுப்பு. ''அந்தணாளர்க்குச் சுருவை யும்'' (தொல். பொருள் 629, உரை).*

*ஒ.நோ : முள் — முழு — முழுகு. முழு — மூழை = அகப்பை. முழுகுதலும் துளைத்தல் வகையே.*

*சுர – சுரை = 1. குழிந்த இடம். ''பாத்திரத் தகன்சுரைப் பெய்த வாருயிர் மருந்து'' (மணிமே. 11 : 117). 2. உட்டுளை (பிங்.). 3. மூங்கிற் குழாய். ''அகன்சூ லஞ்சுரைப் பெய்த வல்சியர்'' (அகம். 113). 4. திரிக் குழாய். ''சொரிசுரை கவருநெய்'' (பதிற். 47). 5. திருகாணியைச் செலுத்துஞ் சிறு குழாய். 6. மூட்டுவாய். ''சுரையம்பு மூழ்க.'' (கலித். 6). 7. பூண். ''செறிசுரை வெள்வேல்'' (அகம். 216). 8. தோண்டும் கூரான பாரைவகை. ''உளிவாய்ச் சுரையின் மிளிர மண்டி'' (பெரும்பாண். 92). 9. நெற்றானபின் உட்டுளையுள்ள காய்வகை. ''சுரைவித்துப் போலுந்தம் பல்'' (நாலடி. 315). **ம.** சுர, **க.** சொரெ. 10. நுண்ணிய துளையினின்று சுரக்கை. ''கடுஞ்சுரை நல்லான்'' (குறுந். 132). **க.** சொரெ. 11. மான்மரை மறி ஆன் முதலியவற்றின் பான்மடி. ''வருடை மான்மறி சுரைபொழி தீம்பால்'' (குறுந். 187). 12. கறக்கும் ஆ (திவா.). ''சுரைமலி யமிர்தத் தீம்பால்'' (சூளா. தூது. 90).*

*சுள் – சுளி – (சுகி) – சுகிர். சுகிர்தல் = 1. கிழித்தல். ''பல்லினாற் சுகிர்ந்த நாரின்'' (சீவக. 438). 2. மயிர், நார் முதலியவற்றை வகிர்தல். சுகிர் = உட்டுளை (சூடா.).*

*சுர் – (சூர்) – சூறு = எருவாய்* (anus). *சூறு – சூற்று – சூத்து = 1. எருவாய் (மலவாயில்). 2. புட்டம். ''சூத்தி லடித்தானாம், பல்லுப் போச்சாம்'' (பழமொழி).*

**ம.** *சூத்து,* **வ.** *சுத்து* (c), *சூத்து* (c), *சுத்தீ* (c). *வடமொழியில் இதற்கு மூலமில்லை. தமிழில் மூலம் தெளிவாகவுள்ளது. சூறல் (சூலுதல்) = தோண்டுதல். சூறு = துளை, எருவாயில். இங்ஙன மிருந்தும், சூத்து என்னும் தென்சொற்குச் சுத்தீ என்னும் வடசொல்லை மூலமென்று தலைகீழாகச் சென்னைப் ப. க. க. த. அகரமுதலி* (Lexicon) *காட்டியிருப்பது எத்துணைக் குறும்புச் செய்தியாம்!*

*சூத்தழகி = குரங்குச் சூத்து மாம்பழம்.*

*சூத்தாங் கரடு = எருவாயின் தடிப்பு.*

*சூத்தாட்டி = வலியான் என்னும் ஒருவகைக் குருவி.*

*சூத்தாம்பட்டை = புட்டம்.*

*சூத்தெரிச்சல் = எருவாய் காந்துதல்.*

*இடக்கர் வினைச் சொற்களும் வழக்குகளும் இங்கு விடப்பட்டுள்ளன. இவ் வழக்குகளுள் ஒன்றேனும் வடமொழியில் இல்லை.*

*சுல் – சொல் – சொலி. சொலித்தல் = 1. தோண்டுதல். 2. பிளத்தல். 3. உரித்தல். ''காம்பு சொலித்தன்ன அறுவை' (சிறுபாண். 236). 4. பெயர்த்தல். ''திங்க ளுகிரிற் சொலிப்பதுபோல்'' (சீவக. 350).*

*சொல்லுதல் = தீர்த்தல். ''துணைவனுக் குற்ற துன்பஞ் சொல்லிய தொடங்கி னாளே'' (சீவக. 1146).*

*சொலி = உரி, தொலி, பட்டை. ''கழைபடு சொலியி னிழையணி வாரா'' (புறம். 383).*

*சொல் – சொள் – சொள்ளை = 1. துளை. 'ஒற்றைக் கடுக்கன் சொள்ளை' (உ. வ.) 2. உள்ளீடற்ற சொத்தை. 3. பள்ளமான அம்மைத் தழும்பு. 'அம்மைச் சொள்ளை' (உ. வ.). 4. குற்றம்.*

*சொள்– சொள்ளல் = குற்றம்.*

*சொள்– சொண்டு = சொத்தை மிளகாய்.*

*சொண்டு – சொட்டு = குற்றம். சொட்டு – சொட்டை = சொத்தை, குற்றம். சொட்டை – சொத்தை = 1. உள்ளீடற்றுக் கறுத்த பழம். 2. புழுத்த காய். 3. பூச்சியரித்த பல்.*

*சொத்தை– சூத்தை (கொச்சை வழக்கு).*

*சொள்– சொளு. சொளுசொளுத்தல் = எளிதாய்த் துளைக்கு மாறு கூழ்போற் குழைதல், சேறாதல். ஒ.நோ ஃ நொள் – நொளு. நொளுநொளுத்தல்.*

*சொளுசொளுவெனல் = நெய் தேன் முதலியன வடிதல், சொள் (சொள்ளு) = சாளைவாயினின்று வடியும் நீர்.*

*சொளுசொளு – சொலுசொலு. சொலுசொலெனல் = சோறு குழைதல்.*

*சொளுசொளு – சொதுசொது. சொதுசொது வெனல் = சேறுபோற் குழைந்திருத்தல்.*

*சொது – சுது – சுதை = சேறுபோன்ற சுண்ணாம்பு அல்லது சிப்பிச் சாந்து. சுதை – வ.* (sudha).

> *''ஒளியார்முன் ஒள்ளிய ராதல் வெளியார்முன்*
> *வான்சுதை வண்ணங் கொளல்'' (குறள். 714).*

*என்று திருவள்ளுவரும்,*

> *''வெள்ளி வெண்சுதை யிழுகிய மாடத்து''(மணிமே. 6 ஃ 43)*

*என்று சீத்தலைச்சாத்தனாரும் கூறுவதால், சுதையென்பது தென் சொல்லே.*

சுது – சது – சதுப்பு = சேற்றுநிலம்.

சொள் – (சோள்) – சோளி = இரப்போன் பெரும்பை.

**து.** ஜோலி, **இ.** ஜோலீ.

சோளி – சோளிகை = இரப்போன் பெரும்பை. ''ஒருவன் மாளிகைக்காரனாக இருக்கவேண்டும்; ஒருவன் சோளிகைக்காரனாக இருக்கவேண்டும்'' (பழமொழி).

**க.** ஜோலிகெ, **து.** ஜோலிகெ, **தெ.** த்ஜோலிய.

ஒ.நோ ஃ பொள் – பொய் – (பய்) – பை = துளை, துளையுள்ளது, துளைபோலத் தையல் கொண்டது.

சொள் – (சொர்) – சொருகு. சொருகுதல் = துளைக்குள் இடுதல், உள்ளிடுதல். சொருகு – செருகு.

சொள் – (சொர்) – சொரி. சொரிதல் = உள்ளிருந்து விழுதல், சிந்துதல்.

சொள் – சோள் – சோர். சோர்தல் = 1. குழைதல். 2. தளர்தல். ''கடியு மிடந்தேற்றாள் சோர்ந்தனள் கை'' (கலித். 92 ஃ 50). 3. மனந்தளர்தல். 4. மயக்கமடைதல். ''அரசன் சோர்ந்தான்'' (கம்பரா. அயோத். தைல. 59). 4. துயர்தல். 5. வாடுதல். ''எரியிதழ் சோர்ந்துக'' (கலித். 78). 6. மெலிதல். ''காம்பேர் தோளி கண்டுசோர்ந்தன்று'' ஃ (பு.வெ. 11, பெண்பாற். 1, கொளு). 7. தள்ளாடுதல். ''கோலூன்றிச் சோர்ந்த நடையினராய்'' (நாலடி. 13). 8. வடிதல். ''அயறு சோருமிருஞ் சென்னிய'' (புறம். 22 ஃ 7). 9. கழிதல். ''மலஞ்சோரு மொன்பது வாயில்'' (திருவாச. 1 ஃ 54). 10. கழலுதல். ''பைந்தொடி சோரும்'' (குறள். 1234). 11. நழுவுதல். ''துகிலிறையே சோர்ந்த வாறும்'' (திருவாச. 5 ஃ 57). 12. விழுதல். 13. விட்டுநீங்குதல். 'சூதரைச் சோர்த லினிது'' (இனி. நாற். 24). 14. இறத்தல். ''பாலகன்றான் சோர'' (சிலப். 9 ஃ 6).

ம. சோருக, க. சோர், தெ. சோலு.

சோர் – சோர்வு = சொரிகை. வான்சோர் வினிதே'' (இனி. நாற். 16).

சோர் – சோரி = சிந்தும் அரத்தம். ''ஓசைச் சோரியை நோக்கினன்'' (கம்பரா. கிட்கிந். வாலிவதை. 69.). ம. சோரி.

சோரியிளநீர் = செவ்விளநீர். (பதார்த்த. 69). சோரத் தேய்த்தல் = உடம்புள் எண்ணெய் இறங்கத் தேய்த்தல். சோரப் பெய்தல் = பெருமழையாகப் பொழிதல்.

*சோரப் போடுதல் = ஆறவிடுதல், தணியவிடுதல். சோரா வொற்றி = மீளா (தளரா) வொற்றி. (நாஞ்சில்நாட்டு வழக்கு).*

*இவ் வழக்குகள், மேற்குறித்த பொருள்களின் நுண்வகை களான கருத்துகளைத் தழுவினவாகும்.*

13

# துல்[1] (பொருந்தற் கருத்துவேர்)

துல்– துல்லியம் = ஒப்பு. ''அவனுக்கு இவன் துல்லியம்'' (தத்துவப். அளவை. 3, உரை). 2. சரி. 'துல்லியமாய்ச் சொன்னான்' (உ. வ.). 3. ஒப்பக் கையெழுத்து 'அரசரின் துல்லியஞ் சார்த்தின நீட்டு' (நாஞ். வ.).

துல் – துலம் = 1. ஒப்பு. 2. இருபுறமும் ஒத்த நிறைகோல். 3. துலாநிறை. 4. கனம்.

துல்– துலா = 1. நிறைகோல். 2. ஏற்றம். 3. வண்டியின் ஏர்க்கால். 4. துலாக்கட்டை. 5. துலாவோரை. 6. தூண் மேலுள்ள போதிகையின் கீழ் வாழைப்பூ வடிவிலமைந்த அணியுறுப்பு. வ. துலா.

கைத்துலா = கையினால் ஒருவனே ஒலைப்பட்டையில் நீரிறைக்கும் சிறிய ஏற்றம். ஆளேறுந்துலா = பலர் குறுக்கு மரத்தில் ஏறிநின்று முன்னும் பின்னும் உலவ, கூந்தற் பனையடியிற் குடைந்த சாலில் ஒருவன் நீரிறைக்கும் பெரிய ஏற்றம்.

துலா – துலாம் = 1. நிறைகோல். 2. ''நாஞ்சிலுந் துலாமு மேந்திய கையினன்'' (சிலப். 22 : 66). 3. துலாவோரை (பிங்.). 4. துலா (ஐப்பசி) மாதம். 5. உத்தரக்கட்டை. ''செந்தனி மணித்துலாஞ் செறிந்த திண்சுவர்'' (கம்பரா. நகரப். 30). 6. துலாக் கட்டை. 7. தூண் மேலுள்ள பொதிகையின்கீழ் வாழைப்பூ வடிவிலமைந்த அணியுறுப்பு (பெருங். உஞ்சைக். 37 : 102, உரை). 8. ஏற்றம். 9. நூறு பலம் அல்லது ஐந்து வீசை கொண்ட நிறை.

**ம.** துலாம், **வ.** துலா.

துல் – துலை = 1. ஒப்பு. ''தோல்வி துலையல்லார் கண்ணும் கொளல்'' (குறள். 986). 2. நிறைகோல். ஞான மாத்துலை'' (ஞானா. 31 : 11). 3. துலையோரை. ''இடபமரிதுலை வான் கடகம்'' (சிலப். 3 : 123, உரை). 4. துலைநிறைத் தானம் ''மருவுந் துலையாதி யாமே வருகொடை''

*(சேதுபு. அனுமகுண். 8) 5. ஏற்றம். 6. நூறுபலங் கொண்ட நிறை. 7. கனம். துலை–* **வ.** *துலா.*

*துல்– துன். துன்னுதல் = 1. பொருந்துதல். 2. அணுகுதல். ''யாவருந் துன்னல் போகிய துணிவினோன்'' (புறம். 23). 3. செறிதல். ''துன்னிக் குழைகொண்டு தாழ்ந்த குளிர்மர மெல்லாம்'' (நாலடி. 167). 4. அடைதல். ''துன்னருஞ் சீர்'' (நாலடி. 226). 5. மேவுதல். ''துன்னாமை வேண்டும் பிறன்கட் செயல்'' (குறள். 316). 6. தைத்தல்.*

*''நீயிங் குடுத்திய கந்தையைத் துன்னுவா ரிலையோ'' (அருட்பா.* I, *சாட்சிப்பெரு. 4).*

*துன்னார் = பகைவர். ''தொல்லமருட் டுன்னாரைச் செற்றும்'' (கம்பரா. சரபங்க. 26).*

*துன்னியார் = நண்பர். ''மன்னர் திருவு மகளிர் எழினலமுந் துன்னியார் துய்ப்பர்'' (நாலடி. 167).*

*துன்னு = உடம்பிற் பொருந்திய தசை.*

*துன்னல் = தையல். ''துன்னற் சிதாஅர் துவர நீக்கி'' (பொருந. 81). துன்னம் = தையல். ''இழைவலந்த பஃறுன்னத்து'' (புறம். 136).*

*துன்னர் = தையற்காரர் (பிங்.). துன்னகாரர் = தையற்காரர். ''துன்ன காரருந் தோலின் றுன்னரும்'' (சிலப். 5 : 32).*

*துன்– துன்று. துன்றுதல் = 1. பொருந்துதல். ''கொன்றை மதியமுங் கூவிள மத்தமுந் துன்றிய சென்னியர்'' (திருவாச. 17 : 10). 2. நெருங்குதல். ''துன்றுகரு நறுங்குஞ்சி'' (கம்பரா. குகப். 28). 3. கிட்டுதல்.*

*துன்– தும்– துமல்– துவல். துவலுதல் = நிறைதல்.*

*துவல் – துவன்று. துவன்றுதல் = 1. நெருங்குதல். ''வானம் வெளியறத் துவன்றி'' (கம்பரா. நாகபா. 97). 2. கூடியிருத்தல். ''ஏமஞ் சான்ற மக்களொடு துவன்றி'' (தொல். பொருள் 192). 3. குவிதல். ''அகன்கட் பாறைத் துவன்றி'' (மலைபடு. 276).*

*துவன்று = நிறைவு. ''துவன்று நிறைவாகும்'' (தொல். 815).*

*துல்– துறு. துறுதல் = 1. நெருங்குதல். ''துறுமல ரவிழ்குழ லாய்'' (சிலப். 7 : 42). 2. அடைதல். ''சோர் பொழு தணிநகர் துறுகு வர்'' (கம்பரா. திருவவ. 132). 3. குவிதல். 4. கூடுதல்.* **க.** துறுகு (g).

*துறு – துறுமு. துறுமுதல் = நெருங்குதல். ''நறுமலர் துறுமி'' (பெருங். இலாவாண. 15 : 6).*

துறுமு – துறும்பு. துறும்புதல் = நெருங்குதல். ''கொன்றையு நாகமுந் துறும்பு செஞ்சடை'' (தேவா. 370 : 5).

துறு – துறை = 1. பலர் கூடுமிடம். 2. பலர் கூடிக் குளிக்கும் நீர்த்துறை. ''தண்புனற் றுருத்தியுந் தாழ்பூந் துறைகளும்'' (மணிமே. 1 : 65). 3. வண்ணார் கூடித் துவைக்கும் வண்ணான் துறை. ''துறைச்செல்லா ளூரவ ராடைகொண் டொலிக்குநின் புலைத்தி'' (கலித். 72 : 13). 4. கடற்றுறை. ''துறைவளர் நாட்டொடு'' (சீவக. 1618). 5. துறைநகர். 6. கல்விக் கடலின் துறைபோன்ற கலை அல்லது அறிவியல். 7. கலைப் பிரிவு அல்லது கல்விப் பகுதி. 8. பகுதி. 'வீர ராயவர் புரிவ தாண்மைத் துறையென லாயிற் றன்றே'' (கம்பரா.). 9. தமிழ்ப் பொருளிலக்கணத்தில் அகமும் புறமும்பற்றிய பொருட் கூறு. ''ஒண்டூந் தமிழின் துறைவாய் நுழைந்தனையோ'' (திருக்கோ. 20). 10. பொருட்டுறைபற்றி வரும் செய்யுள் வகை. 11. மூவகைப் பாவினத்துள் ஒன்று.

துறைபோதல் = 1. ஒரு கல்வித் துறையில் முழுத் தேர்ச்சி பெறுதல். 2. எடுத்த கருமத்தில் வெற்றி பெறுதல். ''எண்ணியவை யெல்லாந் துறைபோத லொல்லுமோ'' (கலித். 67).

துறுகல் = 1. திரண்ட கல், பாறை, ''வேழ மிரும்பிணர்த் துறுகற் பிடிசெத்துத் தழூஉம்'' (ஐங். 239). 2. குன்று. ''துறுக லேறி'' (ஐங். 210).

துறு– துறுத்து (பி. வி.). துறுத்தல் = திணித்தல். ''வாயிலே சீரையைத் துறுத்து'' (ஈடு. 9 : 9 : 1).

**ம.** துறு, **க.** துறுகு, **தெ.** துறுகு (g).

துல் – துள் = துண் – துணர் = 1. கொத்து. 2. பூங்கொத்து. ''பொற்றுணர்த் தாமம்'' (கல்லா. 10). 3. குலை. ''சாரற் பலவின் கொழுந்துணர் நறும்பழம்'' (ஐங். 214).

துணர்த்தல் = கொத்துடையாதாதல். ''துணர்த்த பூந் தொடைய லான்'' (கம்பரா. வேள்வி. 53).

துணர்தல் – திணிதல், திரளுதல், கொத்தாதல்.

''இருடுணர்ந் தனைய குஞ்சியன்'' (சூளா. குமார. 6).

துணர்– தணரி = பூங்கொத்து. ''துணரி ஞாழல் நறும்போது நஞ்சூழ் குழற்பெய்து'' (திவ். பெரியதி. 9 : 3 : 5).

துண் = துணை = 1. ஒப்பு. ''துணையற வறுத்துத் தூங்க நாற்றி'' (திருமுருகு. 237). 2. கூட்டு. 3. புணர்ச்சி. ''முந்நாளல்லது துணையின்று

கழியாது'' (தொல். பொருள். 122). 4. கூட்டாயிருப்ப – வன் – வள் – து. ''நறுநுதலாள் நன்மைத் துணை'' (நாலடி. 381). 5. இரட்டை. ''துணைமீன் காட்சியின்'' (கல்லா. 5 : 27). 6. இரண்டு. ''துணையடி''. 7. உதவி புரிவோன். ''நானோர் துணைகாணேன்'' (திருவாச. 25 : 10). 8. உதவி. ''தங்குமா பொருளுந் தருமமுந் துணையா'' (கம்பரா. பால. நகரப். 6). 9. நண்பன். ''தந்துணைக் குரைத்து நிற்பார்'' (சீவக. 465). 10. கணவன். ''தாழ்துணை துறந்தோர்'' (சிலப். 4 : 13). 11. மனைவி. ''துணையொடு வதிந்த தாதுண் பறவை'' (அகம். 4). 12. உடன்பிறப்பு. ''துணையின்றிச் சேறல் நன்றோ'' (கம்பரா. கும்பகர்ண. 158). 13. அளவு. ''விருந்தின் றுணைத்துணை'' (குறள். 87). 14. வரை (இடைச்சொல்). ''தங்கரும முற்றுந்துணை'' (நாலடி. 231).

துணங்கை = முடக்கிய இரு கைகளையும் விலாப்புடைகளில் ஒற்றி யடித்துக்கொண்டு, அசைந்தாடும் ஒருவகைக் கூத்து. ''பிணந்தின் வாயள் துணங்கை தூங்க'' (திருமுருகு. 56).

துண் – தூண் – திரண்ட கம்பம். ''சிற்றில் நற்றூண் பற்றி'' (புறம். 86). 2. பற்றுக்கோடு. ''துன்பந் துடைத்தூன்றுந் தூண்'' (குறள். 615).

**ம.** தூண்.

பல பொருள்கள் அல்லது கூறுகள் ஒன்றாகப் பொருந்தும் போது அல்லது சேரும்போது திரட்சியுண்டாவதால், பொருந்தற் கருத்தில் திரட்சிக் கருத்துத் தோன்றிற்று. ''சேரே திரட்சி'' என்னுந் தொல்காப்பிய நூற்பாவை (346) நோக்குக.

தூண் – தூணம் = 1. பெருந்தூண். ''பசும்பொற் றூணத்து'' (மணிமே. 1 : 48). 2. பற்றுக்கோடு.

'அம்' பருமைப்பொருட் பின்னொட்டு.

எ - டு : நிலை – நிலையம், மதி – மதியம் = முழுநிலா.

தூணம் – **வ.** ஸ்தூணா.

தூண் – (தீண்) – தீண்டு. தீண்டுதல் = 1. தொடுதல். ''எங்கோலந் தீண்ட லினி'' (பு. வெ. 9 : 50). 2. பாம்பு கடித்தல். ''பதுமையைப் பாம்பு தீண்டிற் றென்றலும்'' (சீவக. 1273). 4. பற்றுதல். ''தீப்பிணி தீண்ட லரிது'' (குறள். 227).

**ம.** தீண்டுக.

தீண்டு – சீண்டு. சீண்டுதல் = ஒரு பெண்ணைத் தீண்டிக் குறும்பு செய்தல்.

*தீண்டு – தீட்டு = 1. தாழ்ந்தவன் உயர்ந்தவனைத் தொடுவதால் ஏற்படும் தூய்மைக் குலைச்சல். 2. பிறப்பு, இறப்பு, மாதவிடாய் முதலியவற்றால் ஏற்படும் தூய்மைக்கேடு.*

*தீண்– தீட்பு = பிறரைத் தொட்டுத் தூய்மை குலைக்கத்தக்க இழிவு.*

*தீட்பு– தீழ்ப்பு = இழிவு, தீட்டு.*

*துண் – துடு – துடவை = தோட்டம். ‘‘தோன்றாத் துடவையி னிட்டனள் நீங்க’’ (மணிமே. 13 க 10). 2. சோலை (சூடா.). 3. விளைநிலம். ‘‘ஆத்தொழு வோடை துடவையுங் கிணறும்’’ (திவ். பெரியாழ். 5 ஃ 1 ஃ 5).*

*துள் – தொள் – தோள் = 1. திரண்ட மேற்கை. ‘‘சிலைநவி லெறுழ்த்தோ ளோச்சி’’ (பெரும்பாண். 145). 2. கை, ‘‘தோளூற்றொர் தெய்வந் துணையாய்’’ (சீவக. 10).*

*‘‘குன்றன்ன குவவுத் தோளான்’’, ‘‘எழுவுறழ் திணிதோளான்’’ என்னும் உவமைகளாலும்; தோள் கொட்டுதல், தோள்கொடுத்தல், தோள்மாற்றுதல் என்னும் வினைகளாலும்; தோட்கடகம், தோட் பட்டை என்னும் பெயர்களாலும்; தோள் என்பது மேற்கையே யென்றும், புயம் என்னும் வடசொல் ஓரளவு வழக்கூன்றவே தோள் என்னும் தென்சொல் ஒருசிறிது வழக்கு வீழ்ந்ததென்றும், அறிந்து கொள்க.*

*தொள்– தொழு = 1. மாட்டு மந்தை. 2. மாட்டுக் கொட்டில். ‘‘ஏறு தொழூஉப் புகுத்தனர்’’ (கலித். 101). 3. பட்டிமாடுகளை அடைக்கும் இடம். 4. காட்டு விலங்குகளை அடைக்குங் கூடு. ‘‘தொழுவினிற் புலியானான்’’ (கம்பரா. மூலபல. 181).*

*தொழு– தொழுகு = மாட்டுத்தொழு (பிங்.). தொழுதல் = கூடுதல். தொழு– தொழுதி = கூட்டம். ‘‘இரும்பிடித் தொழுதியொடு’’ (புறம். 44). 2. திரட்சி. ‘‘தொழுதிச் சிறகிற் றுயராற்றுவன.’’ (சீவக. 1187).*

*தொழு – தொகு. ழ – க, போலித்திரிபு. ஒ.நோ ஃ மழவு – மகவு, முழை– முகை.*

*தொகுதல் = 1. கூடுதல். 2. நெருங்குதல். 3. அடுக்கி வருதல். ‘‘உம்மை தொக்க எனாவென் கிளவியும்’’ (தொல். சொல். 291). 4. ஒன்றாதல். 5. மொத்தமாதல். 6. சுருங்குதல். ‘‘தொகுபீலி கோலின’’ (கம்பரா. வனம்பு. 1). 7. ஒடுங்குதல். ‘‘அசுத்த தத்துவங்கள் தொகும் முதலில்’’ (கோயிற்பு. இரணிய வன்ம. 2). 8. மறைதல். ‘‘மெய்யுருபு தொகாஅ இறுதியான’’ (தொல். சொல். 105).*

*தொழுதி – தொகுதி = 1. சேர்க்கை. ''வினைப்படு தொகுதியி னும்மை வேண்டும்'' (தொல். சொல். 33). 2. கூட்டம். ''தெய்வப் பெயர்த் தொகுதி'' (திவா.). ''வினையின் றொகுதி பொறுத்தெனை யாண்டுகொள்'' (திருவாச. 6 : 6). 3. சவை (பிங்.). 4. மந்தை. 5. மொத்த வெண். ''உம்மை யெண்ணு மெனவெ னெண்ணும் – தம்வயிற் றொகுதி கடப்பா டிலவே'' (தொல். சொல். 289). 6. சொல்லின் அல்லது சொல்லுறுப்பின் மறைவு. ''தோற்றம் வேண்டாத் தொகுதிக் கண்ணும்'' (தொல். எழுத்து. 132, உரை).*

*தொகு– தொகுப்பு = 1. கூட்டம். ''தொகுப்புறு சிறுவர்'' (அருட்பா,* VI, *பிள்ளைப்பெரு. 32). 2. தொகை.*

*தொகுப்பு– தோப்பு = சோலை (பிங்.).* **ம., தெ., க., து.** *தோப்பு.*

*தொகு – தொகை = 1. சேர்க்கை. ''உயர்திணைத் தொகை வயின்'' (தொல். சொல். 90). 2. கூட்டம். ''உன்னடியவர் தொகை நடுவே'' (திருவாச. 44 : 1). 3. புலவர் கழகம். ''மதுரைத் தொகையாக்கி னானும்'' (தேவா. 1179 : 11). 4. உயிரிகளின் திரள். ''புள்ளின் றொகையொப்ப'' (பு. வெ. 6 : 20). 5. கொத்து. ''தொகைப்பிச்சம்'' (கம்பரா. எதிர்கோட். 7). 6. மொத்தம். 7. எண்.*

> *''ஏயி னாகிய வெண்ணி னிறுதியும்*
> *யாவயின் வரினும் தொகையின் றியலா''(தொல். சொல். 292)*

*8. தொகுத்துக் கூறுகை.*

> *''தொகுத்தல் விரித்தல் தொகைவிரி மொழிபெயர்த்*
> *ததர்ப்பட யாத்தலோ டனைமர பினவே'' (தொல். 1597)*

*9. சொல்லும் சொல்லுறுப்பும் மறைகை. ''ஈற்றுநின் றியலுந் தொகைவயிற் பிரிந்தே'' (தொல். சொல். 78).*

*10. அறுவகைத் தொகைநிலைத் தொடர். ''எல்லாத் தொகையு மொருசொன் னடைய'' (தொல். சொல். 420). 11. பதினெண் மேற்கணக்கில் எட்டுத்தொகை. ''அது தொகைகளினுங் கீழ்க் கணக்கினும் இம்முறை மயங்கிவரக் கோத்தவாறு காண்க'' (தொல். பொருள். 5, உரை).*

*தொள் – தொண் – தொண்ணை = பருமன். தொண்ணைத் தடி = பருந்தடி.*

*தொள்– தொடு. தொடுதல் = 1. தீண்டுதல். ''தொடிற்சுடி னல்லது'' (குறள். 1159). 2. பொருந்துதல். 3. பிடித்தல். ''தொட்ட மூவிலைச் சூலந் துளக்குவார்'' (கந்தபு. வீரபத். 38). 4. எடுத்தல். ''பதுமுகன் சிலைதொட்*

டானே'' (சீவக. 1862). 5. செலுத்துதல். ''கடுங்கணைக டம்மைத் தொட்டனன்'' (கந்தபு. சூரபன்மன்வ. 191). 6. தொடங்குதல். ''அன்றுதொட் டனங்கனே யாயினான்'' (கம்பரா. தாடகை. 1). ''தொட்டுக் காட்டாத வித்தை சுட்டுப் போட்டாலுந் தெரியாது'' (பழமொழி). 7. உண்டாதல். ''பழிபாவமுந் தொடுமே'' (விநாயகபு. 77 : 35). 8. அடித்தல். 9. இயம் (பறை) இயக்குதல். ''கலித்த வியவ ரியந்தொட் டன்ன'' (மதுரைக். 304). 10. உள்ளத்தில் தொடுதல், நினைத்தல். ''நின்பெரு முலை மூழ்கவென் னுளத்தினிற் றொடாமுன்'' (கல்லா. 52 : 9). 11. தொட்டுச் சூளிடுதல். ''தொட்டு விடுத்தே னவனை'' (சீவக. 1876). 12. தொடுத்தல். செருப்பணிதல். ''பாதஞ் சேரத் தொடுநீடு செருப்பு'' (பெரியபு. கண்ணப்ப. 62).
13. கட்டுதல். 14. மனைவிய ரல்லாரொடு கூடுதல். **ம.** தொடுக, **து.** துடுகு.

தொடு – தொடுப்பு = 1. தொடர்ந்திருக்கை, தொடர்ச்சி. 2. கட்டுகை, கட்டு. 3. கூட்டுறவு. 4. தொடுசு. 5. வைப்பாளன் அல்லது வைப்பாட்டி. 6. தொடக்கம். 7. பழக்கம். 8. கட்டுக்கதை. 9. குறளை. 10. செருப்பு.

தொடு – தொடல் = தொடரி (சங்கிலி).

தொடல் – தொடலி = தொடரி.

தொடல் – தொடலை = 1. மாலை. ''தொடலைக் குறுந்தொடி'' (குறள். 1135). 2. மணிமேகலை. ''தொடலை யல்குற் றொடித்தோண் மகளிர்'' (புறம். 339).

தொடு – தொடவு – தொடவல் = மாலை.

தொடு – தொடை = 1. பூமாலை (பிங்.). 2. முத்துமாலை. ''முத்துத் தொடை'' (பரிபா. 6 : 16). 3. பின்னுகை. ''தொடையுறு வற்கலை யாடை'' (கம்பரா. முதற்போ. 109). 4. கட்டு. 5. வில்லின் நாண். ''தொடையை நிரம்ப வாங்கிவிடாத முன்பே'' (சீவக. 2320). யாழ் நரம்பு. 6. அம்பெய்கை. ''செந்தொடை பிழையா வன்க ணாடவர்'' (புறம். 3). 7. சந்து. ''வணங்குதொடைப் பொலிந்த வலிகெழு நோன்றாள்''. 8. காலின் மேற்பகுதி. 9. மோனை யெதுகை முரணியைபளபெடை யென்னும் ஐவகைச் செய்யுள் தொடுப்பு.

''மோனை எதுகை முரணே இயைபென
நால்நெறி மரபின தொடைவகை என்ப.'' (தொல். 1345)

''அடபெடை தலைப்பெய ஐந்து மாகும்'' (தொல். 1346)

*10. பாட்டு. 11. தொடர்ச்சி. ''தாபதர் தொடைமறை முழக்கும்'' (கல்லா. 39 : 10). 12. இடையறாமை. ''தொடையிழி யிறாலின் றேனும்'' (கம்பரா. நாட்டுப். 9).*

*தொடு – தொடர். தொடர்தல் = 1. பின்பற்றுதல். ''அவரை...... அரக்கியர் தொடர்குவர்'' (கம்பரா. ஊர்தேடு. 26). 2. இடையறாது வருதல். ''தொடர்ந்த குவளைத் தூநெறி யடைச்சி'' (பதிற். 27 : 2). 3. வித்தும் மரமும் போல ஒன்றனையொன்று இடையறாது மாறிமாறிப் பின்பற்றுதல். 4. வழக்குத் தொடர்தல்.* **க.** *தொடர்,* **தெ.** *தொடரு.*

*தொடர் = 1. தொடர்ச்சி. 2. தொடரி (சங்கிலி). ''தொடர்படு ஞமலியின்'' (புறம். 74). 3. கைகால் விலங்கு. ''தொடர் சங்கிலிகை'' (திவ். பெரியாழ். 1 : 7 : 1). 4. வரிசை. 5. சொற்றொடர். ''தழுவு தொடரடுக் கெனவீ ரேழே'' (நன். 152). 6. நட்பு. ''நல்லார் தொடர்கை விடல்'' (குறள். 450). 7. உறவு. 8. கொடிவழி.* **ம., க.** *தொடர்.*

*தொடர்– தொடர்ச்சி.*

*தொடர்– தொடர்பு = 1. தொடர்ச்சி. 2. நட்பு. ''கேள் போற்*

*பகைவர் தொடர்பு'' (குறள். 882). 3. உறவு. 4. பிணைப்பு*

*5. செய்யுள் (பிங்.).*

*தொடர்– தொடரி = 1. மாழைவளையத் தொடர். 2. புலி தொடக்கி.*

*3. ஒருவகை முட்செடி.*

*தொடு – தொடங்கு. தொடங்குதல் = துவங்குதல்.*

*ம.து. டங்nுக, க.தொடங்(க்கு), து. தொடகுறி*(g).

*க. தொடங்(க்)கு, து. தொடகுறி*(g).

*தொடங்கு – தொடக்கு. தொடக்குதல் = 1. கட்டுதல். ''நினைத் துன்பத்தாற் றொடக்கினேன்'' (சீவக. 579). 2. அகப்படுத்துதல். ''விளைபொருள் மங்கையர் முகத்தினும்...... சொல்லினுந் தொடக்கும்'' (கல்லா. 62 : 28). 3. பொருத்துதல். 4. சிக்கிக் கொள்ளுதல். ''சங்கந் துங்க விலைக்கதலிப் புதன்மீது தொடக்கி'' (பெரியபு. ஆனாய. 4). 5. செருப்பணிதல். ''பாதுகை திருவடி தொடக்கி'' (விநாயகபு. 80 : 278).*

*தொடங்கு – துடங்கு. தொடக்கு – துடக்கு.*

*தொடக்கு = 1. கட்டு. ''படைச்சொற் பாசத் தொடக்குள் ளுறீஇ'' (பெருங். மகத. 2 : 13). 2. ஆதனைக் கட்டும் பாசம். ''தொடக்கெலா*

மறுத்தநற் சோதீ'' (திருவாச. 37 : 10). 3. பற்று. ''தொடக்கறுத்தோர் சுற்றமே'' (கம்பரா. சரபங். 27). 4. மாதவிடாய்த் தீட்டு. 5. குஞ்சம். ''தொடக்கொடு தூக்கி'' (சீவக. 1343). **க.** தொடக்கு.

தொடு – தொசுக்கு = தகாப் புணர்ச்சி, வைப்பு.

தொடு – தொடுசு = 1. தொடர்ச்சி. 2. கூத்திவைப்பு. தெ. தொடுசு. தொடுசு – தொடிசு.

துடக்கு – துயக்கு. துயக்குதல் = கட்டுதல். ''துயக்குமவ் வினையின் கழிவும்'' (தணிகைப்பு. நந்தியுப. 110). ம. துயக்குக.

துயக்கு = 1. கட்டு. ''துயக்கறாத மயக்கிவை'' (தேவா. 260 : 10). 2. ஆசை. ''தொண்டையங் கனிவாய்ச் சீதை துயக்கினா லென்னைச் சுட்டாய்''. (கம்பரா. பொழிலிறுத். 40).

தொள் – தொழு – தோழன் = கூட்டாளி, நண்பன். தோழம் – தோழமை = உடன்கூட்டு நட்பு.

தொழு – தொடு – தொட்ட = பெரிய. க. தொட்ட. தொடு – தோடு = 1. திரட்சி. 2. திண்ணமான இலையாகிய ஓலை. ''வண் டோட்டுத் தெங்கின்'' (பெரும்பாண். 353). 3. ஓலைச்சுருள். 4. காதணி. ''வெளிவெண் டோட்டு'' (மணிமே. 3 : 118). 5. விளாம் பழத்தின் ஓடு. ''விட்டதடா ஆசை விளாம்பழத் தோட்டோடே'' (பழமொழி). 6. தொகுதி. ''தோடுகொள் வேலின் தோற்றம் போல'' (புறம். 35).

தோடு – தோட்டம் = வளர்ப்புச் செடிகளின் தொகுதி. **ம.** தோட்டம், **தெ., க., து.** தோட்ட.

தோள் – தோய். தோய்தல் = 1. படுதல். ''கால்நிலந் தோயாக் கடவுளை'' (நாலடி. கட. வாழ்.). 2. தொடுதல் ''விண்டோயு மிளைகடந்து'' (பு. வெ. 6 : 16). 3. செறிதல். 4. கலத்தல். ''தோய்ந்தும் பொருளனைத்துந் தோயாது'' (கம்பரா. சரபங். 27). 5. அணைதல். ''நிறைநெஞ்ச மில்லவர் தோய்வர்'' (குறள். 917). 6. பொருந்துதல். ''தாடோய் தடக்கை'' (புறம். 14). 7. உறைதல். ''தோயும் வெண்டயிர்'' (கம்பரா. நாட்டுப். 28). 8. ஒத்தல். ''விசும்புதோ யுள்ளமொடு'' (மலைபடு. 558). 9. நட்டல். ''தோய்ந்தாருட் டோய்ந்தா ரெனப்படுதல்'' (திரிகடு. 81).

துறு – தொறு = 1. கூட்டம். ''படைப்பெருந் தொறுவொடும் படர்ந்து'' (கந்தபு. யுத்த. முதனாட். 15). 2. ஆமந்தை. ''தொகைமலி தொறுவை யாளுந் தோன்றல்'' (சீவக. 474). 3. தொழு. 4. இடைக்குலம். ''நலத்தகு தொறுவி னுள்ளேன்'' (சீவக. 477).

தொறு – தொறுவு. தொறு – தொறுவன் = இடையன்.

*தொறு = உம்மீறு பெற்றுப் பொருளிடங் காலம் ஒவ்வொன்றும் என்னும் பொருள்படவரும் இடைச்சொல்.*

*''நவில்தொறும் நூல்நயம் போலும்'' (குறள். 783).*

*தொறு – தோறு. ''காண்டோறும் பேசுந்தோறும்'' (திருவாச. 10 : 3).*

*தொறு – தொற்று. தொற்றுதல் = 1. கைகால்களாற் பற்றுதல். 2. பற்றியேறுதல் அல்லது படர்தல். ''புரைதீர் தவந்தொற்று கொள்கொம்பெனுந் தெய்வமுனி'' (உபதேச. சிவபுண்ணிய. 93). 3. ஒட்டிக்கொள்ளுதல். தொற்றுநோய் = ஒட்டிக்கொள்ளும் நோய்.*

*தொற்று – தொத்து. தொத்துதல் = 1. பற்றுதல். ''கோற்றொத்து கூனனும்'' (பதினொ. திருத்தொண். 48). 2. ஒட்டுதல். ''உடுமீன் தொத்த புலி கனகக்கிரி வெயில் சுற்றிய தொத்தான்'' (கம்பரா. பிரமாத். 117). 3. பற்றியேறுதல். ''நரருமினித் தொத்துவர்'' (திருவாலவா. 29 : 1). தொற்றுநோய் – தொத்துநோய்.*

*தொத்து = 1. பற்று. ''சித்தந் தொத்தற'' (ஞானவா. சுரகு. 23). 2. தொடர்பு. ''தொத்தற விட்டிட'' (திருமந். 2245). 3. திரள். ''தொத்தொளி முத்துத் தாமம்'' (சீவக. 2653). 4. பூ இலைகாய் முதலியவற்றின் கொத்து. ''தொத்தீன் மலர்ப்பொழிற் றில்லை'' (திருக்கோ. 121). 5. அடிமை. 6. வைப்பாட்டி.*

*தொத்து – தொத்தன் = அடிமையாள்.*

*தொத்துவான் = தொத்துநோய்.*

*தொத்துக்குட்டி = 1. உடன்பற்றித் திரிபவன். 2. குரங்குக் குட்டிபோல் தாயைப் பற்றிக்கொண்டிருக்கும் குட்டி அல்லது பிள்ளை.*

*தொத்து – தொத்தாய் = சிறிய தாய். (சென்னை வழக்கு).*

*தொத்து – தொத்தை – தத்தை = இலையைப் பற்றிக்கொண்டு தொங்கும் கிளி. இ. தோத்தா.*

*தொத்து – தொந்து – தொந்தம் = 1. தொடர்பு. ''தொல்லை வல்வினைத் தொந்தந்தா னென்செயும்'' (தேவா. 4 : 4). 2. உறவு, உறவாடல். 3. தொடுப்பு. 4. புணர்ச்சி. 5. இரட்டை. வ. த்வந்த்வ.*

*துறு – துற்று. துற்றுதல் = நெருங்குதல். ''மைம்மரு பூங்குழற் கற்றை துற்ற'' (தேவா. 83 : 1). க. துத்து.*

*துற்று = கூட்டம் (பிங்.). தெ, துத்த.*

துற்று – துத்து – துது – துதை. துதைதல் = 1. செறிதல். ''தோடமை முழவின் துதைகுர லாக'' (அகம். 82). 2. மிகுதல்.

துதை– ததை. ததைதல் = நெருங்குதல். ''ததையிலை வாழை'' (ஐங். 460).

துது – தொது – தொதி = பப்பரப்புளி.

தொது – தோது = 1. தொடர்பு. அதற்கும் இதற்கும் என்ன தோது? (உ. வ.). 2. பொருத்தம். மாப்பிள்ளைக்கும் பெண்ணிறகும் தோதில்லை. (உ. வ.). 3. ஒப்பு. அவனுக்குத் தோது எவனுமில்லை. (உ. வ.).

**தெ.**, **க.** தோடு.

தும் – திம் – திம்மை = 1. பருமன். 2. கண்டை (சரிகை) முதலியவற்றின் பந்து.

திம் – திம்மன் = 1. தடித்தவன். 2. ஆண்குரங்கு.

க. திம்ம, தெ. திம்மடு.

திம்மலி = தடித்தவள் (யாழ்.). திம்மலி – திமிலி.

திம்மலி = பெருமீன் (திவா.). வ. திமி.

திமி– திமிசு = தளத்தைக் கெட்டியாக்குங் கட்டை. தெ. திமிச.

திமிதம் = 1. பேரொலி. 2. உறுதி (யாழ். அக.).

திமிர் = 1. மரத்துப்போகை. 2. உணர்ச்சியறும் நோய். 3. மனக் கொழுப்பு. **ம.** திமிர், **தெ.** திமிரி.

திமில் = 1. திரண்ட எருதின் முரிப்பு. 2. திண்ணிய மீன்படகு.

''திண்டிமில் வன்பரதவர்'' (புறம். 24).

திமில் – திமிலம் = 1. பேரொலி. ''திமிலநான் மறைசேர் திருப்பெருந் துறையில்'' (திருவாச. 29 : 4). 2. பெருமீன் வகை (பிங்.).

திமுதிமுவெனல் = மக்கள் திரளாக வந்து கூடுதற் குறிப்பு.

திமுக்குத் திமுக்கெனல் = தடித்த ஆள், சிறப்பாகப் பெண் நடந்து போதற் குறிப்பு.

துல் – தில் – திர் – திரள். திரளுதல் = 1. கூடுதல். மக்கள் திரளுகிறார்கள். (உ. வ.). 2. மிகுதல். ''அவலு மிசையு நீர்த்திரள் பீண்டி'' (மதுரைக். 240). 3. இறுகுதல். பால் திரண்டுவிட்டது. 4. பருத்தல். ''தீங்கரும் பீன்ற திரள்கா லுளையலரி'' (நாலடி. 199). 5. வீங்குதல்.

*ம. திரளுக.*

*திரள = முழுதும். ''திரள ஒப்பில்லையாகில் ஒருவகை யாலேதான் ஒப்புண்டோ'' (ஈடு, 1 : 1 : 2).*

*திரளை = 1. கூட்டம். 2. கட்டி. ''சோறுவெண் டயிரினாற் றிரளை மிடற்றிடை நெருக்குவார்'' (திவ். பெரியதி. 2 : 1 : 7). 3. நூலுருண்டை.*

*திரளை – திரணை = 1. திண்ணை. 2. எழுதக வேலை. 3. வைக் கோற்புரிக் கற்றை. 4. மாலைவகை. ''ஒட்டிய திரணையோடு'' (சிலப். 22 : 43). 5. உருண்டை.*

*திரட்சி = 1. கூட்டம். ''திரட்சி விரும்பக் கையிலே பாத்திரத்தை யிருத்திய'' (பு. வெ. 3 : 5, உரை). 2. உருண்டை வடிவம். 3. முத்து.*

*திரட்டு = தொகுப்பு. எ - டு : பட்டினத்தார் பாடற்றிரட்டு.*

*திரள் – திரடு = மேடு (நெல்லை வழக்கு).*

*திரம் = 1. உரம். 2. வலிமை. 3. உறுதி. 4. நிலைபேறு. ''உலகைத் திரமென வுட்கொண்டு'' (தாயு. பராபர. 274). 5. மலை. 6. பேரின்ப வீடு. 7. ஒரு தொழிற்பெயரீறு. திரம் –* **வ.** *ஸ்திர.*

*திரம் – திறம் = 1. உறுதி. 2. வலிமை. 3. நிலைபேறு. 4. கற்பு. ''தீதிலா வடமீனின் திறமிவள் திறமென்றும்'' (சிலப். மங்கல. 27). 5. சமர்த்து. 'உன் திறத்தைக் காட்டு, பார்க்கலாம்' (உ. வ.). 6. கூட்டம். 7. ஆடு மாடு எருமை எவ்வெண்பது கூடின கூட்டம். 8. மிகுதி. 9. இயல்பு. ''ஒருதனி நின்றாய் உன்திறம் அறிந்தேன்'' (மணிமே. 4 : 96). 10. வகை. 11. கூறுபாடு. ''நிற்றிறஞ் சிறக்க'' (புறம். 6). 12. சார்பு. 13. கிளைப் பண். ''குறைந்த நரம்பு திறமெனக் கொள்க'' (பிங். 6 : 325). 14. செயல். ''தீத்திறத்தார் பக்கமே சேர்கென்று காய்த்திய'' (சிலப். 21 : 54). 15. கோலம். ''தவத்திறம் பூண்டு தருமங் கேட்டு'' (மணிமே. பதி. 93). 16. கொள்கை. ''சமயக் கணக்கர் தந்திறங் கேட்டதும்'' (மணிமே. பதி. 88). 17. இடையாட்டம் (விஷயம்). ''பதைக்கின்ற மாதின் திறத்து'' (திவ். இயற். திருவிருத். 34). 18. செய்தி. ''அத்திறங் கேட்ட'' (காஞ்சிப்பு வாணீச. 27). 19. ஆம்புடை (உபாயம்). ''உய்திற மில்லை'' (கம்பரா. திருவவ. 18). 20. திருவம் (பாக்கியம்). ''திருவுறப் பயந்தனள் திறங்கொள் கோசலை'' (கம்பரா. திருவவ. 104). 21. பக்கம். 22. படித்தரம்.*

*திறம் – திறன் = 1. உறுதி. 2. கூறுபாடு. ''திறனறிந் தேதிலா ரிற்கட் குருடனாய்'' (நாலடி. 158). 3. பக்கம். ''பெண்ணுரு வொருதிற னாகின்று'' (புறம். 1).*

**க.** தெற.

திறன்– திறல் = 1. வலிமை. ''துன்னருந் திறல்'' (புறம். 3 : 8). 2. திடாரிக்கம். 3. வெற்றி. ''திறல்வேந்தன் புகழ்'' (பு.வெ. 9 : 31, கொளு). 4. ஒளி. ''திறல்விடு திருமணி யிலங்கு மார்பின்'' (பதிற். 46 : 3).

திறம்– திறவு = 1. உறுதி. ''திறவதிற் றீர்ந்த பொருள்'. (திரிகடு. 72). 2. செவ்வை. ''திறவதி னாடி'' (தொல். பொருள். 521). 3. தகுதி. 4. ஆம்புடை.

திறக்க = திறமையாக (நாஞ். வ.).

திறவு – (திறகு) – திறக்கு = கருமம். ''அவன் திறக்கிலே போகப்படாது'' (யாழ்.).

தில்– (திர்)– திரு = 1. திரண்ட செல்வம், செல்வம். (ஒ.நோ : வெறு – வெறுக்கை = செல்வம். வெறுத்தல் செறிதல்). ''சீறிற் சிறுகுந் திரு'' (குறள். 568). 2. திருவம் (பாக்கியம்). ''நன்றறி வாரிற் கயவர் திருவுடையர்'' (குறள். 1072). 3. சிறப்பு. 4. அழகு. ''ஒளிகெழு திருமுகம்'' (மதுரைக். 448). 5. பொலிவு (திருக்கோ. 114). 6. காந்தி. ''திரு என்று காந்தி'' (ஈடு, 3 : 5 : 10). 7. நல்வினை. ''சேர்ந்தெழு நங்கை மாரே திருநங்கை மார்கள்'' (சீவக. 2552), 8. தாலி. ''திருவொன்றுட் படப் பட்டைக் காறை'' (S.I.I.II, 157). 9. ஒருவகைத் தலையணி. ''செந்திருவிற் கேற்கத் திருவும் பிறையுமிட்டு'' (கூளப்ப. 140). 10. கணியன். திரு ஒருவனுக்கும் கீழாள் இரண்டுக்கும் (S. I. I. Vol. II, 294). 11. தெய்வத் தன்மை. திருச்சிற்றம்பலம், திருமூலர், திருமந்திரம், திருப்பணி. 12. திருமகள். ''நினைப்பானை நீங்குந் திரு'' (குறள். 519). 13. மகளிர் கொங்கைமேல் தங்குவதாகக் கருதப்படும் வீற்றுத் தெய்வம். **ம.**, **தெ.**, **க.** திரு, **வ.** ச்ரீ (ஶ்ரீ).

திருவன் = 1. செல்வன். 2. திருமால். ''சிங்கமாய்க் கீண்ட திருவன்'' (திவ். இயற். 2 : 84).

திருவாளன் = 1. செல்வன். 2. ஒரு மதிப்படைச் சொல் எ - டு : திருவாளர் மாணிக்கவேல் செட்டியார் (காசிமேடு, சென்னை). 3. திருமால். ''ஒலிதிரைநீர்ப் பௌவங் கொண்ட திருவாளன்'' (திவ். பெரியதி. 5 : 5 : 1).

திருமகன்– திருமான்– வ. ஶ்ரீமான்– சீமான்.

தில் – திள் – திண் – திண்மை = 1. பருமன். 2. வலிமை. ''சால்பென்னுந் திண்மையுண் டாகப் பெறின்'' (குறள். 988). 3. செறிவு. ''மண்ணிற் றிண்மை வைத்தோன்'' (திருவாச. 3 க 26).

*4. உறுதி. 5. உண்மை. 6. கலங்கா நிலைமை. ''கற்பென்னுந் திண்மை யுண் டாகப் பெறின்'' (குறள். 54).*

*திண்– திண்ணம் = 1. வலிமை. 2. இறுக்கம். ''திண்ண மாத்தொளிர் செவ்விளநீர்'' (கம்பரா. எழுச்சி. 50). 3. தேற்றம். ''பரகதி திண்ண நண்ணுவர்'' (தேவா. 1111 : 10).*

*திண்ணன் = வலியன். ''உரிமைப் பேருந் திண்ணனென் றியம்பு மென்ன'' (பெரியபு. கண்ணப். 17).*

*திண்ணிமை = மனவுறுதி. ''திண்ணிமையோடு மெல்லச் சார்ந்தநின்'' (திருவாலவா. 29 : 17).*

*திண்ணியன் = 1. வலியவன். 2. மனவுறுதியுள்ளவன். ''திண்ணிய ராகப் பெறின்'' (குறள். 666).*

*திண் – திண்ணகம் = 1. செம்மறியாட்டுக் கடா. 2. தட்டார் மெருகிடுங் கருவி வகை. ''திண்ணகத்தாற் செய்யுந் தொழில்களை வல்ல பணித்தட்டார்'' (சிலப். 6 : 136, உரை).*

*திண்ணகம் – திண்ணக்கம் = நெஞ்சுரம், நெஞ்சழுத்தம். திண் – திண்ணை = 1. மேடு. ''தேனயாம் பூம்பொழிற் றிண்ணை'' (சீவக. 1822). 2. வீட்டுத் திரணை. ''ஆய்மணிப் பவளத் திண்ணை'' (சீவக. 1126).*

*திண் – திண்ணம் – திணம் = வலிமை. ''திணமணி மாடத் திருவிடைக் கழியில்'' (திருவிசை. சேந். திருவிடை. 5).*

*திணம் – திணர். திணர்த்தல் = செறிதல். ''வண்டு திணர்த்த வயல்'' (திவ். திருப்பள்ளி. தனியன்). 2. கனமாகப் படிந்திருத்தல். ''திணர்த்த வண்டல் கண்மேல்'' (திவ். திருவாய். 6 : 1 : 5).*

*திண் – திணி. திணிதல் = 1. செறிதல். ''மண்டிணிந்த நிலனும்'' (புறம். 2). 2. இறுகுதல்.*

*திணித்தல் = 1. செறிய உட்புகுத்துதல். ''சோற்றினை வாங்கிப் புல்லைத் திணிமினே'' (திவ். பெரியாழ். 4 : 4 : 5). 2. பதித்தல். ''பொன்றிணி மணிமான'' (கம்பரா. வனம்பு. 3).*

*திணி – திணிகம் = செறிந்து நின்று பொரும் போர்.*

*திணி – திணிம்பு = செறிவு. ''இருளின் கருந்திணிம்பை'' (திவ். இயற். திருவிருத். 72).*

*திணியன் = பயனற்ற தடியன்.*

திண்– திணுகு– திணுங்கு. திணுங்குதல் = 1. செறிதல். ‘‘திணுங்கின விருள்’’ (திவ். திருவாய். 2 : 1 : 7 : பன்னீ.). 2. உறைதல். ‘‘நெய்திணுங் கினாற்போல்’’ (திவ். திருமாலை. 2, வியா. ப. 15).

திணுங்கு– திணுக்கம் = 1. செறிவு. 2. கட்டி.

திண் – (திண்ணை) – திணை = 1. கூட்டம். 2. வகுப்பு. 3. இலக்கணப் பொருள் வகுப்பு. உயர்திணை, அஃறிணை. ‘‘ஆயிரு திணையி னிசைக்குமன சொல்லே’’ (தொல். சொல். 1). 4. அகப் பொருளிலக்கண ஐந்நிலப் பகுப்புள் ஒன்று. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை. 5. ஐந்நில மக்கள் காதலொழுக்கம். 6. அகப் பொருளின் எழுவகுப்புள் ஒன்று. கைக்கிளை, அன்பின் ஐந்திணை, பெருந்திணை. 7. புறப்பொருளின் எழுவகுப்புள் ஒன்று. வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண்.

திண்– திண்பு = 1. செறிவு. 2. இறுக்கம். 3. வலிமை. 4. உறுதி. **க.** திண்பு.

திண்பு– திட்பு = 1. செறிவு. 2. இறுக்கம். 3. வலிமை. 4. உறுதி.

திட்பு– திட்பம் = 1. செறிவு. 2. சொற்பொருள்களின் உறுதி. ‘‘திட்ப நுட்பஞ் சிறந்தன சூத்திரம்’’ (நன். 18). 3. வலிமை. ‘‘உருத்திட்ப முறாக்காலை’’ (காஞ்சிப்பு. திருநாட். 97). 4. மனவுறுதி. ‘‘வினைத்திட்ப மென்ப தொருவன்’’ (குறள். 661). 5. தேற்றம்.

திண்– திண்டு = 1. பருமன். 2. சிறுமேடை. 3. அரைவட்டமான பஞ்சணை. ‘‘திண்டருகு போட்டான்’’ (விறலிவிடு. 476).

**ம.** திண்டு, **தெ.** திண்டு (d).

திண்டு – திண்டி = 1. பருமன். ‘‘திண்டி வயிற்றுச் சிறுகட் பூதம்’’ (தேவா. 1225 : 7). 2.தடித்தவள். 3. யானை. 4. அரசமரம்.

திண்டு – திட்டு = 1. மேட்டுநிலம். 2. மண்வெட்டிய இடத்தில் வெட்டாது விடப்பட்ட சிறு துண்டு. 3. ஆற்றிடைக்குறை ‘‘புளினத் திட்டிற் கண்ணகன் வாரிக் கடல்பூத்த’’ (கம்பரா. வானர. 8). 4. யானை களைப் பிரித்து வைப்பதற்காகக் கட்டப்பட்ட இடைச்சுவர். 5. சிறு குன்று. 6. நூறு குதிரை காலாள் முதலியன கொண்ட படைத்தொகைப் பிரிவு. எ - டு : ஒரு திட்டுக் குதிரை.

ம., க. திட்டு. திட்டு – திட்டாணி = மரத்தைச் சுற்றிய மேடை. ‘‘சத்திரச் சாலையு மொத்த திட்டாணியும்’’ (இராமநா. சுந். 4).

திட்டு – திட்டம் = 1. நிலைபேறு. ‘‘மயிலைக்கட் டிட்டங் கொண்டார்’’ (தேவா. 1118 : 1). 2. தேற்றம் (நிச்சயம்). ‘‘திட்டமாப் பரகதி சேர வேண்டிடில்’’ (செவ்வந்திப்பு. பிரமதேவ. 25). 3. உறுதி யான

*ஏற்பாடு. ''அவர்தந் திராணிக்குத் தக்க திட்டஞ் செய்வதுவும்'' (பணவிடு. 26). 4. ஒரு வினையைச் செய்யும் வழிவகுப்பு. 5. ஒரு வினைக்குரிய வரவு செலவுக் கணக்கு. திட்டவட்டம் = முழுத் தேற்றமான வரையறை.*

*திட்டு – திட்டை = 1. திண்ணை (திவா.). 2. மேட்டு நிலம். ''மணற்றிட்டை சேர்ந்தான்'' (சீவக. 514). 3. உரல் (பிங்.).* **ம.** *திட்ட.*

*திட்டம் – திடம் = 1. உறுதி. ''இன்றைக் கிருந்தாரை நாளைக் கிருப்பரென் றெண்ணவோ திடமில்லை'' (தாயு). 2. வலிமை. ''தாண்டுபரி தூண்டு திடசாலி'' (தனிப்பா.). 3. தேற்றம். ''வார்த்தை திடம்படக் கேட்டு'' (தேவா. 171 ፡ 4). 4. திடாரிக்கம். ''பொறைதிட ஞானம்'' (காசிகண். தீர்த். 7). 5. நிலைதவறாமை. ''திடவிசும் பெரிவெளி'' (திவ். திருவாய். 1 ፡ 1 ፡ 7). 6. உண்மை. ''உயர்கதி பெறுவது திடனே'' (தேவா. 617 ፡ 2).*

*திடம் –* ***வ.*** *த்ருட* (drdha).

*திடம் – திடன் – திடல் = 1. மேட்டுநிலம். ''திடலிடைச் செய்த கோயில்'' (தேவா. 893 ፡ 3). 2. பொட்டல் (திறந்தவெளி நிலம்). ''திடலடங்கச் செழுங்கழனி'' (தேவா. 562 ፡ 3).*

*திடல் – திடர் = 1. மேட்டு நிலம். ''திடர்விளங்கு கரைப் பொன்னி'' (திவ். பெருமாள் 1 ፡ 11). 2. குப்பைமேடு (பிங்.). 3. சிறு தீவு.*

*திடர் – திடறு.*

*திடம் – திடாரி = அஞ்சா மனத்தன்.*

*திடாரி – திடாரிக்கம் = நெஞ்சுரம், அஞ்சாநெஞ்சம்.*

*துல் – தெல் – தெறு – தெற்று. தெற்றுதல் = 1. செறிதல். ''கற்றவர் தெற்றிவா'' (திவ். பெரியாழ். 1 ፡ 5 ፡ 8). 2. தொடுத்தல். ''ஆய்பூந் தட்டத் தகத்தோடு தெற்றிய தாமம்'' (பெருங். வத்தவ. 7 ፡ 26). 3. பின்னுதல். ''குடம்பைநூல் தெற்றி'' (கல்லா. கணபதி.).*

*தெற்று – தெற்றி = 1. திண்ணை. ''இலங்குவளை மகளிர் தெற்றி யாடும்'' (புறம். 53). 2. மாடம் (பிங்.). 3. மேட்டிடம். ''புற்றுந் தெற்றியும் காடும்''* (S. I. I. III, 410). *4. தெற்றியம்பலம். கோயிலில் மேட்டிடமாக அமைந்த சித்திர கூடம்.*

# 14

# துல்[2] (வளைதற் கருத்துவேர்)

*துல் – துலம் – துளம் – துளங்கு. துளங்குதல் = சாய்தல், அசைதல், வருந்துதல்.* **தெ.** *தொளங்கு,* **ம.***துலகு. துளம் – துடம் – தடம் = வளைவு.*

*“தடவென் கிளவி கோட்டமுஞ் செய்யும்” (தொல். சொல். 321).*

*“தடமருப் பெருமை” (நற். 120).*

*துல் – (துறு) – துறள் – துறடு = வளைந்த கத்தி அல்லது கருவி. க. தொறடு.*

*துறடு – துறட்டு = 1. முண்மரவகை. 2. சிக்கல். 3. ஏதம் (அபாயம்). “ஆங்கோர் துறட்டுண் டதனையான் சொல்வேன்” (விறலிவிடு. 150).*

*துறடு – துறட்டி = 1. அங்குசம். 2. காய் பறிக்கும் துறட்டுக்கோல். 3. சிக்கு. 4. துறட்டிச் செடி.*

*ப.,* **க.** *தொறடு,* **வ.** *த்ரோட்டி. துறட்டுமுள் = 1. செடில். 2. துறட்டிச்செடி,*

*துறட்டி – தோட்டி = 1. அங்குசம். “உரனென்னுந் தோட்டியான் ஓரைந்துங் காப்பான்” (குறள். 24). 2. கொக்கி. 3. பகைவர் பாதத்தைக் குத்த நிலத்திற் பதிக்கப்படும் கூரிய படைக்கருவி. “தோட்டிமுள் முதலியன பதித்த காவற்காடு” (தொல். பொருள். 65, உரை).*

**க.** *தோட்டி* (d), **ம.** *தோட்டி.*

*துல் – தில் – (திர்) – திரி. திரிதல் = 1. வளைதல். 2. திரும்புதல், திரும்பிவருதல். “ஒன்றைச் செப்பினை திரிதி யென்றான்” (கம்பரா. அங்கத. 10). 3. திசை திரும்புதல். “நாராசத் திரிவிற் கொள்ளத்தகுவது காந்தம்” (மணிமே. 27 : 55 - 6). 4. சுற்றுதல். 5. சுழலுதல். “வலந்திரியாப் பொங்கி” (பு. வெ. 9 : 12). 6. அலைதல். “வண்டாய்த்*

*திரிதருங் காலத்து'' (நாலடி. 284). 7. திருகுதல். ''திரிந்து மறிந்துவீழ் தாடி'' (கலித். 15). 8. வேறுபடுதல். ''நாஅல் வேத நெறி திரியினும்'' (புறம். 2). 9. எழுத்து மாறுதல். ''தோன்றல் திரிதல் கெடுதல்'' (நன். 154). 10. சொல் மாறியமைதல். ''சொற்றிரியினும் பொருள் திரியா வினைக்குறை'' (நன். 346). 11. மயங்குதல். ''திரிந்தயர்ந் தகன்றோடி'' (பரிபா. 3 : 54). 12. கெடுதல். (திவா.).*

**க.** திரி, **தெ.** திருகு, **ம.** திரிக்க.

*திரித்தல் = 1. சுழற்றுதல். ''எஃகுவலந் திரிப்ப'' (திருமுருகு. 111). 2. முறுக்குதல். 'கயிறு திரிக்கிறான்' (உ. வ.). 3. திரும்பச் செய்தல். ''சென்றுசென் றழியு மாவி திரிக்குமால்'' (கம்பரா. மாயாசனக. 23). 4. அலைவித்தல். ''கொடிப்புள் திரித்தாய்'' (திவ். பெரியதி. 1 : 10 : 2). 5. வேறுபடுத்துதல். ''அறிவு திரித்து'' (மணிமே. 23 : 39). ''துயவென் கிளவி அறிவின் திரிபே'' (தொல். 851). 6. திரிகையில் மா வாக்குதல். 7. பொருள் மாற்றுதல். 8. சொல்வடிவு மாற்றுதல். 9. மொழிபெயர்த்தல். 10. மடக்கின் முதலெழுத்தை மாற்றுதல். 11. சேதித்தல். ''அவனுருவு திரித்திட்டோன்'' (பரிபா. 5 : 35). ம. திரிக்க, க. திருகிசு.*

*திரி– திரிவு = 1. வேறுபாடு. ''திரிவின்றித் துஞ்சேமென மொழிதி'' (பு. வெ. 12 : 15). 2. திரிபுக்காட்சி. ''ஐயமே திரிவே யென்னு மவையற'' (விநாயகபு. 2 : 46). க. திரிவு.*

*திரிவு– திரிபு = 1. வேறுபாடு. ''குறிதிரி பறியா வறிவனை'' (கலித். 39 : 46). 2. (வீடுபேற்றிற்கு இடையூறாய் நிற்கும்) மயக்க அறிவு. 3. முதலெழுத்தல்லாத தொடர்கள் எழுத்தொத்து வரும் மடக்கு.*

*திரிசொல் = 1. வேறுபட்ட சொல். 2. இயற்சொல்லினின்று வேறுபடுத்தி யமைக்கப்பட்ட சொல்.*

*''இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொலென்று'' (தொல். 880). திரிகல் = மாவரைக்குங் கல். ''திரிக லொப்புடைத் தாய..... தொண்டகம்'' (கல்லா. 24 : 13). திரிமரம் = கூலம் அரைக்கும் மரம். ''களிற்றுத்தாள் புரையுந் திரிமரப் பந்தர்'' (பெரும்பாண். 187). திரி – திரிகை = 1. திரிகல். 2. குயவன் சக்கரம். ''குயவர் திரிகையென'' (கம்பரா. மூல பல. 165). 3. கூத்தின் சைகைவகை. (சிலப். ப. 81).*

*திரி– திகிரி = 1. வட்டவடிவு (பிங்.). 2. குயவன் சக்கரம். ''அத்திகிரி பரித்த பச்சை மண்ணென லாகும்'' (காஞ்சிப்பு. திருநகரம். 76). 3. சக்கரப்படை. ''கால நேமிமே லேவிய திகிரிபோல்'' (கம்பரா. சித்திர. 40). 4. கதிரவன். ''விசும்புடன் விளங்கும் விரை செலற் றிகிரி'' (அகம்.*

53). 5. வண்டிச்சக்கரம். 6. வண்டி. 7. தேர். ''சேகரக் கூவிரத் திகிரி யூர்வோன்'' (ஞானா. 7 : 17). 8. அரசாணை. ''தீதின் றருள்கநீ யேந்திய திகிரி'' (மணிமே. 22 : 16). 9. உருளை. ''ஒருதனித் திகிரி யுரவோன்'' (சிலப். 4 : 2).

திர் – திரு – திருகு. திருகுதல் = செ. குன்றியவி. – 1. முறுகுதல். ''பரிதிசினந் திருகிய கடுந்திறல் வேனில்'' (பெரும்பாண். 3). 2. மாறு படுதல். ''திருகு சிந்தையைத் தீர்த்து'' (தேவா. 338 : 2). செ. குன்றாவி. – 1. முறுக்குதல். ''யாக்கையைத் திசைமுகன் படைசென்று திருக'' (கம்பரா. பாசப். 58). 2. பின்னுதல். ''திருகு குழலுமை நங்கை'' (தேவா. 657 : 3). 3. திருகிப் பறித்தல் **தெ.** திருகு (g), **க.** திருகு (h). திருகுவலி = உடம்பை முறுக்கும்நோவு. திருகு – திருகி. தேங்காய் திருகி = ஒரு கருவி.

திருகாணி = 1. முறுக்காணி (screw). 2. அணியின் திருகுமரை. 3. ஒருவகைக் காது மூக்கணி. க. திருகாணி (g). கொண்டைத் திருகு = கொண்டையி லணியும் ஓர் அணி. திருகு – திருக்கு = 1. முறுக்கு. 2. முடக்கம். ''மதிற்றிருக்காற் .......... பெயர் திரு முடங்க லென்றார்'' (திருவாலவா. 47 : 14). 3. மாறுபாடு. ''பெருந்திருக் குளத்துளான்'' (திருவாலவா. 16 : 34). 4. வஞ்சனை.

தித்திருக்கு = பெருவஞ்சனை.

திரு – திரும். திருமல் = திரும்புதல். ''உண்பொருந் திரும்தின்'' (நன். 137).

திரும் – திரும்பு. திரும்புதல் = 1. வளைதல். 2. கதிரவன் சாய்தல். 3. விலகுதல். 4. மாறுதல். 5. மீளுதல். 6. பிசகுதல். திரும்ப = மறுபடி, அடுத்து, மீள. திரும்பவும் = மறுபடியும், மேலும், மீண்டும். திரும்பத் திரும்ப = அடிக்கடி, மேலும் மேலும், மீண்டும் மீண்டும். திரும்பி = திரும்ப. திரும்பியும் = திரும்பவும் (உ. வ.).

திரும்பு – திருப்பு. திருப்புதல் = 1. திரும்புவித்தல், மடக்குதல். 'ஆட்டு மந்தையைத் திருப்பினான்' (உ. வ.). 2. மாற்றுதல். ''கயவர் குணமட்டுந் திருப்ப வசமோ'' (குமரே. சத. 39). 3. முறுக்குதல். 4. நடை பெயர்த்தல். இது விவிலியத்தின் புதிய திருப்புதல். (கிறித்தவ வழக்கு). 5. மொழிபெயர்த்தல். திருக்குறள் முப்பது மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. (உ. வ.). 6. பாடத்தை மறுமுறை ஓதுதல். 7. கை பை கலம் முதலியவற்றை மேல்கீழாக அல்லது தலைகீழாகக் கவிழ்த்தல். 8. அடகு வைத்ததை மீட்டல். 9. வாங்கினதைத் திரும்பக் கொடுத்தல். 10. ஒருவர் அனுப்பினதை ஏற்றுக்கொள்ளாது திரும்புவித்தல். 11. பொத்தக ஏட்டின் பக்கத்தைத்

*தள்ளுதல். 12. செய்வினையைச் செய்தவர்மேல் ஏவுதல். 13. நஞ்சை மாற்றுதல்.*

**க.** *திருகிசு,* **தெ.** *திப்பு.*

*திருப்பு = ஒருமுறை போய் வருகை* (trip).

*திருப்பு – திருப்பம் = 1. திரும்புகை. ''வடபத்திரசாயி முத்திருப்பங்கொண்டு'' (குருபரம். 77). 2. திரும்புகோடி. 3. வாழ்க்கையில் அல்லது கதையில் நேரும் பெருமாற்றம்* (turning point).

*திரும்பு– திறம்பு. திறம்புதல் = மாறுபடுதல், மீறுதல், விலகுதல்.*

*திரு– தெரு– தெரும். தெரும்வரல்– தெருமரல் = 1. மனச்சுழற்சி. ''அலமரல் தெருமரல் ஆயிரண்டுஞ் சுழற்சி'' (தொல். சொல். 311). 2. அச்சம் (திவா.).*

*தெரும் வருதல்– தெருமருதல் = மனஞ்சுழலுதல். ''வளைமுன்கை பற்றி நலியத் தெருமந்திட்டு'' (கலித். 51).*

*தில் – தெல் – தென். தென்னுதல் = (செ. குன்றியவி.) – 1. கோணுதல். 2. சாய்தல். (செ. குன்றாவி.)– நெம்புதல்.*

*பல் தென்னிக்கொண்டிருக்கிறது என்பது உலக வழக்கு.*

*தென்– தென்னை = பெரும்பாலும் கோணி வளரும் மரம்.*

> *''பல்வகை யுதவி வழிபடு பண்பின்*
> *அல்லோர்க் களிக்கும் அதுமுடத் தெங்கே'' (நன். 35)*

*தென்– தென்கு– தெங்கு = 1. தென்னை. ''தெங்கி னிளநீ ருதிர்க்கும் வளமிகு நன்னாடு'' (புறம். 29). 2. தெங்கந்தீவு. 3. போர்ச்சேவலின் திறங்குறிக்கும் குழூஉக் குறிகளுள் ஒன்று. ''தெங்குக்குத் தெங்குவெல்லும் எனக் கோழிகளின் திறமறிந்து விடுதல்'' (பு. வெ. 12, வென்றிப். 6, உரை).* **க.** *தெங்கு,* **ம.** *தெங்ங.*

*தெங்கு– தெங்கம். ''தெங்கங்களு நெடும்பெண்ணையும் பழம்வீழ் மணற்படப்பை'' (தேவா. 846 : 3).*

*தெங்கங்காய்– தேங்காய். ''தெங்கங்காய் போலத் திரண்டுருண்ட பைங்கூந்தல்'' (யாப். வி. 95, ப. 372).*

**தெ.** *தெங்(க்)காய,* **ம.** *தேங்ஙா.*

*தென்– தென்று– தெண்டு. தெண்டுதல் = நெம்புதல், கிளப்புதல்.*

*தெண்டுதடி = நெம்புதடி.*

*தெண்டு – தெண்டில் = தலையை நெம்புவதுபோல் மேலுங் கீழுமாக அலைக்கும் ஓணான்.*

*தென் – தெறு – தெற்று. தெற்றுதல் = 1. மாறுபடுதல். 2. முறுக்கிக்கொள்ளுதல். ''தெற்றுகொடி முல்லையொடு'' (தேவா. 622 : 6). 3. இடறுதல். ''தெற்றுகாலின ரோடினர்'' (உபதேசகா. சிவவிரத. 139). 4. தடைப்படுதல். ''இல்வாழ்க்கை யென்னு மியல்புடை வான்சகடம் செல்லாது தெற்றிற்று நின்று'' (அறநெறி. 158). 5. பிழைசெய்தல். ''தெற்றினார் புரங்கள் செற்றார்'' (பெரியபு. திருநீலகண்ட. 3). 6. மாற்றுதல். ''இது சந்திரன் தொழிலைத் தெற்றினமையால் தெற்றுருவகம்'' (வீரசோ. அலங். 18, உரை). 7. இகலுதல். ''மருட்டி யெங்குந் தெற்றிய விவனை'' (திருவாலவா. 30 : 23). 8. கொன்னுதல். 9. முட்டி தட்டுதல். 10. பின்னுதல்.*

*தெற்றல் = மறுபாடுடையவன். ''தெற்றலாகிய தென்னி லங்கைக் கிறைவன்'' (தேவா. 680 : 8).*

*தெற்றுக்கால் – முட்டிதட்டுங் கால்.*

*தெற்றிக்காளை = பின்கால் முட்டிதட்டுங் காளை.*

*''தெற்றிக்காளை கழுத்தால் நெரிக்க'' (பறாளை. பள்ளு.). தெற்றுப்பல் = தென்னிக்கொண்டு அல்லது ஒன்றோடொன்று பின்னிக்கொண்டிருக்கும் பல்.*

*தெற்றுமாற்று = ஏமாற்று.*

*தெற்றுவாய் = கொன்னைவாய்.*

*தென் = தென்னைமரம் இயற்கையாக வளர்ந்த தென்றிசை. குமரிக்கண்டத்தில் ஏழ்தெங்க நாடிருந்தமையையும், தென்கண்டத் திலும் அதனையடுத்த தீவுகளிலும் இன்றும் தென்னை செழித்து வளர்தலையும் நோக்குக.*

*தென் – தெற்கு = தென்றிசை.*

*தென்மொழி = குமரிக்கண்டத்தின் தெற்கில் தோன்றிய தமிழ்மொழி.*

*தென்புலம் = தமிழகத்தின் தெற்கிலிருந்த பாண்டிநாடு. தென்னவன் = தென்புலத்தை யாண்ட பாண்டியன்.*

## 15

# துல்[3] (துளைத்தற் கருத்துவேர்)

*துல் – துன் = துளை, வளை. எலித்துன் = எலிவளை. துன்னெலி = வளைதோண்டும் எலி. துன்– துன்னு. துன்னுதல்– துளைத்தல், உழுதல்.*

*துன்னூசி = கலப்பைக் குத்தி. ''கொழுச் சென்றவழி துன்னூசி இனிது செல்லுமாறு போல'' (தொல். சி. பாயி. நச். உரை). துன்– துன்னம் = உழவு, ஊசித்துளை (பிங்.).*

***தெ.*** *துன்னு* (dunnu), to Plough.

***தெ.*** *துன்ன போத்து = உழவெருமை.*

*துன் – துன்னல் = துளை. ஒ.நோ :* E. tunnel. ''*tunnel* = 1. Artificial Subterranean Passage through hill *etc*. or under river *etc*; Subterrauean Passage dug by burrowing animal; (Mining) adit or level open at one end; main flue of chimney''.

[ME, f. OF. *tonel* & *tonnelle*, dim of tonne TUN] - *எருதந்துறைச் சிற்றகர முதலி* (C. O. D.).

*துன்– தொன்– தொன்னை = துளையுள்ளது போன்ற இலைக்கலம். ''கைக்கே யிலைகொண்டு தொன்னையுங் கொண்டு'' (தனிப்பா.), 2. எச்சிற் கல்லை போன்ற இழிந்தோன்.* (W.).

***தெ., க.*** *தொன்னெ* (donne).

*ஒ.நோ :* E. tun.

''tun = 1. Large cask for wine, beer, *etc*., esp. formerly as measure of capacity (252 wine gallons); brewer's fermenting-vat''. [OE *tunne* = OHG, ON *tunna*, f. Gaulish *tunna*.

*தொன்னைக்காது = தொன்னைபோல் மடங்கிய காது.*

*துள் – துள – துளவை = தொளை (யாழ். அக.). துள் – துளை. துளைதல் = 1. நீரில் விளையாடுதல் ''ஆனந்த வெள்ளத் துறையிலே படிந்து*

*மூழ்கித் துளைந்து'' (தாயு. வம்பனேன். 2). 2. அழுந்திக் கிடத்தல். ''குடும்பக் கூத்துட் டுளைந்து'' (தாயு. சொல்லற். 7).*

*துளைத்தல் = 1. துளையிடுதல். 2. ஊடுருவுதல். 3. துன்புறுத்து தல், தொல்லை கொடுத்தல். ஓயாமல் அவனைத் துளைக்கிறான். (உ. வ.). 4. கிண்டிக் கேட்டல், கரும விளத்தம் வினவுதல். விழாவின் வரவுசெலவுக் கணக்குப்பற்றி அவனைத் துளைத்துக் கொண்டிருக் கிறான். (உ. வ.).*

*ம. துளைக்க., தெ. தொளுச்சு.*

*துளை = 1. ஒட்டை, குழி (பிங்.). 2. வாயில். 3. உட்டொளை. 4. உட்டொளையுள்ள மூங்கில் (பிங்.). துளையுள்ளது போன்ற மயிர்ச் சுருட்சி. ''துளையார் கருமென்குழ லாய்ச்சியர்'' (திவ். பெரியதி. 3 : 8 : 8). 6. வயிரக் குற்றங்களுள் ஒன்று. ''துளைகரி விந்து காக பாதம்'' (சிலப். 14 : 180, உரை).*

***ம.** துள, **தெ.** தொள, **க.** தொளெ, **து.** தொளு.*

*துளைக்கருவி = துளையுள்ள இசைக்கருவி.*

*துளைக்கை = தும்பிக்கை (யாழ். அக.).*

*துளைச்செவி = 1. செவியுட்புறம். 2. உட்செவியுள்ள உயிரிவகை.*

*துளைப்பு – 1. துளையிடுகை. 2. தொந்தரவு செய்கை. துளைப் பொன் = தூய்மைக்கு அடையாளமாகத் துளையிடப்பட்ட மாற்று யர்ந்த தங்கம்.* (I. M. P. T]. 138). *(பெருங். இலாவாண. 6 : 63).*

*துளையம் = நீரிற் குடைந்து விளையாடுகை. ''வெள்ளநீர்த் துளைய மாடி'' (குமர. பிர. முத்துக். பிள். 52).*

*துளை– திளை– திளைத்தல் = 1. நீரில் முழுகுதல். 2. நீரிற் குடைந்து விளையாடுதல். 3. இன்புறுதல். 4. ஒரு வினைமுயற்சியில் அமிழ்தல்.*

*துள் – துள – துழ. துழத்தல் = துளைத்துக் கிண்டுதல். துழாவுதல். ''தொடித்தோள் துடுப்பிற் றுழந்த வல்சியின்'' (புறம். 26). ''இட்டுந் தொட்டுங் கவ்வியுந் துழந்தும்'' (புறம். 188). **க.** தொளசு.*

*துழ – துழதி = துன்பம். ''பிறவித் துழதி நீங்க'' (திவ். திருவாய். 2 : 7 : 7).*

*துழ – துழவு. துழவுதல் = 1. கிண்டுதல், துழாவுதல். ''வழையமை சாரல் கமழத் துழைஇ'' (மலைபடு. 181). 2. துழாவுதல் போற் சூழ வருதல்,*

''மாதிரந் துழவுங் கவலை நெஞ்சத்து'' (புறம். 174).

துழவு – துழவை = துழாவியட்ட (கிண்டிச் சமைத்த) கூழ். ''அவையா வரிசி யங்களித் துழவை'' (பெரும்பாண். 275). 2. சிறுபடகைச் சுக்கான்போல் திருப்ப உதவும் மூங்கிற்பற்றை (யாழ்ப்.).

துழவை தொடுத்தல் = தண்டு வலித்தல் (W.). துழனி = கிண்டுவதுபோல் நோட்டஞ் செய்து கூறும் குற்றம். அவன் ஓயாமல் துழனி பேசுவான். (நெ.வ.).

துழ – துழா. துழாதல் = துழவுதல், சூழ்ந்து வீசுதல். ''பனிவாடை துழாகின்றதே'' (திவ். இயற். திருவிருத். 35).

துழாவாரம் = பலர் கூடிப் பிறர் செய்திகளைக் கிண்டிப்பேசும் வம்புப் பேச்சு.

துழா – துழாவு. துழாவுதல் = 1. கையால் அளைதல். 2. கிளறுதல். 3. தண்டு வலித்தல். ''துளிபடத் துழாவு திண்கோற் றுடுப்பு'' (கம்பரா. குகப். 60). 4. தடவுதல். ''துழாநெடுஞ் சூழிரு ளென்று'' (திவ். இயற். திருவிருத். 36). 5. தடுமாறுதல். ''எண்ணந் துழாவுமிடத்து'' (திவ். இயற். திருவிருத். 28). 6. நாடுதல். ''வானு நிலனுந் திசையுந் துழாவும்'' (கலித். 145 : 43). 7. ஆராய்தல், 8. அளவளாவுதல் (பிங்.).

துழ – துழை. துழைதல் = துழாவுதல், வள்ளத் துடுப்பால் துழாவிப் படகைச் செலுத்துதல். (நாஞ். வ.).

துள் – துளு – துளுப்பு. துளுப்பிடுதல் = கலக்குதல். ''குன்றிற் கருங்கடல் துளுப்பிட் டாங்கு'' (சீவக. 1112).

துளுப்பு – துடுப்பு = 1. சட்டுவம். ''இட்டார் தொடுகழலார் மூழை துடுப்பு'' (பு. வெ. 6 : 23). 2. அகப்பை. ''துடுப்பிற் றுழந்த வல்சி'' (புறம். 26). 3. துழாவுமனை. 4. அகப்பை போன்ற காந்தள் மடல். ''பஃறுடுப் பெடுத்த வலங்குகுலைக் காந்தள்'' (அகம். 108). 5. வலிப்புத்தண்டு. 6. பூங்கொத்து (யாழ். அக.).

**ம.** துடுப்பு, **க.** துடுப்பு, **தெ.** துடுப்பு (d).

துளு – துடு – துடுவை = நெய்த் துடுப்பு.

''துடுவையா னறுநெ யார்த்தி'' (திருவிளை. திருமணப். 184).

துழை – துடை. துடைத்தல் = 1. தடவி நீக்குதல். ''வான் றுடைக்கும் வகைய போல'' (புறம். 38). 2. பெருக்கித் தள்ளுதல்.

*''தூளி...... ஆர்ப்பது துடைப்பது போன்ற'' (கம்பரா. கும்பகர்ண. 101). 3. கைவிடுதல். 4. அறுவாக்குதல். 5. நீக்குதல். ''தன்கேளிர் துன்பந் துடைத் தூன்றுந் தூண்'' (குறள். 615). 6. கொல்லுதல். ''துடைத்த காலன்றனை'' (ஞானவா. சுக்கி. 18). 7. அழித்தல். ''படைப்பாய் காப்பாய் துடைப்பாய் போற்றி'' (திருவாச. 4 : 100).*

***ம.*** *துடெக்க,* ***க.*** *தொடெ,* ***தெ.*** *துடுத்சு. துடை – துடைப்பு – துடைப்பம் = விளக்குமாறு. ''உரோமநீள் வால்க ளற்றன துடைப்ப மொத்தலின்'' (உத்தரரா. இலங்கையழி. 31).*

*துடைகாலன் = தன் குடும்பத்திற்குக் கேடுவிளைக்கும் ஆக்கங் கெட்டவன்.*

*துடைகாலி = தன் பிறந்தகத்திற்கு அல்லது புகுந்தகத்திற்குக் கேடுவிளைக்கும் ஆக்கங் கெட்டவள்.*

*துழவு– துடவு= ஒரு முகத்தலளவு. ''ஒரு துடவு நெய்யும்''* (T. A. S. Vol. II, 86).

*துடவு– தடவு. தடவுதல் = 1. துழாவுதல்போற் கையால் தேய்த்தல், பூசுதல், தலைக்கு என்ணெய் தடவு. (உ. வ.). 2. வருடுதல். ''தந்நெஞ்சந் தாமே தடவாரோ தானவர்கள்'' (கம்பரா. மாயாசனக. 80). 3. தகட்டுப் பணிகாரஞ் செய்தல் (யாழ்ப்.). 4. படியால் தலைதட்டி யளத்தல். தலைதடவ மூன்றுபடி கொடுத்தாள். (உ. வ.). 5. யாழ் போன்ற நரப்புக் கருவியை இயக்குதல். 6. இருட்டிற் கைகால் முதலியவற்றால் துழாவுதல். ''காலினாற் றடவிச் சென்று'' (பெரியபு. இளையான்குடி. 18). 7. திருகுதல். 8. இருட்டில் உரிமை யல்லாதவளைப் புணர்தல். 9. தேடுதல். ''பிலந்தடவி'' (கம்பரா. நட்புக்கோ. 53). 10. தடுமாறுதல். 11. குடிகாரன்போல் தள்ளாடுதல். ''களிப்பட்டா னிலையேபோற் றடவுபு'' (கலித். 101). 12. பன்னாங் குழி விளையாட்டிற் குழியைத் தடவிக் காயெடுத்தல். 13. குருடன் எழும்ப லெழூத்தைக் கையாலறிதல். 14. பயிற்சிக் குறைவால் அல்லது பார்வைக் குறைவால் கைவைத்துப் படித்தல். 15. முட்டுப் படுதல்.*

***ம.*** *தடவுக,* ***தெ.*** *தடவு.*

*துல் – துர் – துர. துரத்தல் = 1. துளைத்தல் (நாஞ். வ.). 2. உட்செலுத்துதல். ''துரப்பமை யாணி'' (பொருந. 10).*

*துர– துரவு = 1. பாசனத்திற்கு உதவும் பெருங்கிணறு. ''துரவுகிணறு இழித்தப் பெறுவதாகவும்''* S. I. I. Vol. II, 509). *2. மணற்கேணி. 3. துருவியாராயும் வேவு. துப்புத்துரவு. (இணைமொழி).*

***ம.*** *துரவு,* ***தெ.*** *தொருவு (பெருங்கிணறு).*

*துர– துரப்பு = 1. மலையிற் குடையப்பட்ட பாதை. (நாஞ். வ.). 2. உள் முடுக்குகை. ''துரப்பமை யாணி'' (பொருந. 10).*

*துரப்புதல் = துருவித் தேடுதல், தேடுதல். ''எனதொரு வாய்க்கு நால்வாய்க்கு மிரையெங்கே துரப்புவேனே'' (தனிப்பா. தொ.* I, *181 : 3).*

*துரப்பு – துரப்பணம் = துளையிடுகருவி.*

***ம.*** *துரப்பணம். துரப்பு – துரப்பை = துழாவித் தூர்க்கும் வார்கோல் (நாஞ். வ.).*

*துர– துரக்கு– திரக்கு. திரக்குதல் = தேடுதல். 'ஊரெங்குந் திரக்கியும் திருட்டுப்பயல் அகப்படவில்லை' (நாஞ். வ.).*

*துர – துற. துறத்தல் = துளைத்தல், துளைத்து உள்ளிருப்பதை வெளிப்படுத்துதல்.*

*துற – துறவு = 1. மருமம், மறைபொருள். ''உறவுகொண் டவரவர் துறவு கண்டேன்'' (சீதக். 41). 2. வாய்ப்பான நிலை. ''சோடாய் மரத்திற் புறவிரண் டிருந்திடத் துறவு கண்டே வேடுவன்'' (குமரே. சத. 85). 3. வெளியிடம்.*

*துற – துறவை = 1. வெளியிடம். 2. வெளிப்படையானது.*

*துற – துறப்பு = 1. துளைத்துத் திறத்தல். 2. திறக்கும் திறவுகோல். 3. திறக்கப்படும் பூட்டு (பிங்.).*

*துறப்புக் குச்சு = திறவுகோல்.*

*துரப்பணம் – துறப்பணம்.*

*துற– திற. திறத்தல் = 1. கதவு திறத்தல். ''அறவை யாயின் நினதெனத் திறத்தல்'' (புறம். 44). 2. பூட்டைத் திறத்தல். 3. சுவர் நடுவே யிடித்து வழியமைத்தல். 4. வானத்தை மூடியிருந்த முகில் நீங்குதல். 5. துன்பம் நீங்க வழியுண்டாதல். வாளால் வழிதிறந்தான் பணம் என்பது ஒரு பழங்காசு* (Pudu. Insc. 767). *6. குடை, பொத்தகம், ஆடை முதலியவற்றை விரித்தல். 7. திரையை நீக்குதல். 8. மண்டை வெடித்தல் அல்லது பிளத்தல். தடியடியால் தலை திறந்துவிட்டது. (உ. வ.) 9. மனத்திலுள்ள மருமத்தை வெளிப்படுத்துதல். 10. துளைத்தல்.*

***ம.*** *துறக்க,* ***தெ.*** *தெர,* ***க.*** *தெறெ.*

*திறந்த மடம் = நாற்புறமும் அடைப்பில்லாக் கூடம்.*

*திறந்தமனம் = மறைவாக உள்ளொன்றும் இல்லாத உள்ளம்.*

திறந்தவெளி = கட்டடம் மரம் குன்று முதலியன இல்லாத வெட்டவெளி.

திற– திறப்பு = 1. பிளப்பு. ''மண்டிறப் பெய்த வீழ்ந்தான்'' (கம்பரா. கும்பக. 195). 2. திறவுகோல் (யாழ்ப்.). 3. வெளியிடம்.

**க.** தெறப்பு, **தெ.** தெரப்பி.

துன் = துளை. துன்னுதல் = துளைபோன்ற வாய்க்குட் செலுத்துதல், உண்ணுதல். ஒ.நோ : உள்– உண்.

இவ் வினை (துன்) இன்று வழக்கற்றது. துன்– துற்று. துற்றுதல் = 1. உண்ணுதல். ''கொடுவா யிரும்பின் கோளிரை துற்றி'' (அகம். 36). 2. கவ்வுதல். ''இகலன்வாய்த் துற்றிய தோற்றம்'' (களவழி. 28). **க.** துத்து.

துற்று = உணவு. ''பற்றின்று துற்றின்று'' (பு. வெ. 10 : 4). 2. கவளம். ''முற்றுற்றுந் துற்றினை'' (நாலடி, 190).

துற்றர் = உண்பவர். ''விரைந்தால முண்ணுந் துற்றரை'' (தேவா. 204 : 9).

துற்றவை – நுகர் பொருள். ''துற்றவை துறந்த வெற்றுயி ராக்கை'' (திருவாச. 3 : 137).

துற்றி = உணவு, உண்பவை (திவா.).

துன்– தின். தின்னுதல் = 1. உண்ணுதல். ''இரும்பே ரொக்க லொடு தின்மெனத் தருதலின்'' (புறம். 150). 2. சிற்றுண்டி யருந்துதல். 3. மெல்லுதல். 4. மிகுதியாய் உண்ணுதல். 5. அரித்தல். ஏட்டுச் சுவடியைக் கறையான் தின்றுவிட்டது. (உ. வ.). 6. வருத்துதல். ''பிணிதன்னைத் தின்னுங்கால்'' (திரிகடு. 88).

> ''கண்ணுங் கொளச்சேறி நெஞ்சே இவையென்னைத்
> தின்னும் அவர்க்காண லுற்று.'' (குறள். 1244)

7. சொறிவெடுத்தல். ''தின்றவிடஞ் சொறிந்தாற் போல'' (திவ். திருவாய். 4 : 8 : 9). 8. பிறர் பொருளை நுகர்தல். என் சொத்தை யெல்லாந் தின்றுவிட்டான். (உ. வ.). 9. அராவுதல். ''அரந்தின்ற கூர்வேல்'' (கம்பரா. சம்புமா. 6). 10. வெட்டுதல். ''கோணந் தின்ற வடுவாழ் முகத்த'' (மதுரைக். 592). 11. அழித்தல். ''அறிவழுங்கத் தின்னும் பசிநோயும்'' (திரிகடு. 95). 12. பெறுதல். ''கானகம் போய்க்குமை தின்பர்கள்'' (திவ். திருவாய். 4 : 1 : 2). நன்றாய் அடி தின்றான் என்பது உலக வழக்கு.

**ம.** தின்னுக, **க.** தின், தினு, தின்னு; **தெ.** தினு, கோத். தின், துட. தின்.

*தின்– தின்றி = தின்பண்டம், உணவு (திவா.).* ***க.*** *திண்டி.*

*தின்றிப் போத்து = பேருண்டியான். க. திண்டிப்போத்த.*

*தின்னி = அடிக்கடி யுண்பவன், பேருணவினன். தின்– தீன் = உணவு. ''தீனு ணாதன'' (கம்பரா. சேதுபந்தன. 28).* ***ம.*** *தீன்.*

*தீன்– தீனி = 1. சிற்றுண்டி. 2. விலங்குணவு. 3. இன்சுவை யுண்டி. ''தீனியி லாசை தெவிட்டாது தேவர்க்கும்'' (திருமந்.)*

***ம.*** *தீன்.,* ***க., து.*** *தீனி.*

*தின்– திற்று – தீற்று. தீற்றுதல் = 1. ஊட்டுதல். ''நென்மா வல்சி தீற்றி'' (பெரும்பாண். 343). 2. சுண்ணம் சுதை முதலியவற்றாற் சுவரைப் பூசுதல். 3. நிறமூட்டுதல். ''வெண்மை தீற்றிய..... மாளிகை'' (கம்பரா. நகரப். 27). 4. சாம்பல் முதலியவற்றால் பல்விளக்குதல்.*

*துல் – துள் – துண்பு – தும்பு = உட்டுளை, துளையுள்ள உறுப்பு, உறிஞ்சி.*

*தும்பு – தும்பா = 1. உட்டுளையுள்ள சுரைக்குடுக்கை. 2. குடுக்கைக் கலம். 3. கடிகலவகை. தும்பா– வ. தும்ப.*

*தும்பு – தும்பாலை = சுரைக்காய், சுரைக்குடுக்கை.*

*தும்பு – தும்பி = 1. சுரை (பிங்.). ''கமுகு மரத் தும்பி'' (சைவச. பொது. 277). 2. குடிகல வகை. தும்பி–* ***வ.*** *தும்பீ.*

*3. தேனுறிஞ்சும் உறுப்புள்ள வண்டு (பிங்.). ''துவைத்தெழு தும்பி'' (அகம். 317).*

***ம.*** *தும்பி,* ***க., து.*** *தும்பி. தும்பிப் பதக்கம் = வண்டின் வடிவாகச் செய்யப்பட்ட பதக்கம். ''தும்பிப் பதக்கவிலை சொற்பமோ'' (விறலிவிடு. 698).*

*4. உட்டுளையுள்ளதும் கைபோல் உதவுவதுமான நீண்ட மூக்கையுடைய யானை (பிங்.). ''தும்பியை யரிதொலைத் தென்ன'' (கம்பரா. வாலிவதை. 51).*

*தும்பிக்கை = யானைக்கை, துளையுள்ள கை.*

*தும்பிமா = வண்டு துளைத்த மாம்பழம்.*

*தும்பு– துப்பு = 1. துருவியாராய்தல். 2. உளவு. 3. உள வடையாளம்.* ***க., து.*** *துப்பு* (tubbu).

*தும்பு– தூம்பு = 1. உட்டுளை. ''தூம்புடைத் தடக்கை'' (புறம். 19). 2. உட்டுளைப் பொருள் (பிங்.). 3. மதகு. ''குளந்தூம்பு விட்டு'' (சீவக. 2760). 4. மூங்கில் (திவா.). 5. மூங்கிற் குழாய். ''தூம்பகம் பழுநிய தீம்பிழி*

மாந்தி'' (பதிற். 81 : 21). 6. மூங்கிலால் ஆகிய இசைக்கருவி. ''கழைவளர் தூம்பின் கண்ணிட மிளிர'' (மலைபடு. 533). 7. மரக்கால். 8. இடுக்குவழி (யாழ். அக.). 9. மனைவாயில். தூம்பின் மனை'' (மணிமே. 28 : 5). 12. தோற்கூனை. 13. மேனிலையி லிருந்து மழைநீர் விழுங்குழாய்.

**ம., க.** தூம்பு, **தெ.** தூமு.

தூம்புக்கை = தும்பிக்கை (உ. வ.).

தூம்புவாய் = சாய்கடை (திவா.).

தூம்பு – தூம் = 1. முகத்தலளவை வகை. எ - டு : குப்பத்தூம், தேவதூம் (W.). 2. ஒரு நிறை.

தூம்பு – ஒ.நோ : L. tubus, E. tube.

தூம்பு – தூம்பல் = சுரை (மலை.).

தூம்பு – தூம்பா. தூம்பா மடை = சாய்கடை (நெ.வ.).

தும்பு – தொம்பு – தொம்பை = மூங்கிலாலான நெற்குதிர். ''அழகான ரம்பை, அரிசி கொட்டுந் தொம்பை'' (உ. வ.). க. தொம்பெ.

தொம்பை – தொப்பை = 1. தொந்தி. ''தொப்பையொரு பெருவயிற்றுப் பிள்ளைக்குச் சுமத்துதியே.'' (தக்கயாகப். 229). 2. கொப்புளம் (யா.).

தொப்பை (வயிறு) – **தெ.** தொப்ப (dobba).

துள் – துய். துய்த்தல் = 1. உண்ணுதல் (துளைபோன்ற வாய்க்குட் செலுத்துதல்). ஒ.நோ : துல் – துன் – தின். ''புதுப்பூத் துய்த்த வாய'' (அகம். 15). 2. புலன்களால் நுகர்தல். ''கொடுப்பதூஉந் துய்ப்பதூஉ மில்லார்க்கு'' (குறள். 1005). 3. இன்ப துன்பம் நுகர்தல். ''தொல்வினைப் பயன்றுய்ப்ப'' (கலித். 118).

துய் = உணவு. ''துய்தா னுறும் வாயினை'' (கந்தபு. தாரக. 159).

துய் – து. துத்தல் = 1. உண்ணுதல். ''துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கி'' (குறள். 12. நுகர்தல்.).

து = 1. உணவு (இலக். அக.). 2. நுகர்வு (யாழ். அக.).

து – துப்பு = 1. உணவு. ''துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கி'' (குறள். 12). 2. நுகர்ச்சி. ''துப்புமிழ்ந் தலமருங் காமவல்லி'' (சீவக. 197). 3. நுகர்ச்சிப் பொருள். ''வருபவர்க்குத் துப்பமைத்து நல்கும்'' (திருவாரூ. 480). 4. வலிமை. ''கெடலருந் துப்பின்'' (அகம். 105).

*5. திறமை. ''ஆழ்கடலைக் கடைந்த துப்பனே'' (திவ். திருவாய். 4 : 7 : 5).*

*து– துவ்வு. துவ்வுதல் = 1. உண்ணுதல். 2. நுகர்தல் (திவா.). ''துவ்வா நறவின் சாயினத் தானே'' (பதிற். 60 : 12). 3. வலியுறுதல். ''ஆன்ற துணையிலன் தான்றுவ்வான்'' (குறள். 862).*

*துவ்வு = 1. உணவு (யாழ். அக.). 2. ஐம்பொறி நுகர்ச்சி (சூடா.). 3. வினைப்பயன் நுகர்ச்சி (யாழ். அக.).*

*துவ்வு– துவ்வை = பருகுதற் குரியது.*

*துவ்வாமை = 1. உண்ணாமை. 2. நுகராமை. ''துவ்வாமை வந்தக் கடை'' (கலித். 22). 3. வறுமை. ''துன்புறூஉந் துவ்வாமை யில்லாகும்'' (குறள். 94). 4. வெறுப்பு.*

*துள்– துன்– தூண்– தூணி = 1. அம்புக்கூடு.*

*தூணி–* **வ.** *தூண.*

*2. நான்மரக்கால். ''கருங்கொள்ளுஞ் செங்கொள்ளுந் தூணி பதக்கென்று'' (நாலடி. 387).*

*தூணி–* **வ.** *ஸ்தூணா.*

*துள்– தொள்– தொள்கு = பள்ளம்* (W.).

*தொள்– தொள்ளல் = துளை (உ. வ.).*

*தொள். தொள்ளை = 1. துளை. ''தொள்ளைப் புலாற்பை'' (திருப்பு. 289). 2. குழி. ''தொள்ளை மன்றத் தாங்கண்'' (புறம். 333). 3. துளையுடைப் பொருள் (யாழ். அக.). 4. மரக்கலம் (திவா.). 5. மரக்கால் (தைலவ. தைல. 135 : 17). 6. குற்றம். ''தொள்ளை யுணர்வின் னவர்கள் சொல்லின்'' (சீவக. 496). 7. அறியாமை. ''தொள்ளை பூத்தலர்ந்த நெஞ்சிற் றக்கன்'' (கூர்மபு. தக்கன்வே. 6).* **ம.** *தொள்ள,* **க.** *தொள்ள.*

*தொள்ளைக்காது = 1. துளையிட்ட காது. 2. பெருந்துளைக்காது. 3. அணி நீங்கிய துளைக்காது.*

*தொள்ளுதல் = 1. துளைத்தல் (திவா.). ''செந்தீத் தொட்ட கருந்துளைக் குழலின்'' (பெரும்பாண். 179). 2. நெகிழ்தல்* (W.).

*தொள்– தொள்கு. தொள்கல் = துளைத்தல் (பிங்.).*

*தொள்ளை– தொளை. தொளைத்தல் = 1. துளையிடுதல். ''மணித் தோளையுந் தொளைத்தான்'' (கம்பரா. நிகும்பலை. 123). 2. தொந்தரவு செய்தல். (உ. வ.). 3. புலனம் (விஷயம்) தெரிய ஆழம் பார்த்தல். (உ. வ.).*

*தொள் = தொழு = சிறு குற்றவாளிகட்குத் தண்டனையாகக் கால்களை மாட்டி வைக்கும் குட்டையென்னும் மரச்சட்டம்.*

*தொளை = 1. துளை. ''தொளைகொடாழ் தடக்கை'' (கம்பரா. சித்திர. 29). 2. மூங்கில் (பிங்.).*

*தொள்– தொழு = 1. தொழில். 2. பயிர்த்தொழில்.*

*தொழு – தொழுவன் = 1. தொழிலாளி. 2. பயிரிடுவோன்.*

*தொழுவர் = 1. தொழில் செய்வார். ''நீர்த்தெவு நிரைத் தொழுவர்'' (மதுரைக். 89). 2. உழவர். ''நெல்லரி தொழுவர்'' (புறம். 209).*

*தொழு – தொழில் = 1. செயல். ''பிறிதுதொழி லறியா வாகலின்'' (புறம். 14). 2. உழவு, கைத்தொழில், வரைவு, வாணிகம், கல்வி, கம்மியம் என்னும் அறுதொழில்களுள் ஒன்று (திவா.). 3. படைத்தல் காத்தல் அழித்தல் என்னும் இறைவன் முத் தொழில் களுள் ஒன்று. ''தோற்று வித்தளித்துப் பின்னுந் துடைத்தருள் தொழில் கள் மூன்றும்'' (சி. சி. 1 : 33). 4. அலுவல். 5. தொழில்திறம். 6. வேலை. 7. ஏவல். ''தொன்று மொழிந்து தொழில்கேட்ப'' (மதுரைக். 72). 8. வினைச்சொல். ''பெயருந் தொழிலும் பிரிந்தொருங் கிசைப்ப'' (தொல். எழுத்து. 132).*

*உலகில் முதன்முதல் தோன்றிய விளைப்பு அல்லது உண்டாக்கத் தொழில், நிலத்தைத் தோண்டி அல்லது கொத்தி அல்லது உழுது வித்திய பயிர்த்தொழிலாதலின், தோண்டுதலைக் குறிக்கும் தொள் என்னும் மூலத்தினின்று திரிந்த தொழில் என்னும் பெயர்ச் சொல், முதற்கண் உழவுத்தொழிலையும் பின்னர்ப் பிறதொழிற் பொதுவையும் குறித்தது. தொள் என்னும் தென் சொல்லொடு* till *என்னும் ஆங்கிலச் சொல்லை ஒப்புநோக்க.*

E. till = to prepare and use soil for crops.

tiller = ploughman, tillage = ploughing.

*தொள் – தொய். தொய்தல் = 1. உழுதல். ''தொய்யாது வித்திய துளர்படு துடவை'' (மலைபடு. 122). 2. வினைசெய்தல். ''தொய்யா வுலகத்து நுகர்ச்சியுங் கூடும்'' (புறம். 214).*

*தொள்– தொண்டு = 1. துளை. 2. ஒன்பது. ''தொண்டுபடு திவவின்'' (மலைபடு. 21). 3. ஒடுக்கவழி (உ. வ.). 4. உருவாஞ் சுருக்கு (அக. நி.).* **ம.** *தொண்டு.*

*மாந்தன் உடம்பில் ஒன்பான் துளைகள் இருப்பதால், துளையின் பெயர் அதன் தொகைக்காயிற்று. ''தொண்டுபடு திவவின் முண்டக*

*நல்யாழ்'' (ஆசிரியமாலை). தொண்டு + பத்து = தொண்பது – ஒண்பது – ஒன்பது. தொண்டு = 9. தொண்பது + ஆயிரம் = தொள்ளாயிரம் (900). தொண்டு என்னும் முதலாம் இடத்து எண்ணுப் பெயர் வழக்கு வீழவே, அதற்கு மேற்பட்ட இடத்து எண்ணுப் பெயர் களெல்லாம் ஒவ்வோரிடம் முறையே தாழ்ந்துவிட்டன என அறிக.*

*''தொண்டுதலை யிட்ட பத்துக்குறை யெழுநூற்*
*றொன்பஃ தென்ப உணர்ந்திசி னோரே'' (செய். 100)*

*என ஒரே தொல்காப்பிய நூற்பாவில், பண்டைப் பெயரும் பின்றைப் பெயரும் வந்திருத்தல் காண்க.*

*தொண்டு – தொண்டி = துளை.* ***தெ.*** *தொண்டி.*

*தொண்டு – தொண்டலம் = 1. நீண்ட துளையுள்ள யானைத் துதிக்கை. ''சூர்மக னுந்து தொண்டலம் பற்றி'' (கந்தபு. அமரர்சி. 83). 2. யானைத் துதிக்கை போன்ற கம்மாலை இறைவைக் கூனைத் தோல்வால்.*

*தொண்டலக்குழி = இறைவைக் கூனைநீர் வால் வழியாக விழும் பள்ளம்.*

*தொண்டலம் – ப.* ***க.*** *தொண்டில் = யானைக்கை.*

***வ.*** *சுண்டா* (cunda).

*தொண்டு – தொண்டை = 1. மிடறு (பிங்.).* throat, gullet. *2. குரல்வளை;* windpipe, larynx. *3. குரல்;* voice, singing voice. *அவனுக்கு நல்ல தொண்டை, கந்தனுக்குக் கீச்சுத் தொண்டை (உ. வ.). 4. யானைத் துதிக்கை (பிங்.). ''கருநாகத் தொண்டைக் கயமுனிக் கூட்டங்கள்'' (திருப்போ. சந். அலங்கா. 18).*

***ம.*** *தொண்ட,* ***து.*** *தொண்டெ.*

*தொள் – தொட்டி = 1. நீர்த்தாழி. 2. பூஞ்செடிக்கலம். 3. நீர்த்தொட்டி. ''துற்றுவ துற்றுந் துணையிதழ் வாய்த்தொட்டி'' (பரிபா. 20:51). 4. மாட்டிற்குத் தீனிவைக்குங் காடி. 5. குப்பைத் தொட்டி. 6. பிடிகை (அம்பாரி). 7. வீட்டு நடுவிலுள்ள திறந்தவெளி.*

*நடுவில் வானவெளியுள்ளது தொட்டிக்கட்டு வீடெனப் படும்.*

***ம., தெ., க., து.*** *தொட்டி.*

*தொட்டி – தொட்டில் = குழந்தைகட்குத் தொட்டி வடிவில் மரத்தாற் செய்த சிறு தொங்குகட்டில்.*

*'இல்' ஒரு சிறுமைப்பொரு ளீறு. எ - டு : புட்டி – புட்டில், விட்டி – விட்டில்.*

*குழந்தைகள் தூங்குவதற்குச் சேலையாற் கட்டியது ஏணை எனப்படும். இன்று ஏணைக்குத் தொட்டில் என்னும் பெயர் தவறாக வழங்குகின்றது.*

*தொள்– தொடு. தொடுதல் = 1. தோண்டுதல். ''தொட்டனைத் தூறும் மணற்கேணி'' (குறள். 396). 2. துளைத்தல். ''உழலை மரத்தைப் போற் றொட்டன வேறு'' (கலித். 106). 3. வளைய லணிதல்.* **ப. க.** *தொடு. ''சுறாவே றெழுதிய மோதிரந் தொட்டாள்'' (கலித். 84 : 23).*

*தொடு – தொடி = 1. வளையல், கைவளை. ''குறுந்தொடி கழித்தகை'' (புறம். 77). 2. தோள்வளை. ''தொடியொடு தோணெகிழ'' (குறள். 1236). 3. மறவளை. ''தூங்கெயி லெறிந்த தொடித்தோட் செம்பியன்'' (மணிமே.* ***1 : 4****). 4. பூண். ''தொடித்தலை விழுத்தண் டூன்றி'' (புறம். 243).* ***தெ.*** *தொடி. 5. கிணறுகளிற் படியாக உதவுமாறு வெட்டப்படும் அல்லது கட்டப்படும் சுற்றுவட்டம்.*

*தொள்– தோள். தோட்டல் = 1. துளைத்தல். ''கேள்வியாற் றோட்கப் படாத செவி'' (குறள். 418). 2. தோண்டுதல். ''தெவ்வேந்த ருடறோட்ட நெடுவேலாய்'' (கம்பரா. குலமுறை. 8).*

*தோள் = தொளை (அக. நி.).*

*தோள்– தோண்– தோணி = 1. மரத்திற் குடைந்து செய்யப்பட்ட அல்லது குடைந்ததுபோற் பலகையாற் பொருத்தப்பட்ட மரக்கலம். ''புனைகலம் பெய்த தோணி'' (சீவக. 967). 2. சிறு கப்பல். ''கடன்மண்டு தோணியில்'' (புறம். 299). 3. நீர்த்தொட்டி. ''தாழிகள் தோணி கடாரங்கள்'' (அரிச். பு. விவாக. 293). 4. இருபத்தேழாம் உடு (இரேவதி).*

***ம.*** *தோணி,* ***க., து.*** *தோணி* (d), ***தெ.*** *தோனி* (d); ***வ.*** *த்ரோணி* (d), E. dhoney.

*தோள்– தோண்டு. தோண்டுதல் = 1. அகழ்தல். 2. குடைதல். 3. முகத்தல். ''நெடுங்கிணற்று வல்லூற் றுவரிதோண்டி'' (பெரும்பாண். 98). 4. கப்பற்சரக் கிறக்குதல். ''மிசைப்பரந் தோண்டாது புகாஅர்ப் புகுந்த பெருங்கலம்'' (புறம். 30).*

***ம.*** *தோண்டுக,* ***தெ., க.*** *தோடு,* ***து.*** *தோடுனி.*

*தோண்டு– தேண்டு. தேண்டுதல் = தோண்டிப் பார்த்தாற்போல் தேடிப் பார்த்தல். ''தேண்டிநேர் கண்டேன் வாழி'' (கம்பரா. உருக்காட்டு. 77).*

*தேண்டு– தேடு. ஒ.நோ : நோண்டு– நேண்டு– நேடு. நேடுதல் = தேடுதல். நோண்டுதல் = தோண்டுதல்.*

*தேடுதல் = 1. துருவி யலைந்து பார்த்தல். ''தேடினே னாடிக் கண்டேன்'' (தேவா. 1189 ః3). 2. துருவி யாய்தல். 3. பொருள் ஈட்டுதல். ''பாடுபட்டுத் தேடி'' (நல்வழி, 22). 4. போற்றுதல், விரும்புதல். அவனைத் தேடுவார் ஒருவருமில்லை. (உ. வ.).* **ம.** *தேடுக.*

*தேடு– தேட்டு– தேட்டம். ஒ.நோ: நோண்டு– நோடு– நோட்டம்.*

*தேட்டம் = 1. துருவித் தேடுகை. 2. பொருள் ஈட்டுகை. 3. ஈட்டப்பட்ட பொருள். ''தேட்டற்ற தேட்டமே'' (தாயு. தேசோ. 5). 4. விருப்பம். ''தேட்டந்தான் வாளெயிற்றிற் றின்னவோ'' (கம்பரா. சூர்ப். 121). அவனுக்கு அதில் தேட்டமில்லை. (உ. வ.).*

*தேட்டாளன் = 1. முயற்சியாற் பெரும்பொருள் ஈட்டியவன். ''தேட்டாளன் காயற்றுரை சீதக் காதி'' (தனிப்பா. தொ.* I, 238) *2. தேட்டிற்குரிய புதல்வன். (இ. வ.).*

*தேட்டு– தேட்டை = தேட்டம்.*

*தோண்டு– தோண்டான் = ஓநாய் (சது.).*

*கழுத்து, மார்பு, வயிறு ஆகியவற்றைக் கடித்துச் சதையைத் தோண்டித் தின்றுவிடுவதால், ஓநாய் தோண்டான் என்று பெயர் பெற்றது போலும்!*

*தோண்டு – தோண்டி = மரத்தைக் குடைந்து தோண்டிச் செய்யப்பட்ட சிறுகுடம், அதுபோன்ற மாழைக் கலம்.*

*துள்– துர்– துரு – துருவு. துருவுதல் = 1. துளைத்தல். 2. தேடுதல். ''கீழ்நீர்க் குளித்தானைத் தீத்துரீஇ யற்று'' (குறள். 929), 3. குடைதல். 4. கடைதல்.*

**க.** *துருவு,* **தெ.** *துருமு.*

OE., OS. thurh, OHG. duruh, Goth. thairh.

*துரு – தூர். தூர்த்தல் = 1. உட்செலுத்துதல். ''பழுக்கும் பழத்தைத் தூர்த்து'' (தைலவ. தைல. 134). துரிசு. 2. அடைத்தல். ''கடறூர்த்தன் மலையகழ்தல்'' (சீவக. 2165). 3. மறைத்தல். ''விண்ணவர் விசும்பு தூர்த்தார்.'' (கம்பரா. கைகேயி. 74). 4. எல்லா வற்றையும் மறைத்துப் பொழிதல். ''தூர்க்கின்ற மலர்மாரி தொடரப் போய்'' (கம்பரா. இராவணன் வதை. 199).*

*தூர்தல் = 1. புகுதல். வீட்டிற்குள் தூர்ந்துவிட்டான். (வ. ஆ. வ.). 2. அடைபடுதல். ''துளவாய் தூர்ந்த துரப்பமை யாணி'' (பொருந. 10). 3. மறைதல். ''வள்ளி நடந்தவழி தூர்ந்திடாது'' (வெங்கைக்கோ. 345). ம. தூருக.*

தூர் = கிணற்றை யடைக்கும் சேறு செத்தை.

தூர் = தூர்வை. ''தானே வந்தாலுந் தூர்வை யெடுக்க வொண்ணாது'' (திவ். இயற். திருவிருத். 12, வியா. 85).

தூர் – தூரி = மீன் தங்கி நீர்மட்டும் துருவிச் செல்லும் மீன்பொறி.

தூர் – தோர் – தோரணம் = தெருவில் துருவக் (குறுக்காகக்) கட்டும் சுவடிப்புத் தொங்கல்.

தொள் – தொள. தொளதொளத்தல் = துளையுண்டதுபோல் நெகிழ்தல்.

தொள – தொளர் – தளர். தளர்தல் = 1. நெகிழ்தல். 2. கட்டுக் குலைதல். ''தாழாத் தளராத் தலைநடுங்கா'' (நாலடி. 14). 3. சோர்தல். ''தளர்ந்தே னெம்பிரா னென்னைத் தாங்கிக் கொள்ளே'' (திருவாச. 6 : 1). 4. நுடங்குதல். 5. மனங்கலங்குதல். 6. உயிரொடுங் குதல். ''தகை பாடவலாய் தளர்கோ தளர்கோ'' (சீவக. 1379).

தொள் – தொய். தொய்தல் = 1. தளர்தல். 2. சோர்தல். ''தொய்யுமான் போலத் துவக்குண்டேன்'' (விறலிவிடு. 107). 3. துவளுதல். ''தொய்யு மரவணைக்குள்'' (திருப்பு. 1173). 4. இளைத்தல். 5. வாடுதல். 6. தொங்குதல். 7. கெடுதல். ''தொய்யா வெறுக்கை யொடு'' (பெரும்பாண். 434).

தொய் – தொய்யகம் = தலைக்கோலத்தின் ஓர் உறுப்பு. ''தொய்யகந் தாழ்ந்த கதுப்பு'' (கலித். 28).

துல் – துன் – தும்பு = துளைத்தாற்போல் வருத்தும் நிலைமை. துன்பு – துன்பம்.

துன்பு – தும்பு = வரம்பு கடந்த நடத்தை, கடுஞ்சொல். ஒ.நோ : வன்பு – வம்பு. வம்பு தும்பு என்பது மரபிணை மொழி.

துல் – தொல் – தொல்லை = துன்பம், இடர்ப்பாடு.

தொண்டு = தொழில், பணிவிடை, அடிமைவேலை.

தொண்டு – தொண்டன் = பணிவிடைக்காரன், திருவடியான்.

தொழீஇ = 1. தொழில் செய்பவள் (கலித். 103). 2. பணிப்பெண். ''தொழீஇயுட னுண்ணார்'' (சிறுபஞ். 38).

serve, servant, service, servitude. servility, serf என்னும் உயர் சொல்லும் இழிசொல்லும், *servus* (L.). என்னும் ஒரே சொல்லினின்று தோன்றியிருத்தலை நோக்குக.

# 16

## துல்[4] (தெளிவுக் கருத்துவேர்)

துல்– துலங்கு. துலங்குதல் = 1. ஒளிர்தல் (சூடா.). 2. விளக்கமாகத் தோன்றுதல் (W.). 3. தெளிவாதல். ''துலங்கிய வமுதம்'' (கல்லா. 5).

**க.** தொலகு, **தெ.** துலகிஞ்சு.

துலங்கு– துலக்கு = மினுக்கு (W.). **க.** தொலகு.

துலக்கு – துலக்கம் = 1. ஒளிர்வு. ''துலக்க மெய்தினன் றோமில் களிப்பினே'' (கம்பரா. இராவணன் களங். 1). 2. மெருகு (W.). 3. தெளிவு. துலக்கமாய்த் தெரிகிறது. (உ. வ.).

துல் – தெல். ஒ.நோ : குழு – கெழு. உ – எ (சொல்லாக்கத் திரிபு களுள் ஒன்று).

தெல்– தென்– தென்பு = தெளிவு.

தென்பு – தெம்பு = 1. தெளிவு. 2. உள்ளத் தெளிவு, ஊக்கம். இந்த வேலை செய்ய எனக்குத் தெம்பாயிருக்கிறது. (உ. வ.). 3. உடல் வலிமை. உடம்பில் ஒன்றுந் தெம்பில்லையே! (உ. வ.). 4. திடா ரிக்கம். ''தெம்பை நானென்று காண்பேனோ'' (இராமநா. உயுத். 81).

தெ. தெம்பு. இச் சொல்லைத் தெலுங்கினின்று தமிழுக்கு வந்ததாகச் செ. ப. க. க. த. அகரமுதலி காட்டியுள்ளது.

தென் – தேன் = 1. பிழிந்தெடுத்துத் தெளிந்த மது. ''பாலொடு தேன்கலந் தற்றே'' (குறள். 1121). 2. இனிமை. ''தேனுறை தமிழும்'' (கல்லா. 9). 3. இனிய கள் (சூடா.). 4. இனிய மணம். ''அகிற்புகை யளைந்து தேனளாய்ப் பஞ்சுடை யமளிமேற் பள்ளி யேற்பவன்'' (சூளா. குமர. 17). 5. தேன் கூடு ''தீந்தே னெடுப்பி'' (ஐங். 272). 6. தேன் வண்டு. (திவா.).

**ம.** தேன், **தெ.** தேனெ, **க.** ஜேனு.

*தேன்– தேம் = 1. தேன். ''தேம்படு நல்வரை நாட'' (நாலடி. 239). 2. இனிமை. ''தேம்பூங் கட்டி'' (குறுந். 196). தேங்குழல் (உ. வ.) 3. கள் (சூடா.). 4. இனிய மணம். ''தேங்கமழ் கோதை'' (பு. வெ. 12 : 7). 5. இனிய ஒலி. ''தேம்பிழி மகர யாழின்'' (கம்பரா. நாட்டுப். 4). 6. ஒளிமண வூற்றினிமை. ''தேங்கொள் சுண்ணம்'' (சீவக. 12). 7. தேன்வண்டு. ''தேம்பாய் கூந்தல்'' (குறுந். 116). 8. தேன்போன்ற எண்ணெய். ''தேங்கலந்து மணிநிறங்கொண்ட மாயிருங் குஞ்சியின்'' (குறிஞ்சிப். 111). 9. வண்டிற்குத் தேன்போன்ற மணமுள்ள யானைமதம். ''தேம்படு கவுள.... யானை'' (முல்லைப். 31).*

*தேம் – தீம் = 1. இனிமை. 2. இனிய, இன்சுவையுள்ள. ''தீந்தேன்'' (குறுந். 179), ''தீங்கனி'' (குறுந். 277), ''தீம்பால்'' (குறுந். 27), ''தீம்புளி நெல்லி'' (குறுந். 317), ''தீம்புனல்'' (149). 3. ஒலியால் இனிய. ''தீம்பாலை'' (சிலப். 7 : 48). 4. ஒலியாலும் சொல்லாலும் பொருளாலும் செய்யுளாலும் இலக்கண விலக்கியத்தாலும் இனிய. ''ஒண்டீந் தமிழின் துறைவாய் நுழைந்தனையோ'' (திருக்கோ. 20).*

*தீம் – தீவு = இனிமை. தீவுதல் = இனித்தல்.*

*தீவு– தீவிய = 1. இனிய. 2. இனியவை. ''செவ்விய தீவிய சொல்லி'' (கலித். 19).*

*தீம்தீம் – தீந்தீம் – தீந்தீ– திந்தி – தித்தி.*

*ஒ. நோ : சீச்சீ– சிச்சீ– சிச்சி. தம்தம் – தந்தம் – தத்தம்.*

*தீந்தி, திந்தி என்னும் இணைப் பண்புகள் இறந்துபட்டன. முதலிரு கழக இலக்கியமும் குமரிநாட்டு உலக வழக்கும் இன்றின்மையால், இவற்றிற்கு எடுத்துக்காட்டில்லை.*

*தித்தித்தல் = இனித்தல். ''திருப்பவளச் செவ்வாய்தான் தித்தித் திருக்குமோ'' (திவ். நாய்ச். 7 : 1).*

*தித்தி = 1. தித்திப்பு* (W.). *2. பேரீந்து* (W.). *3. இன்பம்.*

*இது செ. ப. க. க. த. அகரமுதலி குறிக்கின்றவாறு, ஒலிக்குறிப்புச் சொல்லன்று.*

*தித்திப்பு = 1. இனிப்பு. ''தித்திக்குமோர் தித்திப்பெலாங் கூட்டி யுண்டாலும்'' (அருட்பா,* VI, *நடராஜ. 10). 2. இனிப்புள்ள பண்டம்.*

*தேன்– தேனி. தேனித்தல் = 1. இனித்தல். 2. இன்புறுதல், மகிழ்தல். ''கேசவன் பேரிட்டு நீங்கள் தேனித் திருமினோ'' (திவ். பெரியாழ். 4 : 6 : 1).*

*தேன் – தென் = இனிமை. ‘‘தென்னிசை பாடும் பாணன்’’ (திருவாலவா. 56 : 7).*

*தென்– தின்– இன் = 1. இனிமை. ‘‘இன்வள ரிளம்பிறை’’ (சீவக. 1008). 2. இனிய. ‘‘இன்சொ லினிதீன்றல் காண்பான்’’ (குறள். 99).*

***க.*** *இன். ஒ.நோ : தொண்பது– தொன்பது– ஒன்பது.*

*இன் – இன்பு = இனிய நுகர்ச்சி. ‘‘வளநக ரம்ப ரின்பொடு புரியவர்’’ (தேவா. 553 : 8).*

***தெ.*** *இம்பு,* ***க.*** *இம்பு* (p).

*இன்பு– இன்பம் = 1. இனிமை. ‘‘கண்டு தண்டாக் கட்கின் பத்து’’ (மதுரைக். 16). 2. இனிய காமநுகர்ச்சி. ‘‘அறம்பொரு ளின்பம்’’ (குறள். 501). 3. திருமணம். ‘‘கொம்பனை யாளையும்.... குன்றனை யானையும்.... இன்பமியற்றினார்’’ (சீவக. 1980). 4. அகமகிழ்ச்சி (திவா.). 5. சொல்லும் பொருளும் சுவைபடுங் குணம். ‘‘சொல்லினும் பொருளினுஞ் சுவைபட லின்பம்’’ (தண்டி. 18).*

*இன்– இனி. இனித்தல் = 1. தித்தித்தல். 2. செவிக்கின்பந் தருதல்.*

*இனி – இனிமை = 1. தித்திப்பு (பிங்.). 2.இன்பம். ‘‘இனிமை கூர்ந்து’’ (திருவாலவா. 1 : 18).*

*தெல்– தெர்– தெரி. தெரிதல் = செ. குன்றியவி.– 1. கண் காணுதல். அவனுக்குக் கண் தெரிகிறது. (உ. வ.). 2. பொருள் தோன்றுதல், தொலைவில் ஓர் உருவம் தெரிகின்றது. (உ. வ.). 3. தெளிவாதல், விளக்கமாதல். ‘‘தன்னால் நிகழ்ந்த தன்மை தானே தெரியச் சொன்னாள்’’ (கம்பரா. நகர்நீ. 37). 4. மனமறிதல். தெரிந்து செய்த தீவினை. (உ. வ.).*

*செ. குன்றாவி.– 1. அறிதல். ‘‘எல்லாந் தெரிந்த இறைவா’’ (தாயு. காண்பேனோ. 33). 2. செவியுற்றறிதல். ‘‘தெரிதல் நினைத லெண்ண லாகாத் திருமாலுக்கு’’ (திவ். திருவாய். 6 : 9 : 11). 3. ஆராய்தல். ‘‘திறந்தெரிந்து தேறப் படும்’’ (குறள். 501). 4. தெரிந் தெடுத்தல். ‘‘புனைமாண் மரீஇய அம்பு தெரிதியே’’ (கலித். 7). 5. அரித்தெடுத்தல் (திவா.).* ***ம.*** *தெரி(யுக).* ***தெ.*** *தெலியு.*

*தெரித்தல் = 1. வெளிப்படுத்துதல். ‘‘தெய்வ மாக்கவி மாட்சி தெரிக்கவே’’ (கம்பரா. சிறப். 6). 2. சொல்லுதல் (திவா.). 3. குறிப் பிட்டு விளக்குதல். ‘‘தெரித்துமொழி கிளவி’’ (தொல். சொல். 56).*

4. கொழித்தல் (யாழ். அக.). 5. தெரிந்தெடுத்தல் ''தெரித்த கணையாற் றிரிபுற மூன்றுஞ் செந்தீயின் மூழ்க'' (தேவா. 10 : 7).

தெரிக்கல் = விளக்கமாய்ச் சொல்லுதல். ''சைவத் திறத்தினைத் தெரிக்க லுற்றாம்'' (சி. சி. பாயி. 2).

தெரியல் = 1. தெரிந்தெடுத்தல். ''தேங்கமழ் தெரியற் றீம்பூந் தாரவன்'' (சீவக. 2253). 2. தெரிந்தெடுத்த பூவால் தொடுத்த மாலை. ''புனைவினைப் பொலிந்த பொலனறுந் தெரியல்'' (புறம். 29).

தெரிவை = 25 முதல் 31 வரைப்பட்ட அகவையுள்ள பெண். (திவா.).

தெர் – தெருள். தெருள்தல் = 1. தெளிதல். ''தெருண்ட வறிவினர்'' (நாலடி. 301). 2. மெய்யறிவுறுதல். ''தெருளாதான் மெய்ப்பொருள் கண்டற்றால்'' (குறள். 249). 3. உண்மை விளங்குதல். ''வளமலை நாடனைத் தெருள.... நீயொன்று பாடித்தை'' (கலித். 43). 4. பெண் பூப்படைதல். பிள்ளை தெருண்டுவிட்டாள். (உ. வ.). 5. பெயர் பரவி விளங்குதல். ''தெருளு மும்மதில்'' (திருவாச. 26 க 10).

தெருள் = 1. தெள்ளுணர்வு. ''தெருளு மருளு மயங்கி வருபவள்'' (கலித். 144). 2. தெள்ளறிவு (ஞானம்). ''தெருளு மருளு மாய்த்து'' (திவ். திருவாய். 8 : 8 : 11).

மயக்கத்தையும் அறியாமையையும் குறிக்கும் மருள் என்னும் சொல்லும், அதற்கு மறுதலையான தெருள் என்னும் சொல்லும், எதுகையா யிருத்தலை நோக்குக.

தெர் – தேர். தேர்தல் = 1. உள்குதல் (சிந்தித்தல்). 2. ஆராய்தல். ''தேர்ந்துசெய் வஃதே முறை'' (குறள். 541). 3. தேடுதல். ''சிறுவெண் காக்கை...... யிரைதேர்ந் துண்டு'' (ஐங். 162). 4. தேற்றமுறுதல். (நிச்சயித்தல்). ''பேதை பாகனே பரமெனத் தேர்ந்துணர் பெரிய'' (திருவிளை. புராண வர. 8). 5. தெளிவாக அறிதல் 'தேர்ந்தனன் முருகன் வாய்மை'' (கந்தபு. மூவாயிர. 81). 6. தெரிந்தெடுத்தல். (செ. குன்றியவி.) பயின்று திறமை பெறுதல். ம. தேருக.

தேர்ச்சி = 1. ஆராய்ச்சி. 2. தெளிவு. 3. பயிற்சியாற் பெறும் பெருந் திறமை. **ம.** தேர்ச்ச.

தேர்வு = 1. ஆராய்ச்சி. 2. திறமை யறிகை.

தேர்தல் = பொதுமக்கள் ஆட்சித் தலைவனைத் தேர்ந்தெடுக்கை (இக்கால வழக்கு).

தெல் – தெள். தெள்ளுதல் = 1. கொழித்தல். ''வன்னத் தினைமாவைத் தெள்ளியே'' (அண்ணாமலை ரெட்டியார் காவடிச் சிந்து).

2. ஆராய்தல். ''தெள்ளி யறிந்த விடத்தும்'' (நாலடி. 380). 3. நீர் தெளிதல். ''தெள்ளுநீர்க் காவிரி'' (மணிமே. 22:40). 4. அறிவு தெளிதல். ''புள்ளுணர் முதுமகன் தெள்ளிதிற் றேறி'' (பெருங். 56 : 7). 5. விளங்குதல். ''தெள்ளுங் கழலுக்கே'' (திருவாச. 10 : 19).

தெள்ளிமை = 1. தெளிவு. 2. அறிவுநுட்பம். ''சொன்ன தென்ன தெள்ளிமையோ'' (விறலிவிடு.).

தெண்மை = 1. தெளிவு. 2. அறிவின் தெளிவு. ''தெண்மை யுடையார்'' (பு. வெ. 8 : 12, உரை).

தெள்ளியர் = தெளிந்த அறிவினர். ''தெள்ளிய ராதலும் வேறு'' (குறள். 374).

தெள்விளி = 1. தெளிந்த இசை. ''கோவல ராம்பலந் தீங்குழற் றெள்விளி பயிற்ற'' (குறிஞ்சிப். 222). 2. தெளிந்த சொல். ''வள்ளுயிர்த் தெள்விளி யிடையிடை பயிற்றி'' (குறிஞ்சிப். 100).

தெள்– தெள்கு. தெள்குதல் = தெளிவாதல்.

தெள் – தெட்பு = தெளிவு. தெட்பு – தெட்பம் = 1. தெளிவு. 2. தேற்றம், திடம். ''சயந்த னங்க ணிருந்தனன் றெட்ப மெய்தி'' (கந்தபு. இந்திரன் கரந். 37). 3. மூதறிவு (திவா.). 4. முதிர்ச்சி.

தெட்ட = 1. தெளிவான. ''மால்கரி தெட்ட மதப்பசை கட்டின'' (கம்பரா. சரபங்க. 8). 2. முற்றிய. ''தெட்ட பழஞ்சிதைந்து'' (திவ். பெரியதி. 3 : 4 : 8).

தெட்டவர் = தெளிந்த அறிவினர். ''பரம ஞானம்போய்த் தெட்டவ ரல்லரேல்'' (கம்பரா. மந்திர. 20).

தெள்– தெளி = 1. ஒளி. ''தெளிவளர் வான்சிலை'' (திருக்கோ. 16, உரை). 2. தெளிவு. ''தெளிகொண்ட வெங்கள்'' (பு. வெ. 1 : 15). 3. தெளிந்த சாறு. ''கரும்பின் றெளி'' (தேவா. 280 : 5).

தெளிதல் = செ. குன்றிய வி. – 1. ஒளிர்தல். 2. வெண்மையாதல். 3. அமைதியுறுதல். ''தெளியா நோக்க முள்ளினை'' (அகம். 33). 4. தெளிவாதல். 5. ஐயம் நீங்குதல். 6. முடிவிற்கு வருதல். 7. நோய் நீங்குதல். நோய் தெளிந்துவிட்டது. (உ. வ.). 8. ஆள் செழிம்பாதல். ஆள் இன்று நன்றாய்த் தெளிந்துவிட்டான். (உ. வ.). 9. பஞ்சம் நீங்குதல். பஞ்சந் தெளிந்தது. (உ. வ.).

செ. குன்றா வி. – 1. ஆராய்தல். 2. தெளிவாக அறிதல். ''பிரியலேந் தெளிமே'' (குறுந். 273). 3. நம்புதல். ''தேரான் தெளிவும் தெளிந்தான்கண் ஐயுறவும்'' (குறள். 510).

**ம.** தெளியுக, **க.** திளி.

தெளிவு = 1. ஒளிர்வு, விளக்கம். 2. துலக்கம். 3. பொருள் வெளிப்படையாகத் தோன்றும் செய்யுட்குணம். ''தெளிவெனப் படுவது பொருள்புலப் பாடே'' (தண்டி. 16). 4. உடற் செழிம்பு. 5. தெளிந்த சாறு. ''கரும்பின் தெளிவே'' (திருவாச. 5 : 55). 6. தெளிந்த பனஞ்சாறு, பதநீர் (கொங். வ.). 7. கஞ்சித் தெளிவு. 8. தெள்ளறிவு (பிங்.). ''நறுமாமலர் கொண்டு நின்றேத்தத் தெளிவாமே'' (தேவா. 1114 : 6). 9. நனவு (திவா.). 10. மனத்தெளிவு (திவா.). 11. ஆராய்ந்து கொண்ட முடிபு. ''தெளிவி லதனைத் தொடங்கார்'' (குறள். 464). 12. நம்பிக்கை. ''தெளிவிலார் நட்பிற் பகைநன்று'' (நாலடி. 219). 13. மனவமைதி. 14. நற்காட்சி. ''அறத்துளார்க் கெலாமினிய ராதலது தெளிவே'' (சீவக. 2816). 15. தூக்க நீக்கம். தூக்கந் தெளிந்துவிட்டது (உ. வ.). 16. மெய்ப்பு. தக்க தெளிவில்லாததால் வழக்குத் தள்ளுபடியாயிற்று. (நாஞ்.).

**ம.** தெளிவு, **க.** திளி.

தெளியக் கடைந்தவன் = ஏமாறாதவன், எவரையும் எளிதாய் நம்பாதவன். (உ. வ.).

தெளிச்சல் = உடற்செழிம்பு. வேலை முடிந்தபின் அவனுக்கு உடம்பில் தெளிச்சல் காணுகிறது. (நாஞ்.).

தெளிஞன் = அறிஞன்(W.).

தெளி– தெளிர். தெளிர்தல் = 1. ஒளிபெறுதல். ''வண்ணந் தெளிர'' (பரிபா. 10 : 95).

தெளிர்த்தல் = 1. தெளிவா யொலித்தல். ''இலங்குவளை தெளிர்ப்ப வலவ னாட்டி'' (ஐங். 197.). 2. செழித்தல். ''வறத்த ஞாலந் தெளிர்ப்ப வீசி'' (ஐங். 452). 3. மகிழ்ச்சியுறுதல். ''சேயிழை தெளிர்ப்பக் கவைஇ'' (அகம். 51).

தெள்– தெறு– தெற்று = தேற்றம் (W.).

தெற்றென்னுதல் = தெளிதல். ''தெற்றென்க மன்னவன் கண். (குறள். 581).

தெற்றென = தெளிவாக. ''யானுந் தெற்றென வுணரேன்'' (அகம். 48).

தெற்றெனவு = 1. தெளிவு. ''தெற்றெனவில்லார் தொழில்'' (திரிகடு. 54). 2. வெட்கமின்மை (தவறான தெளிவு). ''சோற்றை முன்னிருந்து முற்றத்தான் துற்றிய தெற்றெனவும்'' (திவ். இயற். பெரியதிரு. 141).

*தெற்று – தெற்றல் = அறிவில் தெள்ளியவன். ''இணைமரு திற்று வீழ நடைகற்ற தெற்றல்'' (திவ். பெரியதி. 11 : 4 : 9).*

*தெறு – தேறு. தேறுதல் = (செ. குன்றிய வி.) – 1. நீர் தெளிதல். ''தேறுநீர் சடைக்கரந்து'' (கலித். கட. வாழ்.). 2. மயக்கந் தெளிதல். 3. மனந்தெளிதல், அறிவு தெளிதல். ''உடன்மூவர் சொற்றொக்க தேறப் படும்'' (குறள். 589). 4. செழிம்புறுதல். நோய் நீங்கி உடல்தேறி வருகிறான். (உ. வ.). 5. ஆறுதலடைதல். 6. திடங்கொள்ளுதல். 7. தேர்ச்சியடைதல். 8. தேர்வில் வெற்றி பெறுதல். 9. முதிர்தல். தேறின காய். (உ. வ.). 10. உருப்படியாதல். எல்லாம் புடைத் தெடுத்தால் ஒருபடி தேறும். (உ. வ.). 11. கூடுதல். ''ஒரு காசு பேணின் இரு காசு தேறும்'' (பழமொழி).*

*செ. குன்றாவி. – 1. நம்புதல். ''தேற்றாது செய்வார்களைத் தேறுதல் செவ்வி தன்றால்'' (கம்பரா. வாலிவ. 33). 2. துணிதல். ''தேறுவ தரிது'' (கம்பரா. மாயா சீதை. 89). 3. சேருதல். ''அழிவின்கட் டேறான் பகாஅன் விடல்'' (குறள். 876).* **தெ.** *தேரு,* **க.** *தேரு.*

*தேறு = 1. தெளிவு. 2. தேற்றம் (சூடா.). 3. தேற்றாங்கொட்டை. ''தேறுபடு சின்னீர் போல'' (மணிமே. 23 :142).*

*கலங்கிய நீரைத் தெளியச் செய்வதால், இல்லம் (தேற்றாங் கொட்டை) தேறு எனப்பட்டது.*

*''இல்லின் – படுகாழ்ப் படுத்துத் தேய்வை யுறீஇக் கலுழி நீக்குங் கம்மியர் போல'' (பெருங். 35 : 215 – 17).*

*இல் = இல்லம்.*

*''கலஞ்சிதை யில்லத்துக் காழ்கொண்டு தேற்றக் கலங்கிய நீர்போற் றெளிந்து நலம்பெற்றாள் நல்லெழில் மார்பனைச் சார்ந்து'' (கலித். 142, சுரிதகம்).*

*இதன் நச். உரை : – ''தேய்க்குங் காலத்தே சிதைக்கின்ற தேற்றாவினுடைய விதையைக் கொண்டு கலத்தே மெல்லத் தேற்றக் கலங்கிய நீரிற் சிதைவு தெளியுமாறு போல....... பெற்றாள்.''*

*தேறுகடை = தீர்மானம். அவன் அவ்வாறு தேறுகடை பண்ணினான். (உ. வ.)* (W.).

*தேறுசூடு = ஆடு மாடுகள் தேறுவதற்கு இடுஞ் சூடு.*

*தேறுதலை = 1. ஊக்குவிப்பு. 2. ஆறுதல்.*

*தேறுமுகம் = பற்றுக்கோடு. ''தேறுமுக மின்றித் திரிந்தேமை யாள'' (கந்தபு. தேவர்கள் போற். 4).*

தேறல் = 1. தெளிவு (பிங்.). 2. தெளிந்த கள். ''தேக்கட் டேறல்'' (புறம். 115). 3. தேன். ''மலர்த்தேற லூறலின்'' (தேவா. 9413). 4. தெளிந்த சாறு. ''ஆனெயைக் கரும்பினின் றேறலை'' (திருவாச. 5 : 38).

ம. தேறல், தெ. தேர.

தேறு – தேற்று = 1. தெளிவிக்கை. 2. தெளிவு. ''சொற்பொருளின் தேனே'' (சிவப். நால்வர். 28). 3. தேற்றாங்கொட்டை. ''தேற்றின் கலங்குநீர் தெளிவ தென்ன'' (ஞானவா.).

தேற்று – தேற்றம் = 1. தெளிவு. ''தேற்றச்சொற் றேர்வு'' (நாலடி. 259). 2. உறுதி. ''தேற்றம் வினாவே'' (தொல். சொல். 259). 3. மனங் கலங்காமை. ''தேற்ற மவாவின்மை'' (குறள். 513). 4. ஆறுதல். 5. செழிம்பு. 6. சூளுறவு. ''தீராத் தேற்றம்'' (தொல். பொருள் 102).

**ம.** தேற்றம், **தெ.** தேட்ட, **க.** தேட்டெ.

தேற்றம் – தேற்றன் = மெய்யறிவன். ''தேற்றனே தேற்றத் தெளிவே'' (திருவாச. 1 : 82).

தேற்று – தேற்றரவு = 1. தேற்றம். 2. ஆறுதல்.

தேற்றரவாளன் = 1. திடநெஞ்சன். 2. ஆறுதல் சொல்வோன். 3. தூய ஆவி (கிறித்தவ வழக்கு).

தேற்றரவாளி = தேற்றரவாளன்.

தேற்று – தேற்றா = 1. தேற்றாமரம். 2. தேற்றாங்கொட்டை. ம. தேற்றா.

தேற்றா – தேற்றான் (தைலவ. தைல.).

தெள் – தெடு. தெடுதெடுவெனல் = (தெளிந்து) 1. நீர்ப்பதமா யிருத்தல் (நெ. வ.).

தெடு – தெடாரி = தெளிந்த கண்ணையுடைய பறைவகை.

> ''கடாஅ யானைக் கால்வழி யன்னவென்
> தெடாரித் தெண்கண் தெளிர்ப்ப வொற்றி'' (புறம். 368).

தெடாரி – தடாரி.

> ''சிதாஅர் வள்பிற் சிதர்ப்புறத் தடாரி
> யூன்சுகிர் வலந்த தெண்க ணொற்றி'' (புறம். 381).

# மொழிஞாயிறு தேவநேயப்பாவாணரின் வாழ்க்கைச் சுவடுகள்

| | | |
|---|---|---|
| *தி.பி. 1933* | *:* | *திருநெல்வேலி மாவட்டம்,* |
| *சுறவம் - 26ஆம் நாள்* | | *சங்கரநயினார் கோயிலில் பிறந்தார்.* |
| *(7.2.1902)* | | *தந்தை : ஞானமுத்து* |
| *1938* | | *தாயார் : பரிபூரணம்* |
| *தி.பி. 1907* | *:* | *வடார்க்காடு மாவட்டம், ஆம்பூர் மிசௌரி* |
| *தொடக்கக் கல்வி* | | *நல்லஞ்சல் உலுத்தரின் விடையூழிய நடுநிலைப்பள்ளி* |
| *உயர்நிலைக் கல்வி* | | *திருநெல்வேலி மாவட்டம், பாளயங்கோட்டை திருச்சபை விடையூழிய உயர்நிலைப் பள்ளி (9, 10, 11 - வகுப்பு)* |
| *தி.பி. 1950 - 1952* | *:* | *முகவை மாவட்டம், திருவில்லிப்புத்தூர் வட்டம்,* |
| *(1919 - 1921)* | | *சீயோன் மலையிலுள்ள சீயோன் நடுநிலைப் பள்ளியில் முதற்படிவ ஆசிரியப் பணியில் சேர்ந்தார்.* |

| | | |
|---|---|---|
| *தி.பி. 1952 - 1953 (1921 - 1922)* | : | *வடார்க்காடு மாவட்டம், ஆம்பூர் நடுநிலைப் பள்ளியில் உதவித் தமிழ் ஆசிரியராகப் பணியாற்றினார்.(தாம் பயின்ற பள்ளி)* |
| *தி.பி. 1955 (1924)* | : | *மதிப்பு மிக்கதாகக் கருதப்பட்ட மதுரைத் தமிழ்சங்கம் நடத்திய பண்டிதத் தேர்வில் வெற்றிபெற்றார். (இவ்வாண்டில் பாவாணரைத் தவிர வேறெவரும் வெற்றி பெறவில்லை)* |
| | | *''கிறித்தவக் கீர்த்தனங்கள்'' நூல் வெளியீடு* |
| | | *உதவித் தமிழாசிரியர், சென்னை, திருவல்லிக்கேணி கெல்லற்று உயர்நிலைப் பள்ளியில் பணியாற்றினார்.* |
| *தி.பி. 1956 (1925)* | : | *தமிழாசிரியர், சென்னைக் கிறித்தவக் கல்லூரி உயர்நிலைப் பள்ளியில் பணியாற்றினார்.* |
| | | *''சிறுவர் பாடல் திரட்டு'' நூல் வெளியீடு. இந்தியக் கிறித்தவக் கழகத்தால் வெளியிடப்பட்டது.* |
| *தி.பி. 1957 (1926)* | : | *திருநெல்வேலி, தென்னிந்தியத் தமிழ்ச்சங்கம் நடத்திய தனித்தமிழ்ப் புலவர் தேர்வில் இவர் ஒருவரே வெற்றிபெற்றார் என்பது குறிக்கத்தக்கது.* |

*தி.பி. 1959 (1928)* : *தலைமைத் தமிழாசிரியர்,*
*பின்லே கல்லூரி உயர்நிலைப் பள்ளி,*
*மன்னார்குடியில் பணியாற்றினார்.*

*முதல் மனைவி எசுத்தர் அம்மையார் மறைவு*

*தி.பி. 1961 (1930)* : *நேசமணி அம்மையாரை மணந்தார்.*

*தி.பி. 1964 (1934)* : *தலைமைத் தமிழாசிரியர்,*
*பிசப் ஈபர் உயர்நிலைப் பள்ளி,*
*புத்தூர்,*
*திருச்சிராப்பள்ளியில் பணியாற்றினார்.*

*தி.பி. 1967 (1936)* : *''கட்டுரை வரைவியல்'' என்னும் உரைநடை இலக்கண நூல் வெளியீடு.*

*தி.பி. 1968 (1937)* : *முதல் இந்தி எதிர்ப்புப் போரை மையமாகக் கொண்டு*
*''செந்தமிழ்க் காஞ்சி'' நூல் வெளியீடு*

*இந்தி எதிர்ப்புக்கிழமை கொண்டாடினார்.*

*தி.பி. 1971 (1940)* : *''ஒப்பியன் மொழிநூல்'' (முதற் பாகம்)*
*''இயற்றமிழ் இலக்கணம்''*
*நூல்கள் வெளியீடு*

*தி.பி. 1973 (1942)* : *தலைமைத் தமிழாசிரியர்,*
*சென்னை முத்தியாலுப்பேட்டை உயர்நிலைப் பள்ளியில் பணியாற்றினார்.*
*கீழைக்கலைத் (ணு.நு.ன.) தேர்வில் வெற்றிபெற்றார்.*

*தி.பி. 1974 (1943)* : *''சுட்டு விளக்கம்'' நூல் வெளியீடு பண்டிதமணி கதிரேசனார் தலைமையில் நடைபெற்ற முதலாம் தமிழ் உணர்ச்சி மாநாட்டில் பங்கேற்று உரையாற்றினார்.*

*தி.பி. 1975 (1944)* : *சென்னைப் பல்கலைக் கழகத்தில் கலைமுதுவர் (எம்.ஏ.) பட்டம் பெற்றார்.*

*தமிழ்த்துறைத் தலைவராகச் சேலம் நகராண்மைக் கல்லூரியில் பணியாற்றினார்.*

*''திரவிடத்தாய்'' நூல் வெளியீடு*

*தி.பி. 1980 (1949)* : *''சொல்லாராய்ச்சிக் கட்டுரைகள்'' நூல் வெளியீடு*

*தி.பி. 1981 (1950)* : *''உயர்தரக் கட்டுரை இலக்கணம்'' (மு.பா.) நூல் வெளியீடு*

*தி.பி. 1982 (1951)* : *''உயர்தரக் கட்டுரை இலக்கணம்'' (இ.பா.) நூல் வெளியீடு*

*தி.பி. 1983 (1952)* : *''பழந்தமிழாட்சி'' நூல் வெளியீடு*

*தி.பி. 1984 (1953)* : *''முதல் தாய்மொழி அல்லது தமிழாக்க விளக்கம்'' நூல் வெளியீடு*

*தி.பி. 1985 (1954)* : *''தமிழ்நாட்டு விளையாட்டுக்கள்'' நூல் வெளியீடு*

*தி.பி. 1986 (1955)* : *சேலம் ''தமிழர் பேரவை'' இவரின் தொண்டைப் பாராட்டி சிறப்பித்தது.*

*தி.பி. 1987 (1956)* : *''தமிழர் திருமணம்'' நூல் வெளியீடு அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளராகப் பணியில் சேர்ந்தார்.*

*தி.பி. 1988 (1957)* : *திசம்பர் 27, 28, 29இல் தில்லியில் நடைபெற்ற அனைத்திந்தியக் கீழைக்கலை மாநாட்டில் பங்கேற்றுச் சிறப்பித்தார்.*

*தி.பி. 1991 (1960)* : *தமிழின வழிகாட்டி தந்தை பெரியார் தலைமையில் சேலம் 'தமிழ்ப்பேரவை' 'செந்தமிழ் ஞாயிறு' என்னும் பட்டம் வழங்கிச் சிறப்பித்தது.*

*தமிழ்நாட்டு அரசின் ஆட்சித் துறையில் கலைச் சொல்லாக்கத் தொகுப்பில் பங்கேற்றுச் சிறப்பித்தார்.*

*தி.பி. 1992 (1961)* : *''சென்னைப் பல்கலைக் கழக அகராதியின் சீர்கேடுகள்'' நூல் வெளியீடு*

*அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் ஏற்பட்ட சிக்கலால்*
*''எனக்கு வறுமையும் உண்டு -*
*மனைவியும், மக்களும் உண்டு -*
*அதோடு எனக்கு மானமும் உண்டு''*
*என்று கூறிவிட்டுப் பல்கலைக் கழக பணியிலிருந்து வெளியேறினார்.*
*''என்னோடு தமிழும் வெளியேறியது'' என்று கூறினார்.*

*தி.பி. 1994 (1963)* : *துணைவியார் நேசமணி அம்மையார் மறைவு*

*தி.பி. 1995 (1964)* : *மதுரைத் தமிழ்க் காப்புக் கழகம் ''தமிழ்ப் பெருங்காவலர்'' என்னும் பட்டம் வழங்கிச் சிறப்பித்தது.*

*தி.பி. 1997 (1966)* : *''இசைத்தமிழ்க் கலம்பகம்'', ''பண்டைத்தமிழ நாகரிகமும், பண்பாடும்''* ''The primary Classical Language of the World'' *என்னும் நூல்கள் வெளியீடு.*

*தி.பி. 1998 (1967)* : *''தமிழ்வரலாறு'' ''வடமொழி வரலாறு''* 'The language problem of Tamilnadu Solution'' *என்னும் நூல்கள் வெளியீடு.*

*தி.பி. 1999 (1968)* : *மதுரைத் தமிழ் எழுத்தாளர் மன்றம் இவரின் மணிவிழாவைக் கொண்டாடி ''மொழிநூல் மூதறிஞர்'' என்னும் பட்டம் வழங்கிச் சிறப்பித்தது.*

***6.10.1968**இல் இவரைத் தலைவராகக் கொண்டு ''உலகத் தமிழ்க் கழகம்'' தோற்றுவிக்கப்பட்டது.*

*''இந்தியால் தமிழ் எவ்வாறு கெடும்'' ''வண்ணனை மொழிநூலின் வழுவியல்'' என்னும் நூல்கள் வெளியீடு*

*தி.பி. 2000 (1969)* : *பரம்புக்குடியில்
உலகத் தமிழ்க் கழக
முதல் மாநாடு. இம்மாநாட்டில்
முனைவர் சி.இலக்குவனார்,
முனைவர் வ.சுப.மாணிக்கனார்,
புலவர் குழந்தை உள்ளிட்ட
தமிழ்ச் சான்றோர் பங்கேற்றுச்
சிறப்பித்தனர்.*

*இம்மாநாட்டில்
''திருக்குறள் தமிழ் மரபுரை''
''இசையரங்கு இன்னிசைக் கோவை''
''தமிழ் கடன் கொண்டு தழைக்குமா?''
நூல்கள் வெளியீடு.*

*தி.பி. 2002 (1971)* : *பரம்பு மலையில் நடைபெற்ற
பாரி விழாவில்
''செந்தமிழ் ஞாயிறு''
என்னும் பட்டமளித்துச்
சிறப்பித்தனர்.*

*தி.பி. 2003 (1972)* : *தஞ்சையில் பாவாணர் தலைமையில்
உலகத் தமிழ்க் கழக மாநாடு -
''தமிழன் பிறந்தகத் தீர்மானிப்பு''
மாநாடாக நடந்தது.*

*''தமிழர் வரலாறு''
''தமிழர் மதம்'' நூல்கள் வெளியீடு*

*தி.பி. 2004 (1973)* : *''வேர்ச்சொல் கட்டுரைகள்''
நூல் வெளியீடு*

| | | |
|---|---|---|
| *தி.பி. 2005 (1974)* | : | *செந்தமிழ்ச் சொற்ப்பிறப்பியல் பேர அகரமுதலித் திட்ட இயக்குநராகத் தமிழ் நாட்டரசின் அன்றைய முதல்வர் கலைஞர் அவர்களால் அமர்த்தப்பட்டார்.* |
| | | *செ.சொ.பி.பே.மு. - முதல் மடலம் - முதல் பகுதி அவரின் மறைவிற்குப் பிறகுதான் தி.பி. 2016இல் (1985) வெளியிடப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.* |
| *தி.பி. 2009 (1978)* | : | *''மண்ணில் விண் அல்லது வள்ளுவர் கூட்டுடைமை'' நூல் வெளியீடு* |
| *தி.பி. 2010 (1979)* | : | *''தமிழிலக்கிய வரலாறு'' நூல் வெளியீடு* |
| *தி.பி. 2011 (1980)* | : | *அன்றைய முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்களால் ''செந்தமிழ்ச் செல்வர்'' என்னும் பட்டமளித்துச் சிறப்பிக்கப்பட்டார்.* |
| *தி.பி. 2012 (1981)* | : | *மதுரையில் நடைபெற்ற 'ஐந்தாம் உலகத்தமிழ் மாநாட்டில் பங்கேற்று ''மாந்தன் தோற்றமும், தமிழர் மரபும்'' என்னும் ஆய்வுக் கட்டுரை படித்துத் தமிழர் தம் வரலாற்றுப் பெருமையை நிலைநாட்டிப் பேசினார்.* |
| | | *''சனவரி 15 இரவு 12.30க்கு இவ்வுலக வாழ்விலிருந்து மறைந்தார்''* |

## *பாவாணரின் பொன்மொழிகள்*

- மாந்தனெனக் குமரிமலை மருவியவன் தமிழனே!
  மாண்புடைய நாகரிகம் மலர்ந்தவனாம் தமிழனே!

- மொழிவளர்ச்சி முதன்முதலாய் முற்றியவன் தமிழனே!
  மோனையுடன் சிறந்தசெய்யுள் பேசியவன் தமிழனே!

- துறைநகரால் கடல்வணிகம் தோற்றியவன் தமிழனே!
  பிறநிலத்து வணிகரையும் பேணியவன் தமிழனே!

- தொன்மையொடு முன்மை; தொன்மையொடு நன்மை;
  தாய்மையொடு தூய்மை; தழுவிளமை வளமை.

- பகுத்தறிவே மானமுடன் படைத்தவனும் தமிழனே!
  பகுத்தறிவால் திணைவகுத்த பண்புடையான் தமிழனே!

- பனிமலையை முதன்முதற்கைப் பற்றியவன் தமிழனே!
  பலமுறைமீன் புலிவில் அதிற் பதித்தவனும் தமிழனே!

- பலகலையும் பலநூலும் பயிற்றியவன் தமிழனே!
  பலபொறியும் மதிலரணிற் பதித்தவனும் தமிழனே!

- இருதிணைக்கும் ஈந்துவக்கும் இன்பமுற்றான் தமிழனே!
  ஈதலிசை யாவிடத்தே இறந்தவனும் தமிழனே!

- கடல்நடுவே கலஞ்செலுத்திக் கரைகண்டவன் தமிழனே!
  கலப்படையால் குணத்தரவைக் காத்தவனும் தமிழனே!

- பகுத்தறிவைச் சற்றும் பயன்படுத்தார் கல்வி
  மிகுத்தனால் உண்டோ பயன்?

- தமிழயரத் தாழ்ந்தான் தமிழன் அவனே
  தமிழுயரத் தானுயர்வான் தான்.

ஆரிய இருளில் அகப்படும் உண்மையைச்
சீரிய வகையால் தெள்ளிதின் உணர்த்திய
செஞ்சுடர் ஞாயிறு தேவ நேயரை
விஞ்சிய மொழிநூல் மேலவர்க் காண்கிலம்;
நுழைபுலங் கொண்டு மொழிபல ஆய்ந்து
பிழையற வுணர்ந்து பிரித்தும் பகுத்தும்
வேர்ச்சொல் கண்டு விளக்கிடும் ஆண்மை
யார்க்கது வாய்க்கும் யார்க்கது வாய்க்கும்

– கவிஞர் முடியரசன்

‘பெரியார் குடில்’
பி.11. குல்மொகர் குடியிருப்பு,
35, செவாலியே சிவாசி கணேசன் சாலை,
தியாகராயர்நகர், சென்னை – 17.